தஞ்சை சரசுவதி மகால் வெளியீடு எண் : 422

# தமிழ்ச் சுவடிகளின் விளக்கம்

## பதினேழாவது தொகுப்பு

(மருத்துவப் பகுதி)

தஞ்சாவூர் மகாராஜா சரபோஜியின்

சரசுவதி மகால் நூலகம்

2001

விலை : ரூ. 90-00

தஞ்சை சரசுவதி மகால் வெளியீடு எண் : 422

# தமிழ்ச் சுவடிகளின் விளக்கம்

## பதினேழாவது தொகுப்பு

(மருத்துவப் பகுதி)

சிறப்புக்கேண்மைப் பதிப்பாசிரியர் :

**புலவர் வீ. சொக்கலிங்கம்**

தமிழாசிரியர் (ஓய்வு)

சரசுவதி மகால் நூலகம், தஞ்சாவூர்.

தஞ்சாவூர் மகாராஜா சரபோஜியின்

**சரசுவதி மகால் நூலகம்**

2001

விலை : ரூ. 90

# நூற்பதிப்பு விளக்கக் குறிப்பு

★ ✳ ✦

| | | |
|---|---|---|
| நூற்பெயர் | : | தமிழ்ச் சுவடிகளின் விளக்கம் |
| பதிப்பாசிரியர் | : | புலவர் வீ. சொக்கலிங்கம் |
| வெளியிடுபவர் | : | இயக்குநர், சரசுவதி மகால் நூலகம் |
| வெளியீட்டு எண் | : | 422 |
| மொழி | : | தமிழ் |
| பதிப்பு | : | முதல் பதிப்பு |
| வெளியீட்டு நாள் | : | ஜனவரி 2001 |
| தாள் | : | 11.2 கி.கி. தமிழ்நாடு |
| நூல் அளவு | : | 34×48 செ.மீ. |
| பக்கங்கள் | : | 306 |
| படிகள் | : | 250 |
| எழுத்து | : | 10 புள்ளி |
| அச்சிட்டோர் | : | ஸ்ரீ வேலன் பிரஸ் 132, S.P. கோவில் தெரு சிதம்பரம் |
| புத்தகக் கட்டு | : | அட்டைக் கட்டு |
| பொருள் | : | மருந்துவச் சுவடிகளின் விளக்க அட்டவணை |
| விலை | : | ரூ. 90 |

# வெளியீட்டாளர் முகவுரை

## தமிழ்ச் சுவடிகளின் விளக்கம் 17-ஆம் தொகுதி

(மருத்துவம்)

பன்மொழிச் சுவடிகளின் பாங்குறு களஞ்சியமாகச் சரசுவதிமகால் நூலகம் விளங்குகிறது. இந்நிறுவனத்தில் தமிழ், வடமொழி, மராட்டி, தெலுங்கு ஆகிய மொழிகளைச் சார்ந்த பல்லாயிரக்கணக்கான ஓலைச் சுவடிகளும், காகிதச் சுவடிகளும் இடம் பெற்றுள்ளன.

இவ்வரிய சுவடிகளுள் சிறந்தவை தேர்ந்தெடுக்கப்பெற்று, நூல்களாகப் பதிப்பித்து வெளியிடப் பெற்று வருவதோடு இந்நூலகத்தின் அனைத்துச் சுவடிகளுக்கும், சுவடி விளக்க அட்டவணைத் தொகுதிகளும் உருவாக்கப் பெற்று, வெளியிடப் பெற்று வருகின்றன.

அவ்வப்போது, இந்நூலகத்தில் சுவடிகள் சேரச்சேர அவற்றுக்கு விளக்க அட்டவணைத் தொகுதிகள் உருவாக்கும் பணியும் தொடர்ந்து நடைபெற்று வருகின்றது.

இந்நூலகத்தின் தமிழ்த்துறையில் இடம் பெற்றுள்ள ஓலைச் சுவடிகளுக்கு இதுகாறும் 16 விளக்க அட்டவணைத் தொகுதிகள் உருவாக்கி வெளியிடப்பட்டுள்ளன. இவற்றுள் 5 நூல்கள் இலக்கியச் சுவடிகளுக்கான அட்டவணைத் தொகுதிகள்; 10 நூல்கள் மருத்துவச் சுவடிகளுக்கான அட்டவணைத் தொகுதிகள். இலக்கியச்சுவடிகளுக்கான அட்டவணைத் தொகுதியாகப் பதினாறாம் தொகுதி உருவாக்கப் பெற்றுள்ள நிலையில், மருத்துவச் சுவடிகளுக்கான விளக்க அட்டவணைத் தொகுதியாக இந்தப் பதினேழாம் தொகுதி தற்பொழுது அச்சுப்பணி நிறைவு பெற்று நூலாக மலருகின்றது.

தற்பொழுது வெளிவரும் "தமிழ்ச் சுவடிகளின் விளக்கம் 17-ஆம் தொகுப்பு மருத்துவப் பகுதி" என்னும் இதனை இந்நூலகத்தின் மேனாள் தமிழ்ப் பண்டிதர் புலவர் வீ. சொக்கலிங்கம் அவர்கள் உருவாக்கி அளித்துள்ளார்கள். அவர்களுக்கு என் பாராட்டுகள்.

இந்நூல் நன்முறையில் வெளிவரத் தேவையான நிதியுதவி நல்கிய மைய அரசுக்கு என் மனமார்ந்த நன்றியை உரித்தாக்குகின்றேன்.

இந்நூல் நன்முறையில் வெளிவர ஆவன செய்துள்ள நூலக நிருவாக அலுவலர் திரு. சாமி. சிவஞானம் அவர்களுக்கும், வெளியீட்டு மேலாளர் திரு. அ பஞ்சநாதன் அவர்களுக்கும், இந்நூலை நன்முறையில் அச்சிட்டளித்த சிதம்பரம் ஸ்ரீ வேலன் அச்சகத்தாருக்கும் எனது பாராட்டுக்களை தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

இத்தொகுதி, சுவடியின் ஆய்வாளர்களுக்கு நன்கு பயன்படும் என நம்புகின்றேன்.

தஞ்சாவூர்
4—1—2001

மூ. இராசாராம், இ.ஆ.ப.
மாவட்ட ஆட்சித்தலைவர் மற்றும்
இயக்குநர்
சரசுவதி மகால் நூலகம்,
தஞ்சாவூர்.

# முன்னுரை

"உற்றான் அளவும் பிணியளவும் காலமும்
கற்றான் கருதிச் செயல்" - என்பது

தெய்வப் புலவர் திருவாக்கு

மருத்துவ நூலைக் கற்றவன், நோயாளன் நிலையினையும், நோய் நிலையினையும், காலத்தினையும் கருதி, நோய் தீர்க்கும் மருத்துவம் செய்தல் வேண்டும் என்பது இக் குறளில் கூறப்பட்டுள்ளது.

உடன் பிறந்தே கொல்லும் தீராத நோய்களும், இடையில் வரும் நோய்களும் மனிதனை வாட்டி வதைக்கும். அத்தகைய நோய்களை வருமுன் காத்தல் நலம் பயக்கும். அஃதின்றேல், நோய் கண்டபின் தக்க மருத்துவரை நாடி நலம் பெறல் வேண்டும்.

அத்தகைய மருத்துவர்கள் தக்க நூல்களைக் கற்றிருத்தல் வேண்டும். அவர்கள் கற்றுக் கொள்வான் வேண்டியே நம் முன்னோர்கள், சான்றோர்கள் முனிவர்கள் அரும பாடுபட்டு, தம் சொந்த அனுபவங்களில் கண்ட மருந்துகளை நமக்காக ஏட்டுச் சுவடிகளில் எழுதிக் கொடுத்திருக்கிறார்கள்.

அந்தகைய அரிய சுவடிகள், உலக பிரசித்திப்பெற்ற நம் சரசுவதி மகால் நூலகத்தில் ஏராளமாக உள்ளன. அவற்றில் சில அச்சாகி, விற்பனைக்கும் உரியனவாக உள்ளன. அவற்றைப் பலரும் வாங்கிப் பயனடைந்து வருகிறர்கள்.

எல்லாச் சுவடிகளின் விபரங்களையும் அறிந்து கொள்வான் வேண்டி, எமது மகால், மருத்துவச் சுவடிகளின் விவர அட்டவணைகளைத் தயாரித்து, விற்பனைக்கும் கொடுத்து வருகிறது இதுவரை, 3, 4, 5, 8, 9, 11, 12, 13, 14, 15 ஆகிய தொகுதிகள் வெளி வந்துள்ளன இப்போது 17-வது தொகுதியாக இந்நூல் வெளி வருகின்றது. எஞ்சிய எண்கள் இலக்கியத் தொகுதிகள்.

இப் பதினேழாம் தொகுதியிலும், பலவிதமான நோய்கட்குரிய மருத்துவ முறைகள் எளிய முறையிலும் கொண்ட சுவடிகளின் விளக்கங்கள் இடம் பெற்றுள்ளன.

இத் தொகுதியினைப் பதிப்பிக்க அனுமதி அளித்த, பெருமதிப்பிற்குரிய தஞ்சை மாவட்ட முன்னாள் ஆட்சியர் அவர்கட்கும், தற்போதைய பெருமதிப்பிற்குரிய மாவட்ட ஆட்சியரும், நம் நூலக இயக்குனருமான திருவாளர். மூ. இராசாராம் இ. ஆ. ப. அவர்கட்கும், டி மகால் நிருவாக அலுவலர், உயர்திரு. சாமி. சிவஞானம், எம். ஏ., அவர்கட்கும், நூலக வெளியீட்டு மேலாளர், திரு. அ. பஞ்சநாதன், எம். ஏ., எம். எல், ஐ. எஸ், அவர்கட்கும், ஒத்துழைப்பினை நல்கிய டி நூலக தமிழ்த்துறை, திருமதி ச. திலகம் அவர்கட்கும், திருவாளர். ய. மணிகண்டன், எம். ஏ., எம். ஃபில்., அவர்கட்கும், நன்முறையில அச்சிட்டுத் தந்த சிதம்பரம் ஸ்ரீ வேலன் அச்சகத்தாருக்கும் எனது நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்நூலில் உள்ள குற்றங்களைந்து குணம்பெய்து வாசித்தல் கற்றறிந்த மாந்தர் கடன்.

இங்ஙனம்,


புலவர் வீ. சொக்கலிங்கம்,
முன்னாள் தமிழாசிரியன்,
சரசுவதி மகால் நூலகம்.


தஞ்சாவூர்
20—11—2000

# பொருளடக்கம்


| நூற்பெயர் | | பக்கம் |
|---|---|---|
| **அ** | | |
| அகத்தியர் | — 1 | — 109 |
| அகத்தியர் | — 3 | — 50 |
| அகத்தியர் | — 5 | — 108 |
| அகத்தியர் | — 16 | — 53, 223 |
| அகத்தியர் | — 50 - நீலகண்ட செத்தூரம் | — 214 |
| அகத்தியர் | — 80 | — 80 |
| அகத்தியர் | — 100 | — 98 |
| ,, | — 100 – வகாரத்துருசுச் சுன்னம் | — 215 |
| ,, | — 150 | — 79, 208, 209 |
| ,, | — 200 | — 128 |
| ,, | — 205 | — 37, 88, 119 |
| ,, | — 300 | — 118 |
| ,, | — 600 | — 46, 77 |
| அகத்தியர் அமுத கலை ஞானம் — 1200 | | — 275 |
| ,, இந்திர சால நிகண்டு | | — 115 |
| ,, இரத்தினச் சுருக்கம் | | — 47 |
| ,, கர்ம காண்ட சூத்திரம் | | — 276 |
| ,, கர்ம காண்டம் | | — 126, 181 |
| ,, கர்ம காண்டம் – குணவாகடம் | | — 191 |
| ,, கர்மகாண்டம் – முதற்காண்டம் — 300 | | — 272 |
| ,, கர்ம சூத்திரம் | | — 257 |
| அகத்தியர் கர்ம சூத்திரம் — 300 | | — 163 |
| ,, கர்ம சூத்திரம் – நடுக்காண்டம் | | — 273 |
| ,, கலைக்கியானம் — 1200 | | — 81 |
| ,, குணவாகடம் | | — 196, 198 |
| ,, குணவாகடம் – கர்ம காண்டம் | | — 191 |
| ,, குருநாடி – கைபாகம் | | — 248 |
| ,, குருநூல் — 50 | | — 221 |
| ,, குளிகை — 16 | | — 24, 25 |

| நூற்பெயர் | | பக்கம் |
|---|---|---|
| அகத்தியர் கெற்பக்கோள் அறியும்படி | — | 129 |
| ,, கௌமதிநூல் — 400 | — | 226 |
| ,, சகல கலைக்கியானம் | — | 270 |
| ,, சத்தியாரூடம் | — | 172 |
| அகத்தியர் சாலத்திரட்டு முதற்காண்டம் | — | 140 |
| ,, ,, 2-ங் காண்டம் | — | 141 |
| ,, ,, 2-ங் காண்டம் - 300 | — | 33 |
| ,, ,, 2-வது வாதகாண்டம் | — | 2 |
| அகத்தியர் சாலத்திரட்டு 3-வது இந்திரசாலம் | — | 3 |
| ,, ,, 3-ங் காண்டம் | — | 142 |
| ,, ,, 3-ங் காண்டம்-இந்திரசாலம் | — | 36 |
| ,, ,, 4-ங் காண்டம்-மாந்திரீகம் | — | 143 |
| ,, ,, 4-ங் காண்டம்-மாந்திரீகம் | — | 4 |
| அகத்தியர் சித்திராரூட நொண்டிச் சிந்து | — | 171 |
| ,, சித்திராரூடம் | — | 104 |
| ,, சுருக்கம் - 37 | — | 189 |
| ,, சூத்திரம் - 16 | — | 53 |
| ,, ,, - 205 | — | 88 |
| ,, ,, - 300 | — | 118 |
| அகத்தியர் சௌமிய சாகரம் - 1200 | — | 136, 254 |
| ,, தண்டகம் | — | 192, 261 |
| ,, தண்டகம் - 100 | — | 98 |
| ,, தீட்சை விதி | — | 269 |
| ,, நவசித்தாதிக் குழம்பு | — | 64 |
| ,, நவசித்தர் குழம்பு | — | 160 |
| அகத்தியர் - நாடி நூல் | — | 202 |
| ,, நிகண்டு | — | 258 |
| ,, நீலகண்ட செந்தூரம் - 50 | — | 214 |
| ,, பட்சணி | — | 93 |
| ,, பட்சணி - 131 | — | 100 |
| ,, பரிபூரணம் - 400 | — | 152 |
| அகத்தியர் பலமுறை | — | 278 |
| ,, பாடல் | — | 241, 256 |

| நூற்பெயர் | | பக்கம் |
|---|---|---|
| அகத்தியர் பாடல் - 600 | — | 46 |
| ,, பூசாவிதி-பூரணசூத்திரம் | — | 127 |
| ,, பூரண காவியம் - 1000 | — | 158 |
| ,, பூரண சூத்திரம் | — | 117 |
| அகத்தியர் பூரண சூத்திரம் - 216 | — | 114 |
| ,, பூரணம் - 400 | — | 19 |
| அகத்தியர் பெருநூல் – 1200 | — | 34 |
| ,, ,, வாதகாண்டம் | — | 35 |
| ,, மாந்திரீகம் - 10 | — | 180 |
| ,, மாந்திரீகம் - 50 | — | 179 |
| ,, மெய்ஞ்ஞானம் - 1500 | — | 137,138 |
| ,, வகாரம் - 100 | — | 188 |
| அகத்தியர் வண்ணம் | — | 253 |
| ,, வாகடச் சுருக்கம் | — | 271 |
| ,, வாகடம் - 1500 | — | 183 |
| ,, வாக்கியம்-நவசித்தர் குழம்பு | — | 160 |
| ,, வாக்கியம்-வைத்தியம் - 5 | — | 159 |
| அகத்தியர் வாகடத் திரட்டு - 50 | — | 66 |
| ,, வாகடநூல் - 1500 | — | 182 |
| அகத்தியர் வியாதி கன்மம் அறிய | — | 44 |
| ,, வைத்திய சிந்தாமணி | — | 68 |
| ,, வைத்திய சூத்திரம் - 16 | — | 250 |
| ,, ,, ,, - 205 | — | 119 |
| ,, ,, ,, - 1500 | — | 5 |
| ,, வைத்தியம் | — | 32, 154 |
| ,, வைத்தியம் - 5 | — | 108 |
| ,, ,, - 80 | — | 80 |
| அகத்தியர் வைத்தியம் - 100 | — | 98 |
| ,, ,, - 150 | — | 79, 274, 222 |
| ,, ,, - 200 | — | 128 |
| ,, ,, - 205 | — | 213 |
| ,, ,, - 600 | — | 65 |

| நூற்பெயர் | | பக்கம் |
|---|---|---|
| அகத்தியர் வைத்தியம் - 600 படி பீடிகை | — | 225 |
| ,, வைத்திய ரெத்தினச் சுருக்கம் | — | 47 |
| ,, வைத்திய ரெத்தினச் சுருக்கம் - 360 | — | 155 |
| அகத்தியருக்கு சுப்பிரமணியர் உபதேசித்த சருவசங்கார விஞ்சை | — | 195 |
| ,, ,, உபதேசித்தது - 200 | — | 151 |
| ,, சுப்பிரமணியர் உபதேசித்த ரேசக பூரக கும்பகம் அஞ்சன முறை முதலியன | — | 279 |
| அதிசய சாலம் - சுந்தரானந்தர் | — | 233 |
| அப்பிரகச் சுன்னம் - நந்தீசர் | — | 22 |
| அப்பிரக பற்பம் — 80 | — | 150 |
| அமுத கலைஞானம் — 1200 - அகத்தியர் | — | 275 |
| அமுர்த பஞ்சாட்சரத் தீருவை | — | 12 |
| அம்பிகானந்தர் வகார சூத்திரம் — 25 | — | 147 |
| அழுகணிச் சித்தர் பாடல் | — | 16 |
| அனுபோகக் குறிப்பு | — | 224 |

## ஆ

| | | |
|---|---|---|
| ஆனந்தக் களிப்பு - சொரூபானந்தர் | — | 204 |

## இ

| | | |
|---|---|---|
| இந்திரசால நிகண்டு - அகத்தியர் | — | 115 |
| ,, ,, ,, - தெட்சிணாமூர்த்தி 4 -ங் காண்டம் | — | 177 |
| ,, ,, அகத்தியர் சாலத்திரட்டு | — | 36 |
| ,, ,, - அகத்தியர் சாலத்திரட்டு 3-ங் காண்டம் | — | 3 |
| ,, ,, வெண்பா— 100 - குருமுனி | — | 101 |
| இரசம் சுத்தி செய்யும் முறை முதலியன | — | 205 |
| இரச வர்க்கப் பாடல் | — | 58 |
| இரண வாகடம் | — | 133 |
| இரண வாகடம் — 500 | — | 134 |
| இரத்தினச் சுருக்கம் - அகத்தியர் | — | 47 |
| இராமதேவர் — 1000 | — | 173 |
| இராமதேவர் பட்சணி — 216 | — | 40 |

நூற்பெயர் | பக்கம்

**ஊ**


| | | |
|---|---|---|
| ஊழிக்காத்து விபரம் முதலியன | — | 161 |
| ஊர்வசி ரெத்தினச் சுருக்கம் | — | 238 |


**ஏ**


| | | |
|---|---|---|
| ஏமகற்ப சூத்திரம் — 51 - கொங்கணர் | — | 146 |


**க**


| | | |
|---|---|---|
| கண் ரோகம் வரும் வரலாறு | — | 121 |
| கடைப்பிள்ளை ஞானம் — 100 - கொங்கணர் | — | 139 |
| கமலமுனி ஞானம் — 16 | — | 166 |
| கம்பளிச்சட்டை கைலாச மூர்த்தி நிகண்டு | — | 76 |
| கயத்துச் சூத்திரம் — 10 - மணிக்கடை | — | 61 |
| கருவூரார் பலதிரட்டு | — | 17 |
| கருவூரார் பூசாவிதி — 30 | — | 49 |
| கருவூரார் சூத்திரம் | — | 240 |
| கருவூரார் வாக்கியம் - நொண்டி | — | 148 |
| கர்ம காண்ட சூத்திரம் - அகத்தியர் | — | 276 |
| கர்ம காண்டம் - அகத்தியர் | — | 126, 181 |
| கர்ம காண்டம் - அகத்தியர் குணவாகடம் | — | 191 |
| கர்ம காண்டம் - அகத்தியர் முதற்கண்டம் | — | 272 |
| கர்ம சூத்திரம் — 300 — அகத்தியர் | — | 163 |
| கர்ம சூத்திரம் - அகத்தியர் | — | 276 |
| கர்ம சூத்திரம் - அகத்தியர் - நடுக் காண்டம் | — | 273 |
| கலைக்கியானம் - அகத்தியர் | — | 275 |
| கலைக்கியானம் — 1200 - அகத்தியர் | — | 81 |


**கு**


| | | |
|---|---|---|
| குணவாகடம் - அகத்தியர் | — | 196, 198 |
| குணவாகடம் - அகத்தியர் கர்ம காண்டம் | — | 191 |
| குதிரை வாகடம் | — | 132 |

| நூற்பெயர் | | பக்கம் |
|---|---|---|
| கும்பமுனி வைத்திய வண்ணம் | — | 111 |
| குருநாடி-கைபாகம்-அகத்தியர் | — | 248 |
| குருநாடி சாத்திரம் | — | 249 |
| குருநாடி சூத்திரம் | — | 218 |
| குருநூல் - 50 - அகத்தியர் | — | 221 |
| குருபோத விளக்கம் | — | 167 |
| குருமுனி இந்திரசால வெண்பா - 100 | — | 101 |
| குருமுனி தண்டகம் | — | 244 |
| குருமுனி பட்சணி | — | 245 |
| குருமுனி வைத்தியக் கும்மி | — | 110 |
| **கெ** | | |
| கெவுன ரசமணி | — | 170 |
| கெற்பக்கோள் அறியும்படி - அகத்தியர் | — | 129 |
| கெற்பமுறை - கோரக்கர் | — | 95 |
| கெற்ப லட்சணம் - பெண்கள் | — | 120 |
| கெற்ப விதி - சட்டை முனி | — | 206 |
| **கை** | | |
| கைக்குணை புத்தகம் | — | 247 |
| கைலாசச் சட்டை முனியார் ஞானம் - 100 | — | 48 |
| கைலாசச் சட்டை முனியார் நிகண்டு - 1200 | — | 164 |
| கைலாசச் சட்டை முனியார் பாடல் | — | 207 |
| கைலாசச் சட்டைமூர்த்தி வாதநூல் - 1000 | — | 45 |
| கைலாச மூர்த்தி நிகண்டு - கம்பளிச் சட்டை | — | 76 |
| **கொ** | | |
| கொங்கணர் - 4 | — | 15 |
| கொங்கணர் ஏமகற்ப சூத்திரம் - 51 | — | 146 |
| கொங்கணர் ஐந்நூற்றில் திரட்டல் | — | 60 |
| கொங்கணர் கடைப்பிள்ளை ஞானம் - 100 | — | 139 |
| கொங்கணர், பலதிரட்டு | — | 18 |
| கெங்கணர் முக்காண்டம் | — | 51 |
| கொங்கணர் வழலை முறை - 31 | — | 237 |

நூற்பெயர் பக்கம்

## கோ


| | |
|---|---|
| கோரக்கர் கற்ப முறை | — 95 |
| கோரக்கர் பாடல் - தீட்சாவிதி - திருமந்திரம் | — 94 |


## கௌ


| | |
|---|---|
| கௌமதி நூல் - 400 அகத்தியர் | 226 |


## ச


| | |
|---|---|
| சகல கலைக்கியானம் - அகத்தியர் | — 270 |
| சட்டைமுனி - 200 - வகார சூத்திரம் | — 194 |
| ,, கற்பவிதி | — 206 |
| ,, சூத்திரம் | — 8 |
| ,, சூத்திரம் - 8 | — 234 |
| ,, ஞானம் | — 168 |
| சட்டை முனியார் ஞானம் | — 25 |
| சட்டை முனியார் ஞானம் - 100 - கைலாச | — 48 |
| சட்டை முனியார் நிகண்டு - 1200 | — 164 |
| சட்டை முனியார் பாடல் - கைலாச | — 207 |
| சட்டை முனியார் வகார சூத்திரம் - 200 | — 194 |
| சட்டை முனியார் வாதநூல் - 1000 | — 45 |
| சத்தியாரூடம் | — 105 |
| சத்தியாரூடம் - அகத்தியர் | — 172 |
| சத்திர விதி | — 203 |
| சரக்கு வகை | — 7 |
| சருவ சங்கார விஞ்சை - அகத்தியருக்கு உபதேசித்தது | — 195 |
| சல்லியம் | — 262 |
| சன்னி பதின்மூன்றுக்கும் பேர் | — 69 |


## சா


| | |
|---|---|
| சாலத்திரட்டு - முதற்காண்டம் – அகத்தியர் | — 140 |
| ,, - 2-ங் காண்டம் – 300 - அகத்தியர் | — 33 |
| ,, - 2-ங் காண்டம் - அகத்தியர் | — 141 |

| நூற்பெயர் | | பக்கம் |
|---|---|---|
| சாலத்திரட்டு - 2-ங் காண்டம் - தெட்சிணாமூர்த்தி | — | 175 |
| ,, - 2-ங் காண்டம் - வாதகாண்டம் | — | 2 |
| ,, - 3-ங் காண்டம் - அகத்தியர் | — | 142 |
| ,, - 3-ங் காண்டம் - இந்திரசாலம் | — | 36 |
| ,, - 3-ங் காண்டம் - இந்திரசாலம் - அகத்தியர் | — | 36 |
| ,, - 3-ங் காண்டம் - தெட்சிணாமூர்த்தி | — | 176 |
| ,, - 4-ங் காண்டம் - மாந்திரிகம் - அகத்தியர் | — | 4 |
| ,, - 4-ங் காண்டம் - மாந்திரீகம் - அகத்தியர் | — | 143 |
| சால நிகண்டு - அகத்தியர் | — | 115 |
| சாலம் - 200 - புலிப்பாணி | — | 86,96 |
| சாலம் - சுந்தரானந்தர் | — | 233 |
| சால வெண்பா - 100 - குருமுனி | — | 101 |
| **சி** | | |
| சிந்திராரூட நொண்டி | — | 84 |
| சிந்திராரூட நொண்டிச் சிந்து - அகத்தியர் | — | 171 |
| சித்திராரூடம் | — | 6,199 |
| சித்திராரூடம் - அகத்தியர் | — | 104 |
| **சு** | | |
| சுந்தரானந்தர் - 48 | — | 26 |
| ,, - 50 | — | 232 |
| சுந்தரானந்தர் அதிசய சாலம் | — | 233 |
| சுந்தரானந்தர் - தீட்சை சூத்திரம் | — | 11 |
| சுப்பிரமணியர் அகத்தியருக்கு உபதேசித்தது - 200 | — | 151 |
| ,, ,, ,, சருவசங்கார விஞ்சை | — | 195 |
| ,, ,, ,, ரேசக பூரக கும்பகம் | — | 210 |
| சுப்பிரமணியர் சூத்திரம் - 43 | — | 157 |
| **சூ** | | |
| சூதமுனி சூத்திரம் | — | 67 |
| சூரிய காந்தக் குழம்பு | — | 54 |
| **செ** | | |
| செகசாலம் 1200 தெட்சணாமூர்த்தி 7 காண்டத்தில் முதற்காண்டம் | — | 174 |

நூற்பெயர் பக்கல்

## சொ


சொருபானந்தர் ஆனந்தக் களிப்பு — 204


## சௌ


சௌமிய சாகரம் - 1200 — 30

சௌமிய சாகரம் - 1200 அகத்தியர் — 136, 254


## ஞா


ஞானம் - சட்டைமுனி — 168

ஞானம் - 3 - தெட்சிணாமூர்த்தி — 169

ஞானம் - 16 - கமலமுனி — 166

ஞானம் - 100 - கொங்கணர் கடைப்பிள்ளை — 139

ஞானம் - 100 - தெட்சிணாமூர்த்தி — 263


## த


தண்டகம் - அகத்தியர் — 192, 261

தண்டகம் - குருமுனி — 244

தண்டகம் - 100 - அகத்தியர் — 98

தன்வந்திரி நிகண்டு - 300 — 106


## தி


திப்பிலாதிச் சூரண அகவல் — 62

திருமந்திரம் — 9

திருமந்திரம் - கோரக்கர் பாடல், தீட்சாவிதி — 94

திருமந்திரம் - 10 — 14

திருமந்திரம் - 800 - மச்சமுனி — 156

திருமூலர் குணவாகடத் திரட்டு — 277

திருமூலர் மந்திரம் — 184

திருமூலர் வாக்கியம் — 243


## தீ


தீட்சைவிதி - அகத்தியர் — 269

தீட்சைவிதி - கோரக்கர் திருமந்திரம் — 94

தீட்சை சூத்திரம் - சுந்தரானந்தர் — 11

நூற்பெயர் | பக்கம்

## தெ


| | | |
|---|---|---|
| தட்சிணாமூர்த்தி 7 காண்டம் பரிபாஷை | — | 178 |
| ,, 36 | — | 27 |
| ,, அருளிய 36 | — | 71 |
| ,, இந்திரசால நிகண்டு 4-ஆம் காண்டம் | — | 177 |
| ,, ஏழுகாண்டத்தில் முதற்கண்டம் செகசாலம் 1200 | — | 174 |
| ,, சாலத்திரட்டு 2-ம் காண்டம் | — | 175 |
| ,, சாலத்திரட்டு 3-ம் காண்டம் | — | 176 |
| தெட்சிணாமூர்த்தி செகசாலம் ஏழுகாண்டம் 1200 முதற்காண்டம் | — | 174 |
| ,, ஞானம் - 3 | — | 169 |
| ,, ஞானம் - 100 | — | 263 |
| ,, பரிபாஷை 7-ங் காண்டம் | — | 178 |
| ,, பரிபூரணம் 1200 | — | 75 |
| ,, பாடல் | — | 63 |
| தெட்சிணாமூர்த்தி பாடல் 5 | — | 102 |
| ,, ரெத்தினச் சுருக்கம் 360 | — | 131 |
| ,, வாகடப் பிள்ளைத்தமிழ் | — | 20 |
| ,, வைத்தியம் 36 | — | 27 |
| ,, வைத்தியம் 80 | — | 265 |


## தோ


| | | |
|---|---|---|
| தோஷத்துக்கு | — | 255 |


## ந


| | | |
|---|---|---|
| நட்சத்திர பலன் | — | 200 |
| நந்தீசர் அப்பிரகச் சுன்னம் | — | 22 |
| நவசித்தாதிக் குழம்பு - அகத்தியர் | — | 64, 160 |


## நா


| | | |
|---|---|---|
| நாடிக் குறிப்பு வியாதியஸ்தன் | — | 224 |
| நாடி சாத்திரம் வைத்தியம் | — | 197 |
| நாடி நூல் அகத்தியர் | — | 202 |
| நாடி லட்சணம் | — | 190 |

நூற்பெயர் பக்கம்

நி

நிகண்டு 300 தன்வந்திரி — 106
நிகண்டு 1200 கைலாசச் சட்டைமுனியார் — 164
நிகண்டு அகத்தியர் — 258
நிகண்டு அகத்தியர் இந்திரசாலம் — 115
நிகண்டு தெட்சிணாமூர்த்தி இந்திரசாலம் 4-ங் காண்டம் — 177
நிகண்டு மச்சமுனி — 185, 268

நீ

நீலகண்ட செந்தூரம் - 50 - அகத்தியர் — 214

ப

பஞ்சாட்சர தீருவை - அமுர்த — 12
பட்சணி - 131 - அகத்தியர் — 100
பட்சணி - அகத்தியர் — 93
பட்சணி – குருமுனி — 245
பதஞ்சாலியார் - வாத சூத்திரம் 20 — 145
பதின்மூன்று சன்னிக்கும் பேர் — 69
பரிபாஷை - தெட்சிணாமூர்த்தி - 7-ங் காண்டம் — 178
பரிபூரணம் - 400 – அகத்தியர் — 152
பலதிரட்டு - 100 - புலிப்பாணி — 97
பலதிரட்டு - புலிப்பாணி — 87
பலதிரட்டு - கருவூரார் — 17
பலதிரட்டு - வைத்தியம் — 92
பலபிணி நாடி சாத்திரம் — 197
பல்லி சொல்லும் பலன் — 187

பு

புண்ணாக்குச் சித்தர் பாடல் — 13
புலிப்பாணி சாலம் - 200 — 86,96
புலிப்பாணி பலதிரட்டு — 87
புலிப்பாணி பலதிரட்டு - 100 — 97
புலிப்பாணி வாடை - 16 — 103

| நூற்பெயர் | | பக்கம் |
|---|---|---|
| **பூ** | | |
| பூசாவிதி - 30 - கருவூரார் | — | 49 |
| பூசாவிதி - பூரண சூத்திரம் - அகத்தியர் | — | 127 |
| பூசாவிதி - போக நாயனார் | — | 10 |
| பூரண காவியம் - 1000 - அகத்தியர் | — | 158 |
| பூரண சூத்திரம் - 16 | — | 231 |
| பூரண சூத்திரம் - 216 - அகத்தியர் | — | 114 |
| பூரண சூத்திரம் - அகத்தியர் | — | 114,117 |
| பூரண ரகசியம் - 6 | — | 230 |
| பூரணாதி - போகர் | — | 251 |
| **பெ** | | |
| பெண்கள் கெற்ப லட்சணம் | — | 120 |
| பெருநூல் - 800 - மச்சமுனி | — | 149 |
| பெருநூல் - 1200 - அகத்தியர் | — | 34 |
| பெருநூல் - வாத காண்டம் – அகத்தியர் | — | 35 |
| **பொ** | | |
| பொதிகைச் சுவாமியார் சூத்திரம் - 50 | — | 90 |
| பொதிகைச் சுவாமியார் சூத்திரம் - 100 | — | 89 |
| **போ** | | |
| போகநாயனார் பூசாவிதி | — | 10 |
| போகர் எழுநூற்றுத் திரட்டு | — | 41 |
| போகர் பூரணாதி | — | 251 |
| போகர் யுவா வைத்தியம் | — | 112 |
| போகர் வைத்தியம் எழுநூற்றுத் திரட்டு | — | 41 |
| போகர் வைத்திய வெண்பா | — | 186 |
| **ம** | | |
| மச்சமுனி - 800 - திருமந்திரம் | — | 156 |
| மச்சமுனி சூத்திரம் - நிகண்டு | — | 185 |
| மச்சமுனி திருமந்திரம் - 800 | — | 156 |

| நூற்பெயர் | | பக்கம் |
|---|---|---|
| மச்சமுனி நிகண்டு | — | 268 |
| மச்சமுனி பெருநூல் - 800 | — | 149 |
| மணிக்கடை கயத்துச் சூத்திரம் - 10 | — | 61 |
| மணிக்கடை கையளவு சூத்திரம் | — | 217 |
| மந்திர சாத்திரம் | — | 259 |
| மந்திரமும் வைத்தியமும் | — | 29 |
| **மா** | | |
| மாந்திரீக காண்டம் - அகத்தியர் சாலத்திரட்டு 4-ங் காண்டம் | — | 4,143 |
| மாந்திரீகம் - 10 - அகத்தியர் | — | 180 |
| மாந்திரீகம் - 50 - அகத்தியர் | — | 179 |
| மாந்திரீகம் - அகத்தியர் சாலத்திரட்டு | — | 4,143 |
| **மு** | | |
| முத்துத் தாண்டவர் பதம் | — | 264 |
| முப்பூ | — | 235 |
| முனியசாமி அண்ணா கைபாகம் | — | 239 |
| **மெ** | | |
| மெய்ஞ்ஞானம் - 1500 - அகத்தியர் | — | 137,138 |
| **யு** | | |
| யுவா வைத்தியம் - போகர் | — | 112 |
| **யூ** | | |
| யூகிமுனி - 1000 | — | 124 |
| **ர** | | |
| ரசமணி — 14 கெவுன | — | 170 |
| **ரெ** | | |
| ரெத்தினச் சுருக்கம் — 360 - அகத்தியர் | — | 155 |
| ரெத்தினச் சுருக்கம் — 360 - தெட்சிணாமூர்த்தி | — | 131 |
| ரெத்தினச் சுருக்கம் - அகத்தியர் | — | 47 |
| ரெத்தினச் சுருக்கம் - ஊர்வசி | — | 238 |

நூற்பெயர் பக்கம்

## ரே


| நூற்பெயர் | | பக்கம் |
|---|---|---|
| ரேசக பூரக கும்பகம் - அகத்தியர் | — | 210 |


## ரோ


| நூற்பெயர் | | பக்கம் |
|---|---|---|
| ரோமரிஷி — 9 | — | 99 |
| ரோமரிஷி — 16 | — | 165 |
| ரோமரிஷி — 19 | — | 227 |
| ரோமரிஷி சூத்திரம் — 16 | — | 229 |
| ரோமரிஷி சூத்திரம் — 25 | — | 228 |


## வ


| நூற்பெயர் | | பக்கம் |
|---|---|---|
| வகார சூத்திரம் — 25 - அம்பிகானந்தர் | — | 147 |
| வகார சூத்திரம் — 200 - சட்டைமுனி | — | 194 |
| வகாரத் துருசுச் சுன்னம் — 100 - அகத்தியர் | — | 215 |
| வகாரம் — 100 - அகத்தியர் | — | 188 |
| வழலை முறை — 31 - கொங்கணர் | — | 237 |
| வஸ்துப் பெண் | — | 28 |


## வா


| நூற்பெயர் | | பக்கம் |
|---|---|---|
| வாகடச் சுருக்கம் - அகத்தியர் | — | 271 |
| வாகடத் திரட்டு — 50 - அகத்தியர் | — | 66 |
| வாகடத் திரட்டு - அகத்தியர் | — | 66 |
| வாகடத் திருமந்திரம் | — | 125 |
| வாகட நூல் — 1500 - அகத்தியர் | — | 182 |
| வாகடப் பிள்ளைத் தமிழ் - தெட்சிணாமூர்த்தி | — | 20 |
| வாகடம் — 1500 - அகத்தியர் | — | 182 |
| வாகட வண்ணம் - அகத்தியர் | — | 253 |
| வாடை 16 - புலிப்பாணி | — | 103 |
| வாத காண்டம் - அகத்தியர் சாலத்திரட்டு | — | 2 |
| வாத காண்டம் - அகத்தியர் பெருநூல் | — | 35 |
| வாத சூத்திரம் — 20 - பதஞ்சலியார் | — | 145 |

| நூற்பெயர் | | பக்கம் |
|---|---|---|
| வாதநூல் — 1000 - கைலாசச் சட்டை முனியார் | — | 45 |
| வால்மீகர் சாத்திரம் | — | 216 |
| **வி** | | |
| வியாதியாளன் முகக்குறி பார்த்துத் தீரும் தீரா தென்று சொல்லுகிற நாடி சாத்திரம் | — | 56 |
| வினோதம் | — | 116 |
| விஷ பேதி | — | 236 |
| **வே** | | |
| வேதாகமத்தில் அகத்தியர் நவசித்தாதிக் குழம்பு | — | 64 |
| **வை** | | |
| வைத்தியக் கும்மி - குருமுனிவர் | — | 110 |
| வைத்திய சிந்தாமணி - அகத்தியர் | — | 68 |
| வைத்திய சூத்திரம் — 16 - அகத்தியர் | — | 250 |
| வைத்திய சூத்திரம் — 205 - அகத்தியர் | — | 119 |
| வைத்திய சூத்திரம் — 1500 - அகத்தியர் | — | 5 |
| வைத்தியத்திரட்டு | — | 1, 21, 23, 38, 39, 42, 43, 52, 55, 57, 59, 70. 71, 72, 73, 82, 83, 85, 91, 107,113, 123, 124, 130, 162, 193, 201, 211, 212, 266, 267, 219, 220, 242, 246, 252 |
| வைத்திய பூரணம் | — | 31 |
| வைத்தியமும் மந்திரமும் | — | 29 |
| வைத்தியம் 36 - தெட்சிணாமூர்த்தி | — | 27 |
| ,, 80 - தெட்சிணாமூர்த்தி | — | 265 |
| ,, 100 - அகத்தியர் | — | 215 |
| ,, 150 - அகத்தியர் | — | 79, 208 |
| ,, 200 - அகத்தியர் | — | 128 |
| ,, 205 - அகத்தியர் | — | 37, 88, 119 |
| வைத்தியம் 600-ன் படி பீடிகை அகத்தியர் | — | 225 |
| ,, அகத்தியர் | — | 32, 154 |

| நூற்பெயர் | | பக்கம் |
|---|---|---|
| வைத்தியம் கையேடு | — | 260 |
| ,, நாடி சாத்திரம் | — | 197 |
| ,, பலதிரட்டு | — | 92 |
| ,, ரெத்தினச் சுருக்கம் 360 அகத்தியர் | — | 155 |
| வைத்திய ரெத்தினச் சுருக்கம் அகத்தியர் | — | 47 |
| வைத்திய வண்ணம் கும்பமுனி | — | 111 |
| வைத்திய வெண்பா போகம் | — | 186 |


* * *

# தஞ்சை சரசுவதி மகால் நூலகத்

## தமிழ்ச் சுவடிகளின் விளக்கம்

## 17 - வது தொகுப்பு

### மருத்துவப் பகுதி

வரிசை எண் : 1899 சுவடி எண் : 951

## வைத்தியத் திரட்டு

பொருள்: மருத்துவம்

நூலாசிரியர் : பலர்

ஏடுகளின் எண்ணிக்கை : 50

சுவடிகளின் நிலைமை : மிகமிகப் பழுது

பக்கத்திற்கு : 4-7 வரிகள்

அளவு : 22 × 2 செண்டிமீட்டர்

எழுத்து : தமிழ்

கி. எண்ணிக்கை : 700

குறை

*தொடக்கம்*

**மருந்து சுத்தி, மனோசிலை சுத்தி**

பணம்போல நறுக்கி கிளிகட்டி
..............திரம்..............யெடுத்து
வாங்கி உளுந்து வெந்த தண்ணீர்விட்டு

*முடிவு*

ருத்திர தேவா யநம ஓம் சுங் உங்
வயநம சிமயேசுபர தேவாய நம
ஓங் அங் உங் என மசி வா
சதாசிவ தேவாய நம.

**காலம்**

இல்லை

*குறிப்பு*

இதில் வைத்தியங்களும் மந்திரங்களும் உள்ளன. சிறுநீர் கடுப்புக்கு, தோஷத்துக்கு மலசலம் அடைப்புக்கு, சுரத்துக்கு, செம்பு சுத்தி, அகத்தியர் முப்பூச் சுண்ணம், ஐங்காயம் முதலியன உள்ளன.

வரிசை எண் : 1900 சுவடி எண் : 952-a

# அகத்தியர் சாலத்திரட்டு 2-வது வாத காண்டம்

பொருள் : மருத்துவம்

நூலாசிரியர் : அகத்தியர்

ஏடுகளின் எண்ணிக்கை : 32

சுவடியின் நிலைமை : மிகமிகப் பழுது

பக்கத்திற்கு : 7 – 9 வரிகள்

அளவு : $37\frac{1}{2} \times 3\frac{1}{2}$ செண்டிமீட்டர்

எழுத்து : தமிழ்

கி. எண்ணிக்கை : 1000

குறை

## தொடக்கம்

.................................மூட்டிக்
கொடுத்துப் பார் சன்னிசுரம் குடிபோச் சப்பா
ஆட்டியே யமைப்பதற்கு இளவென் னீறும்
மருகின்வேர்க் கசாயத்தி லருந்திப் பாரு
நாட்டியே சுரம்போகும் பிறப்புத் தீரும்
........................................ 216

## முடிவு

அலைவானே யிந்நூலை வெளியிட் டோர்கள்
மேவானோ யிருபத்து யெட்டுக் கோடி
வீள்நரகில் வீள்கானோ வேதாந் தத்தில்
போவானோ இருதயத்தில் பத்தி முத்தி
பூவானோ புகமாட்டான் பொன்னா மென்னூல்
பாவான முன்னூறு ரண்டாங் காண்டம்
பதனமடா ரசவாத மான முற்றே ! —300
அகத்தீசுபரர் பாதாரவிந்தமே கெதி
தேவி சகாயம்

காமாட்சி அம்மன் கருப்பண்ண சுவாமி துணை
தெண்டாயுதபாணி திருமூர்த்தி லெட்சிக்கவும்
மொ. முத்துக்காமாட்சி நாடான் மகன்
பொ. முத்துக் கருப்ப நாடான் ஏறுகுர
பாதார விந்தமே கெதி.
ராம செயம்

## காலம்

இல்லை

## குறிப்பு

இதில், தொடக்கம், தலைப்பு இல்லை. முடிவு கொண்டு தலைப்பு கொடுக்கப் பட்டது. இது, எமது சுவடி எண் 824-b போன்றது.

வரிசை எண் : 1901 சுவடி எண் : 952-b

# அகத்தியர் சாலத்திரட்டு 3-வது இந்திரசாலம்

பொருள்: மருத்துவம்

நூலாசிரியர்: அகத்தியர் ஏடுகளின் எண்ணிக்கை: 24

சுவடியின் நிலமை: மிகமிகப் பழுது பக்கத்திற்கு 7–9 வரிகள்

அளவு: $37\frac{1}{2} \times 3\frac{1}{2}$ செண்டிமீட்டர் எழுத்து: தமிழ்

கி. எண்: 1000 முழுமை

## தொடக்கம்

மானொருகை மழுவொருகை தரித்த நாதன்
வாதமது வழியுரைத்தார் ஆதி யந்தம்
நானொருகை யிந்திரமா சால வித்தை
நவிலுகிறேன் நந்திகுரு நாதாக்கள் காண.

## முடிவு

வாதமடா வந்தாக்கால் மூன்றாங் காண்டம்
வகையான மாரணஞ்செய் சினத்தில் சாவான்
பாதகமே செய்யாதே ஆயிரத் திருநூறு
பாடியிதின் வெவ்வேறே காண்ட முற்றே! —300
மூன்றாங்காண்டம் - இந்திரசாலத் தொழில்
எழுதி முடிந்தது
முற்றும்

பரதேவதா வாலை ஞான சரசுபதி
துணைசெய்வா ளாகவும்.

## காலம்

இல்லை

## குறிப்பு

இதில், இந்திரசால வித்தை கூறப்பட்டுள்ளது. இது, எமது சுவடி எண் 824-c போன்றது.

வரிசை எண் : 1902 சுவடி எண் : 952–c

# அகத்தியர் சாலத்திரட்டு 4-வது மாந்திரீகம்

பொருள் : மாந்திரீகம்

நூலாசிரியர் : அகத்தியர்

ஏடுகளின் எண்ணிக்கை: 26

சுவடியின் நிலைமை : மிகமிகப் பழுது

பக்கத்திற்கு : 7–9 வரிகள்

அளவு : $37\frac{1}{2} \times 3\frac{1}{2}$ செண்டிமீட்டர்

எழுத்து : தமிழ்

கி. எண்ணிக்கை : 2000

குறை

## தொடக்கம்

வேறுதுறை யறியாத சித்தர்க் கெல்லாம்
மெய்யான யிந்திரமா சால மாடக்
கூறுகிறேன் மாந்தரீக வரலா றெல்லாம்
குமகுரு பரமுருகா சரணம் போற்றி

## முடிவு

ருத்ர மூலம்

கொள்ளவே ருத்திராதி யின்னங் கேளு
கூறிய பஞ்சகோணம் போற கீறி
விள்ளதிலே அஞ்சதிலே உள்ளே யிட்டு
வீட்டரையில் ஓங்காரம் சேர யிட்டு
மெள்ளவே...... ................................. 264

## காலம்

இல்லை

## குறிப்பு

இதில், மாந்திரீகச் செய்திகள் கூறப்பட்டுள்ளன. அட்டமாநரகம் அட்ட கெ்த மந்திரம், மோடிநிலை தேவதை செபம், மாய்கை பொடி, அந்தரத்தில் சண்டை, வாது தேவதை யடக்கம், திருநீறு வீச, சண்டன் மை, புகை, ரண மோடி, மோடிவைக்க இடம், சதாசிவன், பிரம்ம தியானம், மாயாமந்திரம் முதலியன உள்ளன.

வரிசை எண் : 1903 சுவடி எண் : 953.

# அகத்தியர் வைத்திய சூத்திரம்—1500

பொருள் : மருத்துவம்

நூலாசிரியர் : அகத்தியர் ஏடுகளின் எண்ணிக்கை : 143

சுவடியின் நிலைமை : மிகமிகப் பழுது பக்கத்திற்கு: 7—8 வரிகள்

அளவு : 33 × 3 செண்டி மீட்டர் எழுத்து : தமிழ்

கி. எண்ணிக்கை : 5000 குறை

## தொடக்கம்

ஹரிஓம் நன்றக குருவாழ்க
பாகுடன் கிணேசன் பாதம்
பரிந்துமுக் குணங்கள் தன்னை
வாகடத் தொகுதி யெல்லாம்
வகு....................... ம தாக்கி
யாகம விதியின் னூலா
லடந்திடும் நோய்கட் கெல்லாம்
போகநல் மருந்து சொல்வோம்
புலத்தியா பொருந்தக் கேளே !

## முடிவு

மாட்டப்பா சாவாக்கி நீதான்
பத்துச் சாமம் வளமாகும்
செந்தூர மாகுப்பார்
............... னிரக்கிப் பாரு
நிரமிந்திர கோபம் போலக்
கருஞ்சிவப்பு மாகும்
ஆட்டடா யிது .........................
...... ...................... துக்கும் போது. 667

## காலம்

இல்லை

## குறிப்பு

இதில், இடகலை, பிங்கலை, சுழிமுனை, திசநாடி, வாதம், பித்தம், சிலேத்துமம், தாதுநிறம், பஞ்சபூதமறிய, தோஷம் பார்க்கிற குணம், கருந்தோஷம், மரணக்குறி, இந்திரரோகம், சுகசன்னி, ரசசுத்தி முதலியன உள்ளன. இதில் 667 செய்யுட்களே உள்ளன.

இது, எமது சுவடி எண் 301—h போன்றது.

வரிசை எண் : 1094 சுவடி எண்: 954

# சித்திராரூடம்

பொருள்: மருத்துவம்

நூலாசிரியர் : நாகலிங்கய்யர் மாணவர்

ஏடுகளின் எண்ணிக்கை: 37

சுவடியின் நிலைமை : மிகமிகப் பழுது

பக்கத்திற்கு : 5-7 வரிகள்

அளவு : 34 × 2½ செண்டிமீட்டர்

எழுத்து : தமிழ்

கி. எண்ணிக்கை : 1000

முழுமை

## தொடக்கம்

திருமரு தூர்வளரும் நாக லிங்கர்
சீர்பாத கமலமென் சிரசில் வைத்து
மருவு சித்திரா ரூடப் பொருளினை
வகுத்துச் சொல்லுவே நித்த மகிதலத்தில்

## முடிவு

முந்திடும் விடங்க ளெல்லாம் தீர்ந்திடும்
முதியவர் சிறியவ ரெனினு மிந்த
............ சை யொருநூறும் பருவமுஞ்
சரிவர வேயிருந்து தான் வாழ்ந்து
திருமகள் ...................துப் பதினாறுஞ்
சிறுவரைப் பெற்று முத்தி செல்வர் தாமே !
தனனத் தன தனனா
சிவன் ...... ...........யவ தியாகராசர்
கிருபை யுண்டாக வேணும்
குருபாதமே துணை,

## காலம்

இல்லை

## குறிப்பு

இது, எமது சுவடி எண் **21-a / D29** போன்றது. இதில் இரண்டு பகுதிகள் உள்ளன. 16-ஆம் பக்கம் வரை ஒரு பகுதியாகவும் 17-ஆம் பக்கம் முதல் ஒரு பகுதியு மாக உள்ளன,

வரிசை எண் : 1905

சுவடி எண் : 955

# சரக்கு வகை

பொருள் : மருத்துவம்

நூலாசிரியர் : அறியக்கூடவில்லை

ஏடுகளின் எண்ணிக்கை: 27

சுவடியின் நிலைமை : மிகமிகப் பழுது

பக்கத்திற்கு: 6–7 வரிகள்

அளவு : $27 \times 2\frac{1}{2}$ செண்டி மீட்டர்

எழுத்து : தமிழ்

கி. எண்ணிக்கை : 600

முழுமை

## தொடக்கம்

சரக்குவகை

ஒன்றுக் கொன்று ஒடுக்கம்

சாரம் விட்டால் சாரமில்லை நிச்சர மாச்சு
சகலகுரு சகலகரு தயங்கிப் போச்சு
காரம் விட்டால் காரமில்லை சுண்ணாம்புக் கெல்லாம்
கைமுறையாய்க் கடுங்காரம் மேத்து மேத்து
பூரம்விட்டால் சுருக்கில்லை சுன்னப் போக்கு
பொன்னை விட்டால் வர்ணமில்லை வர்னத் துக்கு

## முடிவு

தோணப்பா தோணமட்டுந் துகையோர் கோடி
துட்டினா ரதுகண்டு தோணிப் பாரு
ஊணப்பா அதிலிருர்து ஊணிப் பாரு
வாதமத்துப் பார்தவராது என்றுந் தானே ! 9

## காலம்

இல்லை

## குறிப்பு

இதில், சூடம், சாரக்கட்டு, துருசு நீர், வெடியுப்பு முப்புவகை, கிளிஞ்சி சுன்னம், அண்டச் சுன்னம், பூ நீரு குரு, முதலியன உள்ளன.

வரிசை எண்: 1906

சுவடி எண் : 956 – a

# சட்டைமுனி சூத்திரம்

பொருள் : மருத்துவம்

நூலாசிரியர் : சட்டை முனியார்

ஏடுகளின் எண்ணிக்கை : 22

சுவடியின் நிலைமை : மிக மிகப் பழுது

பக்கத்திற்கு : 5-7 வரிகள்

அளவு : $27\frac{1}{2} \times 3$ செண்டி மீட்டர்

எழுத்து : தமிழ்

கி. எண்ணிக்கை : 450

குறை

## தொடக்கம்

சோதியெனுந் துரியவெளிக் குருவே அய்யா
சொற்பெரிய கயிலாசம்............ஞான
தாதியே ஞானத்துக் கேளும் மார்க்கம்
தாதையென்னும் வுரைத்தநூற்..............

## முடிவு

மத்தியாம் வசியகுலத் துதித்தோ னாகில்
மயங்கியல்லோ............பாவே செய்வான்
பத்தியாஞ் சூத்திரருக் கின்னூல் கிட்டும்
பண்............காயசித்தி பண்ணுந் தானே —26

## காலம்

இல்லை

## குறிப்பு

இதில், அண்டச் சுண்ணம் முதலியன உள்ளன

வரிசை எண் : 1907

சுவடி எண் : 956 - b

# திருமந்திரம்

பொருள் : மருத்துவம்

நூலாசிரியர் : திருமூலர்

ஏடுகளின் எண்ணிக்கை : 2

சுவடியின் நிலைமை : மிகமிகப் பழுது

பக்கத்திற்கு : 5-6 வரிகள்

அளவு : 27½ × 3 செண்டி மீட்டர்

எழுத்து : தமிழ்

கி. எண்ணிக்கை : 50.

குறை

## தொடக்கம்

சித்தஞ் சிவங்கரண சோமன் சத்திகாண
ஒத்தநல் புத்தி உறுதி மகாயோகங்
கொத்தந்த மூன்றுங் குடிலங்காண்கங் காநம
பத்திநல்ல கங்காரம் பாதத்துக் கேதுவே ! — 1

## முடிவு

திரட்டுந் தொழிலுக்கு சேந்தருளுங் கைக்கும்
மருட்டிய சூதத்தை வளமாகச் சுத்திசெய்
அருட்டிய சுத்திக் கசந்தநீ யூடினார்
பிரட்டாகும் பாரு பார்ப்போரன் சித்தரே !—10

## காலம்

இல்லை

## குறிப்பு

இதில், ரச சுத்தி முதலான சுத்திகள் உள்ளன. ஏடுகள் ஒடிந்தும், பொடிந்தும் உள்ளன.

வரிசை எண் : 1908 சுவடி எண் : 957 – a

# போகநாயனார் சூத்திரம்-பூசாவிதி

பொருள் : மருத்துவம்

நூலாசிரியர் : போகர்

ஏடுகளின் எண்ணிக்கை : 1½

சுவடியின் நிலைமை: மிகமிகப் பழுது

பக்கத்திற்கு: 6-7 வரிகள்

அளவு: 23½ × 3 செண்டி மீட்டர்

எழுத்து: தமிழ்

கி. எண்ணிக்கை : 300

முழுமை

## தொடக்கம்

பாரப்பா வாலைதன்னைத் தியானஞ் செய்ய
பாங்கான நவகோண மிட்டுச் சூளச்
சேரப்பா இருவளையம் வாசல் நாலு
சிறப்பாக றீங்கார மிட்டு நன்றாய்

## முடிவு

காணப்பா பானத்தைப் பிரிந்து நன்றாய்
கைமுறையாய்... லாங்கி யாசான் சொன்னார்
ஆணப்பா ஆண்பிள்ளை ஆரென் றாக்கால்
அமுதமுண்டு நிலையில் நின்றா னவனே சித்தன்
வீணப்பா மற்றதெல்லாம் நாய்வால் பற்றி
வெள்ளத்தைக் கடத்துவோ மென்ற பெத்தி
பூணப்பா யிந்தமுறை யாருங் காணார்
புரையுயர்ந்த சூத்திரந்தான் முடிவு முற்றே! - 44

போகநாயனார் சூத்திரம் முற்றும்
வேலுண்டு, வினையில்லை

## காலம்

இல்லை

## குறிப்பு

இதில், வாலை சக்கரம் அமைக்கும் முறை, பூசைவிதி. அது வழிவழி வந்தது, பூசை செய்யும் முறை முதலியன உள்ளன.

இது, எமது சுவடி எண் 186 f / D 299 போன்றது. அதில் 43 செய்யுட்களே உள்ளன. இதில் 44 செய்யுட்கள் உள்ளன.

17-வது தொகுப்பு

வரிசை எண் : 1909

சுவடி எண் : 957 - b

# சுந்தரானந்தர் தீட்சை சூத்திரம்

பொருள் : மருத்துவம்

நூலாசிரியர் : சுந்தரானந்தர்

ஏடுகளின் எண்ணிக்கை : 5 (15—19)

சுவடியின் நிலைமை : மிகமிகப் பழுது

பக்கத்திற்கு 6-7 வரிகள்

அளவு : 23½ × 3 செண்டி மீட்டர்

எழுத்து : தமிழ்

கி. எண்ணிக்கை : 100

முழுமை

## தொடக்கம்

பூமி நாத மேகமே
　　புனல்சொ ரிந்த பூவதாம்
மரமடா ரவிமுகத்தி லிருந்த
　　விந்தடா சோமநாத மீதியே

## முடிவு

சோதி யான லிங்கித ராரு
　　சூத்திரநாற் சதுரமும்
ஆதி யாம்ப முத்தினால்
　　அரைத்து நாலு சாமமு
பேதி யண்ட மஞ்சளில்ப்
　　பிளக்கு மாங்கு மரியில்
வாதி யான வனியில
　　மருவ யெட்டு முத்துமே ! —26
சந்தரானந்தர் தீட்சை சூத்திரம்
　　முற்றும்

குமர குருபரன் அமறப் புலகறன் துணை செய்ய வேண்டியது

## காலம்

இல்லை

## குறிப்பு

இது, எமது சுவடி எண் 322-e / D 618 போன்றது,
இதில், வெளுத்த உப்பு, வழலை செய்முறை, முப்பு முடித்தல், கவுனக் குளிகை, லிங்கச் சுன்னம் முதலியன உள்ளன.

வரிசை எண் : 1910 சுவடி எண்: 957—C

# அமுர்த பஞ்சாட்சரத் தீருவை

பொருள் : மருத்துவம்

நூலாசிரியர் : அறியக்கூடவில்லை

ஏடுகளின் எண்ணிக்கை : 3 (20—22)

சுவடியின் நிலைமை : மிகமிகப் பழுது

பக்கத்திற்கு: 6—7 வரிகள்

அளவு : 23½ × 3 செண்டி மீட்டர்

எழுத்து : தமிழ்

கி. எண்ணிக்கை : 80

முழுமை

தொடக்கம்

நமசிவாய மென்றுரைத்த மந்திரம்
இதுக்கு அற்புத மெப்படி யென்னில்
நகாரந் திரோதா சத்தி.
இது ஆற்றுமாக்களை, பிரவஞ்சத்திலே
யிச்சையை வகுத்தும்

முடிவு

பராபரமாகிய பரமேசுபரன் மானைப் பிடிக்க
மானைப் போல யிரவையும் பகலையும்
குருவென வடிவு கொண்டு, ஆதி வள்ளுவ
நயினார் சாட்சியாக பார்வதிக்கும் நந்தி
தேவருக்கும் அருளிச் செய்தவாறு
திருநந்திதேவர் திருவருட் பயன் சாட்சியாகத்
திருமூல தேவருக்கு அருளிச் செய்தவாறு.
பஞ்சாட்சரத் தீர்வை முற்றும்

காலம்

இல்லை

குறிப்பு

இதில், நமசிவ்ய எனும் ஐந்தெழுத்தாகிய பஞ்சாட்சரத்தின் பெருமையும் மகிமையும் கூறப்பட்டுள்ளன.

வரிசை எண் : 1911 சுவடி எண்: 357-d

# புண்ணாக்குச்சித்தர் பாடல்

பொருள் : சித்தர் பாடல்

நூலாசிரியர்: புண்ணாக்குச் சித்தர்

ஏடுகளின் எண்ணிக்கை: 6 (23—28)

பக்கத்திற்கு: 6-7 வரிகள்

சுவடியின் நிலைமை: மிகமிகப் பழுது

எழுத்து : தமிழ்

அளவு: 23½×3 செண்டி மீட்டர்

குறை

கி.எண்ணிக்கை: 120

தொடக்கம்

ஆதி மயமாம் அரனார் திருவருளால்
சோதி மயமாந் தில்லையி லேரு
பாத மயமாம் பூரண நாமம்
நீதி யறியார் நிலவு புக்காலே !

முடிவு

பதம்

குளியை நம்பாதே பரன் குழியை நம்பாதே
குழியிதான கிட்டி கம்பு கொண்டு கையை
நெருக்கிய குழிமயலாய்த் திரியும் பாத்தா —32
யரியா மட்டை கான குழி ..........................

காலம்

இல்லை

குறிப்பு

இதில், 32 செய்யுட்கள் முழுமையாயுள்ளன இவர், பதினெண் சித்தர்களி லொருவர். தத்துவம் நிறைந்த பாடல்களாக உள்ளன. இவரது பாடல்கள் **பெரிய ஞானக்கோவை** யில் இடம் பெற்றுள்ளன.

வரிசை எண் : 1912 சுவடி எண் : 957 - e

# திருமந்திரம் - பத்து

பொருள் : இலக்கியம்

நூலாசிரியர் : திருமூலர்

ஏடுகளின் எண்ணிக்கை $1\frac{1}{2}$ (29-30)

சுவடியின் நிலைமை : மிகமிகப் பழுது

பக்கத்திற்கு : 6-7 வரிகள்

அளவு : $23\frac{1}{2} \times 3$ செண்டி மீட்டர்

எழுத்து : தமிழ்

கி எண்ணிக்கை : 30

முழுமை

## தொடக்கம்

மதிக்குந் துரிசு மாய்கை களன்றிட
விதிக்கிறோம் நந்தி மேவி யுரைத்தது
உதிக்கு அகாரம் உகாரமு மொன்றாகக்
கதிக்கு மலமுடன் காரண மூன்றே !

## முடிவு

விண்ணிடி வீழும் வெளிவிட்ட பேருக்கு
தன்னடி தானாய்த் தனக்குச் சரியாய்
கண்ணொடு கண்ணாய் காத்திருந் தோர்க்குப்
பொன்னடி மூலம் பொருள்சொல்ல லாமே ! — 10

குமரன் துணை

## காலம்

இல்லை

## குறிப்பு

இதில், வாசி நிலை, யோக நிலை பேசப்படுகிறது. தத்துவமாக, மறைமுகமாகக் கூறப்பட்டுள்ளது.

வரிசை எண் : 1913 சுவடி எண் : 957 - f

# கொங்கண நாயனார் நான்கு

பொருள்: வேதாந்தம்

நூலாசிரியர்: கொங்கண நாயனார்

ஏடுகளின் எண்ணிக்கை: 1½ (30—31)

சுவடியின் நிலைமை: மிகமிகப் பழுது

பக்கத்திற்கு: 6-7 வரிகள்

அளவு: 23½ × 3 செண்டி மீட்டர்

எழுத்து: தமிழ்

கி. எண்ணிக்கை: 30

முழுமை

தொடக்கம்

கூடுவது யெவ்வாறு வேதாந்த மார்க்கம்
குறியான மூன்றெழுத்தி னுபதேச முன்னே
நாடுவது நாலெழுத்து ரண்டாந் தீட்சை
நலம்பெறவே அஞ்செழுத்து முன்றாந் தீட்சை

முடிவு

வாச்சப்பா அதன்துவே புத்தி யாச்சு
வையகத்தோ ரிதைவிட்டு மாறாய்ச் சொல்வார்
போச்சப்பா வென்று சொன்னா லெல்லாம் போச்சு
போகாம லிருந்துதென்றால் பிடிக்கும் யாரே! —4

காலம்

இல்லை

குறிப்பு

இதில், தீட்சை விபரமும், எழுத்துக்களின் சிறப்பும் பேசப்படுகின்றன.

வரிசை எண் : 1914 சுவடி எண்: 957 - ஓ

# அழுகணிச்சித்தர் பாடல்

பொருள்: சித்தர் பாடல்

நூலாசிரியர்: அழுகணிச்சித்தர்

ஏடுகளின் எண்ணிக்கை: 3 (32-34)

சுவடியின் நிலைமை: மிகமிகப் பழுது

பக்கத்திற்கு: 6-7 வரிகள்

அளவு: $23\frac{1}{2} \times 3$ செண்டிமீட்டர்

எழுத்து தமிழ்

கி, எண்ணிக்கை: 100

குறை

## தொடக்கம்

மதியமுர்தங் கொண்டாலே - ஆத்தாளே
வாதங்கள் பொய்யாது
அதிசயங்க ளுண்டாகும் - ஆத்தாளே
அமுர்தமது கொள்வதற்கு
சொல்லுகிறேன் கரியான ஆத்தாளே
சுத்த பசுவ நெய்யில்

## முடிவு

சித்திபெற்ற கற்பமிதாம் - ஆத்தாளே
தேவர் வருஷமதில்
அத்தியின் றன்பிலமாய் - ஆத்தாளே
ஆயிர மாம் வயசு
உத்தமர்க்குச் சொன்னேனான் - ஆத்தாளே
உசாவெழி கண்டதெல்லாம்
பத்தியுள்ள பத்தர்கட்கு - ஆத்தாளே
பலிக்கும்பார் கண்டாயே !

## காலம்

இல்லை

## குறிப்பு

இதில், அழுவது போன்ற ஒலியுடன் தத்துவங்கள் சிறப்பாகக் கூறப்பட்டுள்ளன. அழுகண்ணிச்சித்தர் பதினென் சித்தர்களில் ஒருவர், இவரது பாடல்கள் **பெரிய ஞானக் கோவை** எனும் நூலில் இடம் பெற்றுள்ளன.

வரிசை எண் : 1915

சுவடி எண் : 957 -h

# கருவூரார் பலதிரட்டு

பொருள் : மருத்துவம்

நூலாசிரியர் : கருவூரார்

ஏடுகளின் எண்ணிக்கை : 37 (35-71)

சுவடியின் நிலைமை : மிகமிகப் பழுது

பக்கத்திற்கு : 6-7 வரிகள்

அளவு : $23\frac{1}{2} \times 3$ செண்டி மீட்டர்

எழுத்து : தமிழ்

கி. எண்ணிக்கை : 1000.

முழுமை

## தொடக்கம்

பாடுகிறேன் பலதிரட்டு முடிவை யெல்லாம்
பதறாமல் சிதறாமல் பண்பாய் மக்காள்
பாடுகிறேன் சாத்திரமு மனைத்து பாசையெல்லாஞ்
சுருக்கியொரு மாலையாக

## முடிவு

பிரித்துக்கொள் தாமரையி னிலைபோ லப்பா
பெரிதல்ல சிறிதாகப்பூசி யுப்பு முண்டு
பிரித்துக்கொள் பூக்கசக்கில் ரெத்தம் போலும்
பேறான நீலத்தில் நீலம் போலும்
பிரித்துக்கொள் ரெண்டிலொன்று கொண்டுவந்து
புகழாகச் சமூலந்தான் சாறு வாங்கி
பிரித்துக்கொள் சூதமப்பா களஞ்சி பத்து
பேர்பெரிய மனோசிலைதா னொன்று கூட்டே ! 125

முற்றும்

குமரகுருபரன் துணைசெய்ய வேண்டியது

## காலம்

இல்லை

## குறிப்பு

இதில், அஞ்சனம், முதலை, குறட்டை, தாளகம், தங்கச்செம்பு, குளிகை, அயச் செம்பு, வெள்ளி வித்தை, லிங்கம், கழங்கு, முதலியன உள்ளன.

வரிசைஎண் : 1916 சுவடி எண் : 957–i

# கொங்கணவர் பலதிரட்டு

பொருள் : மருத்துவம்

நூலாசிரியர் : கொங்கணவர்

ஏடுகளின் எண்ணிக்கை: 34 (72-121)

சுவடியின் நிலைமை : மிகமிகப் பழுது

பக்கத்திற்கு : 7–8 வரிகள்

அளவு : $23\frac{1}{2} \times 3$ செண்டிமீட்டர்

எழுத்து : தமிழ்

கி. எண்ணிக்கை : 1000

குறை

தொடக்கம்

**பில்லி சூனியத்துக்கு**

பேய்முது கூகம் வேர் நாயத்துக்கிழமை நாள்
காப்புக்கட்டி கிழக்கே போர வேரைப்
பலிகொடுத்துப் பிடுங்கி வந்து சிறுக
மணியாகக் கோர்த்துத் தலையிலே கட்டிக்கொள்ளவும்.

முடிவு

**நாக சுத்தி**

துத்தநாகம் இருபது விராகனிடை
வில்லையாகத் திரட்டி செழுமலர்க் கொன்றை
யிலை இலுமிச்சம் பழச்சாறு விட்டரைத்து
கீழும் மேலும் பொதிந்து அகலச் சட்டி
வைத்து மூடிச் சீலைமண் செய்து மூணு யெருவில்
ஒரு புடம், போடவும். இப்படிப் பதினாறுபுடம்
போட்டுக் கூட்டிக் கொள்ளவும்.

காலம் முற்றிற்று.

இல்லை

குறிப்பு

இதில், 80 முதல் 96 வரை ஏடுகள் இல்லை. பல நூல்களிலிருந்தும் திரட்டப்பட்ட வைத்தியங்கள் இதில் இடம் பெற்றுள்ளன.

இதில், நாவடங்க, நெருப்பெடுக்க, மாட்டுப் புழு விலக, கீரை, மாங்கொட்டை, உடனே முளைக்க, சாதிலிங்கக் கட்டு, ரசக்கட்டு, மருந்தீடுக்கு, குன்மம், கணம், பித்தம், பாண்டு, வெள்ளீயம் வெள்ளியாக, கெந்தகத் தயிலம், கெந்தகத்தைச்செம்பு வாங்க, குளிகை, செந்தூரம், முதலியன உள்ளன.

வரிசை எண் : 1917 சுவடி எண் : 958

# அகத்தியர் பூரணம் - நானூறு

பொருள் : மருத்துவம்

நூலாசிரியர் : அகத்தியர்

ஏடுகளின் எண்ணிக்கை : 62

சுவடியின் நிலைமை : மிக மிகப் பழுது

பக்கத்திற்கு : 7-9 வரிகள்

அளவு : 43 × 3 செண்டி மீட்டர்

எழுத்து : தமிழ்

கி. எண்ணிக்கை : 2500

குறை

## தொடக்கம்

பூரணமாய் நிறைந்தபரி பூரணத்தைப் போற்றி
........... ......... .. பூரணத்தைப் பாடக்
காரணமாய்க் கருவுருவா யெங்குந் தானாய்
கண்மணியின் நடுவான கருணை தன்னை

## முடிவு

சேரப்பா வெள்ளி செம்பு ........... .........
......... ......... ....... .........
காரப்பா களங்கான லிங்கந் தன்னை
கண்காணப் பத்திலொன்று தன்னைப் போட
............... ............... ....................

## காலம் (தொடக்கத்தில்)

ரவுத்திரி வருஷம் புரட்டாசி மாதம் 20 - ஆம் தேதி இந்த ஏடு குருஞ்சேரியிலே யிருக்கும் வாத்தியார் ஐயர் அவர்கள் சமுகத்துக்கு புதூரு திருமூர்த்தி எழுதியது.

## குறிப்பு

இதில், முன்னிரண்டு ஏடுகளில் மந்திரங்கள் எழுதப்பட்டுள்ளன, அடுத்து. திசவாய்வு நிலை, மோகனம், மாரணம், உச்சாடினம் ஆகிருஷ்ணம், பேதனம், சத்தி உடம்பின் பெயர், பெண்ணுக்கும் ஆணுக்கும் ஈடு, பூத மாரணம், தெரிசிங்கி வித்தை, சவ்வீர வைப்பு, ரச கற்பூரவைப்பு, பச்சைக் கற்பூரவைப்பு, முதலியன உள்ளன.
ஏடுகள் முறிந்தும் ஒடிந்தும் உள்ளன.

வரிசை எண் : 1918 சுவடி எண் : 959

# தெட்சிணாமூர்த்தி வாகடப் பிள்ளைத்தமிழ்

பொருள் : மருத்துவம்

நூலாசிரியர் : தெட்சிணாமூர்த்தி

ஏடுகளின் எண்ணிக்கை : 26

சுவடியின் நிலைமை: மிக மிகப் பழுது

பக்கத்திற்கு : 5-8 வரிகள்

அளவு : 34 × 2½ செண்டி மீட்டர்

எழுத்து : தமிழ்

கி. எண்ணிக்கை : 2000

குறை

## தொடக்கம்

சீர்மலிந்து வளர்ந்தோங்கித்
 திருமலியும் பொதிகைவளர் தேவதேவன்
பாரிலங்கும் புவனசரா சரப்பிறவி
 நோயகலப் படிக்குஞ் செஞ்சொல்ப்
பேரிலங்கும் வாகடப் பிள்ளைக் கவிதைக்
 கருள்சொரிந்து பெருமை சேர

## முடிவு

நெத்தியுங் குளிர்ந்து கண்ணும்
 மலம்போலக் காணு மாகில்
சுத்திய பிடரி தொண்டை
 சீதம்போல் குளிர்ந்து காணில்
பத்திய கழுத்துஞ் சூழப்
 பானியது போலே தோன்றில்
குத்திடுஞ் சிலேற்பனம் நெஞ்சில்
 குறுகிடில் மரண மூன்றே ! — 4

## காலம்

இல்லை

## குறிப்பு

இதில், பிள்ளைத்தமிழ் அமைப்பில் மருத்துவம் பேசப்படுகிறது. செந்தூரம், பற்பம், முதலானதுகளை வைத்துப் பிள்ளைக்கவி பாடப்பட்டுள்ளது. (பாயிரம்) காப்பு, செங் கீரை, தாலம், சப்பாணி, முத்தம், வருகை, அம்புலி ஆகிய பருவங்களே உள்ளன. அம்புலிப் பருவத்தில் 8 பாடல்களே உள்ளன.

பின்னர் வேறுவகையான செய்யுட்கள் உள்ளன.

வரிசை எண் : 1919

சுவடி எண்: 960

# வைத்தியத் திரட்டு

பொருள்: மருத்துவம்

நூலாசிரியர் : பலர்

ஏடுகளின் எண்ணிக்கை : 250

சுவடிகளின் நிலைமை : மிகமிகப் பழுது

பக்கத்திற்கு : 8-10 வரிகள்

அளவு : 33×4 செண்டிமீட்டர்

எழுத்து : தமிழ்

கி. எண்ணிக்கை : 10,000

குறை

## தொடக்கம்

### பஞ்ச கல்லியாணி கிருதம்

கருநொச்சிவேர் மிளகுதாளிவேர்
பெருங்குரும்பை வேர் கருந் தும்பை வேர்
சிகப்புக் கொடிவேலிவேர் கடுமுடுக்கி வேர்
காடப்பை வேர் அவில்ப்பொ. ...வேர்

## முடிவு

கிராம்பு கசகசா தாளிசமு மாக்கி காயம்
வடிவாக இளவருப் பாய்ச் சூரணித்து
வளமாக வகைக்கு ஒரு பலந்தான் கூட்டே
கூட்டியே யிரண்டு மொன்றாய்ச்
சேர்த்துக் கொண்டு
குறையாமல் ஒருபலஞ்சீ............

## காலம்

இல்லை

## குறிப்பு

இதில், ஆதியெண்ணை முறை, சன்னிக்கு மேல் பூசத் தயிலம் மகாசிந்தாதி யெண்ணெய், தாமிர செந்தூரம். கபாடலேகிய முறை, மேகம் இருபதுக்கும் நவனீதம், நயன ரோகம் தொண்ணூறுக்கும் கனக தாம்பிராதி மாத்திரை, கண்படலத்துக் க் குளிகை முறை, பாசாணபற்பம், துருசுச் சுன்னம், சூதகக்கட்டுக்கு மாத்திரை, புப்பூ பதங்க முறை, அப்பிரக செந்தூரம் முதலான பல தலைப்புக்கள் உள்ளன.

நல்ல முறையாகக் காணப்படுகிறது.

வரிசை எண் : 1920 சுவடி எண் : 961–a

# நந்தீசர் அப்பிரகச் சுன்னம்

பொருள் : மருத்துவம்

நூலாசிரியர் : நந்தீசர்

ஏடுகளின் எண்ணிக்கை : 10

சுவடியின் நிலைமை : மிக மிகப் பழுது

பக்கத்திற்கு : 7–8 வரிகள்

அளவு : 31 × 4 செண்டி மீட்டர்

எழுத்து : தமிழ்

கி. எண்ணிக்கை : 250

குறை

## தொடக்கம்

கேளப்பா நீதான் கெடியான மேகங்கள்
கேளப்பா யென்பதும் கெடியாகத் தீர
கேளப்பா நந்தி கிருபையாய்ச் சொன்னது
கேளப்பா மேகம் கெடிதான ரோகமே ! — 1

## முடிவு

தோஷங்கள் தொண்ணூறும் சொகுசுடன் தீரும்
தோஷங்க ளப்பா தூர விலகிடும்
பாஷையாய்ச் சொன்னேன் பார்த்து அறிந்திடு
பாசை பரிக்கும் பகருவே னப்பனே ! - 79

## காலம்

இல்லை

## குறிப்பு

இதில், மேகம், அப்பிரக அனுப்பானம், உள்சுரம் முதலியன கூறப்பட்டுள்ளன.

17-வது தொகுப்பு
வரிசை எண் : 1921

சுவடி எண் : 961—b

# வைத்தியத் திரட்டு

பொருள்: மருத்துவம்

நூலாசிரியர்: பலர்

ஏடுகளின் எண்ணிக்கை: 9 (11-19)

சுவடியின் நிலைமை: மிக மிகப் பழுது

பக்கத்திற்கு: 6-7 வரிகள்

அளவு: 31 × 4 செண்டிமீட்டர்

எழுத்து: தமிழ்

கி, எண்ணிக்கை: 200

குறை

## தொடக்கம்

**சிந்தாதி லேகியம்**

செப்புகிறேன் சிந்தாதி லேகி யத்தை
சீரான சங்கம் வேர் பலந்தா னைந்து
ஒப்பில்லாக் கொடிவேலி சமனாய்த் தூக்கி
உரலிலிடித் தோர்பாண்டத் துள்ளே யிட்டு
தப்பில்லா நீர்படிதா னாலு பத்து
தயவாக அளந்து விட்டுத் தணலை மூட்டி

## முடிவு

காகளஞ்சி-1 இவைகளைக் கல்வத்திலிட்டுப் பொடித்து
அத்திக் கள்ளின் நீர்விட்டனாத்து குளிகை யாக்கி
அத்தி வெள்ளத்தி லுரைச்சு முளிப் பஞ்ச சுரரை
காசடையிட்டு ரெண்டு நேரமும் அரைமண்டலம்
கொண்டால் பிரமேகம் 21 தீரும்

## காலம்

இல்லை

## குறிப்பு

இதில், பூரணாதி லேகிய முறை, முகவாத சன்னிக்கு எண்ணெய் முறை, சன்னிக்குத் தயிலம், தீப்பட்ட புண்ணுக்குத் தயிலமுறை, சுரத்துக்கு சடங்குக் குடிநீர், அமுதாதி கிசாயம, தெசமூல கிசாயம், சின்னோலப்ப வாதி கிசாயம், சஞ்சீவிச் சூரணம், பிரமேக ரோகிக்குச் சூரணம், அப்பிரக பஸ்ப முறை, பிரமேகத்துக்கு நீலூரியாதிக் குளிகை முதலியன உள் ஊன.

வரிசை எண் : 1922

சுவடி எண் : 962-ஆ

# அகத்தியர் குளிகை—பதினாறு

பொருள் : மருத்துவம்

நூலாசிரியர் : அகத்தியர்

ஏடுகளின் எண்ணிக்கை : 3½(20-23)

சுவடியின் நிலைமை : மிகமிகப் பழுது

பக்கத்திற்கு: 7 வரிகள்

அளவு : 31 × 4 செண்டி மீட்டர்

எழுத்து : தமிழ்

ஏ எண்ணிக்கை : 150

குறை

## தொடக்கம்

கேளப்பா புலத்தியனே ரசத்தின் போதங்
 கெடிபட்ட சிவனைப்போல் வார்த்துக் கொண்டு
தாளப்பா பூசை செய்யக் கயிலாச போதர்
 தப்பாமல்ச் சதகோடி கால மாக

## முடிவு

வெள்ளென்றே வைத்துண்ணு ரெண்டொன் றுக்கு
 வேதிக்குங் காயசித்தி வசம தாச்சு
துள்ளேதான் பணவிடையாய்க் கொண்டு தேறு
 யுத்தமமாம் புலத்தியனே யோகி யாச்சே. —16
 அகத்திய மகாமுனிவ ரருளிய
 ரச குளிகை முற்றும்

## காலம்

இல்லை

## குறிப்பு

இதில், ரசமணி செய்முறை, அதன் பலன் முதலியன பேசப்படுகின்றன.

17-வது தொகுப்பு

வரிசை எண் : 1923

சுவடி எண் : 962 - b

# அகத்தியர் குளிகை பதினாறு

பொருள் : மருத்துவம்

நூலாசிரியர் : அகத்தியர்

ஏடுகளின் எண்ணிக்கை : 31 (22 26)

சுவடியின் நிலைமை : மிகப் பழுது

பக்கத்திற்கு : 7 வரிகள்

அளவு : 31 × 4 செண்டி மீட்டர்

எழுத்து : தமிழ்

கி எண்ணிக்கை : 150

முழுமை

குறிப்பு

இது, முன் பிரதி போன்றது.

வரிசை எண் : 1924

சுவடி எண் : 963

# சட்டை முனியார் ஞானம்

பொருள் : மருத்துவம்

நூலாசிரியர் : சட்டை முனியார்

ஏடுகளின் எண்ணிக்கை : 200

சுவடியின் நிலைமை : மிகமிகப் பழுது

பக்கத்திற்கு: 6—8 வரிகள்

அளவு : 24 × 3 செண்டி மீட்டர்

எழுத்து : தமிழ்

எண்ணிக்கை : 3500

குறை :

தொடக்கம்

மூலமுத லாறுதலங் ................ ............
........நின்ற மேலாறு யெழுத்து நோக்கி

முடிவு

சாணென்ற வுடம்புக்கு அமுதத்துப் பேவேன் பார்
உலுத்தனுக் ச் சொன்ன ............மன்ன
நரகந்தானே —94
நரகமென்ன பெண்மேலே ஆசை விட்டு
(அடுத்த ஏட்டில் ஒரு சக்கரம் மட்டும் உள்ளது)

காலம்

இல்லை

குறிப்பு

இதில், சுரக்குளிகை, காந்த பற்பம், முதலியன பேசப்படுகின்றன.

வரிசை எண் : 1925

சுவடி எண் : 964

# சுந்தரானந்தர் நாற்பத்தெட்டு

நூலாசிரியர்: சுந்தரானந்தர்

பொருள் : சோதிடம்

ஏடுகளின் எண்ணிக்கை: 13 (10—22)

சுவடியின் நிலைமை: மிகமிகப் பழுது

பக்கத்திற்கு : 7-8 வரிகள்

அளவு: 29 × 3 செண்டி மீட்டர்.

எழுத்து : தமிழ்

கி,எண்ணிக்கை: 300

முழுமை :

## தொடக்கம்

ஹரிஃ ஓம் நன்றாக குருவாழ்க குருவேதுணை

செங்கதிரவன் சசிசெழுந் தரணி பாலன்
பொங்குபுத னிந்திரகுருவே புகரு மாகத்
தங்குசனி தொடரவு தங்களை வணங்க
துங்குமிகு வாழ்வொடு சுகங்கள் பெறுவானே !

## முடிவு

இனிதான மீனமதில் நாலாம் பாதம்
யேந்திழையாள் கவிழ்ந்துதான் பிறக்கும் பாரு
கனிவாக ஒருபத்து நாற்பத் தாறில்
கண்டமுண்டு கடந்துவிட்டால் எழுபத் தாறில்
அனியாயஞ் செய்யவுமே மனது மில்லை
அன்புடனே தானதன்மஞ் அனேகஞ் செய்யும்
தனிமையுடன் பெரியோர்கள் உறவுண் டாகும்
சங்கையா லக்கினத்தின் பாதந் தானே! —48

## காலம்

இல்லை

## குறிப்பு

இதில் இராசி லக்கினங்களுக்குண்டான பலன்கள் கூறப்பட்டுள்ளன.

வரிசை எண் : 1926 சுவடி எண் : 965

# தெட்சிணாமூர்த்தி வைத்தியம் - முப்பத்தாறு

பொருள் : மருத்துவம்

நூலாசிரியர் : தெட்சிணாமூர்த்தி

ஏடுகளின் எண்ணிக்கை : 10

சுவடியின் நிலைமை : மிக மிகப் பழுது

பக்கத்திற்கு : 10-12 வரிகள்

அளவு : $18\frac{1}{2} \times 3$ செண்டி மீட்டர்

எழுத்து : தமிழ்

கி. எண்ணிக்கை: 300

முழுமை

தொடக்கம்

பாரப்பா செம்புனுட வேதை கேளு
    பரிவான தாம்பிரத்தைக் குகையில் வைத்து
சேரப்பா மதியுப்பு பலமே போடு
    சேர்ந்துருக்கும் போதினிலே மருந்து கேளு
காரப்பா அண்டமது பலமோ ரெண்டு
    கட்டுநவச் சாரமது ரெண்டு போடு
சீரப்பா கல்வத்தி லரைக்கத் தூளாம்
    சிறந்தபொடி மேல்கார மறைதான் போடே !-1

முடிவு

ஆமது கஷாயத் துள்ளே
    புதனமாய் இருந்துக் காச்சி
வாமிது பாகுப் போல
    வயித்திய போது மேனய
ஓமது விட்டுக் கிண்டி
    யுத்தம லேகி யத்தை
தாமது பதனம் பண்ணி
    புன்னைக்கா யளவு தானே !

காலம்

இல்லை

குறிப்பு

இதில், 29 செய்யுட்களே உள்ளன. பின்னர் நவசித் தூள் நூறு, இருபத்தேழு நட்சத்திரத்துக்கு, திசை மூலத்துக்கு முதலியன உள்ளன.

இது, எமது சுவடி எண், 324—C/D. 638 'அகத்தியர் —36' போன்றது.

வரிசை எண் : 1927

சுவடி எண் : 966

# வஸ்த்துப் பெண்

பொருள் : இரசவாதம்

நூலாசிரியர் : அறியக் கூடவில்லை

ஏடுகளின் எண்ணிக்கை 14

சுவடியின் நிலைமை : மிக மிகப் பழுது

பக்கத்திற்கு : 9-10வரிகள்

அளவு : 40 × 3 செண்டி மீட்டர்

எழுத்து : தமிழ்

கி. எண்ணிக்கை : 600

குறை

## தொடக்கம்

............ந்த ரசவாதப் பெண்
மோக பூரண சந்திரோ தையத்தைப் பார்
............த்தி யிருநூ றாய்ந்து
அரன்சொன்னா ரதிலிந்த யிருநூறுந்தான்

## முடிவு

சயிலமதுபோல் வடித்துத் தயிலத் தாலே
    தானரைத்துக் கோரை படர
மண்டை ஓட்டில் பூசி ஓட்டைத்
    தீப முகத்திலே கவிழ்த்தி மையை யெடுத்து
மாவி லிங்கஞ் சிமிளில் ...............

## காலம்

இல்லை

## குறிப்பு

இதில், தலைப்பு ஏடு முறிந்துள்ளதால், தலைப்பு காண இயலவில்லை. மிக மிகப் பழுதடைந்துள்ளன.

வரிசை எண் : 1928 சுவடி எண்: 967

# வைத்தியமும் மந்திரமும்

பொருள்: மருத்துவம்-மந்திரம்

நூலாசிரியர் : அறியக்கூடவில்லை | ஏடுகளின் எண்ணிக்கை: 14(46-ஆம் ஏடுமுதல்)

சுவடியின் நிலைமை : மிகமிகப் பழுது | பக்கத்திற்கு : 6-8 வரிகள்

அளவு : 27 × 4 செண்டிமீட்டர் | எழுத்து : தமிழ்

கி. எண்ணிக்கை : 600 | குறை

தொடக்கம்

வந்து அந்தப் பட்டையைத் தலைப்பெற்று
பெத்தவள் முலைப்பால் விட்டரைத்து
உண்டை பண்ணிப் பின்னும் சேர்க்கு மருந்து
நீன்று சாணுங் கீநீலம்
புரண்டடி வெள்ளை பாசாண ழ
..................... ......

முடிவு

முந்தி(ரி)ப்பழம்
நெல்லிக்காய்
விலாமிச்சம்
சர்க்கரை பலம் - 5
வெல்லம் பலம் - 2
கருப்பட்டி பலம் - 2
நெய் படி - 1

காலம்

இல்லை

குறிப்பு

இது, 46-ஆம் ஏடுமுதல் தொடங்குகிறது, இடையிடையே சக்கரங்கள் உள்ளன. இதில் விறும.................. தயிலம் சுப்பிரமணியர் குருமொழி, சுப்பிரமணியர் சக்கரம், மரண சக்கரம், எதிராளியினுடைய வாதம் எழும்பாமல் இருக்க, யெந்திரத்துக்கு பிராணப பிரதிட்டை, பெரிய கருப்பன் உபதேசம், வீரவாகுத் தேவர் வாக்கியம் முதலியன உள்ளன,

வரிசை எண் : 1929 சுவடி எண் : 968

# சவுமியசாகரம் - ஆயிரத்திருநூறு

பொருள் : மருத்துவம்

நூலாசிரியர் : அகத்தியர்

ஏடுகளின் எண்ணிக்கை : 138
இடையில் 18 ஏடுகள் இல்லை

சுவடியின் நிலைமை : மிக மிகப் பழுது

பக்கத்திற்கு 7-9 வரிகள்

அளவு : 38 × 3 செண்டி மீட்டர்

எழுத்து : தமிழ்

கி. எண்ணிக்கை . 6000

குறை

**தொடக்கம்**

காப்பு

சோதியெனும் மனோன்மணியைத் தியானம் செய்து
சுகமான சவுமியசா கரத்தைப் பாட
ஆதியெனுங் கணபதியும் வல்லபையுங் காப்பு
அரசான பிரமனொடு சரசுபதியுங் காப்பு

நூல்

மணியான ரவிமதியுஞ் சுளினை காப்பு
மகத்தான வேதியர்தன் பாதங் காப்பு
சனியான நால்வேதம் அந்தங் காப்பு
கருணைவளர் சாத்திர(மெ) ாறாறுங் காப்பு

**முடிவு**

கனிபொதிகை முனியுரைத்த சவுமிய சாகரஞ்
சருவகலைக் கியான ஞானந்தான்
நனிபெரு சாலமிகு பரிபூரண சூத்திரம்
ரசவாத மாகத்தனி மொழியாம் கிரந்த
தனிமொழியாம் கிரந்தத்துக் குரையே செய்த
சாத்திரமைந்துங் கிடையாத தன்மை யாலே
மனுடர்பல நூல்திரட்டி முனிதன் போல
வகுத்தாரே காண்டங்கள் பலவாய்த் தானோ ! — 1200

குருபாதார விந்தமே கெதி
சவுமிய சாகர முடிந்தது
முற்றும்
குருவே துணை.

**காலம்**

இல்லை

**குறிப்பு**

இதில், சாத்திரம் வந்த வகை, சீஷாள் பணிவிடை, சாட்சி அறிய, தத்துவ வழக்கம், கணபதி தியானம், சுப்பிரமணியர் தியானம், வயிரவர் தியானம், சிவசக்தி தியானம், சரியை, கிரியை, யோகம், ஞானம், ஆறுவகை முத்திரை, முத்திரையி ........... அடையாளம், ரவிமதி, முப்புச் சுன்னம், அண்டச்சுண்ணம் முதலியன உள்ளன.

இது, எமது சுவடி எண் 348/ D. 691 போன்றது,

வரிசை எண் : 1930 சுவடி எண் : 969

# வைத்திய பூரணம்

பொருள்: மருத்துவம்

நூலாசிரியர்: அகத்தியர்?

ஏடுகளின் எண்ணிக்கை: 55

சுவடியின் நிலைமை: மிக மிகப் பழுது

பக்கத்திற்கு 7–8வரிகள்

அளவு: 40 × 4 செண்டிமீட்டர்

எழுத்து: தமிழ்

கி. எண்: 2000

குறை

## தொடக்கம்

பூரணமாம் நிறைந்தபரி பூரணத்தைப் போற்றி
புகழ்பெரிய வைத்தியபூ ரணத்தைப் பாட
காரணமாய்க் கருவுருவாய் யெங்குந்தானாய்
கண்மணியின் நடுவான கருணை தன்னை
யாரணமாம் முக்கோணம் நடுவே நின்ற
அம்பரத்தை யனுதினமும் அறிவாய்ப் போற்றி
வாரணமா முகத்தோனை யனுதினமும் போற்றி
மகத்தான வேதியனை வணங்கி னேனே! —1

## முடிவு

கொள்ளவே ..............................
..............................................
விள்ளவே மறுபடியும் கிசாயத்தில் தாக்கு
.........தைப்பு சன்னிவேர் வையுத் தமனே
................................ சி களஞ்சி கொள்ளு
மைந்தனே....................................

## காலம்

இல்லை

## குறிப்பு

இதில், நூல்விபரம், பெருநூல் காவியப் புகழ்ச்சி, நாடி கீழு மேலும் மீறியோடும் விதம், குருநாடியிருக்குமிடம் பஞ்சநாடிகளிருக்குமிடம், மரணநாடி, வாயுவுக்கும் மந்தத்துக்கும், கெற்பிணிக்கும் வியாதி நாடி முதலியன உள்ளன.

வரிசை எண் : 1931 சுவடி எண் : 970

# அகத்தியர் வைத்தியம்

நூலாசிரியர் : அகத்தியர் ஏடுகளின் எண்ணிக்கை : 40

சுவடியின் நிலைமை : மிக மிகப் பழுது பக்கத்திற்கு : 7-8 வரிகள்

அளவு : 40×3 செண்டி மீட்டர் எழுத்து : தமிழ்

கி. எண்ணிக்கை : 1400 குறை

## தொடக்கம்

வென்னீரில் வெண்ணைதனில் வெருகடிதான் கொள்ள
வேறான கிராணிவகை யுதிர வாய்வு
பன்னீரில் முகவாயுவு வாத மெல்லாம்
பாக்குமடா திரட்சாதி சூரணந்தான் கேளு
தண்ணீரும் பேரிச்சு முந்திரிகைப் பழந்தான்
தவமான அதிமதுரம் முக்கா டேளை
நன்னீரும் நெல்பொரியும் முத்தக் காசு
நலமான யேலமொடு கிராம்புங் கூட்டே — 122

## முடிவு

மூள்கவே வியாதியெல்லாம் கடலே புக்கும்
முக்கியமா யகஸ்தியர்........ ......பண்ணு
நெகிழவே தியானமது யெந்நேரம் பண்ணு
நேரான தேவியைத்தான் தியானம் பண்ணு
தவறாது வியாதியெல்லாம் தவறுங்டே போகும்
மகிழவிந்த வயித்தியமே செய்தா (யானால்)
......யகற்றி லொப்பாரு யீசன் முற்றே ! 359
அகத்தியர் பாடியவைத்தியம் முகிந்தது
முற்றும்
குருவே துணை

## காலம்

இல்லை

## குறிப்பு

இதில், திராட்சாதிச் சூரணம், அசுவகெந்திச் சூரணம், கண்டாத்திரிச் சூரணம், தாளிச பத்திரிச் சூரணம், பஞ்ச தீபாக்கினிச் சூரணம், அசுவகெந்தி, குமரித்தயிலம், மேகத்நுக்குத் தயிலம், பித்த வெட்டை, அஸ்த்தி சூட்டுக்கு, வரண்ட மேகத்துக்குத் தயிலம் முதலியன உள்ளன.

வரிசை எண் : 1932 சுவடி எண்: 971

# அகத்தியர் சாலத்திரட்டு 2-ஆம் காண்டம் முன்னூறு

நூலாசிரியர் : அகத்தியர்
சுவடியின் நிலைமை : மிக மிகப் பழுதுபட்டது
அளவு : 26 × 4 செண்டி மீட்டர்
கி. எண்ணிக்கை : 1400

பொருள்: மருத்துவம்
ஏடுகளின் எண்ணிக்கை: 60
பக்கத்திற்கு : 10-11 வரிகள்
எழுத்து : தமிழ்
குறை

தொடக்கம்

நாகரசம்

காண்டமென்ன நாகரசஞ் சொல்லக் கேளு
  ஈடியகோ டகசாலை கொடுப்பை வீறி
ஆண்டகொடு வேலிசா ரணையின் சாறும்
  அப்பனே செருப்படிச்சார் நாமங் கூட்டி
பிண்டசட்டி யில்வார்த்து நாகம் வாங்கி
  விளம்பியசா றுடன்கலந்து எரிப்பாய் சாமம்

முடிவு

சொல்லிய காண்டந் துகைவழி நாலும்
சல்லியத் தோடே.......... ம் பச்சணி
பல்லியம் பட்டியம் பெத்துப் . ......
பல்லியங் கொட்டிப் பாராளு வார்களே! —229

ஆளுவாய்......................
  ..............துடருமே வுன்னை
கேளு..............ப்பது முற்றே ! —300

தெட்சணாமூர்த்தியருளிய சாலம்
பெருநூல் ஆயிரத் திருநூறு
காண்டம்...........சாலத்திரட்டு
சிகசாலவிதி முற்றும்

காலம்

.. ......தொள்ளாயிரத்து... ...வருடம் சித்திரை மாதம்
21-ஆம் தேதி சுக்கிரவாரமுந் திரு .... மூமாக
பாலக்காடு அங்காடிப் பரத்தி லிருந்து கொல்லம் வந்து
யிருக்கிற வைத்தியம், சிதம்பரம்.........
காண்டம் ஆயிரத் திருநூறும் முகிந்தது, முற்றும்

குருபாதமே கெதி
மனோன் மணித்தாய் துணை
சுப்பிர மணியக் கடவுளர் துணை
அகத்தீசுபரர் பாதாரவிந்தம்ம கெதி

குறிப்பு

இதில் துரிசுச்சுன்னம், சவுக்காரச் சுன்னம், மருந்து சுத்தி, பொரிக்காரக் கட்டு, அயச் செம்பு, தாம்பிர பற்பம், கெவுரிச் செந்தூரம் முதலியன உள்ளன.

இடையிடையே ஏடுகள் இல்லை. பயனற்ற நிலையில் ஏடுகள் உள்ளன.

வரிசைஎண் : 1933 சுவடி எண் : 972–a

# அகத்தியர் பெருநூல் 1200

பொருள் : மருத்துவம்

நூலாசிரியர் : அகத்தியர்

ஏடுகளின் எண்ணிக்கை: 52

சுவடியின் நிலைமை : மிக மிகப் பழுது

பக்கத்திற்கு : 7–9 வரிகள்

அளவு : 40×4 செண்டி மீட்டர்

எழுத்து : தமிழ்

கி. எண்ணிக்கை : 2000

முழுமை

*தொடக்கம்*

ஆயிரத் திருநூறு முன்னூ லாய்ந்து
வெளங்கிய நட்சேத்திரம் பகர ..........
...........................................
.....................................

*முடிவு*

...........................................
.....................................
தீவினைக ளாகாதே செடம்போக்காதே
பண்டுசொன்ன குருமுறையை
...........................................
வயித்தியநூல் காண்ட முற்றே — 300

*காலம்*

சிவசுப்பிரமணிய தேவாய நமா
கணபதியே நமா
தெட்சணாமூர்த்தி லட்சிப்பார்..........

இல்லை

*குறிப்பு*

இதில், முன்னர் வைத்தியம் எழுதிய ஏடுகள் 8 உள்ளன, மிக மிகப் பழுதடைந்துள்ளதால் செய்தியறிய இயலவில்லை

இது. மிகவும் பழுதடைந்தும், ஏடுகள் தலைதடுமாறியும், தலைப்புப் பகுதி பூச்சியரித்திருப்பதாலும் செய்திகள் அறியமுடியவில்லை. பக்க எண்கள் வெவ்வேறு விதமாக உள்ளன, ஏடுகளின் கடைசிப் பகுதி முறிந்தும், ஒடிந்தும் பூச்சியரித்தும் உள்ளன.

வரிசை எண் : 1934 சுவடி எண் : 972-b

# அகத்தியர் பெருநூல் - வாத காண்டம்

பொருள் : மருத்துவம்

நூலாசிரியர் : ஆகத்தியர்

ஏடுகளின் எண்ணிக்கை : 35(53-87)

சுவடியின் நிலைமை: மிக மிகப் பழுது

பக்கத்திற்கு : 7-9 வரிகள்

அளவு : 40 × 4 செண்டி மீட்டர்

எழுத்து : தமிழ்

கி. எண்ணிக்கை : 1500

முழுமை

## தொடக்கம்

நாகக் கட்டு

காண்டமென்ன நாகரசஞ் சொல்லக் கேளு
கடியகோ டுகசாலை கொடுப்பை வீளி

## முடிவு

அரைந்திருந்த வாதமுறை கருவை யெல்லாம்
ஆனந்த முலகுரு அருளால் வாய்க்கும்
பரைந்திருந்த ......... .......... .............
பரவெளிக்கும் கடைதிலைக்கும் காப்பே முற்றே! — 597

வாத காண்டம் முற்றும்
அகத்திய முனிவர் பாதார விந்தமேதுணை.

## காலம்

இல்லை

## குறிப்பு

இதில், துரிசுநீர், நாகக்கட்டு, ஆறுவகைச் செந்தூரம், பஞ்சலோக வேதை, சூதக் கட்டு, மூலிகைத் தயிலம், லிங்கமெழுகு, முள்ளெலி ரசமணி, கெந்தகத் தயிலம், உப்பு செயநீர். அயச்செம்பு, தலையோடு, ரசசுன்னம் முதலியன உள்ளன.

கடைசி ஏட்டின் பின்பக்கம் சக்கரங்கள் உள்ளன, உச்சாடினம், சிதம்பர தம்பனம், மோகனம், மாரணம், பேதனம் ஆகியவைகட்குரிய சக்கரங்காளகுமிவை.

வரிசை எண் : 1935 சுவடி எண் : 972 - c

# அகத்தியர் சாலத்திரட்டு இந்திரசாலம் 3-ஆம் காண்டம்

பொருள் : மருத்துவம்

நூலாசிரியர் : அகத்தியர் ஏடுகளின் எண்ணிக்கை 44

சுவடியின் நிலைமை : மிக மிகப் பழுது பக்கத்திற்கு : 7-8 வரிகள்

அளவு : 40 × 4 செண்டி மீட்டர் எழுத்து : தமிழ்

கி. எண்ணிக்கை : 1600 குறை

## தொடக்கம்

காப்பேது வாதங் கடந்தகுரை பாடத்
தாப்பேது சாலத்தைச் சாற்றவே - மாப்பேது
வாதநூல் முன்னூறுங் கார்த்து சரிதான்
வேதமே சொல்லி விளம்பு

## முடிவு

விளம்புவான் யிருதலையின் மணிதான்
மாபக்கத்து
× × × × × ×
மத்தியி லெலும்பொன் றுண்டு முன்னானை
நீலவற்ண மொக்குந் தானே ! —843

## காலம்

இல்லை

## குறிப்பு

இதில், கரிக்குருவி அஞ்சனப் பொடி, அஞ்சா பேருக்கு, திக்குபந்தனம், அட்டாங்க அகோர மந்திரம், திருட்டுப்பிடிக்க, தம்பன வினோதம், சபை கலையாமல் இருக்க, அரையாப்புக்கு மருந்து முதலியன உள்ளன.

இதில் சுவடி எண் 972 - a அகத்தியர் ஆயிரத்து இருநூறின் செய்யுட்களிலிருந்து இதுவரை தொடர் எண்களாக உள்ளன.

இதன் பின்னர் 26 உதிரி ஏடுகள் உள்ளன.

வரிசை எண் : 1936 சுவடி எண் : 973

# அகத்தியர் 205

பொருள்: மருத்துவம்

நூலாசிரியர்: அகத்தியர்

ஏடுகளின் எண்ணிக்கை: 51

சுவடியின் நிலைமை: மிக மிகப் பழுது

பக்கத்திற்கு: 6 வரிகள்

அளவு: 31 × 3 செண்டி மீட்டர்

எழுத்து: தமிழ்

கி. எண்ணிக்கை: 1000

குறை

## தொடக்கம்

பூரணமாம் மும்மூலப் பொறியிற் சூடாய்
புகையெழும்பி மேகமதாய்ச் சிரசில் சூடாய்
காரணமாம் நீர்கலந்தால் கண்ணில் ரோகம்
கனலெழுந்த வாயுவினால் சூலை ரோகம்

## முடிவு

சஞ்சீவி போலேயிந்த நூலைச் சொன்னேன்
சண்டாளப் பயல்களுக்கு ......... ........
....................... ................. ......
........ ........ ......... ......... 204

## காலம்

இல்லை

## குறிப்பு

இதில், இரும்பு பற்பம், தாம்புர பற்பம், ரச பற்பம், வெள்ளி பற்பம், காரீய பற்பம், வெங்கல பற்பம், பெரரிக்கார பற்பம், சாத்திரவேதி பற்பம், கீழ்க்காய் நெல்லித் தயிலம், பேதிக்கு மருந்து, குருந்தொட்டி கசாயம், வெப்பாலரிசி கிஷாயம், வில்லைவேர்க் கசாயம் முதலியன உள்ளன

இது எமதுசுவடி எண் 311(e)/D-566, எண் 323-e/D 622 போன்றது

வரிசை எண் : 1937 சுவடி எண் : 974

# வைத்தியத் திரட்டு

பொருள்: மருத்துவம்

நூலாசிரியர்: பலர் ஏடுகளின் எண்ணிக்கை: 13

சுவடியின் நிலமை: மிக மிகப் பழுது பக்கத்திற்கு 2-5 வரிகள்

அளவு: 31 × 3 செண்டி மீட்டர் எழுத்து: தமிழ்

கி. எண்: 150 குறை

*தொடக்கம்*

முறி

யெட்டிக்கு — நவ்வல்
சேராங்கொட்டைக்கு — கொப்பரை
குன்றிமணிக்கு — வெங்காரம்
ஊமத்துக்கு — தாமரைக் கிழங்கு
பாசாணத்துக்கு — மிளகு

*முடிவு*

தாளகம் சாதிலிங்கம் ரச கற்பூரம் பாஷாணம்
கெந்தகம் மனோசிலை இவ்வளவும்
பசுவின் பாலில் போட்டு நாலுசாமம்
யெரிக்கச் சுத்தியாகும்

*காலம்*

இல்லை

*குறிப்பு*

இதில், பலவிதமான இரும்பு பஸ்பம், காந்த பற்பம், வெள்ளீய பற்பம், காரீய பற்பம், வெங்கல பற்பம், பித்தளை பற்பம், பலகறை பற்பம், நாக பற்பம், வெள்ளி பற்பம், கெந்தக பற்பம், மண்டூர பற்பம், தாளக பற்பம், முதலான பற்பவகைகள் கூறப்பட்டுள்ளன.

வரிசை எண் : 1938 சுவடி எண் : 975

# வைத்தியத்திரட்டு

பொருள் : மருத்துவம்

நூலாசிரியர் : பலர் ஏடுகளின் எண்ணிக்கை : 15

சுவடியின் நிலைமை : மிக மிகப் பழுது பக்கத்திற்கு 5-7 வரிகள்

அளவு : 16½ × 3½ செண்டி மீட்டர் எழுத்து : தமிழ்

கி. எண்ணிக்கை : 600 குறை

## தொடக்கம்

தொண்ணூற்றாறு வாயுவுக்கும்

வீரம் கழஞ்சி-4, முலைப்பாலிலும், மேனிச் சாறும்
சுருக்குக் கொடுத்து மேற்படிசாறுகளை விட்டு
அறைக்கிற போது வெடியுப்புக் கூடச் சேர்த்து
நன்றாய் அரைத்து வில்லைதட்டிக் காயவைத்து

## முடிவு

பெருங்காயம் பலம் 3 கூடப்போட்டு அரைத்து
குளுவை செய்து வைத்துக்கொண்டு ஒவ்வொரு
உருண்டை கா்ஞச வெல்லத்தில் கொடுக்கவும்
பதினெட்டு சன்னியும் தீரும் - வேறு

## காலம்

இல்லை

## குறிப்பு

இதில், கண்ணில் நீர்வடிந்தால், சுரத்துக்குக் கிசாயம், நீர்க்கடுப்பு வேகம், கரப்பானுக்கு, நரம்புச் சிலந்திக்கு மருந்து, கரப்பானுக்கு மருந்து, முகவாத சன்னிக்கு, நீரழிவுக்கு, கிருகைக்குத் தயிலம், காந்த செந்தூரம், சகலபிரப்பாட்டுக்கு, சுரத்துக்கு மருந்து முதலியன உள்ளன.

வரிசை எண் : 1939 சுவடி எண் : 976

# இராமதேவர் பட்சணி - 216

பொருள் : சோதிடம்

நூலாசிரியர்: இராமதேவர் ஏடுகளின் எண்ணிக்கை: 54

சுவடியின் நிலைமை: மிகமிகப் பழுது பக்கத்: 6-8 வரிகள்

அளவு: $22\frac{1}{2} \times 2$ செண்டி மீட்டர் எழுத்து : தமிழ்

கி,எண்ணிக்கை: 1000 குறை :

*தொடக்கம்*

**காப்பு**

வேகமா நெறிசேரும் வினையமுந்
............. ......... போற்றுவாம்

**ஸ்ரீ வீரபழனிமலை வேலாயுத சுவாமிதுணை**

**நூல்**

ஆதியந்த மெய்நிறைந்தசோதி பாதம்
அகண்டபரி பூரணத்தின் அறிவைக் கூட்டி
பாதியாய் முப்பொருளு மூன்று மொன்றாய்
பரவெளியாய் நின்றபரா பரையின் பாதம்

*முடிவு*

அறையிரேன் தலைகீழாய் புதைத்து வைத்து
அப்பனே கண்டத்தின் வழிய .............
யறையிரேன் சொ .......... கருவைந்துங் கேளு
பாங்காக வார .......... ................ பின்பு
நிறை...... ............ .................. — 184

**காலம்**

இல்லை

இதில், சவுக்காரம், வழலைக்கட்டு, சுக்கிலம், சூதக்கட்டு வெடியுப்புச் செயநீர், சாரச் சுன்னம், துருசுச் சுன்னம், காந்தக் கிண்ணம், அயச்செம்பு, கரியுப்புக்கட்டு, கல் லுப்புத் தயிலம், சாதிலிங்கக்கட்டு, தாளகச் சுன்னம் முதலியன உள்ளன.

இது, எமது சுவடி எண் 324— e, D 640 போன்றது.

வரிசை எண் : 1940 சுவடி எண்: 977

# போகர் வைத்தியம் (எழுநூற்றுத்திரட்டு)

பொருள்: மருத்துவம்

நூலாசிரியர் : போகநாதர்

ஏடுகளின் எண்ணிக்கை : 35

சுவடிகளின் நிலைமை - மிக மிகப் பழுது

பக்கத்திற்கு : 6-8 வரிகள்

அளவு : $19\frac{1}{2} \times 3$ செண்டிமீட்டர்

எழுத்து : தமிழ்

கி. எண்ணிக்கை : 700

குறை

## தொடக்கம்

ஆனந்த மெய் நிறைந்த ஆயி பாதம்
அகண்டபரி ......... ......... பாதம்
வானந்த மாகிநின்ற கணேசன் பாதம்
......... ............... மூலத்தில் நந்தி பாதம்
தானந்த மாகியதோர் காலாங்கி பாதம்
சன்கருட வியாக்கிரமா பதஞ்சலியின் பாதம்

## முடிவு

தன்னதினால் மடபதிகள் சாத்திரத்திலில்லை
சண்டாளர் கைகொடுக்கில் இந்த நூலை
மன்னதினால் குடுத்தோ ரந்த மெய்தி
மாண்டிறந்து கடுநரகில் வீழ்வார் தானே! - 123

(இதன் பின்னர் மருத்துவம் எழுதிய ஏடுகள் 2 உள்ளன)

## காலம்

இல்லை

## குறிப்பு

இதில், தலைப்பகுதி அரித்திருப்பதால் தலைப்புக்கள் காண இயலவில்லை. இது எமது சுவடி எண் 306/D 549 போன்றது,

வரிசை எண் : 1941 சுவடி எண் : 978

# வைத்தியத் திரட்டு

பொருள் : மருத்துவம்

நூலாசிரியர் : பலர்

ஏடுகளின் எண்ணிக்கை : 1 .5

வடியின் நிலைமை : மிக மிகப் பழுது

பக்கத்திற்கு: 5-7 வரிகள்

ளவு : 20 × 2 செண்டி மீட்டர்

எழுத்து : தமிழ்

கி எண்ணிக்கை : 2000

குறை

## தொடக்கம்

............ வெள்ளப் பூண்டு இது முணும் கசக்கி.........
.........கு நாசியிலே மோர்ந்தக்கால் நிற்கும்
இவையது ......... மிளகு வெள்ளப் பூண்டு
மிளகாய் மஞ்சள் யிட்டு

## முடிவு

மண்டைக் குடைச்சலுக்கு

நல்லெண்ணெய் படி $1\frac{1}{2}$ வெள்ளெருக்கு.........
வேர் ஆதிவாரனாள் சத்தி வாங்கி வந்து.........
வச்சு சாம்புறாணி போட்டு தூபம் கொடுத்து.........
பிறகு அந்தவேரை வெட்டி பட்டையைத்.........
ங்காயிம்தியாரி சாந்து அரைச்சுக் கொண.........

## காலம்

இல்லை

## குறிப்பு

இதில், கெந்திக்குப் புகை காட்ட, கிரந்தி சூலைக்கட்டுக்கு மருந்து, வயறு கடுப்புக்கு, சீதக்கட்டுக்கு, கடுப்புக்கு, நீர்க்கோர்வை, மகோதரத்துக்கு கியாழம், வயறு கழிச்சலுக்கு, வயறு கடுப்புக்கு உண்டை, அவிசாரி கெற்பம் விழ, குரல் கம்மலுக்கு ...கலியன உள்ளன.

வரிசை எண் : 1942 சுவடி எண் : 979

# வைத்தியத் திரட்டு

பொருள் : மருத்துவம்

நூலாசிரியர் : பலர்

ஏடுகளின் எண்ணிக்கை : 55

சுவடியின் நிலைமை : மிகமிகப் பழுது

பக்கத்திற்கு : 5-8 வரிகள்

அளவு : $20\frac{1}{2} \times 2\frac{1}{2}$ செண்டி மீட்டர்

எழுத்து : தமிழ்

கி. எண்ணிக்கை : 800

குறை

## தொடக்கம்

உஷ்சுக்குமே மருந்து கொண்டு
அம்மியில் பொடியே பண்ணி
பக்கமா யிருந்து கொண்டு
படுக்கையில் தூவினிக்க
எக்காலந் தன்வசமதாக
யிருப்பா ரென வடங்கி — 3

## முடிவு

தீயி லெரிக்கக் கோளி வேகாது
எலிவளை கச்சி ......... ............ப் பூடும்
சீதேவி யிலையும் அரைத்து
மேலே பூசி யிருந்தாலிவ் ............
பொடி செய்து பாம்பின் மேற் போடச் சாகும்
சுக்கு ......... .........

(இதன் பின் ஏட்டில் சக்கரங்கள் உள்ளன)

## காலம்

இல்லை

## குறிப்பு

இதில், மூலமந்திரம், பீதாம்பர ஐயர் வித்தை, ஒருத்தலைவலிக்கு, சளிக்கு மருந்து, சிறுபாம்பு கடிக்கி, கண் படலத்துக்கு, அளிகண்ணுக்கு முதலானவை உள்ளன.

வரிசை எண் : 1943 சுவடி எண் : 980

# அகத்தியர் வியாதி - கன்மம் அறிய

பொருள் : மருத்துவம்

நூலாசிரியர் : அகத்தியர்

ஏடுகளின் எண்ணிக்கை : 76

சுவடியின் நிலைமை : மிக மிகப் பழுது

பக்கத்திற்கு : 8-9 வரிகள்

அளவு : 21 × 3½ செண்டி மீட்டர்

எழுத்து : தமிழ்

கி. எண்ணிக்கை : 1500

குறை

## தொடக்கம்

நீரழிவு மேகம் இனவகளுக்கு

........ த தம்பனமாய்த் துடிகொண்ட மேகநோய்
படைக்கு ராசன் மாலான வாரியுண்டு .........
மாரியான .........மாநிலத்திற் பொங்கன் செடி
புழுடெல்லாம் காலான விரை தோன்றி

## முடிவு

அழுகாம லொந்த லொன்று சொல்லக் கேளு
ஆட்டினுட புழுக்கையொன்று கோளிமல மொன்று
ஒழுக்ாம லோந்தியொன்று பல்லி யொன்று
உற்றதோர் பூரணையொன்று கோழிமுட்டை யொ...... 285

## காலம்

இல்லை

## குறிப்பு

இதில், தொடக்க ஏடு இல்லை, வைத்திய பாகம், குன்ம வீகர்ப்பம் எட்டுக்கும் வகை, வாத குன்மம் இரண்டுக்கு வகை, பித்த குன்மத்துக்கு, சிலேற்பன குன்மத்துக்கு, கிராணி ஆறுக்கு, வகை முதலியன உள்ளன.

வரிசை எண் : 1944 சுவடி எண் : 981

# கயிலாசச் சட்டமூர்த்தி வாதநூல் ஆயிரம்

பொருள் : மருத்துவம்

நூலாசிரியர் : கயிலாசச்சட்டமுனியார்

ஏடுகளின் எண்ணிக்கை : 12

சுவடியின் நிலைமை : மிக மிகப் பழுது

பக்கத்திற்கு : 7-8 வரிகள்

அளவு : 37 × 3 செண்டி மீட்டர்

எழுத்து : தமிழ்

கி. எண்ணிக்கை : 5000

முழுமை

தொடக்கம்

நிற்குணமாய் நிற்மலமாய் நிரஞ்சனமு மாகி
நேரான பூரணமாய் மனமெட் டாத
சற்குணமாய்ச் சமரசமாய்த் தானுந் தாண்டி
சச்சிதா னந்தவெளி ......... .........

முடிவு

கன்றான் கயிலாசத் தெ......ய் வந்த
காரணமாம் சட்டரூட பதமும் போற்றி
தன்றான வாதநூல் ஆயிரமுஞ் சொல்லி
சாதகமாய்ப் பாடிவிட்டேன் வாத முற்றே! -1013

கயிலாசச் சட்டைமுனி வாதநூல் ஆயிரமும்
எழுதிமுடிந்தது முற்றும்
சம்பூரம் பரசமய மூர்த்திலட்சிக்கவும்

குருவேதுணை

காலம்

வாதநூல் சாஸ்த்திரம் எழுதி முடிந்த முகூர்த்தம், ராட்சத வருடம் அற்பிசை மாதம் 25-ஆம் தேதி சுக்கிர வாரம் மூலா நட்சேத்திரம் கூடிய சுபதினத்தில் எழுதி முடிந்தது முற்றும் குருவேதுணை

குறிப்பு

இதில், பூரணாதி லேகியம், வழலை எண்ணெய் வாங்க, கடுங்காரத் தண்ணீர், பஞ்ச பாஷாணம், தாளகம், கெவுரி, தாம்பூரம், சவ்வீரவைப்பு, எமவித்தை, குளிகை சாரணை, பூரணவரை, கெந்தகச் செம்பு, கெந்தகத் தயிலம் முதலியன உள்ளன.

வரிசை எண் : 1945 சுவடி எண் : 982

# அகத்தியர் பாடல் அறுநூறு

பொருள் : மருத்துவம்

நூலாசிரியர் : அகத்தியர்

ஏடுகளின் எண்ணிக்கை : 130

சுவடியின் நிலைமை : மிக மிகப் பழுது

பக்கத்திற்கு : 7-8 வரிகள்

அளவு : 30 × 3½ செண்டி மீட்டர்

எழுத்து : தமிழ்

கி. எண்ணிக்கை : 2000

குறை

## தொடக்கம்

ஹரி : ஓம் நன்றாக குருவாழ்க

அகஷ்த்தீசுர மூர்த்தி பாடல் அறுநூறு

கருணைதரு மைங்கரனே காப்பு வாணி
கலந்திருந்த சூத்திரந்தான் கருவாம்ப் பாடத்
திருவு......யான மனோன்மணித்தாய் செப்பக் கேட்டுத்
தெளிந்தகுரு நூலாகத் திரட்டிப் பார்க்க

## முடிவு

உண்டாம் வயி... ...... ............... ........ ...............
............ ............க்ஷத்திர மென்ப துண்டு
பண்டாங் குருவோ நூத்தன்பதில்ப்
பாரும் வழலை ............ ............ ............
......... ம் நூல்களிது போதும் விடாதே
நூல்களோதே ருக்குங் ............
கண்டா............யெழுதி முகிந்ததுவே. — 624
அகஷ்த்தீசுர மூர்த்தி............
அறுநூறு எழுதி முகிந்தது முற்றும்.

## காலம்

பவ வருஷம் மாசிமாதம் குள்ள.................. எழுதின
அறுநூறு சூத்திரம், பழனிமலை வேலாயுத சுவாமியார்
யா...............

## குறிப்பு

இதில், அயச்சுத்தி, மண்டூர சுத்தி, இஞ்சி லேகியம், கஞ்சிர சுத்தி, குண்டவுந் தடியும், பவள பற்பம், வங்க பற்பம், மேக வாயுவுக்குணம், வாத பித்த சிலேற்பனம், சிலேற்பன மேகத்தின் குணம், நூல் விளக்கம், மருட்டுப் பயித்தியக் குணம், நீல கண்ட ரச கற்பூரம் முதலியன உள்ளன.

வரிசை எண் : 1946 சுவடி எண் : 983

# அகத்தியர் வைத்திய ரெத்தினச் சுருக்கம்

பொருள் : மருத்துவம்

நூலாசிரியர் : அகத்தியர் ஏடுகளின் எண்ணிக்கை : 35

சுவடியின் நிலைமை : மிக மிகப் பழுது பக்கத்திற்கு: 8—7 வரிகள்

அளவு : 15 × 3½ செண்டி மீட்டர் எழுத்து : தமிழ்

எண்ணிக்கை : 800 குறை :

தொடக்கம்

பூரணமாய் நிறைந்தகுரு வரை போற்றி
புகலுகிறேன் வயித்திய ரெத்தினச் சுருக்கந் தன்னை
வாரணமா முகந்தோனைப் பணிந்து போற்றி
வயித்தியந்தான் முன்னூத்தி அறுபது கேள்
வாரணமாய் செந்தூர பற்ப லேகியம்
கருவான தயிலமொடு கிருதம் வெண்ணை
சூரணமாக் கிராணமொடு கலிக்கம் மாத்திரை
சுளுக்காக நாடிமுதல் சொன்னோம் பாரே! —1

முடிவு

ஆமப்பா சிறுவாகை முன்னை யோடு
அப்பனே முசுமுசுக்கை யிருவேலி தேத்தான்
நாமப்பா வகையொன்று பலமொன் றாகும்
நலமாக யிடித்து நன்றாய் யிருதுாணி நீரில்
வேமப்பா யெரண்டையை வடித்துக் கொண்டு
............ ......... ......... ...... —87

காலம்

இல்லை

குறிப்பு

இதன் பின்னர், வைத்தியம் எழுதிய பன்னிரண்டு உதிரி ஏடுகள் உள்ளன.
இது, எமது சுவடி எண் 296—f/D 526 போன்றது

வரிசை எண் : 1947

சுவடி எண் : 984

# கைலாசச் சட்டை முனியார் ஞானம்—100

பொருள் : மருத்துவம்

நூலாசிரியர் : கயிலாசச் சட்டைமுனிவர்

ஏடுகளின் எண்ணிக்கை : 27

சுவடியின் நிலைமை : மிகப் பழுது

பக்கத்திற்கு : 7-8 வரிகள்

அளவு : 23 × 3½ செண்டி மீட்டர்

எழுத்து : தமிழ்

கி. எண்ணிக்கை : 700

முழுமை

## தொடக்கம்

விடமருந்தி அமுதமுண்ட விமல நாதன்
  விரிசடையன் மதிசூடி மழுமா னேந்தி
இடைமருவும் பரைபுதல்வ னறுமு கத்த
  னிளவலரி மருகனீ ராறு தோளன்
குடவயிற்றன் தனக்கிளைய குமாரன் கந்தன்
  குகனைமற வாமல்நெஞ் சகமே பூண்டு
உடலறியும் விளக்கமென உரைத்தேன் பாவும்
  உதவியருள் புரியுமரன் தேவி காப்பாம் —1

## முடிவு

ஆகவப்பா சூத்திரத்தி லாண்டு நூறு
  அறியடா ரெண்டுபத்து ஏழு நூறு
ஆகவப்பா சோடசமுண்டு மயங்க வேண்டாம்
  ஆதியென்ற குருவருளால் சொன்னேன் முற்றே! —101

கைலாசச் சட்டை முனியார் ஞானம் நூறு
முற்றும்
சிவமயம்.

## காலம்

இல்லை

## குறிப்பு

இதன், தொடக்கத்தில் தட்சிணாமூர்த்தி நாயனார் சிவயோக ஞானம், சமாதி ஞானம், சங்கராச்சாரியார் உடலறிவானந... விளக்கம் என்றுளது.

இது, எமது சுவடி எண் 187/D 305 போன்றது

இதில் பிராண லட்சணம், பஞ்சபூத லட்சணம், வைராக்கிய லட்சணங்கள், சட்சக்கர நிருபணம், குண்டலி சக்தியை எழுப்பும் விதம், வாசனா மலத்தை அடக்கும் முறை, சுந்தரானந்தரும் கொங்கணரும் சந்தித்தால், தசதீட்சை விபரம், பெண்ணாசை விலக்கல், வாதி லட்சணம் முதலியன உள்ளன.

வரிசை எண் : 1948 சுவடி எண் : 985

# கருவூரார் பூசா விதி முப்பது

பொருள் : மருத்துவம்

நூலாசிரியர் : கருவூரார்

ஏடுகளின் எண்ணிக்கை : 9 (28-36)

சுவடியின் நிலைமை : பழுது பட்ட நிலை

பக்கத்திற்கு : 6-7 வரிகள்

அளவு : 23 × 2½ செண்டி மீட்டர்

எழுத்து : தமிழ்

கி. எண்ணிக்கை: 200

முழுமை

## தொடக்கம்

**ராமரிசயம்**

ஆதியென்ற வாலையவ ளிருந்த வீடு
ஆச்சரியம் மெத்த மெத்த அதுதான் பாரு
சோதியென்ற நடுவீடு பீட மாகச்
செகுசுபெற் றினிதிருந்த துரைப்பெண் ணாத்தாள்
வீதியென்ற ஆறுதெரு அமந்த வீதி
விளையாடி நின்றவெகு மானி கண்டாய்
பாதியந்த மதிசூடி யிருந்த காமி
பத்துவய தாகுமிவள் வாமி தானே! — 1

## முடிவு

ஒளிவதனி லொளிவுதரும் உண்மை சொல்ல
உற்பனத்தி லுற்பனமா யுறுதி தோணும்
வெளிதனிலே வெளியாகி நாதத் துள்ளே
விளங்கிநின்ற வாலைப்ºபண் ணாதி யாமே! — 31
கருவூரார் சாமி பூசாபதி முற்றும்
குருசகாயம்.

## காலம்

இல்லை

## குறிப்பு

இதில், பூரணத்தின் மகிமை, முதலானவை தத்துவரூபமாகக் கூறப்படடுள்ளன.

வரிசை எண் : 1949 சுவடி எண் : 986

# அகத்தியர் மூன்று

பொருள் : மருத்துவம்

நூலாசிரியர் : அகத்தியர்

ஏடுகளின் எண்ணிக்கை : 1 (47)

சுவடியின் நிலைமை : நல்ல நிலை

பக்கத்திற்கு : 7 வரிகள்

அளவு : $23 \times 2\frac{1}{2}$ செண்டி மீட்டர்

எழுத்து : தமிழ்

கி. எண்ணிக்கை : 30

முழுமை

## தொடக்கம்

சித்தாகி உட்சுனியாய்ச் சிகார மாகி
தேவியுட அட்சரமே ஆஉ வாகி
முத்தான ரீங்காரங் கிலியு மாகி
மூன்றெழுத்தே வாலையதாய் முடிவ தாகி
பத்தாகி யெட்டாகி ரெண்டு மாகி
பராபரமாய் பராபரையாய் அருளொன் றாகி

## முடிவு

சேர்ப்பதற்கு நடுமையத் துள்ளே வட்டஞ்
சிறப்பாக யிட்டறி ஸ்ரீங்கென் றிட்டு
ஆர்ப்பனமா யதுதன்னை மனதுள் ளேத்து
அப்பனே மேல்வாசல் திறந்து போகும்
நாற்பதுநாள் மானதத்தால் பூசை பண்ணு
நலமான சிவசித்தர் ஞான முற்றே ! —3

சிவன் துணை

## காலம்

இல்லை

## குறிப்பு

இதில், மூன்று பாடல்களே உள்ளன. தத்துவம் பேசப்படுகிறது.

வரிசை எண் : 1950 சுவடி எண் : 987

# கொங்கணர் முக்காண்டம்

பொருள் : மருத்துவம்

நூலாசிரியர் : கொங்கணர்

ஏடுகளின் எண்ணிக்கை : 4 (60-63)

சுவடியின் நிலமை : பழுது

பக்கத்திற்கு : 7-8 வரிகள்

அளவு : 23½ × 3 செண்டி மீட்டர்

எழுத்து : தமிழ்

கி. எண்ணிக்கை : 100

முழுமை

## தொடக்கம்

செப்புகிறேன் மனத்தாலே தவமு மாச்சு
சோயிள லாவதுவு மனமே யாச்சு
ஒப்புகிறேன் மாயமெல்லா மனமே யாச்சு
ஒகோகோ சஞ்சலத்தால் மனம்பே யாச்சு
அப்புநீ ருப்பதுபோல் மனமே சென்று
அகண்டத்தில் சேர்ந்துதென்றா லதுதான்
போதங்
கொப்புரேன் மனம்விட்டால் ஞானம் போச்சு
கொள்கியிந்த நூலைவிட்டால் ஞானம்
போச்சே ! —1

## முடிவு

திருவுரைத்த யிந்நூலைப் பார்த்தவர்களெல்லாம்
சிவயோகத் தவமுடைய தேகசித்தி யாகி
பருவுகின்ற நாளிலொன்றில் பராபரமு மாவார்
பாடியதோர் முக்காண்டம் யாவு முற்றே ! —15
சச்சிதானந்தர் பாதந் துணை
கொங்கண சுவாமி துணை.

## காலம்

இல்லை

## குறிப்பு

இதில், வாத சித்தி முதலானவைகள் கூறப்பட்டுள்ளன.

இதன் பின்னர் மூன்று ஏடுகளில் ஒரு தலைப்பு (நூலு)ம், மற்றொரு பாதி ஏட்டில் ஒரு தலைப்பு (நூலு)ம் கூறப்பட்டுள்ளன. தலைப்பு அறியக் கூடவில்லை இம்மூன்றும் சேர்ந்தே முக்காண்டமா என்பது ஐயம்.

வரிசை எண் : 1951 சுவடி எண் : 988-a

# வைத்தியத் திரட்டு

பொருள்: மருத்துவம்

நூலாசிரியர்: பலர் ஏடுகளின் எண்ணிக்கை: 18

சுவடியின் நிலைமை: மிக மிகப் பழுது பக்கத்திற்கு: 8-9 வரிகள்

அளவு: 21 × 4 செண்டி மீட்டர் எழுத்து: தமிழ்

கி. எண்ணிக்கை: 350 குறை

## தொடக்கம்

அட்டவணை

சகல வாதத்துக்கு விஷ முட்டித் தயிலம் — 1
முகவாத சன்னிக்கு, வாதசன்னிக்குத் தயிலம் — 4

மூட்டுக்கு

............... லிங்கமாச்சு
காசினியில் விழுந்த வுடன் வேம்ப தாச்சு
முக்கியமாய் கசப்பது வந்த தேது
முனைப்பான வாயில்நின்று விழுந்த தாலே
சக்கியமாய் வேம்புதான் பெரிசாலே இல்லை
சனகரிசி நால்வருசங் கொண்டான்

## முடிவு

இப்படி மூன்றுநாள் கொடுக்கவும்
எண்ணெய் வகை, இந்த மருந்து
இவ்வளவும் வேப்பெண்ணையில்
தட்டிப் போட்டு வெந்து
மெழுகு பதத்தி லிறக்கி மேலே போடவும்
பிரவீச்சு சன்னிதோசந் தீரும்

## காலம்

இல்லை

## குறிப்பு

இதில், முற்பகுதியில் அட்டவணை உள்ளது. பின்னர் வல்லாதிச் சூரணம் கெந்தகச் சூரணம் கல்நார் செந்தூரம், வேம்பு கற்பம், கெந்தகச் சூரணம், பிள்ளை யில்லாத பேருக்கு எண்ணெய், எலுமிச்சங்காய் எண்ணெய் முதலியன உள்ளன.

வரிசை எண் : 1952 சுவடி எண் : 988 - b

# அகத்தியர் — 16

பொருள் : மருத்துவம்

நூலாசிரியர் : அகத்தியர்

ஏடுகளின் எண்ணிக்கை : 4

சுவடியின் நிலைமை : மிக மிகப் பழுது

பக்கத்திற்கு : 10–11 வரிகள்

அளவு : 21 × 4 செண்டி மீட்டர்

எழுத்து ; தமிழ்

கி. எண்ணிக்கை : 150

முழுமை

## தொடக்கம்

அரிதாரம் பிரிதிவியே ஆகி நிற்கும்
ஆனதொரு சவ்வீரம் அப்பு வாகும்
பெரிதான கெவுரியுந்தான் தேயு வாகும்
பின்னுமொரு வெள்ளையுந்தான் வாயு வாகும்

## முடிவு

போற்றிடில் சன்னி தோச
மெழும்பிடில் குட்ட ரோகம்
பாற்றிடிற் பரங்கி சூலை
பலகடி முதலா யுள்ள
நாற்றிசை மானி டர்க்கு
நலம்பட வந்த நோய்கள்
போற்றிடத் தீரு மென்றே
பொருப்பின்மே லிருந்தோர் சொன்னார் — 16

முற்றும்

## காலம்

இல்லை

## குறிப்பு

இது, எமது சுவடி எண் 185-b/D 292 அகத்தியர் பச்சை பதினாறு போன்றது

இதில், அரிதார பற்பம், வெள்ளைப் பாஷாணப் பர்பம், காந்த செந்தூரம், ஆவாரங்கிரி, லிங்கச் சூரணம், மூலத்திற்கும் பவுத்திரத்திற்கும் புகை, சன்னிக்கு மூச்சிலிழுக்கும் புகை வகைகள், வல்லாதிச் சூரணம், கெந்தித் தயிலம் முதலியன உள்ளன.

வரிசை எண் : 1953 சுவடி எண் : 988 – c

# சூரியகாந்தக் குழப்பு

பொருள் : மருத்துவம்

நூலாசிரியர் : அறியக்கூடவில்லை ஏடுகளின் எண்ணிக்கை : 1

சுவடியின் நிலைமை : மிக மிகப் பழுது பக்கத்திற்கு : 9 வரிகள்

அளவு : 21 × 4 செண்டி மீட்டர் எழுத்து : தமிழ்

கி. எண்ணிக்கை ; 25 முழுமை

## தொடக்கம்

கடுகரோகிணி சமுத்திராப் பச்சை நெல்லி, தான்றி
கதித்திடுநல் மரிசமொடு அசம தாகம்
வடிவில் சுக்கு திப்பிலி நாகப்பூச் சூடன்
வசுவாசி கற்பூரம் ஆக்கி ராவும்

## முடிவு

மடுக்கரை சேர்ந்திடுங் கொக்கின் கூட்டந் தன்னை
வதைக்கவரும் ராசாளி வரவு கண்டு
திருக்கெணவே பறந்துதென அகலு மென்று
செப்பினார் முனிவரிது திண்ணந் தானே; —3

முற்றும்

## காலம்

இல்லை

## குறிப்பு

இதில், மூன்று செய்யுட்களே உள்ளன, இம்மருந்தை உண்டால் நோய், இராசாளியைக் கண்டு கொக்கு பறந்தோடுவது போல பறந்தோடும் என்று கூறுவது சிறப்பு.

வரிசை எண் : 1954 சுவடி எண் : 988-d

# வைத்தியத் திரட்டு

பொருள் : மருத்துவம்

நூலாசிரியர் : பலர் ஏடுகளின் எண்ணிக்கை : 27

சுவடியின் நிலைமை : மிக மிகப் பழுது பக்கத்திற்கு : 9-10 வரிகள்

அளவு : 21 × 4 செண்டி மீட்டர் எழுத்து : தமிழ்

கி. எண்ணிக்கை : 600 குறை

## தொடக்கம்

உதிர வியாதிக்கு தேங்காய் லேகியம்

பாங்காக வேயரனார் பார்வதிக்குத் தானுரைத்த
தேங்காயின் லேகியத்தைச் செய்யக்கே — லீங்கான
சாதிலிங்கஞ் சூதம் தனித்து விள கன்றென்று
வாதிக்காங் காந்தம் விளை

## முடிவு

மூணுநாள் வைத்து வைத்து அரைக்கவும்
இந்த மாத்திரை கண்ணில் நேத்திர
நோவுக்கெல்லாம் முலைப்பாலி லுரைத்துப்
போடவும் தீரும்

## காலம்

இல்லை

## குறிப்பு

இதில், அசுவகெந்தாதிச் சூரணம், கர்மகாண்டத்தில் சயத்துக்குத் தயிலம், பரங்கிப் பட்டை பதங்கம், சிறு சந்தனாதித்தயிலம், கெவுரி சிந்தாமணி, கெந்தக அமுர்த சஞ்சீவி, ஆண்டகுடி சிதம்பர செட்டியார் சொன்ன வாகடம், டியார் சொன்னது. மிருதார் சிங்கு தாம்புர பற்பம் முதலியன உள்ளன.

வரிசை எண் : 1955 சுவடி எண் : 988 ·e

# வியாதியாளனின் முகக்குறி பார்த்துத் தீரும், தீராதென்று சொல்லுகிறது-நாடி சாத்திரம்

பொருள் : சோதிடம் & மருத்துவம்

நூலாசிரியர் : அறியகூடவில்லை

ஏடுகளின் எண்ணிக்கை : 5

சுவடியின் நிலமை : மிக மிகப் பழுது

பக்கத்திற்கு : 9–10 வரிகள்

அளவு : 21 × 4 செண்டி மீட்டர்

எழுத்து : தமிழ்

கி. எண்ணிக்கை : 200

குறை

## தொடக்கம்

புரிந்து மெய் சோர்ந்திடாதே
பொரவழி சிவப்பே ராதே
வருந்திய உடன்நா றாதே
வருவிழி நீர்பா யாதே
கரித்துநா வரண்டி டாதே
கவமிரை யாதே ஆசில்
மருந்தினால் பரிகா ரஞ்செய்
மாமுனி உரைசெய் தாரே ! —1

## முடிவு

**அஷ்ட்ட சூரணம்**

சலக்கழிச்ச லீளையுந் தகைப்பிளை......முந்
துலைக்கழித்த விக்கலுந் துரத்துசெஞ்சு டுக்கலு
நலக்கமத்த சோதியை நல்லதொரு நாரணர்
கலக்கமத்த தேனிலே கலந்துபத்து நாள்கொளே! —33

## காலம்

இல்லை

## குறிப்பு

இதில், முப்பத்து மூன்று செய்யுட்களே உள்ளன. இது நிறைவா, தொடருமா என்பது இல்லை. இதில் நாடி சாத்திரம் நடுவில் இருக்கிறது.

17-வது தொகுப்பு
வரிசை எண் : 1956

சுவடி எண் : 988 f

# வைத்தியத் திரட்டு

பொருள் : மருத்துவம்

நூலாசிரியர் : பலர்

ஏடுகளின் எண்ணிக்கை : 55(45—99)

பக்கத்திற்கு : 9-10 வரிகள்

சுவடியின் நிலைமை : மிக மிகப் பழுது

எழுத்து : தமிழ்

அளவு : 21×4 செண்டி மீட்டர்

குறை

கி எண்ணிக்கை : 1200

*தொடக்கம்*

பிடித்துரைக்குங் கல்லுக்குப் பேர்தா னென்ன
பெருமூல தேவதையின் பேர்தா னென்ன
அடித்திருந்த முலைப்பாலின் பேர்தா னென்ன
ஆனிதடுப் பெருவிரலின் பேர்ந்தா னென்ன
தடித்திருந்த மாத்திரையின் பேர்தா னென்ன
தவங்காமல் வளிக்கும்விரல் பேர்தா னென்ன
படித்திருந்த பண்டிதரே யிந்தநிலைப் பதமும்
பதறாம லின்னதென்று பகரு வீரே! - 1

*முடிவு*

ஆதியே மூல நாங்கும்
அருளிரு பத்தி னாலு
நீதியே ஆறு மான
நிகழ்பதி னேழு மஞ்சும்
சோதிமூ வாறு மூன்றும்
சுடரொளி யிருபத் தஞ்சு
யேதுயத் தொன்ப தெட்டு
யிருப்பத்தி ரெண்டும் ரெண்டு
மாதுசே ரிருவை மூன்று
மலம்பெறு னொன்று பத்து
தீதில்லா யேழுஞ் சத்தி
ரண்டுசேந் திடு (அன்பத் தொன்றே)

| | | | |
|---|---|---|---|
| 4 | 24 | 6 | 17 |
| 5 | 18 | 3 | 25 |
| 19 | 8 | 22 | 2 |
| 23 | 1 | 20 | 7 |

*காலம்*

இல்லை

*குறிப்பு*

இதில், விஷத்துக்குக் கலிக்கம், பிள்ளை முதலானதுக்கு, ரச குளிகை கட்ட, உப்புக் கட்டி பற்பம், வெள்ளி வித்தை, சாதிலிங்க சுத்தி, வியாதித் துகை வாகடம், வெள்ளை கணக்கப்பிள்ளை சொன்னது, வாயுவு எனப்பட்டதுக்கு, சூரணம், கைகால் முடக்கு, வாதத்துக்கு, அண்ட வாதத்துக்கு, எலிக்கடிக்கு மருந்து முதலியன உள்ளன.

பின்னருள்ள சக்கரம் எப்படிக் கூட்டினாலும் 51 வரும். அது பாட்டாகவே முதலில் எழுதப்பட்டுள்ளது.

வரிசை எண் : 1957 சுவடி எண் : 988-உ

# இரசவர்க்கப் பாடல்

பொருள் : மருத்துவம்

நூலாசிரியர் : அகத்தியர் ? ஏடுகளின் எண்ணிக்கை : 20 (100-119)

சுவடியின் நிலைமை : மிகமிகப் பழுது பக்கத்திற்கு 10-12 வரிகள்

அளவு : 21×4 செண்டி மீட்டர் எழுத்து : தமிழ்

கி. எண்ணிக்கை : 600 குறை

## தொடக்கம்

கடுக்காயுந் தானுங் கணக்கெடுக்குங் கண்டீர்
கடுக்காவொவ் வொன்றுங் கதிக—மிடுக்கான
வன்பிணியைத் தீர்க்க மருந்தாகு மாகு
தாவே நின்றாங்கு வாள் —1

## முடிவு

காலுமலுந் தானப் பெருக்குந் தகை
உதிரப்பெருக்கு
மேலும் வாதம் வாய்வுண்டாம்-சாலவுடல்
மிக்க கிரந்திதான் வளரும் விரலை வயத்தில்க்
கடும்பகலில் வாயிலுதிரமதி தீரும்
கோலவாழைக் காயினுட குணத்தை அறிந்து
கொள்ளே ! —153

## காலம்

இல்லை

## குறிப்பு

இது, குணவாகடத்தைச் சார்ந்தது. இதில் கடுக்காய், நெல்லி முள்ளி, சுக்கு, கருஞ்சீரகம், உள்ளி, கிராம்பு, ஈருள்ளி தாளீச பத்திரி, ஏலம் கோஷ்டம், அக்கிராகாரம், முதலான பொருட்களின் குணங்கள் கூறப்பட்டுள்ளன.

வரிசை எண் : 1958

சுவடி எண் : 988-h

# வைத்தியத் திட்டு

பொருள் : மருத்துவம்

நூலாசிரியர் ; பலர்

ஏடுகளின் எண்ணிக்கை : 6 (120-125)

சுவடியின் நிலைமை : மிக மிகப் பழுது

பக்கத்திற்கு : 8-10வரிகள்

அளவு : 21 × 4 செண்டி மீட்டர்

எழுத்து : தமிழ்

கி எண்ணிக்கை : 160

குறை

## தொடக்கம்

கன்னி மகா மகரம் விடையானால்
கடிய சாவு மிகவுண்டாம்
வன்னம் வருவில் பாலாடு
வயங்கு மீன்ம் பொருள்கூடும்
சின்னஞ் சிறுதேள் கற்கடஞ்
சிங்கஞ் சிலுகு தானாகும்
பன்னு கும்பந் துலாமிதுனம்
பாரில் னோவு குணமாகும்!

## முடிவு

### காது வியாதிக்கு

துள்ளியே குத்த வேண்டாஞ்
செவிதனி லருகே செல்லத்
தெள்ளியார் முன்பு செல்லத்
தீவினை யகண்டு போமே!

## காலம்

இல்லை

## குறிப்பு

இதில்,............ டிதனைக் கூப்பிட வந்தவன் நிலை பார்த்துச் சொல்லுகிற குறிப்பு புடம் எரு நிதானம், வச்சிரக் குகை, கழுத்தைச் சுற்றிய கண்ட மாலைக்கு மருந்து,' அதிசாரத்துக்கு, முதலானவைகள் உள்ளன.

வரிசை எண் : 1959 சுவடி எண் : 988—i

# கொங்கணர் ஐந்நூற்றில் திரட்டல்

பொருள் : மருத்துவம்

நூலாசிரியர் : கொங்கணர்

ஏடுகளின் எண்ணிக்கை : 7

சுவடியின் நிலைமை : மிக மிகப் பழுது

பக்கத்திற்கு : 10–11 வரிகள்

அளவு : 21 × 4 செண்டி மீட்டர்

எழுத்து : தமிழ்

கி. எண்ணிக்கை : 200

முழுமை

தொடக்கம்

வகுத்திருந்த ஊஞ்சலோடு மகிமை கேளு
மகத்தான பூரணமா மத்திக் கொம்பின்
பகுத்துநால் சரிதைமுதல் ஞான மட்டு
பாங்கான சங்கிலியை அதிலே பூட்டி
மகுத்ததுதெய்வ சதாசிவனே பலகை யாக
மகத்தான நால்வரும் நால்காலாப் பூட்டி
தொகுத்ததுமே லுன்மனையா ளிருந்த ஊஞ்சல்
சுத்துராள் செகச்சாலஞ் சுத்து ராளே ! —1

முடிவு

யின்னியின்னி யென்னசெய்வோம் யென்ன வென்றால்
யெனையாண்ட போகர்புத லெல்லோ ருந்தான்
அன்னிஅன்னி யெனைக்கெஞ்சி ஆத்தா ளெத்தாள்
அவன்சொன்ன பாகமே ஐங்கோல மாச்சே! —22

முற்றும்
குருபாதமே கெதி

காலம்

இல்லை

குறிப்பு

இதில், கொங்கணர் அருளிச் செய்த ஐந்நூற்றில் சிறந்த பாடல்களைத் தொகுத்து எழுதப்பட்டுள்ளது. உவமை நயம் சிறந்த பாடல்களாக உள்ளன.

வரிசை எண்: 1960 சுவடி எண்: 98 8-j

# மணிக்கடை கயத்து சூத்திரம் பத்து

பொருள்: மருத்துவம்
நூலாசிரியர்: அறியக்கூடவில்லை
ஏடுகளின் எண்ணிக்கை: 2
சுவடியின் நிலைமை: மிக மிகப் பழுது
பக்கத்திற்கு: 8-7 வரிகள்
அளவு: 21 × 4 சென்டி மீட்டர்
எழுத்து: தமிழ்
கி. எண்ணிக்கை: 50
முழுமை

## தொடக்கம்

மணிக்கடை நூல்விரல் தள்ளி அப்புறம்
அணிக்கடை கயறுபோட் டளந்து கண்டதை
வினக்கடை கொண்டு விரலது அறிந்து
பணிக்கடை நேர்பாகனைப் பார்த்துச் சொல்லுவாம்

## முடிவு

எட்டினில் விரக்கடை யெய்து மாகையால்
கட்டிடும் வயத்தினில் கடுப்பும் வீக்கமும்
தொட்டிய பீனிசந் தொண்டை நோவதாய்
குட்டிய வயத்தெரி குன்ம மிறுமே! —10

## காலம்

இல்லை

## குறிப்பு

இதில், மணிக்கட்டில் கயறுகட்டி அளவெடுத்து, அந்த அளவிலிருந்து வியாதியைக் கண்டுபிடிக்கும் விதங்கள் கூறப்பட்டுள்ளன இது போன்ற தலைப்புடைய நூல், எமது சுவடி எண் 252-c/ d-447 ல் உள்ளது.

வரிசை எண் : 1961 சுவடி எண் : 988 - k

# திப்பிலாதிச் சூரண அகவல்

பொருள் : மருத்துவம்

நூலாசிரியர் : அறியக்கூடவில்லை

ஏடுகளின் எண்ணிக்கை : 1 (135)

சுவடியின் நிலைமை : மிக மிகப் பழுது

பக்கத்திற்கு : 8-10 வரிகள்

அளவு : 21×4 செண்டி மீட்டர்

எழுத்து : தமிழ்

கி எண்ணிக்கை : 30

முழுமை

## தொடக்கம்

சீறுபெறு மாமுனி யுரைத்த திப்பிலாதிச்
சூரணத்தைப் பார்புகழும் மண்ணி லுள்ளோர்
பகரக்கேள் ஆரமுடன் திப்பிலி ரெண்டுபலச்
சீனியது னிடையா ஒப்பெரிய சாதிப்பத்திரி

## முடிவு

அடராது யிட்டமுடன் வாதத்திலே யெழுந்த
வாயு..............மதிசாரந் தனிலெடுத்த
சஞ்சலமும் பதமாய் மெத்த ...........
...........மெய்மயக்கம்......... .........
பித்தமறும் சித்தமுட னேயிருமல் தீரும்-

## காலம்

இல்லை

## குறிப்பு

இதில், திப்பிலாதிச் சூரணம் செய்முறை, தீரும் வியாதிகள் முதலியன கூறிப் பட்டுள்ளன.

17-வது தொகுப்பு 

வரிசை எண் : 1962 சுவடி எண் : 988-I

# தெட்சிணாமூர்த்தி பாடல்

பொருள் : மருத்துவம்

நூலாசிரியர் : தெட்சிணாமூர்த்தி

ஏடுகளின் எண்ணிக்கை : 13

சுவடியின் நிலைமை : மிக மிகப் பழுது

பக்கத்திற்கு : 10-11 வரிகள்

அளவு : 21 × 4 சென்டி மீட்டர்

எழுத்து : தமிழ்

கி. எண்ணிக்கை : 300

குறை

தொடக்கம்

பூரணலேகியம்

சிந்தை தனிலிருக்குஞ் சித்தி விநாயகனை
முந்தி நினைந்து முகிழ்த்தமுதாம்-அந்தமிகு
தென்பொதிகை வாழுகின்ற தெட்சனா மூர்த்திபுதம்
அன்பாய்ப் பணிந்துநூ லாராய்ந்து

முடிவு

வாச்சுதே யின்னமொரு சேதி கேளு
வாயிலுள்ள வியாதியெல்லா மகன்றுபோகும்
பாச்சையாம் பூச்சிதனைப் பாக்கில் கூட்டிப்
பச்சையாய்த் தின்றொதுக்கப் பல்லுக்குத்துப் போமே ?

காலம்

இல்லை

குறிப்பு

இதில், பூரணாதிலேகியம், ராயச தமிச சாத்துவிதம், கருங்கோழிப் பற்பம், மூதண்டச் சூரணம், துருசுச் சுன்னம், பல மருந்து, மாத்திரை, என்ற தலைப்பில் உள்ள ஏட்டிலிருந்து பாட்டெண்கள் 55 லிருந்து 66 வரை உள்ளன.

வரிசை எண்: 1963 சுவடி எண்: 988-m

# வேத[ா]கமத்தில் [?] அகத்தியர் நவசித்தாதிக் குழம்பு

பொருள்: மருத்துவம்

நூலாசிரியர்: அகத்தியர்

ஏடுகளின் எண்ணிக்கை 10 (149-15 )

சுவடியின் நிலைமை: மிக மிகப் பழுது

பக்கத்திற்கு: 9-10 வரிகள்

அளவு: 21 × 4 செண்டி மீட்டர்

எழுத்து: தமிழ்

கி எண்ணிக்கை. 300

குறை

## தொடக்கம்

காசினியில் மனுடருக்குப் பிணியோ நீங்க
கருத்துடனே அகத்தியனார் பாடல் செய்து
வேசினிய நவசித்தாதிக் குழம்பு தன்னை
வேதாந்தம் பாடிவிட்டேன் சுத்தி செய்தேன்
ஆசினியே சித்தாங்கம் அடக்கம் போட்டேன்
அறியார்கள் சுத்திசெய்து ஆட்ட மாட்டார்
யோகுனிய சாபங்கள் நிவர்த்தி செய்து
முன்கொடுத்த அரிமிளகு ஆதி சொன்னேன் —1

## முடிவு

சாபமே பூட்டிவிட்டார் சித்த ரையா
சாதிகர்ம காண்டத்தைப் பாரு பாரு
சாபமே பராமறஞ் செந்தூரஞ் செய்தால்
தாரணியில் மருந்துதனைச் சாற்றக்கேளே! —4

## காலம்

இல்லை

## குறிப்பு

இதில், சூதசுத்தி, மனோசிலை, தாளகம், வாளம் சுத்தி, வெரிக்கார சுத்தி முதலியன உள்ளன.

தலைப்பு ஆய்வுக்குரியதாக இருக்கிறது.

17-வது தொகுப்பு

வரிசை எண் : 1964

சுவடி எண் : 988 - n

# அகத்தியர் வைத்தியம் அறுநூறு

பொருள் : மருத்துவம்

நூலாசிரியர் : அகத்தியர்

ஏடுகளின் எண்ணிக்கை 6 (159—164)

சுவடியின் நிலைமை : மிக மிகப் பழுது

பக்கத்திற்கு : 9-10 வரிகள்

அளவு : 21 × 4 செண்டி மீட்டர்

எழுத்து : தமிழ்

கி. எண்ணிக்கை : 150

குறை

## தொடக்கம்

கருணைதரு மைங்கரனே காப்பு வாணி
    கலந்துபிந்த சூத்திரந்தான் கருவாய்ப் பாடத்
திருவுமையாள் மனோன்மணித்தாய் செப்பக் கேட்டு
    தெளிந்தகுரு நூலாகத் திரட்டிப் பாட
குருமகிமை சித்தியுண்டாம் ஞானம் வாய்க்கும்
    குபேரனென நிதிமருந்துங் கூடுங் கூடும்
பெருமை மிக கீர்த்தியுண்டாம் சித்தர்க் கெல்லாம் - 1
    பெருநூலைக் குறுக்கியிந்த ......றுந் தானே!

## முடிவு

செப்பார்கள் வழலை ......... ......... ளெல்லாம்
    செப்பினதில் கருவறிந்து செய்ய மாட்டார்
தப்பாமல் கைபாகஞ் செடிக்கு நீறும்
    தாக்கியரை தீயெரிவு மறிந்து கொண்டால்
அப்பாதோ முப்பூநெ யாதி யாதி
    அலையாதே வைத்தியத்துக் காசா நாமே! - 21

முப்புக்குரு கசலத்துக்கு நாற்பதுக் கொண்டிட
    சகல வியாதியும் தீரும்

## காலம்

இல்லை

## குறிப்பு

இதில், பூநீர், கல்லுப்பு, கலச சுண்ணமுப்பு முதலியன உள்ளன.

இதன் பின்னர், சன்னி தோஷம் சுரம், வயத்து வாய்வு சகலத்துக்கும் லிங்கக் கட்டு கை கண்டது என்ற தலைப்பில் ஒரு ஏடு உள்ளது.

வரிசை எண் : 1965 சுவடி எண் : 988- ഠ

# அகத்தியர் வாகடத் திரட்டு - ஐம்பது

பொருள் : மருத்துவம்

நூலாசிரியர் : அகத்தியர்

ஏடுகளின் எண்ணிக்கை : 9 (166-174)

சுவடியின் நிலைமை : மிக மிகப் பழுது

பக்கத்திற்கு : 10-12 வரிகள்

அளவு : 21 × 4 செண்டி மீட்டர்

எழுத்து : தமிழ்

கி. எண்ணிக்கை : 300

முழுமை

## தொடக்கம்

வாதந்தா னெண்ப துக்கும்
  வருகின்ற பக்க வாதம்
சீதமே நடுக்கு வாதம்
  சேர்ந்திடு முடக்கு வாதம்
சூதமே சந்த வாதம்
  தோண்மய முகத்தில் வாதம்
போதமாம் வாதம் தீர
  பொருந்திய மருந்து கேளே! - 1

## முடிவு

முதுமுதல் குமர கண்டன்
  மூயந்திடு முயல கந்தான்
மதுவுடன் குதிரை மேவு
  வலிப்புடன் பலவ லிப்பும்
பதுமமா மவுரிச் சாறு
  பகர்வசம் புள்ளி கூட்டி
முதுநசி யந்தான் பண்ண
  மொழிந்திட ஓடிப் போமே! - 50
திரட்டு வாகடம்
முற்றும்

## காலம்

இல்லை

## குறிப்பு

இது, எமது சுவடி எண் 317-ஓ/D585 போன்றது.

இதில் கிராணி, குன்மம், மேகம், வாத ரோகம், சூலை, வாய்வு, சன்னி, கரப்பான், விடங்கள் முதலானவைகளுக்கு மருந்துகள் கூறப்பட்டுள்ளன.

வரிசை எண் : 1966 சுவடி எண் : 988-p

# சூத முனி சூத்திரம்

பொருள் : மருத்துவம்

நூலாசிரியர் : சூத முனிவர் ஏடுகளின் எண்ணிக்கை : 15 (175-189)

சுவடியின் நிலைமை : மிக மிகப் பழுது பக்கத்திற்கு : 9-11 வரிகள்

அளவு : 21 × 4 செண்டி மீட்டர் எழுத்து : தமிழ்

கி. எண்ணிக்கை : 400 முழுமை

## தொடக்கம்

நந்தீசர் வேதமுனி சூதமுனி யிவர்கள்
நாதரடி போற்றிசெய்து மகிழ்ந்திருக்கும் வேளை
இந்திரரா ரொக்கமென வாதவித்தை செய்ய
யேதுவகை யறுக்குமென்று வேதமுனி கேட்கத்
தந்திமுகன் றனைப்பணிந்து உரைத்திடுவார் நந்தி
தாரணியி லுள்ளவர்க்குச் சாகாத வரமும்
மந்திரத்தால் சத்திசித்தி யாகும்வர லாறும்
மாத்ததிகம் வருத்துவதும் வளமாய்ப் பகர்வோம் - 1

## முடிவு

யேங்கவே யுருக்கியதில் பண்ணவே செந்தூரம்
யேற்கையாய்க் கொடுத்தாமாற் றேழுகுறை யாது
நீங்காத சூதமுனி உரைத்தவகை யெல்லாம்
நிசமாகக் கண்டறிந்து நிலத்தில் பாரே ! - 50

## காலம்

இல்லை

## குறிப்பு

இதில் சூதபற்பம் ஸ்ரீராம செந்தூரம், உப்புக்கட்டு, செம்புசுத்தி, கெந்தகக்சுட்டு துருசு செம்பு, நாக செந்தூரம் கெந்தகத் தயிலம், வங்க செந்தூரம் அரிதார செந்தூர, முதலியன உள்ளன. முற்றும் என்று இல்லாததால் ஐயம் ஏற்படுகிறது.

வரிசை எண் : 1967 சுவடி எண் : 988 - q

# அகத்தியர் வைத்திய சிந்தாமணி

பொருள் : மருத்துவம்

நூலாசிரியர்: அகத்தியர் ஏடுகளின் எண்ணிக்கை: 19(190-208)

சுவடியின் நிலைமை: மிக மிகப் பழுது பக்கத்திற்கு: 9-10 வரிகள்

அளவு: 21 × 4 செண்டி மீட்டர் எழுத்து : தமிழ்

கி,எண்ணிக்கை: 500 குறை

## தொடக்கம்

ஆரியநூல் வாகடத்தி னுட்பொருளை யாராய்ந்து
சீரியதோர் வெண்பாவாய்ச் செப்பவே கூறியதா
யுள்ள நிதானமதை ஓத வருள்பெருகும்
வள்ளலே யென்மனத்தில் வா.

## முடிவு

வருத்தும் பெருவயந்தில் மானே சிலதை
திருந்துகள் ளிப்பாலில் சேர்த்து—அருந்தவே
நாடுவிட்டுக் காடுபுகும் நம்மையி னிந்தனையும்
பாடுபட்டுத் தானுமே பண்ணு. – 136

## காலம்

இல்லை

## குறிப்பு

இதில், சித்தர் வெண்பா, தலைவலி நீரேத்தத்துக்கு, என்று மட்டும் உள்ளது.

இதில் கொடுக்கப்பட்டுள்ள தலைப்பு இல்லை, எமது சுவடி எண் 250b/D441-ன் தொடக்கம் கண்டு இதற்கு இந்தத் தலைப்பு கொடுக்கப்பட்டது,

இதில, ஆக்கிராணப் பொடி, வாத சுரத்திற்கு, பித்தசுரத்திற்கு முதலான மருந்துகள் உள்ளன.

வரிசை எண் : 1968 சுவடி எண்: 988 - r

# பதின்மூன்று சன்னிக்கும் பேர்

பொருள்: மருத்துவம்

நூலாசிரியர் : அறியக்கூடவில்லை

ஏடுகளின் எண்ணிக்கை: 2

சுவடியின் நிலைமை : மிக மிகப் பழுது

பக்கத்திற்கு : 8-9 வரிகள்

அளவு : 21 × 4 செண்டி மீட்டர்

எழுத்து : தமிழ்

கி. எண்ணிக்கை : 50

முழுமை

## தொடக்கம்

மார்பு நெற்றி கழுத்தடி தொண்டை
வேர்வை யுத்துடன் விக்கலுந் தாகமும்
கூர்மை யுத்த குரல்கம்மிப் பிதத்திடும்
மார்ப்பார முன்னி வாத சுரங்களே ! - 1

## முடிவு

மிந்தவிதக் குணத்துக்கு மேழு நாளா
யேல்பெறவே குணாகுணத்தி னிதானங் கண்டு
கொந்தலரும் பூங்குழலாய் சன்னி வாதம்
குறித்துநீ யெல்லோர்க்கும் கூறு வாயே ! - 5

## காலம்

இல்லை

## குறிப்பு

இதில், 5 பாடல்களே உள்ளன. சன்னியின் வகைகள் பதின்மூன்றின் பெயர்கள் இதில் கூறப்பட்டுள்ளன.

வரிசை எண் : 1969 சுவடி எண் : 988 -s

# வைத்தியத் திரட்டு

பொருள் : மருத்துவம்

நூலாசிரியர் : பலர்

ஏடுகளின் எண்ணிக்கை : 7 (211-218)
(217வது ஏடுஇல்லை)

சுவடியின் நிலைமை : மிகப் மிக பழுது

பக்கத்திற்கு : 7-11 வரிகள்

அளவு : 21 × 4 செண்டி மீட்டர்

எழுத்து : தமிழ்

கி. எண்ணிக்கை : 200

குறை

## தொடக்கம்

வ ங்க ம்

மயங்காமல் வங்கரச பற்ப மார்க்கும்
மகத்தான கும்பமுனி அய்யா சொன்னார்
தியங்காமல் யான்சொன்னேன் சூதம் வங்கம்
சேர்சமனாய்ச் சூதத்தின் பாதி வீரம்

## முடிவு

வெள்ளிநெய் சனிவண் ணாந்தை முற்பக்கம்
வாய்த்தகங்கு லென்றே சொன்னார் விதியின்
துகையுண்டரசாய் செத்து உடன் நடந்து
தூங்கியே கொன்ற முதற்பக்கமெனக் கூறு

## காலம்

இல்லை

## குறிப்பு

இதில், வங்க ரச பற்பம், அப்புரக செந்தூரம், தலைமுழுகத் தயிலம், முதலியன உள்ளன.

வரிசை எண் : 1970 சுவடி எண் : 988- t

# தெட்சிணாமூர்த்தி அருளிய முப்பத்தாறு

பொருள் : மருத்துவம்

நூலாசிரியர் : தெட்சிணாமூர்த்தி

ஏடுகளின் எண்ணிக்கை : 9

சுவடியின் நிலைமை : மிக மிகப் பழுது

பக்கத்திற்கு : 9-10 வரிகள்

அளவு : 21 × 4 செண்டி மீட்டர்

எழுத்து : தமிழ்

கி. எண்ணிக்கை : 250

முழுமை

## தொடக்கம்

பாரப்பா செம்பினுட வெள்ளை கேளு
பரிவான தாம்புரத்தைக் குகையில் வைத்து
சேரப்பா மதியுப்பு பலமே போடு
சேர்ந்துருகும் போதினிலே மருந்து சேரு

## முடிவு

வாமப்பா யிந்தடவே வயித்தி யந்தான்
வைத்தியன்பேர் உரைக்குமுன்னே நோய்க
ளோடும்
தாமப்பா யெட்டுரெண்டுங் கூட்டிக் கொண்டு
தடையறவே உருவேற்ற சித்தி யாமே! —36

குருவே துணையாகவும்

## காலம்

இல்லை

## குறிப்பு

இதில், செம்பு பற்பம், நாக பற்பம், பூ நீர், செய நீர், அரைபொடி பற்பம், லோக செந்தூரம் முதலிய உள்ளன.

வரிசை எண் : 1971 சுவடி எண் 988 - ய

# வைத்தியத் திரட்டு

பொருள் : மருத்துவம்

நூலாசிரியர் : பலர்

ஏடுகளின் எண்ணிக்கை : 24

சுவடியின் நிலைமை : மிக மிகப் பழுது

பக்கத்திற்கு : 8-10 வரிகள்

அளவு : 21 × 4 செண்டி மீட்டர்

எழுத்து : தமிழ்

கி. எண்ணிக்கை : 600

குறை

## தொடக்கம்

மண்டைக் கரப்பானுக்கு

சித்திர மூலம் பலம் —1/4
மிளகு பலம் —1/4
கத்தாழஞ் சோறு போட்டரைத்து
நல்லெண்ணெய் படி 1/4 இதில் போட்டு
மெழுகு பதத்தில் வடித்து

## முடிவு

இதுகளுக்கு அனுப்பானங்களில் வைத்துக்
குடுக்கவும்
வருத்து கூட்டவும். மற்ற பதார்த்தம் எண்ணெய்
தண்ணீர் விட.........ரில் சேர்த்துக் கொள்ளவும்

## காலம்

இல்லை

## குறிப்பு

இதில், மேகத்துக்கு எண்ணெய், வெளக்கு பார்வை, தேள்கடிக்கு, பதினெட்டு எலிக்கு, பேய் நரி, பேய் நாய் கடிக்கு, கிரந்தி புண்ணுக்கு, பேய்க்கு எலிப்பொடி, ஒந்தி ரந்தம், நவ்வல் பிசின் முதலியன உள்ளன.

வரிசை எண் : 1972 சுவடி எண் : 989

# வைத்தியத் திரட்டு

பொருள் : மருத்துவம்

நூலாசிரியர் : பலர்

ஏடுகளின் எண்ணிக்கை : 15

சுவடியின் நிலைமை : மிக மிகப் பழுது

பக்கத்திற்கு : 4—6 வரிகள்

அளவு : 28 x 3 செண்டி மீட்டர்

எழுத்து : தமிழ்

கி. எண்ணிக்கை : 300

குறை :

## தொடக்கம்

தேவர் கபிலாசர் பரமேசர் நந்திக் கருளிய
செய்யமு துாட்டி நிராச பானம் பாலனம்
வடமொழியைச் சிந்தாக நானெடுத்துப் பாடுதற்கு
தேடுமொற்றைக் கொம்பனாம் பொற்பாதம்

## முடிவு

செவ்வரளிப் பூவால், 'நாணக் கோணப் பூவே
நாவடக்கும் பூவே கோணக் கோணப் பூவே
எதுத்தாரைக் கோவத் தடக்கும் பூவே'
இதுக்கு உரு – 108. செவ்வல்லிப்பூ.

## காலம்

இல்லை

## குறிப்பு

இதில், சூதக வாய்வு, வயிற்று வலிக்கு, தொண்டை வாய்வுக் கட்டிக்கு, வெள்ளை ரத்தம் விழுகிறதற்கு மருந்து, கிரந்தி சூலை, நீர்க்கடுப்புக்கு மருந்து, முதலியனவும், மந்திரங்களும் உள்ளன.

வரிசை எண் : 1973 சுவடி எண் : 990

# வைத்தியத் திரட்டு

பொருள் : மருத்துவம்

நூலாசிரியர் : பலர்

ஏடுகளின் எண்ணிக்கை : 170

வடியின் நிலைமை : மிகப் பழுது

பக்கத்திற்கு: 8–10 வரிகள்

அளவு : 32 × 5 செண்டி மீட்டர்

எழுத்து : தமிழ்

கி எண்ணிக்கை : 6000

குறை

## தொடக்கம்

விரேசனத் தூள்

பெருங்காயங் கழுஞ்சு-1. மிளகு வேர்க்கொம்பு
வெள்ளு............ ஒரொன்று பலம்-1
கடுக்காய் விதை தள்ளி பதினாலு நேர்வாளம்

## முடிவு

அவின் மருந்து மரபொடியும் கூடக்
கூட்டி எலுமிச்சம் பழத்தைச் சற்றே முகஞ்சீவி
அந்தப் பழத்துக் குள்ளே இந்த இரண்டு
மருந்தையும் திணித்து நெருப்பிலே பிடிக்க
உருகும்

## காலம்

இல்லை

## குறிப்பு

இது, கூந்தற்பனை ஏட்டில் எழுதப்பட்டுள்ளது. ஏடுகள் தலை தடுமாற்றமாக உள்ளன.

இதில் சருவ விரேசனக் குளிகை, சுரத்துக்கு ராமபாணக் குளிகை, சுரத்துக்கு அங்காதிக் குளிகை, கர்ந்த கோடாலிக் குளிகை, நவலோக பூபதி, ரெத்தக் கண்ணுக்கு, ஆனந்தத் தாண்டவராய கோடா குளிகை முதலியன உள்ளன.

வரிசை எண் : 1974 சுவடி எண்: 991

# தெட்சிணாமூர்த்தி பரிபூரணம்
# ஆயிரத்திருநூறு

பொருள்: மருத்துவம்

நூலாசிரியர் : தெட்சிணாமூர்த்தி

ஏடுகளின் எண்ணிக்கை : 140

சுவடிகளின் நிலைமை: மிகப் பழுது

பக்கத்திற்கு : 9- 10 வரிகள்

அளவு : 32 × 3 செண்டி மீட்டர்

எழுத்து : தமிழ்

கி. எண்ணிக்கை : 8000

முழுமை

## தொடக்கம்

பூரணமாய் நிறைந்தபரி பூரணமே காப்பு
போதமய மானபூ ரணத்தை யப்பா
காரணமாய்க் கருவுருவாய் எங்கும் நிறைந்திருந்த
கண்மணியின் நடுவாகிக் கருணைதரும் பொருளை

## முடிவு

வத்தாத பாக்கியமும் வயதுஞ் சித்தி
மகத்தான யோகமொடு ஞானஞ் சித்தி
வித்தான மாய்கையற்றுச் சுத்த மான
வேதபர வெளியில்மன வெளிசேர் முற்றே ! - 1202

## காலம்

தெட்சணாமூர்த்தி நாயனாரருளிச் செய்த
பரிபூரணம் ஆயிரத்தி யிருநூறும்
குரோதி வருடம் ஆற்பிசி மாதம்
20-ஆம் தேதி ஆதிவாரம்

## குறிப்பு

இதில், கயிலாசகிரி மகிமை, பதிபசுபாச மறிய, ரேசகபூரக கும்பக மறிய, நூல் விபரம். ஆதாரமாறு, சனிபகவான் குணம், சனிபகவான் நிமிர்த்தி, சிவசத்தி தீட்சை, சற்குரு தியானம். மந்திர நிட்டை, முச்சுடர் தியானம், சண்முகத்தியானம், சதுரகிரி வளமை முதலியன உள்ளன.

வரிசை எண்: 1975 சுவடி எண்: 992

# கம்பளிச்சட்டை கைலாசமூர்த்தி நிகண்டு

பொருள்: மருத்துவம்

நூலாசிரியர்: கம்பளிச்சட்டை கைலாச மூர்த்தி

ஏடுகளின் எண்ணிக்கை: 125

சுவடியின் நிலைமை: மிகப் பழுது

பக்கத்திற்கு: 7-8 வரிகள்

அளவு: 40 × 3½ செண்டி மீட்டர்

எழுத்து: தமிழ்

கி எண்ணிக்கை: 4500

முழுமை

## தொடக்கம்

ஆதியந்த மில்லாத பூரணத்தைப் போற்றி
அடுத்துநின்ற வுன்மனத்தாய் பதத்தைப் போற்றி
பாதியந்த மாகிநின்ற உமையாள் சொல்லப்
பாங்கான சின்மயத்தின் கருணை யாலே
ஓதியந்த வாதமென்ற நூலுக் கெல்லாம்
உசறவைத்த நாகமணிக் கிரீடம் போலே
சாதியந்த குணத்தேடு நிகண்டு சொல்ல
சச்சுதா னந்தவெளி காப்புத் தானே! —1

## முடிவு

ஆட்டினேன் பலநூலில் இல்லை இல்லை
ஆச்சரியம் நிகண்டினுட துகையைக் கேளு
நீட்டினேன் ஆயிரத்தி யிருநூ றுந்தான்
நேராக்கி நிகண்டினுட கடைதான் முற்றே! —1230

கயிலாச மூர்த்தி கம்பிளிச்சட்டை முனி
அருளிச் செய்த நிகண்டு எழுதி நிறைந்தது
முற்றும்
குருமுன்னிற்க

## காலம்

பிங்கள வருடம் மாசி மாதம் 22-ஆம் தேதி வியாழக்கிழமை சாயந்திரம் அஞ்சரை மணி வேளையில் ஊணரசுக் காலத்தில் சென்னப் பட்டணச் சார்ந்த திருமயிலை உள் கடைச் சாணான் குப்பில் ரிஷபச நாதன் நயினார் கடையிலிருந்து எழுதினது. மதுரை மேலையூரிலிருக்கும் காதரு சாயபு ராவுத்தர் மகன் அய்யாத்துரை கையெழுத்து.

எழுதி நிறைந்தது
முற்றும்
குரு முகைதீன் துணை

## குறிப்பு

இதில் எவச்சாரம், காசிச் சாரம், சீனக்காரம், வெங்காரம் உபரச் பேர், சகஸ்திர வேதி, செங்கல், வெலும்பு, கமரி மயிர், நண்டு, தவளை, கோழி முதலானவற்றின் பெயர்கள் உள்ளன.

இது எமது சுவடியெண் 318 - b / d 594 போன்றது.

வரிசை எண் : 1976 சுவடி எண் : 993

# அகத்தியர் — அறுநூறு

பொருள் : மருத்துவம்

நூலாசிரியர் : அகத்தியர்

ஏடுகளின் எண்ணிக்கை : 81 (9-89)

சுவடியின் நிலைமை : மிகப் பழுது

பக்கத்திற்கு : 7-8 வரிகள்

அளவு : 40½ × 3 செண்டி மீட்டர்

எழுத்து : தமிழ்

கி. எண்ணிக்கை : 4500

குறை

## தொடக்கம்

### வாய்வும் அதனாலே வரப்பட்ட வியாதி விபரம்

............ ............ ............ ............
கொள்ளு மதினாலே அண்ட வாதம்
தோணப்பா ஆனந்த வாய்வு மாகும்
தூக்கணத்தில் பார்ச வாய்வு மாகும்
பூணப்பா புத்துலிங்க வாய்வு சூலை
பொருமலுமா முதரத்தில் பொசிப்புப் போகும்
வீணப்பா வயித்தியற்கு தெரியா திந்த
வியாதிகளைக் கருக்கொண்டு அறுப்பான் காணே ! — 45

## முடிவு

யெண்டாம நூல்களிது பொது......... விடாதே
நூல்கள் யொரு........... ...........
கண்டா யிரநூாி வெளிவி டாதே
கடசி யெழுதி முகிந்ததுவே ! — 601
ராமசெயம்
சரசுபதி யம்மன் துணை
குருவே நமச்சிவாயம் துணை

## காலம்

இல்லை

## குறிப்பு

இதன், முகப்பு ஏட்டில், 'அறநூறு சாத்திரம்' என்று எழுதப்பட்டுளது, தொடக்கம் இல்லாததால் இன்னநூல் என்று காண இயலவில்லை. கடைசிச் செய்யுள் கொண்டு இது, 'அகத்தியர் 600' என்று தலைப்புக் கொடுக்கப்பட்டது.

வரிசை எண் : 1977 சுவடி எண் : 994

# அகத்தியர் வைத்தியம்-நூறு

பொருள் : மருத்துவம்

நூலாசிரியர் : அகத்தியர்

ஏடுகளின் எண்ணிக்கை : 21

சுவடியின் நிலைமை : பழுது

பக்கத்திற்கு : 8-10 வரிகள்

அளவு : 24×3 செண்டி மீட்டர்

எழுத்து : தமிழ்

கி. எண்ணிக்கை : 700

முழுமை

### தொடக்கம்

சந்தனத் தைலம்

வித்தை யென்ற வித்தையெல்லாம் நூறுக் குள்ளே
விறுதிட்டு.......................ன்ற
............சுத்தெல்லாம் விட்டுப் போட்டு
சூட்சமா மிந்தவித்தை யாடிப் பாரு
வத்தென்ற நூ............ முகிந்த வாறு
பாடினே னின்னமொரு நூறு தானு
முத்தென்ற முத்துப்போல் மூலிப் (போக்கு)
முக்கியமாய்ச் சொல்லுகிறேன் முறையைப் பாரே! —1

### முடிவு

நோய்மிகுத்துச் சாவில்லை யொருநா ளுந்தான்
நுண்மையாய்ச் சரக்கையெல்லாம் நீத்திக்
கொண்டு
வாயமுட னெண்ணெயொடு கிருதஞ் செய்து
வைத்திடுவா யனுப்பானம் வைத்தியம் முற்றே! —102

சிவமயம்

### காலம்

இல்லை

### குறிப்பு

இதில், சந்தனம், வில்வம், வேங்கை, வெட்டிவேர், வேம்பு, குறுந்தொட்டி, கொடிவேலி, சீரகம், கீழ்க்காய், சங்கு, அமுக்கிரா முதலான தலைப்புகள் காணப் படுகின்றன.

வரிசை எண் : 1978 சுவடி எண் : 995

# அகத்தியர் நூற்றைம்பது

பொருள் : மருத்துவம்

நூலாசிரியர் : அகத்தியர் ஏடுகளின் எண்ணிக்கை :20

சுவடியின் நிலமை : பழுது பக்கத்திற்கு : 8-10 வரிகள்

அளவு : 24 × 3 செண்டி மீட்டர் எழுத்து : தமிழ்

கி. எண்ணிக்கை : 700 முழுமை

## தொடக்கம்

சீரணி கொன்றை சூடுஞ்
சிவனிரு பாதம் போற்றி
வாரண முகத்தோன் பாதம்
வணங்கிநூற் றன்பதுஞ் சொல்ல

## முடிவு

முன்னமே சொன்ன நூலின்
முக்கிய மின்னூல் சூட்சம்
அன்னவே சொன்ன நூற்
றன்பது மறீவீர் முற்றே ! - 151

குரு முன்னிற்கவேணும் துணை
சிவமயம்

## காலம்

இல்லை

## குறிப்பு

இது, எமது சுவடி எண் 324—b/D 637 போன்றது

வரிசை எண் : 1979 சுவடி எண் : 996

# அகத்தியர் வைத்தியம் - எண்பது

பொருள் : மருத்துவம்

நூலாசிரியர் : அகத்தியர்

ஏடுகளின் எண்ணிக்கை : 15

சுவடியின் நிலைமை : பழுது பட்டது

பக்கத்திற்கு : 8-10 வரிகள்

அளவு : 24×3 செண்டி மீட்டர்

எழுத்து : தமிழ்

கி. எண்ணிக்கை: 500

குறை

## தொடக்கம்

அரன்கயிலை விட்டுநான் தெட்சணித்தில் வந்து
அளவரந்த கோடிசித்தர் முனிவ ரிசிகளுமாய்
பரந்தொரு பொதிகைதனி லிருக்கும் போது
பாடினதோர் விந்தமொடு வயித்தி யந்தான்

## முடிவு

உட்சா ........... ...........
வியாதியளுக்கெல்லா மொளிவ தற்கு
மாரண மந்திர மறிந்தால் அ............
............ ............ ............ .........ளும்
பெறுமடரான் வியாதியின்
பேர்கொண்டு வரும்நர ............

## காலம்

இல்லை

## குறிப்பு

இதில், முப்புக்குரு, சர்பநிவர்த்தி, கெர்ப்பக்கோள், முதலியன உள்ளன.

வரிசை எண்: 1980 சுவடி எண்: 997

# அகத்தியர் கலைக்கியானம் ஆயிரத்திருநூறு

பொருள்: மருத்துவம்

நூலாசிரியர்: அகத்தியர்

ஏடுகளின் எண்ணிக்கை: 206

சுவடியின் நிலைமை: பழுது பட்டநிலை

பக்கத்திற்கு: 10-11 வரிகள்

அளவு: 25×5 சென்டி மீட்டர்

எழுத்து: தமிழ்

கி. எண்ணிக்கை: 7000

குறை

## தொடக்கம்

ஆதியாம் பரத்தினுட கிருபை கூர்ந்து
அன்பான மனோன்மணியைத் தொழுது போற்றி
சோதியெனுங் கமலமுற்தங் கொண்டு தேறி
சுந்தரம்போல் வாதத்தி லட்சங் காப்பு
நீதிபெற வயித்தியத்தி லிரண்டு லெட்சம்
நிலைத்ததொரு சூத்திரத்திற் கோடா கோடி

## முடிவு

யில்லையென்று ஆணையிட்டுச் சொல்லிப் போடு
யென்மகனே யென்மேலே ஆணை ஆணை
புல்லனென்ற புலையறி ......... ................
............. .......... ............. ..........  —1200

## காலம்

இல்லை

## குறிப்பு

இது, கூந்தற்பனை ஏடுகளில் எழுதப்பட்டுள்ளது. இதில், சிதம்பர சக்கரம், வாலை சக்கரம், தர்க்கம் பேசப் பட்டவர்களுக்கு, சடாட்சரமகிமை, கணபதி சக்கரம் மானித பூசை, முப்புவின் விபரம், துருசுக் கட்டு, கருவங்கச் சுன்னம் முதலியன உள்ளன
கடைசி ஏடு இல்லை.

வரிசை எண் : 1981 சுவடி எண் : 998

# வைத்தியத் திரட்டு

பொருள் : மருத்துவம்

நூலாசிரியர் : பலர்

ஏடுகளின் எண்ணிக்கை : 8

சுவடியின் நிலைமை : பழுது பட்டநிலை

பக்கத்திற்கு 8-9 வரிகள்

அளவு : $35 \times 3\frac{1}{2}$ செண்டி மீட்டர்

எழுத்து : தமிழ்

கி. எண்ணிக்கை : 350

குறை

## தொடக்கம்

வெள்ளை வாத முறை

யெருக்கலம் பால் பலம் கால்
வெங்காரம் பணவிடை —1
நல்லகாரம் ,, —1
இது மூணும் ஒரு பாத்திரத்தில் காரத்தைப்
பொடி செய்து ஷி பாலில் போட்டு

## முடிவு

பன்னிரண்டு வாழைப்பழம் கூட செரு நார்த்தங்காய் தண்டி சர்க்கரையும் போட்டுக் கிண்டி விடவும். நாளொன்றுக்கு இரண்டு கரண்டியளவு கொள்ளவும்.

காப்பு, புளிப்பு, தவிரவும், உப்பு கொஞ்சம் கூட்டிக் கொள்ளவும்.

சிவமயம்

வேட்டைக்குப் போக சக்கரம்
வழக்கு வெல்ல சக்கரம் (இருக்கின்றன)

## காலம்

இல்லை

## குறிப்பு

இதில், மருவெடுக்க, போகிக்க மருந்து, போகிக்க லேபனம், அடைப்பு திறக்கும் நாவடக்கம், பலவகை யிருமலுக்கு மருந்து முதலியன உள்ளன. கடைசி ஏட்டில் சக்கரங்கள் உள்ளன.

வரிசை எண் : 1982 சுவடி எண் : 999

# வைத்தியத் திரட்டு

பொருள் : மருத்துவம்

நூலாசிரியர் : பலர் ஏடுகளின் எண்ணிக்கை : 25

சுவடியின் நிலைமை : பழுது பக்கத்திற்கு : 7-8 வரிகள்

அளவு : 35 × 3½ செண்டி மீட்டர் எழுத்து : தமிழ்

கி. எண்ணிக்கை : 1000 குறை

## தொடக்கம்

நாலாமறைக் காச்சலுக்கு மருந்து

தும்பத்தளை நாகவேளைத் தழை
நாய்வேளைத் தழை குப்பமேனித் தழை
ஓமம் ஒரு பூண்டு வசம்பு
இந்த வகை ஏழும் கொண்டுவந்து
துணியிலே பொட்டலம் கட்டி

## முடிவு

உதிரமும் சிரங்கு மாக்கும் கால்கை
நாம்புபோலே தேய்ந்து வயறு பெருக்கும்.
சொருமாக்கும்
இதுவறிந்து பரிகாரஞ் செய்யவும்
சகல பொல்லாப்பும் நீங்கும்

குருவே துணை
முற்றும்

## காலம்

இல்லை

## குறிப்பு

இதில், முள்ளுப்பட்டாலும் மந்திரம், வீக்கம், யெந்த சாதிக்கும் மந்திரம், விசத்துக்கு நசியம், நாவடக்கம், தலைவலிக்கு, பிள்ளைபெறமாட்டாதவளுக்கு, லேபனம், தம்பனம், நாரு கிரந்தை கற்பம், ஈசுரமூலி கற்பம் முதலியன உள்ளன.

வரிசை எண் : 1983 சுவடி எண் : 1000—a

# சித்திராரூட நொண்டி

பொருள் : மாந்திரீகம்

நூலாசிரியர் : சித்தர்கள்

ஏடுகளின் எண்ணிக்கை : 26

சுவடியின் நிலைமை : சிறிது பழுது

பக்கத்திற்கு : 7-8 வரிகள்

அளவு : $35 \times 3\frac{1}{2}$ செண்டி மீட்டர்

எழுத்து : தமிழ்

கி. எண்ணிக்கை : 1000

முழுமை

தொடக்கம்

அத்தனா ரம்மை யருளால்த் திருமுறையால்
சித்தரா ரூடத்தைச் செப்பக்கேள்—முத்திக்
குரிய குமரன் றுணைவன் மும்மதத்தன் கோட்டுக்
கத்திமுகவன் தன்பதமே காப்பு.

அத்திமா முகவன் பாதம் ................ விளம்பலுற்றேன்

நூல்

திருமருதூரில் வாழுந் ............

முடிவு

தரைமிசை யெழுநூறு பருவமுஞ்
சரிவர வேயிருந்து தான்வாழ்ந்து
திருமகள் விளக்கம் பெற்றுப் பதினாறு
செல்வம் பெற்று முத்திசேர்வர் தாமே !

தந்த தன தன்னா
தனதன தந்ததன தனதன தந்த தன்னா

காலம்

இல்லை

குறிப்பு

இது, எமது சுவடி எண் 301b/D-533 போன்றது. இதில் காப்பு வெண்பா மிக் குளது பிறசெய்திகளை 301-b ல் காண்க.

வரிசை எண் : 1984

சுவடி எண் : 1000—b

# வைத்தியத் திரட்டு

பொருள் : மருத்துவம்

நூலாசிரியர் :பலர்

ஏடுகளின் எண்ணிக்கை : 18

சுவடியின் நிலைமை : சிறிது பழுது

பக்கத்திற்கு : 7–8 வரிகள்

அளவு : 35 × 3½ செண்டி மீட்டர்

எழுத்து : தமிழ்

கி. எண்ணிக்கை : 700

குறை

## தொடக்கம்

பேயஞ்சுக்கு..............விபரம்

பேய்ச்சுரை பேய்ப்புடல்
பேய்க்கொம்மட்டி பேய்த்திமிட்டி
ஆக அஞ்சு(?)ங் கண்டு சொல்லவும்

பிணிக்கி குளிகை

குப்பைமேனி வேர் வராகன் — 3

## முடிவு

நாய்கடித்த விசத்துக்கு

காட்டுச் சீரகம் அரைத்து
மூன்று நாள் சாப்பிடவும்
விச மிறங்கும்

ஆதியே துணை செய்யவும்

## காலம்

இல்லை

## குறிப்பு

இதில் பண்ணிக் குருவைக் குணம், பிள்ளைப் பிணி தோசத்துக்கு, சிலேஷ்ம சுரத்துக்கு முதலியன உள்ளன.

வரிசை எண் : 1985 சுவடி எண் : 1001–க

# புலிப்பாணி சாலம்-இருநூறு

பொருள் : மருத்துவம்

நூலாசிரியர் : புலிப்பாணி

ஏடுகளின் எண்ணிக்கை : 90

சுவடியின் நிலைமை : பழுது பட்டநிலை

பக்கத்திற்கு : 6-7 வரிகள்

அளவு : $23\frac{1}{2} \times 3$ செண்டி மீட்டர்

எழுத்து : தமிழ்

கி எண்ணிக்கை ; 1300

முழுமை

## தொடக்கம்

சத்தியமே தயாபரியே ஞான ஹூர
சாம்பவியே மனோன்மணியே கபாலி சூலி
முத்தியே வேதாந்த பரையே அம்மா
முற்குணமே அறச்சுடரே மாய வீரி
வெத்தியே மூவருக்கு அருளாய் நின்ற
வேணியே சாமளமே பொன்னே மின்னே
சித்தியே சாலமது யெறனூ றய்யா
சின்மயத்தின் கிணேசனுட காப்பாம் பாரே!

## முடிவு

தாமேநீ வைத்திடமங் கொடுத்தாப் போலே
தரணிதனில் தான்விளங்கும் புலிப்பாணி தானும்
நாமேநீ போகருட கடாட்சம் பெற்றே
நாயகனே சாலமிற னூறு மாமே ! —200
தேவிசகாயம்

## காலம்

இல்லை

## குறிப்பு

இதில் கண்கட்டு, சாலக்காள் பூசை, பச்சைப்பாம்பு, வித்தை, மூலிகைச்சாலம், தெய்வ சாலம், சீலை குடைபிடிக்க, எலுமிச்சம் பழ வித்தை, சர்ப்பச் சாலம், வாத்திய சாலம், அக்கினி சாலம், சலத்தின் சாலம், வாய்வு பரிய முதலியன உள்ளன.

வரிசை எண் : 1986 சுவடி எண் : 1001-b

# புலிப்பாணி பலதிரட்டு

பொருள் : மருத்துவம்

நூலாசிரியர் : புலிப்பாணி

ஏடுகளின் எண்ணிக்கை: 45

சுவடியின் நிலைமை : பழுது பட்டநிலை

பக்கத்திற்கு : 7-8 வரிகள்

அளவு : $23\frac{1}{2} \times 3$ செண்டி மீட்டர்

எழுத்து : தமிழ்

கி எண்ணிக்கை : 700

முழுமை

## தொடக்கம்

வேதாந்த நாயகியே விமலி வேணி
வீரமா காளியம்மா ருத்ர ரூபி
நாதாந்தத் துப்பொருளே அகோர வீரி
நாரணியே காரணியே தேவி சத்தி
மூதாந்த சீர்தனுட பரையே துர்க்கி
மூவர்க்கும் முதப்பொருளே ஆனந் தாயி
மாதாந்தந் தனையீன்ற சீகத வல்லி
மாமுகத்தோன் பலதிரட்டுக் காப்புத் தானே ! —1

**நூல்**

தானென்ற முப்பூவை சொல்லக் கேளு
தருவான அண்டமடா ஆதி ஆதி

## முடிவு

கொழுந்துபோல் தீபத்தை நோக்கிப் பாரு
கோபமொன்று மாகாது குணமே வேணும்
செழுந்திருக்கும் போகருட கடாட்சத் தாலே
செத்திருக்கும் புலிப்பாணி பலதிரட்டு முற்றே ! —100

## காலம்

இல்லை

## குறிப்பு

இதில், வசியமை, மாரணம், அஞ்சனம், பேதனம் வித்துவேசனம், புதை பில்லி கள்ள பிசாசுத் தொழில், விந்து விடாமல் கட்ட, ஸ்திரீ வசியம், விளிவி கற்பம் ரச பற்பம், துருசுச் சுன்னம், துருசு செயநீர், வீரச் சுன்னம், சாரக்கட்டு, தாளக பற்பம, சூடச் சுன்னம், முதலியன உள்ளன.

வரிசை எண் : 1987 சுவடி எண் : 1002

# அகத்தியர் சூத்திரம் - இருநூற்றைந்து

பொருள் : மருத்துவம்

நூலாசிரியர் : அகத்தியர்

ஏடுகளின் எண்ணிக்கை : 26

சுவடியின் நிலைமை : பழுது

பக்கத்திற்கு : 6 வரிகள்

அளவு : 28 × 2½ செண்டி மீட்டர்

எழுத்து : தமிழ்

கி. எண்ணிக்கை : 500

குறை

## தொடக்கம்

பூரணமாம் மும்மூலப் பொறியிற் சூடாம்
புகையெழும்பி மேகமதாய்ச் சிரசிற் சூடாம்
காரணமாய் நீர்கலந்து கண்ணில் ரோகங்
கனலெழுந்து வாயுவினால் சூலை ரோகம்.

## முடிவு

முறையான யேகமூ லிகையின் போக்கு
முக்கியமாய் யெண்ணையொரு நெய்க சாயந்
துறையென்ற துறையெல்லா மிதுக்குள் சொன்னேன்
சுருக்காகுந் தயிலங்கள் சூரணங்கள்
பறையென்ற பறைபோட்டேன் வியாதிக் கெல்லாம்
பண்பதுபோல் பாடிவிட்டேன் பலனூ லெல்லாம்
நிறையென்ற துறையெல்லாஞ் சுருக்கிச் சொன்னேன்
.......... .......... .......... .......... — 103

## காலம்

இல்லை

## குறிப்பு

இதில் அயப்பற்பம், தாம்பிரபற்பம், ரசபற்பம், வங்கபற்பம், காரீய பற்பம் முதலியன உள்ளன.

இது, எமது சுவடி எண் 294–h / D–525, எண் 311–e/D–566, எண் 323–a / D–622 போன்றது.

வரிசை எண் : 1988 சுவடி எண் : 1003

# பொதிகைச் சுவாமியார் சூத்திரம்-நூறு

பொருள் : மருத்துவம்

நூலாசிரியர் : அகத்தியர்

ஏடுகளின் எண்ணிக்கை : 29

சுவடியின் நிலைமை : பழுது பட்ட நிலை

பக்கத்திற்கு : 6 வரிகள்

அளவு : 28 × 2½ செண்டி மீட்டர்

எழுத்து : தமிழ்

கி. எண்ணிக்கை : 50J

முழுமை

தொடக்கம்

பூரணமாஞ் சுளினைநடுக் கமல மீதே
புகழ்பெரிய மூலகண பதியே காப்பு
காரணமா யெனையாண்ட பராபரனைப் போற்றி
கட்டாக வாதத்தி லெட்சங் காப்பு

முடிவு

மனம்வேறு சாதகமாய்ச் சாத்திரம் பார்த்து
மனம்பிலக்கக் குருவினிடம் வணங்கி நின்றால்
மனம்வேறு வாராது சித்தி முத்தி
வாய்க்குமே சூத்திரந்தான் நூறு முற்றே! —100

தெட்சணாமூர்த்தியார்
பாதாரவிந்தமே கெதி

காலம்

வியவருடம் கார்த்திகை மாதம் 3-ஆம் தேதி வியாழக்கிழமை மிருகசீரிச நட்சேத்திரமும் துதிகையுங் கூடின்சுபதினத்தில் வயித்தியம் நூறு எழுதி முகிந்தது. சூடாமணி பொன் ராமசாமி வாத்தியார் கையெழுத்து,

நீடூழி வாழ்க

குறிப்பு

இதில், துருசு, கட்டுவிதம் செயநீர், உப்புக்கட்டு முதலியன உள்ளன.
இது, எமது சுவடிஎண் 258-a /D458 அகத்தியர் சூத்திரம் நூறு போன்றது.

வரிசை எண் : 1989 சுவடி எண் : 1004

# பொதிகைச் சுவாமியார் சூத்திரம் - ஐம்பது

பொருள் : மருத்துவம்

நூலாசிரியர் : அகத்தியர் ஏடுகளின் எண்ணிக்கை : 3 (30-42

சுவடியின் நிலைமை: பழுது பக்கத்திற்கு : 6 வரிகள்

அளவு : 28 × 2½ செண்டி மீட்டர் எழுத்து : தமிழ்

கி. எண்ணிக்கை : 300 குறை

*தொடக்கம்*

வானும் புவியு மதியுங் கதிரொளியுந்
தேனு சிவகுருவைத்—தானுந்தான்
நாமரையும் ஆராய்ந்து நன்னாவி தன்னையும்
கோலமுடன் கிணேசன்றான் கூறு.
மயமான முப்பூவின் மார்க்கந் தன்னை
........ ............. ........ ...........

*முடிவு*

காலான வயித்தியத்தை யுறுதி யாக்க
கைமுறைகள் தப்பாமல் குருவைச் செய்தால்
பாலான நிறமுடைய பரமனாவன்
பாரிலே வாழ்வதற்குக் குருவு மாவன்
செயலான திருவுடைய செல்வ னாவன்
சி......... ......... ......... - 50

*காலம்*

இல்லை

*குறிப்பு*

இதில் கடைசி ஏடு இல்லை. 42 வது ஏடு பாதியாக முறிந்துள்ளது இதன் மூலம் வைத்தியம் செய்யும் முறை, அயம் காந்தம், அப்பிரக நவனீதம், செருடக்கல், கல்நார் அண்டக்கல், சங்கு, சலாசத்து நவரத்தினங்கள், மனித எலும்பு, மான் கொம்பு, ஆமை யோடு இவைகளை மணியாகச் செய்யும் முறை முதலியன கூறப்பட்டுள்ளன.

இது எமது சுவடி எண் 185—a/D291 போன்றது. எனினும் பிழைகள் மலிந்துள்ளன.

வரிசை எண் : 1990 சுவடி எண் : 1005

# வைத்தியத் திரட்டு

பொருள் : மருத்துவம்

நூலாசிரியர் : பலர்

ஏடுகளின் எண்ணிக்கை : 25

சுவடியின் நிலைமை : சிறிது பழுது

பக்கத்திற்கு : 6 வரிகள்

அளவு : 28 × 2½ செண்டி மீட்டர்

எழுத்து : தமிழ்

இ. எண்ணிக்கை : 500

குறை

*தொடக்கம்*

மேகத்துக்குத் தயிலம்

நிகரில்லா மேகத்தின் தயிலங் கேளு
நிசமான சந்தனமு மிலாமிச் சோடு
வகையான ஆவரையின் பட்டை யோடு
வகைபத்துப் பலமாக வாங்கி யேதான்
பிசகாமற் றூணிநீர்விட் டெட்டொன் றாக்கிப்
பெருமையொற்ற கஷாயத்தை வாங்கி யேதான்

*முடிவு*

வைத்திடவே வெடியுப்புச் செயநீ ராகு
மைந்தனே முன்னுரைத்த கிளிஞ்சிச் சாரம்
நைத்திடவே யிதையிட்டு யரைத்து நன்றாய்
நலமான செயம்பார்த்துக் குகைகி விட்டு
மொய்த்திடவே புடம்போடு சாரங் கட்டு
மூதண்ட பனியில்வைக்கச் செயநீ ராகுங்
கொத்திடவே யின்பெருசார் நீர தான
கொள்ளையடா வாதமிதிற் கூறக் கேளே ! — 101

*காலம்*

இல்லை

*குறிப்பு*

இதில் மேகத்துக்குத் தயிலம், வில்லைவேர்த் தயிலம், வேங்கைத் தயிலம், வெட்டிவேர்த் தயிலம், வேம்பின் பட்டைத் தயிலம், குருந்தவேர்த் தயிலம், சித்திர மூலத் தயிலம் சீரகத் தயிலம், சூரிவிதைத் தயிலம், சங்கம் வேர்த் தயிலம், அமுக்காரத் தயிலம் முதலியன உள்ளன.

இது திரட்டு அன்று; ஒரு முழு நூலின் தன்மை காணப்படுகின்றது. தலைப்பு அறியக் கூடவில்லை, எனவே 'வைத்தியத் திரட்டு' எனப்பட்டது.

வரிசை எண் : 1991 சுவடி எண் : 1006

# வைத்தியம்—பலதிரட்டு

பொருள்: மருத்துவம்

நூலாசிரியர்: பலர்

ஏடுகளின் எண்ணிக்கை: 24

சுவடியின் நிலமை: சிறிது பழுது

பக்கத்திற்கு 6 வரிகள்

அளவு: 28 × 2½ செண்டி மீட்டர்

எழுத்து: தமிழ்

கி. எண்ணிக்கை: 500

முழுமை

## தொடக்கம்

**காசத்துக்கு மருந்து**

இலந்தைத் தம்பலம், உத்தம தாளிச் சமூலமுஞ் சங்கம் வேர், தூதுவளை வேர் இவ்வளவும் வகை 1½ வராகன். 3 நாழித் தண்ணீர் விட்டு அரைத்து மேல் மருந்து அதிமதுரங் கோஷ்ட்டம் மிளகு, கருஞ்சீரகம் சாரணைவேர் நாய்ப் பல்லு.

## முடிவு

**களவு பிடிக்க வினோதம்**
**உச்சிதும்**

செத்த பிரேதம் வேகுறபோது ஒரு இரும்பை நெஞ்சில் வைத்துக் காடாத்து முன்னே யெடுத்து வளகி யடித்துக் கய்யில் போட்டுக் கொண்டு வளகியை உயர யேற்றினால் களவு செய்தவன் சேலையை உயர வாங்கும்.

இது பார்த்துக் கொள்ளவும். கைகண்டது.

**சிவமயம்**

## காலம்

இல்லை

## குறிப்பு

இதில் பெரும்பாட்டுக்கு மருந்து, பல் விளக்க மருந்து, இருமலுக்குப் புளிக, வாதபெண்பதுக்கும், வாத சூலை, பிடிப்பு, முழங்கால் பிடிப்பு, கடுப்புக்கு எண்ணெய், சிந்தி கற்பம், கண்டத்துக்கு மேல் கண்ட வீக்கத்துக்கு எண்ணெய், வயிற்றில் செத்த பிள்ளை விழ முதலியன உள்ளன.

வரிசை எண் : 1992 சுவடி எண் : 1007

# அகத்தியர் பட்சணி

பொருள்: மருத்துவம்

நூலாசிரியர்: அகத்தியர்

ஏடுகளின் எண்ணிக்கை: 16

சுவடியின் நிலைமை: சற்றே பழுது

பக்கத்திற்கு: 6 வரிகள்

அளவு: 28 × 2½ செண்டி மீட்டர்

எழுத்து: தமிழ்

கி எண்ணிக்கை: 250

குறை

## தொடக்கம்

ஆதியந்தம் நடுவிருந்த் சோதி பாதம்
அகண்டபரி பூரணமே யறிவே காப்பு
நீதிகலை வாணிகுரு கந்தன் காப்பு
நிரஞ்சனம ^ நிற்குணமா வதீங்த காப்பு.

## முடிவு

வாட்டவே யண்டரண்ட நீரிப் போகு
மானிலத்தி லெதிராளி யுண்டோ சொல்லு
காட்டவே கங்காளி யேவல் துர்க்கை
கன்னிதொட்டுக் காசிவரை யோடிப் போகும்
நீட்டவே மாரணத்துக் காதி பீடம் 52
நிகருண்டோ ......... ......... ......

## காலம்

இல்லை

## குறிப்பு

இதில், சகல வசியம், மந்திரம், செம்பருத்தம், வசியம் தம்பனம், உச்சாடனம், மோகினி மந்திரம், மோகனம், நாகவாடை, அஷ்டாங்க வாலை, முதலியன உள்ளன. நூல் தலைப்பு அறியக் கூடவில்லை.

வரிசை எண் : 1993 சுவடி எண் : 1008

# திருமந்திரம் - கோரக்கர் பாடல் - தீட்சா விதி

பொருள் : மருத்துவம்

நூலாசிரியர் : கோரக்கர்

ஏடுகளின் எண்ணிக்கை : 6

சுவடியின் நிலைமை : பழுதுபட்ட நிலை

பக்கத்திற்கு : 6 வரிகள்

அளவு : 28 × 2½ செண்டி மீட்டர்

எழுத்து : தமிழ்

கி. எண்ணிக்கை : 200

முழுமை

தொடக்கம்

பூரண லேகியம்

கோரக்கர் மூலிகை குருவின் உபதேசம்
நேரொக்கக் கொண்டு நிலையறிவா ரீங்கில்லை
நேரொக்கக் கொண்டு நிலையறி வாளர்க்குச்
சீரொக்கப் பாயும் சிவபதந் தானே!

முடிவு

ஆச்சிந்தத் தீட்சைவிதி கேட்டோர்க் கையா
ஆச்சரியஞ் சகலநூல் அவர்க்கே எய் தும்
ஓச்சிந்த வாதமவர் சொன்னபடி கேட்கும்
உத்தமனே வயிரவன்றா னேவல் கேள்கும்
பாச்சிந்தப் பூசையிலே வஷ்த்து வைத்துப்
பார்க்கையிலே செலமாகும் பாரு பாரு
காச்சிந்தத் தாதுவெல்லா முருக்கிக் கொண்டு
கருதுநீ பூசைவிர்த்தி யாகும் பாரே! —34

தீட்சை விதி முற்றும்

காலம்

இல்லை

குறிப்பு

இதில், தொடக்கம் திருமூலர் திருமந்திரச் செய்யுளாகவும், பிற்பகுதி எண்சீர் விருத்தமாகவும் காணப்படுகின்றன.

கோரக்கர் கற்ப முறை பாடலில் இது தொடங்குகிறது.

வரிசை எண் : 1994

சுவடி எண் : 1009

# கோரக்கர் கற்ப முறை

பொருள் : மருத்துவம்

நூலாசிரியர் : கோரக்கர்

ஏடுகளின் எண்ணிக்கை : 9

சுவடியின் நிலைமை : பழுது

பக்கத்திற்கு : 6 வரிகள்

அளவு : 28 x 2½ செண்டி மீட்டர்

எழுத்து : தமிழ்

கி. எண்ணிக்கை : 150

குறை

தொடக்கம்

பவவள்ளி கற்பம்

இருப்பாங்காண் சாகாம லிருக்கக் கற்ப
மின்னங்கேள் பவவள்ளியின் கற்பங் கேள்
விருப்பமுட னடையாளஞ் சொல்லக் கேளு
மீறுகின்ற பாம்புபோலக் கொடிய டர்ந்து
மிருக்கு ............... ............ ............

முடிவு

வீந்ததோர் வாய்வு வேகங்கள்
மனவேக மான வாசி
அந்தர கபால யோகம்
அஷ்டமா சித்தி யான
செந்தமிழ்க் கபால வாணி
செகத்துக் கேராச தானி
சுந்தரி யழகு பொன்னின்
தூயனாம் வச்சிர காயன் — 35

கற்பவல்லாரை கிறிகிக ......................—

காலம்

இல்லை

குறிப்பு

இதில், நீலி, புல்லு வேதாள கற்பம், கெந்தி முதலியன உள்ளன. இதனை அடுத்த ஒரு ஏட்டில் வடவாமுகாக்கினிக் குளிகைக்கு விபரம் என்று தலைப்பிடப்பட்டு உரை நடையாய் மருந்து கூறப்பட்டுள்ளது,

தாளகக் கட்டு, வெள்ளைக்கு விபரம், செந்தூரம், ஆகியவை உள்ளன.

வரிசை எண் : 1995 சுவடி எண் : 1010—உ

# புலிப்பாணி ஜாலம் - இருநூறு

பொருள் : ஜாலம்

நூலாசிரியர் : புலிப்பாணி

ஏடுகளின் எண்ணிக்கை : 33

சுவடியின் நிலைமை : பழுது

பக்கத்திற்கு : 7-8 வரிகள்

அளவு : 35 × 3 சென்டி மீட்டர்

எழுத்து : தமிழ்

கி. எண்ணிக்கை : 800

முழுமை

## தொடக்கம்

சத்தியே பராபரியே ஞான ரூபி
சாம்பவியே மனோன்மணியே கபால சூலி
முத்தியே வேதாந்தப் பரையே அம்மா
முக்குணமே முச்சுடரே மாயா வீரி.

## முடிவு

தாமேநீ நவரெத்தினங் கோத்தாப் போலே
தாரணியில் தன்னிலைதான் விளங்கும் புலிப்பாணி
நாமேநீ போகருட கடாட்சத் தாலே
நாயகனே சாலமிது யிருநூறு மாமே ! 201

## காலம்

இல்லை

## குறிப்பு

இது, எமது சுவடி எண் 1001—உ போன்றது. மற்ற விபரங்கள் அங்கு காண்க.

வரிசை எண் : 1996 சுவடி எண் : 1010-b

# புலிப்பாணி பலதிரட்டு - நூறு

பொருள் : மருத்துவம்

நூலாசிரியர் : புலிப்பாணி

ஏடுகளின் எண்ணிக்கை : 17 (34-50)

சுவடியின் நிலைமை : பழுது

பக்கத்திற்கு :7- 8வரிகள்

அளவு : 35 × 3 செண்டி மீட்டர்

எழுத்து : தமிழ்

கி. எண்ணிக்கை : 400

முழுமை

## தொடக்கம்

தானென்ற முப்பூவைச் சொல்லக் கேளு
தருவான அண்டமடா ஆதி ஆதி
கானென்ற அண்டத்தைக் கொண்டு வந்து
கடிசாக நொறுக்கியதை ரூபாயி போலே
மானென்ற பூநீரைக் கரைத் தெடுத்து
மைந்தனே அதில்போட்டு குருக்கிக் காச்சி
பானென்ற சலம்விட்டுக் கழுவிப் போட்டு
பண்பாக ரவிதனிலே உலரப் போடே ! — 1

## முடிவு

அழுந்துவார் சாத்திரத்தை நிசமென் றென்று
அடவான பெரியோரை வணங்கிக் காரு
நளுந்துவார் பொய்யொன்றும் நவிலொண் ணாது
நாதனுக்கு ஆளாக வேணு மானால்
கொளுந்துபோல் தீபத்தை நோக்கிப் பாரு
கோபமொன்றும் ஆகாது குணமே வேணும்
செளுந்திரிச்ச போகருட கடாட்சத் தாலே
செகமதிக்கப் புலிப்பாணி பாடல் முற்றே ! — 100

## காலம்

பழனி தாலுக்காவைச் சேர்ந்த பளயாய்க்குடியிலிருக்கும் சவுதலி ராவுத்தர் மகன் வெள்ளையப்ப ராவுத்தன் தன் கைப்பட எழுதினது.

## குறிப்பு

இதில், கண்ணப் பசாசுத் தொழில், சொக்குப் பொடி, கற்பம், ரசபற்பம், துருசுச் சுன்னம், சிறுகண்ணு நாகம், தாளகம், கெந்தி முதலியன உள்ளன.

வரிசை எண் : 1997 சுவடி எண் : 1011

# அகத்தியர் தண்டகம் - நூறு

பொருள் : மருத்துவம்

நூலாசிரியர்: அகத்தியர்

ஏடுகளின் எண்ணிக்கை: 9 (52-60)

சுவடியின் நிலைமை: மிகப் பழுது

பக்கத்திற்கு: 6-7 வரிகள்

அளவு: 35×3 செண்டி மீட்டர்

எழுத்து : தமிழ்

கி,எண்ணிக்கை: 250

முழுமை

## தொடக்கம்

அந்தணர் பாதம் போற்றி
அறிவுடன் வாழ்வோர்க் கெல்லாம்
சந்ததம் பூமி மீதில்
சாத்திய தண்ட கந்தான்
யெந்தனார் பிள்ளை யெல்லா
மதுவறிந் துள்ளே கொண்டு
பிந்தமிழ் பிறவிள் ளாத
பெரியவ ராகுந் தானே ! — 1

## முடிவு

ஆனோஞ் சிவனை அடிதொழு தேற்றி
மானே பார்பது மக்களு மானோம்
வீணே யிருந்து விஞ்சவள் கண்டாய்
தானே தண்டக நாடுமுறை முற்றே ! - 103

அகத்தீசர் தண்டகம் முற்றும்

## காலம்

இல்லை

## குறிப்பு

இதில், அஞ்சனம், வசியம், உருமாற்றம், மருந்தீடு, அஷ்டகர்மம் முதலியன உள்ளன.

இது, எமது சுவடி எண் 17-d / D-22 போன்றது, ஆயினும் பாட வேறுபாடுகள் உள்ளன.

வரிசை எண் : 1998 சுவடி எண் : 1012

# ரோமரிஷி ஒன்பது

பொருள் : மருத்துவம்

நூலாசிரியர் : ரோமரிஷி ஏடுகளின் எண்ணிக்கை : 1 (51)

சுவடியின் நிலைமை : பழுது பக்கத்திற்கு : 10 வரிகள்

அளவு : 35 × 3 செண்டி மீட்டர் எழுத்து : தமிழ்

கி. எண்ணிக்கை : 30 குறை

## தொடக்கம்

பூரணமாய் நின்றதொரு சுழினை காப்பு
பொதிகைமுனிக் கருள்கொடுத்தோன் பாதங்காப்பு
வாரணிந்த முலையாள்தன் பாதங் காப்பு
கோடிகோடி முனிசித்தர் பாதங் காப்பு
தாரணிந்த கரிமுகவன் பாதங் காப்பு
தப்பாமல் சொல்லுகிறேன் மகாலிங் கய்யா
பேரணிபோல் முழங்கிவரும் ஒன்ப துக்குள்
பெருநூலுந் தருநூலும் காப்ப தாமே! -1

## முடிவு

கொண்டுகண்டார் பூரணமே வாலையது வாகும்
கோடிகற்பம் கோடிதொந்த மா⌒ மாடும்
கண்டுயிதில் பணவிடைதான் புனுகு சேர்த்து
கங்காளி வசிய நம வென்று ஓதப்
பண்டுமுன்னாள் செய்தவினை யெல்லாம் ........... -4

## காலம்

இல்லை

## குறிப்பு

இந்த ஏட்டின் ஒருபக்கம் மட்டும் 3 பத்தியாக 3½ செய்யுட்கள் மட்டும் உள்ளன,

வரிசை எண் : 1999 சுவடி எண் : 1013

# அகத்தியர் பட்சணி நூற்று முப்பத்தொன்று

பொருள்: மருத்துவம்

நூலாசிரியர்: அகத்தியர்

ஏடுகளின் எண்ணிக்கை: 19 (61-70)

சுவடியின் நிலைமை : பழுது

பக்கத்திற்கு 7-8 வரிகள்

அளவு: 35 x 3 செண்டி மீட்டர்

எழுத்து: தமிழ்

கி. எண்ணிக்கை: 250

முழுமை

## தொடக்கம்

திருமகள் சோதி யாகும்
செகதலம் வல்லி மாது
மருமக ளவளே யுந்தி
மவுனத்தில் நந்தி தோண
கருவது நாமே சொல்வோம்
கண்டது விண்டி டாதே
பருவமா மாது கற்மம்
பச்சணி யறிந்து கொள்ளே —1

## முடிவு

கற்றவ ரென்னூல் தன்னை
கைவிடார் கருவைக் காண்பார்
செத்தபே ரில்லை யின்னூல்
சேர்ப்பது முத்தி யாமே! —131

அகத்தீசுவரர் பட்சணி
முற்றும்.

## காலம்

தாருண வருடம புரட்டாசி மாதம் 11-ஆம் தோதி பளையாயக் குடியிலிருக்கும் வெள்ளைய ராவுத்தர் சவுதலி ராவுத்தர் குமாரர் வெள்ளைய ராவுத்தருக்கு அகத்தியர் பட்சணி யெழுதினது. சிவனாம குரும்பன் மகன் கருப்பக் குரும்பன் கையெழுத்து.

சம்பூரணம்

## குறிப்பு

இதில், அரிதார வெள்ளை, புழுகு, தம்பலத்தின் பூச்சி, வழிவேதை வசியம் அரவு விஷம் போக்கி, அம்ருதம் உண்ணுதல், நேத்திரத்தின் ஒளிவு, கதிரொளி தெரிதல் முதலியன உள்ளன.

இது, எமது சுவடி எண் 228-b/D-368 போன்றது. ஆனால் பாட வேறுபாடுகள் மிகுதியும் காணப்படுகின்றன. இது நல்ல பாடமாகத் தெரிகிறது.

17 வது தொகுப்பு

சுவடி எண் : 1014

வரிசை எண் : 2000

# குருமுனி இந்திரசால வெண்பா—நூறு

பொருள் : மருத்துவம்

ஏடுகளின் எண்ணிக்கை : 9 (71-79)

நூலாசிரியர் : அகத்தியர்

பக்கத்திற்கு : 8-9 வரிகள்

சுவடியின் நிலைமை : பழுது

எழுத்து : தமிழ்

அளவு : 35 × 3 செண்டி மீட்டர்

முழுமை

கி. எண்ணிக்கை : 300

## தொடக்கம்

கருவகையில் மூலிகை சித்திரச்சு ருக்கம்
உலைவிபர வெண்பா உரைக்கவே—திருவருளுங்
கந்தனுக்கு முன்னுதித்த காரானை யைந்துகரத்
தந்திமுகத் தோன்நூல் காப்பு

## முடிவு

குறிவெண்பா யிந்திரகண்டி கோகரண நூறும்
அறிவுண்டாஞ் சால அவையடக்கம்—பிறிவுதரும்
தெட்சணியைப் பாரு சிகசால மாட்டிவிக்க
வச்சணி னூறுமுற்றுமை வுனு. —100

## காலம்

இந்த ஏடு தொட்டனூத்திலே யிருக்கும் மருதனாயகம் பிள்ளை ஏடு பார்த்து எழுதினது.

குருகடாட்சம்

## குறிப்பு

இதில், புகைவிபரப், பட்டமரம் தழைக்க, பாம்பு அழைக்க, பட்சி அழைக்க, நவமூலி ஒன்பதும் பிடுங்க, தலைசுற்றி ஆடுதல், கையில் மழுவேந்த, மாற்றானை மாற்ற நீறு, ராசவசியம், மாரண வித்தை முதலியன உள்ளன.

வரிசை எண் : 2001 சுவடி எண் : 1015

# தெட்சிணாமூர்த்தி பாடல் - ஐந்து

பொருள் : மருத்துவம்

நூலாசிரியர் : தெட்சிணாமூர்த்தி

ஏடுகளின் எண்ணிக்கை : 1 (80)

சுவடியின் நிலைமை : பழுது

பக்கத்திற்கு : 7-8 வரிகள்

அளவு : 35 × 3 செண்டி மீட்டர்

எழுத்து : தமிழ்

கி. எண்ணிக்கை : 50

முழுமை

## தொடக்கம்

ஆகமாய்த் தெட்சிணா மூர்த்தி சொன்ன
அப்பனே முரிவுவகை என்ன சொல்வேன்
பாகமாய் நாவிபா சாணந் தானும்
பாங்கான ஊமத்தைச் சேறாங் கொட்டை

## முடிவு

தேமப்பா நவப்பழந்தான் முரிவ தற்கு
செப்புகிறேன் நெல்லிக்காய் திணை வேணும்
சாமப்பா தேனுக்குக் குளிர்ந்த தண்ணீர்
தான்குடிக்கப் போகுமடா அஞ்சும் முற்றே ! — 5

தெட்சிணாமூர்த்தி முரிவு சாத்திரம்
அஞ்சும் முற்றும்

## காலம்

மதிரைச் சில்லா பழனி தாலுக்சாவைச் சேர்ந்த கஸ்பா பழயாயக் குடியில் யிருக்கும் வெள்ளைய ராவுத்தர் மகன் சவுதலி ராவுத்தருடைய குமாரன் வெள்ளையப்பன் தன் சொந்தத்துக்காக தன் கைப்பட எழுதினது.

தாருண வருடம் அப்பிசை மாதம் 5 ஆம் தேதி

## குறிப்பு

இதில் வரும் சொற்கள் மறைமுகமாக உள்ளன.

இதற்கு இது முறிவு எனக் கூறப்பட்டுள்ளது.

வரிசை எண் : 2002 சுவடி எண் : 1016

# புலிப்பாணி வாடை பதினாறு

பொருள் : மருத்துவம்

நூலாசிரியர் : புலிப்பாணி

ஏடுகளின் எண்ணிக்கை : 3 (81-83)

சுவடியின் நிலைமை : பழுது

பக்கத்திற்கு 7-8 வரிகள்

அளவு : 35 × 3 செண்டி மீட்டர்

எழுத்து : தமிழ்

கி. எண்ணிக்கை : 100

முழுமை

## தொடக்கம்

காரணியே பூரணியே ராச வீரி
களங்கமில்லா ரவியொளியே கயிலை கண்ணே
ஆரணியே அம்பிகையே அரசே துர்க்கை
அம்பரமே சுந்தரியே அரனார் தேவி

## முடிவு

வாரேநீ சாத்திரத்தை நிசமென் றோர்க்கு
வாழ்ந்திருப்பார் சகலசித்தும் சித்தி யாகும்
தீரேநீ போகருட கடாட்சத் தாலே
திரமாக வாடைபதி னாறு முற்றே! — 17

## காலம்

மதுரை சில்லா பழனி தாலுக்காவைச் சேர்ந்த கஷ்ப்பா பஊயாய்க் குடியில் யிருக்கும் வெள்ளைய ராவுத்தர் மகன் சவுதலி ராவுத்தருடைய மகன் வெள்ளையப்பன் தன் சொந்தத்துக்காக தன் கைப்பட எழுதினது,

தாருண வருடம் அற்பிசை மாதம் 6-ஆம் தேதி

## குறிப்பு

இதில், வாடை பற்றிய செய்திகள் கூறப்பட்டுள்ளன

வரிசை எண் : 2003

சுவடி எண் : 1017—a

# அகத்தியர் சித்தராருடம்

பொருள் : மாந்திரீகம்

நூலாசிரியர் : அகத்தியர்

ஏடுகளின் எண்ணிக்கை : 32

சுவடியின் நிலைமை : பழுது

பக்கத்திற்கு : 7-8 வரிகள்

அளவு : 35×3 செண்டி மீட்டர்

எழுத்து : தமிழ்

கி. எண்ணிக்கை : 1000

முழுமை

## தொடக்கம்

காப்பு

அத்திமா முகவன் சோதி
அடியிணைக் கமலம் போற்றி
சித்தாரா ரூடந் தன்னில்
செப்பிய பொருளை யெல்லாம் ............

நூல்

திருமரு தூர்விளங்கும் நாக லிங்கர்
சீர்பாத கமலமென் சிரத்தில் வைத்து

## முடிவு

தரைமிசை யொருநூறு பருவமு ............
............ வேயிருந்து தான் வாழ்ந்து
திருமகள் விளக்கம் பெற்று பதினாறு
செல்வரைப் பெற்றுமுத்தி சேர்வர் தாமே !

அரிமகன் கணபதியும் அவர்க்குப்பின்
ஆனந்தமான சாசுபதி வேலோன்
முகில்வண்ணன் கிருபையினால் எல்லோரும்
முசியாமல் வாழ்ந்திருக்கக் கிருபை செய்வார்
தந்தன தன்னானே

## காலம்

தாருண வருடம் கார்த்திகை மாதம் 29-ஆம் தேதி சனிக்கிழமை யெழுதியது. பளியாய்க் குடியில் யிருக்கும் வெ, சவிதலிராவுத்தர் மகன் வெள்ளையப்ப ராவுத்தர் கைப் பட எழுதியது.

முற்றும்

## குறிப்பு

இது எமது சுவடி எண் 301—b/D 533 போன்றது பாட வேறுபாடுகள் உள்ளன

வரிசை எண் : 2004 சுவடி எண் : 1017-b

# சத்தியாரூடம் - விருத்தம்

பொருள் : மாந்திரிகம்

நூலாசிரியர் : அகத்தியர்

ஏடுகளின் எண்ணிக்கை : 19 (133-15 )

சுவடியின் நிலமை : பழுது

பக்கத்திற்கு : 8-9 வரிகள்

அளவு : 35 × 3 செண்டி மீட்டர்

எழுத்து : தமிழ்

கி. எண்ணிக்கை : 600

முழுமை

தொடக்கம்

வெத்திமா முகத்தோ னங்கும்
மெய்முனி தவத்தைப் போற்றி
சத்தியாரு டத்தின் னுள்ள
தரும்பொருள் தன்னைத் தோன்றும்
வெத்தியாம் விருத்தம் நூறு
மொழிவதற் கொன்று நாவல்
அத்திமா முகத்தோன் மிக்க
அடியிணை அகத்தில் வைப்பாம்

முடிவு

தானான வென்குருவோ யெனக்குச் சொன்னார்
தாரணியில் பலவிசத்தால் சாகா மல்தான்
வாகாகப் பண்டிதற்கு உரைத்தே னின்னூல்
மைந்தனே பத்தியுடன் நினவாய்ச் செய்து
கோனாயல் விடங்களெல்லாம் தீற்று நன்றாய்
குவலயத்தில் இன்பமதாய் யாரும் மெச்ச
தேனான சித்தனென்று பேரும் பெற்று
செயங்கொண்டு யிருப்பதற்கு நிசஞ்சொன் னேனே ! — 103

சித்தராரூடம் (?) முற்றும்

காலம்

தாருணா வருடம் மார்கழி மாதம் 5 ஆம் தேதி பளயாய்க்குடியிலிருக்கும் (வை. ச வள்ளையப்பன் தன் கைப்பட எழுதி முற்றிற்று.

குறிப்பு

இது, சத்தியாரூடம் என்றும், சித்தரா்ரூடமென்றும் பேசப்படுகிறது. இது நமது சுவடி எண் 355 / D. 708 போன்றது. கடைசி ஏட்டின் பின்பக்கத்தில் வைத்தியம் எழுதப்பட்டுள்ளது.

வரிசை எண்: 2005 சுவடி எண்: 1018

# தன்வந்திரி நிகண்டு முன்னூறு

நூலாசிரியர்: தன்வந்திரி

சுவடியின் நிலைமை: பழுது

அளவு: 35 × 3 செண்டி மீட்டர்

கி. எண்ணிக்கை: 1600

பொருள்: மருத்துவம்

ஏடுகளின் எண்ணிக்கை: 47 (152-1[illegible]8)

பக்கத்திற்கு: 7-9 வரிகள்

எழுத்து: தமிழ்

குறை

## தொடக்கம்

ஆயிதிறோ தாயினுட அமந்த கூரு
அன்பான மனோன்மணியின் ஆதி போற்றி
வாயிதிறோ தாயென்ற யனோன்மணித் தாயி
வளந்ததொரு வாலையுட பாதம் போற்றி

## முடிவு

ஐங்கோலச் செயநீர்

நீரென்ற வழலைநீர் சவக்கார நீரு
நிசமான சங்கனியின் நாத நீரு
வாரென்ற ஐங்கோலம் சங்கினிதா னப்பா
வளமான யெட்டா வசியத்தி நீர்தான் பாரு
காரென்ற ஒன்பதுடன் பத்துந் தாண்டா

## காலம்

இல்லை

## குறிப்பு

இது, எமது சுவடி எண் 248-f / D 437, எண் 296-a / D526 போன்றது.

வரிசை எண் : 2006 சுவடி எண் : 1019

# வைத்தியத் திரட்டு

பொருள் : மருத்துவம்

நூலாசிரியர் : பலர் ஏடுகளின் எண்ணிக்கை : 60

சுவடியின் நிலைமை : மிகப் பழுது பக்கத்திற்கு : 6-8 வரிகள்

அளவு : 30 × 3 செண்டி மீட்டர் எழுத்து : தமிழ்

கி எண்ணிக்கை : 1400 குறை

தொடக்கம்

.............. மின்னூல் ........... போல
..."...... ............ வேதை கண்டோச்
வேணபடி ........... ........... கேளே !

முடிவு

துருசு தயிரில் ஊரப் போடவும்
துத்தம் வாளம் ......... ............
பச்சைக் கற்பூரம் பசுவின் கோமயத்தி
லூரப் போடவும் ......... .........
........... ரிக்கவும்.

காலம்

இல்லை

குறிப்பு

இதில், லிங்கக் கட்டு, சாரக்கட்டு, மூலிகை வகை, செம்பு சுத்தி, அகத்தியர் நடன சூத்திரம், பாஷாணக் கட்டு, வீரசுத்தி முதலியன உள்ளன.

வரிசை எண்: 2007 சுவடி எண்: 1020-a

# அகத்தியர் — ஐந்து

பொருள்: மருத்துவம்

நூலாசிரியர்: அகத்தியர்

ஏடுகளின் எண்ணிக்கை: 2

சுவடியின் நிலைமை: நல்ல நிலை

பக்கத்திற்கு: 5-6 வரிகள்

அளவு: 24×3 சென்டி மீட்டர்

எழுத்து: தமிழ்

கி எண்ணிக்கை: 40

முழுமை

தொடக்கம்

தாளகமாம் வித்தை யொன்று
 தாக்கினேன் புவியு ளோர்க்கு
மாளது வரிதா ரந்தான்
 மடலது வாங்கிக் கொண்டு
தாளக விராகன் பத்து
 தீர்ந்தது படியே வாங்கி
கோளகப் பழத்தின் சாறு
 கூறது நூறு தானே!

முடிவு

போக்கெனத் தயில மப்பா
 புதுநிர மாவரையின் பூவசம்
வாக்கெனத் தயிலம் தன்னில்
 விளப்படச் செம்பு ருக்கி
தாக்கென யேழு வாட்டி
 சாய்த்திடில் சோதி யாகும்
னோக்கென யெடுத்துத் தானும்
 நுண்மைமை யறிந்து கொள்ளே! — 5

காலம்

இல்லை

குறிப்பு

இதன் முன்னர், ஒரு ஏட்டில், மாந்திரீகம் எழுதப்பட்டுளது. இதன் பின்னர், தொடர்ந்து, வேத முறை, சாரமெழுகு குடவன் களிம்பரம் முதலியன உள்ளன.

இது, எமது சுவடி எண் 236-h / D 400-ன் வேறாயது.

17-வது தொகுப்பு

வரிசை எண் : 2008

சுவடி எண்: 1020-b

# அகத்தியர் — ஒன்று

பொருள்: மருத்துவம்

நூலாசிரியர் : அகத்தியர்

ஏடுகளின் எண்ணிக்கை: 1 (ஒருபக்கம்) ( 3-வது ஏடு)

சுவடியின் நிலைமை : நல்ல நிலை

பக்கத்திற்கு : 4 வரிகள்

அளவு : 24 × 3 செண்டி மீட்டர்

எழுத்து : தமிழ்

கவி எண்ணிக்கை : 5

முழுமை

தொடக்கம்

ஆதிமுத லானகலி யாணி பாதம்
அனவரத கலியாணி சமைந்த நாதம்
சோதிரச தாரசிலை கார சாரம்
துலங்கவே சீனமொடு சாதி லிங்கம்
நீதியுட னேழ்சரக்கை யதனிற் போடு
நிதிரவியில் வைத்தல்லோ கலசத் தாட்டு

முடிவு

பாதியுல வில்லைசெய்து புடத்தில் போடு
புதுமையாஞ் செந்தூரம் செம்பில் புத்தே! —1
முற்றும்

காலம்

இல்லை

குறிப்பு

இதில், செந்தூர முறை கூறப்பட்டுளது

வரிசை எண் : 2009 சுவடி எண்: 1020-c

# குருமுனிவர் வைத்தியக் கும்மி

பொருள்: மருத்துவம்

நூலாசிரியர் : அகத்தியர்

ஏடுகளின் எண்ணிக்கை : 5

சுவடிகளின் நிலைமை: மிகப் பழுது

பக்கத்திற்கு : 6 வரிகள்

அளவு : 24 × 3 செண்டி மீட்டர்

எழுத்து : தமிழ்

கி எண்ணிக்கை : 100

முழுமை

## தொடக்கம்

வையஞ் செழிக்கக் குருமுனி வர்சொல்
வயித்தியக் கும்மி தமிழ்ப் பாட
கையைந்து வாயொன்று நான்கு புயனிரு
காலன் கணபதி காப்பாமே!

## முடிவு

ஆலத்தி யிச்சி மாவெண்ணி லவுபூ
வரகுவெள் வேலி கத்தாளை
கோலியே சாயப் பொடித்துமது விட்டு
கொள்ளநோய் தீர்ந்திடுங் கொம்பனையே! - 44

பத்திய மன்றிப் பெரியோர்கள் சொன்ன
பாகமறிந் தமுர்துங் கொடுத்தால்
சத்தியம் நோய்தீரும் மொன்பத்தஞ்சு கண்ணி
சாற்றினன் புற்றுஞ்சம் பூரணமே! - 45

ஆக கண்ணி 45 எழுதி முடிந்தது
சம்பூரணம்
முற்றிற்று

## காலம்

இல்லை

## குறிப்பு

இது வைத்திய முறைகளைக் கும்மி சந்தத்தில் கூறுவது.

வரிசை எண் : 2010 சுவடி எண் : 1020-ப

# கும்பமுனி - வைத்திய வண்ணம்

பொருள் : மருத்துவம்

நூலாசிரியர் : அகத்தியர்

ஏடுகளின் எண்ணிக்கை : 6 (9-14)

சுவடியின் நிலைமை : நல்ல நிலை

பக்கத்திற்கு : 6 வரிகள்

அளவு : 24×3 செண்டி மீட்டர்

எழுத்து : தமிழ்

கி. எண்ணிக்கை : 150

முழுமை

## தொடக்கம்

சம்புடனே வேருவிரை உண்பவர் கிராணி யெல்லாம்
தெம்புடனே தீருமென்று கும்பமுனி யாருரைத்தார்
சித்திர பிலத்தின் மூலம் மெத்தஅுவ லாயுணத்தி
சற்றாகிலும் கிசாயம் வைத்தாகிலும் குடிக்கில்

## முடிவு

புங்குதனில் மூலிகையில் மங்குசொறி தேமல்களும்
பொங்குமண்டை வாதசன்னி யிங்கிதமா ஓடிவிடும்
மாங்கொழுந்து நாநசியம் மூக்குதனி லேவிடவே
தாக்குடனே கூடு போக்கிவிடுமே தலைபால்
ஆசறிவார் மூலிகைப் பிரயோகமே !

## காலம்

இல்லை

## குறிப்பு

சிற்றிலக்கியங்களில் ஒன்றான 'வண்ணம்' என்னும் அமைப்பில், பலவகை மருத்துவங்கள் இதில் கூறப்பட்டுள்ளன.

வரிசை எண் : 2011

சுவடி எண் : 1020—c

# போகர் யுவா வயித்தியம்

பொருள் : மருத்துவம்

நூலாசிரியர் : போகர்

ஏடுகளின் எண்ணிக்கை : 3 (15-17)

சுவடியின் நிலைமை : நல்ல நிலை

பக்கத்திற்கு : 6 வரிகள்

அளவு : 24 × 3 செண்டி மீட்டர்

எழுத்து : தமிழ்

கி. எண்ணிக்கை : 60

குறை

## தொடக்கம்

ஆரியமாம் வாகடத்தி னுட்பொருளை யாராய்ந்து
சீரியதோர் செந்தமிழால் செப்புகிறேன்—கூறியதா
யுள்ளநிதா னஞ்சிட்சை யோத விநாயகனே
வள்ளலே யென்மனத்தில் வா

## முடிவு

விளைந்து மிளகரைத்து வெந்நீ ருடனருந்த
பவனிதனி லாரணங்கே மருந்து மலக்கிருமி
சீதம் அசீரணமும் ஓடிப் போகுமெனப் பேசு —17

பேசுரவில் சுரைபெரிய சங்கு கூட்டி
மருகீர பிட்டாவி தனைவாங்கிப் பருகி

## காலம்

இல்லை

## குறிப்பு

இதில். மருந்துகள் செய்முறையும் தீரும் நோயும் அந்தாதிப் பாடல்களில் பாடப் பட்டுள்ளன.

வரிசை எண் : 2012 சுவடி எண் : 1020-f

# வைத்தியத் திரட்டு

பொருள் : மருத்துவம்

நூலாசிரியர் : பலர் ஏடுகளின் எண்ணிக்கை : 66 (18-83)

சுவடியின் நிலைமை : நல்ல நிலை பக்கத்திற்கு : 6 வரிகள்

அளவு : 24 × 3 செண்டி மீட்டர் எழுத்து : தமிழ்

கி எண்ணிக்கை ; 1200 குறை

## தொடக்கம்

### இரச கல்பூரக் குளிகை

| | |
|---|---|
| இரச கல்பூரம் | வராகனெடை — 1 |
| லிங்கம் | வராகனெடை — 1 |
| ஓமம் | வராகனெடை — 4 |
| தென்னங் கருப்பட்டி | வராகனெடை — 10 |

இவையெல்லாம் எலுமிச்சம்பழச் சாறு விட்டு மெழுகு போலரைத்து

## முடிவு

நல்லெண்ணெய் படி ஒன்று விட்டுக் காய்ச்சி
புன்னைக் காயளவு பசு வெண்ணெய் இறக்கி
வைத்தவுடனே அதில் போடவும். தலை முழுகிவர
துர்நீர் சொறி சிரங்கு இடுப்பு வலி
பார்ச வாய்வு பசிமந்தம் தேகவலி தீரும்.

## காலம்

இல்லை

## குறிப்பு

இதில், வாத ராட்சத மாத்திரை, வங்கார சஞ்சீவி, சுகுமாரன் மாத்திரை. அயச் செந்தூரம், பித்தசுர வெட்டைக்கு அமுர்த சஞ்சீவிக் குளிகை, திருநாளில் நஞ்சு சுரம், வீக்கத்துக்கு சண்டமாருதக் குளிகை, சிங்கார சஞ்சீவி மத்திரை, வலிப்பு அஞ்சுக்கும் காய மாத்திரை அரிதார பஸ்பம், சங்கு திராவகம் நாகபஸ்பம், பஞ்சவர்ணக்கட்டு, உப்புக்கட்டு முதிலான பல மருந்துகள் கூறப்பட்டுள்ளன.

வரிசை எண் : 2013 சுவடி எண் : 1021

# அகத்தியர் பூரண சூத்திரம்—216

பொருள்: மருத்துவம்

நூலாசிரியர்: அகத்தியர்

ஏடுகளின் எண்ணிக்கை: 37

சுவடியின் நிலைமை: பழுது

பக்கத்திற்கு: 7-8 வரிகள்

அளவு: 38 × 3½ செண்டி மீட்டர்

எழுத்து: தமிழ்

கி. எண்ணிக்கை: 2300

முழுமை

## தொடக்கம்

ஒன்றான பூரணமு ம...... ............
......ரைத்ததற்கு மேலாரு தொண்ணூரத் தாறு
பன்றான தீட்சைபதி னொனறு ரெட்டிப்
பத்துடனே முத்பத்து ரெண்டுண் டான

## முடிவு

தாமிந்த சூத்திரத்தைக் கெணியா தீந்தால்
தலைதெரித்துப் போகுமடா சத்தியஞ் சொன்னேன்
நாமிந்தப் படிசொன்னோம் யோகிக் கீவாய்
நலமான பூரணசூத் திரந்தான் முற்றே ! — 216

பூரண சூத்திரம் எழுதி முகிந்தது
முற்றும்

## காலம்

இல்லை

## குறிப்பு

இதில், 10-வது ஏட்டில் காந்த பாத்திரம் என்ற தலைப்பு மட்டும் உள்ளது, தொடக்கத்திலும் தலைப்பு இல்லை.

இது, எமது சுவடி எண் 288-f/D.512, எண் 324-f/D 641 போன்றது.

வரிசை எண் : 2014 சுவடி எண் : 1022-a

# அகத்தியர் இந்திர சால நிகண்டு

பொருள் : மருத்துவம்

நூலாசிரியர் : அகத்தியர்

ஏடுகளின் எண்ணிக்கை : 20

சுவடியின் நிலைமை : பழுது பட்ட நிலை

பக்கத்திற்கு : 6-7 வரிகள்

அளவு : 38½ x 3 செண்டி மீட்டர்

எழுத்து : தமிழ்

கி; எண்ணிக்கை : 800

முழுமை

## தொடக்கம்

உன்னிய பொதிகை வாழு
மொருமுனி பொருளே னோக்கி
யின்னில நிகண்டு பாட
யிந்திர சால நூலிற்
பன்னிய பாசை தோணப்
பண்டித வேத னாவுங்
கன்னியா முமையா ளீசன்
கந்தனுங் காப்புத் தானே! - 1

## முடிவு

பாரினி லிந்த முறைப்படி பார்த்து
தேருநீ பாவம் செய்யவும் வேண்டாம்
மாறுநீ பாறு மறுபதி னாலும்
நேரிரு நிகண்டு நிகண்டிது முற்றே! -199

சால நிகண்டு முற்றும்
காப்புப் பாட்டைச் சேர்த்துக் கூறியது - 200

## காலம்

ஏவிளம்பி வருடம் அற்பிசை மாதம் 19-ந் தேதி வெள்ளிக்கிழமை தினம் சாய லட்சி 25 நாழிகைக்கி எழுதி முகிந்தது

குருபாதாரவிந்தமே துணை செய்யவும்
பதினெண்பேர் பாதாரமே துணை
அல்லா உதவி செய்யவும்
ஆதியே துணை செய்யவும்
அகத்தியர் பாதாரமே கெதி
நந்திசுரர் பாதாரம் துணை

## குறிப்பு

இதில், ஊராருக்குப் பொட்டு, கவுதும்பை, முதலிய தலைப்புகள் உள்ளன. 17-ஆம் ஏட்டின் பின்புறம் எழுதப்படவில்லை.

இதில் தாதுபுஷ்ட்டி மருந்து, வசியமுறைகள், மைவகைகள், அழிஞ்சில் தைலம், வாடைத்தூள், பஞ்சாட்சரமாறல், உச்சாடினம் முகவசீகரம், தும்பை கற்பம், கவுதும்பை கல்பம் சோரை வடிய, அரவு நெய், மாரணம், மாரணமந்திரம், தேங்காய் மாரணம், நண்டுவளை மண், வண்ணார் மண், தில்லம்பால், கள்ளிப்பால் கற்பம் முதலியன உள்ளன.

இது எமது சுவடி எண் 248-c/D 434 போன்றது

இதன் பின்னர் ஒரு ஏட்டில் வெள்ளி செய்முறை விஷந் தீண்டினால் இறங்குவதற்கு சக்கரம். ஆகியன உள்ளன.

வரிசை எண் : 2015 சுவடி எண் : 1022-b

# விநோதம்

பொருள் : மத்திரம்

நூலாசிரியர் : அறியக் கூடவில்லை

ஏடுகளிகன் எண்ணிக்கை: 1

சுவடியின் நிலைமை : பழுது

பக்கத்திற்கு : 6-8 வரிகள்

அளவு : $38\frac{1}{2} \times 3$ செண்டி மீட்டர்

எழுத்து : தமிழ்

கி. எண்ணிக்கை : 50

முழுமை

## தொடக்கம்

### நெருப்பிலே மிதிக்க :

தெய்வதாளி யிலையும் தோவையிலையும், அரைத்துக் காலில் பூசி நெருப்பிலே மிதிக்கச் சுடாது.

## முடிவு

ஆந்தையைப் பிடித்து உலத்தி அதன் வலது கண்ணைப் பிடுங்கி பொடி செய்து தூப திபங் கொடுத்து தன் மேலே பூசிக் கொள்ளக் கண்டவ ரெல்லாம் பின் தொடருவார்.

அல்லா உதவி செய்யவும்
அமானல்லா கிருபை செய்யவும்.

## காலம்

இல்லை

## குறிப்பு

இதில், சில விநோத முறைகள் எளிதாகச் சொல்லப்பட்டுள்ளன.

வரிசை எண் : 2016 சுவடி எண் : 1023

# அகத்தியர் பூரண சூத்திரம்

பொருள் : மருத்துவம்

நூலாசிரியர் : அகத்தியர் ஏடுகளின் எண்ணிக்கை : 9

சுவடியின் நிலைமை : மிகப்பழுது பக்கத்திற்கு : 6–7 வரிகள்

அளவு : 38½ × 3 சென்டி மீட்டர் எழுத்து : தமிழ்

கி. எண்ணிக்கை : 500 குறை

## தொடக்கம்

அல்லா உதவி செய்யவும்
ஆதியே துணை

கார்செரி மெய்யன் கடவுளர் காணாப் பரத்
மோர்பொரு ளுண்மை தன்னைப் பூரண நூலா வேத்த
தார்செறி கொன்றை சூடித் தாய்சர சோதி கந்த
னார்மத வானைப் பிள்ளையார் பாதங் காப்ய தாமே

வகுதாது முகய்யுதீன் ஆண்டவர் துணை
அகத்தீசுபர சுவாமியார் பூரண சூத்திரம் — 216

சிவயநம
குரு பாதாரமே கெதி

நூல்

அல்லா உதவி செய்யவும்
ஒன்றான பூரணமு மாறா தார
முறைத்தற்கு மேலாறு தொண்ணூறத்தாறு
பன்றான தீட்சை பதி னொன்று ரெட்டி
பத்துடனே முப்பத்தி ரண்டு அண்டான்

## முடிவு

நேசிப்பாய் யென்னுடைய தியானத் தன்னை
நினைத்துடனே சித்திவந்து நிலைக்கும் பாரு
வாசிப்பாய் ஓம் கிம் வம் உம் மும்
மகத்தான அகத்தீசா வென்று கூறே. — 44

## காலம்

இல்லை

## குறிப்பு

இதன் பின், மேகாதி லேகியம் எழுதிய ஏடு ஒன்று உள்ளது இது. எமது சுவடி எண் 288 f / D 512 போன்றது எண் 324-f / D 641-ம் இது போன்றதே. பிழைகள் மலிந்துள்ளன.

வரிசை எண் : 2017

சுவடி எண் : 1024

# அகத்தியர் சூத்திரம் - முன்னூறு

பொருள் : மருத்துவம்

நூலாசிரியர் : அகத்தியர்

ஏடுகளின் எண்ணிக்கை : 50

சுவடியின் நிலைமை : நல்ல நிலை

பக்கத்திற்கு : 7-8 வரிகள்

அளவு : 38½ × 3 செண்டி மீட்டர்

எழுத்து : தமிழ்

கி. எண்ணிக்கை : 1600

முழுமை

## தொடக்கம்

காப்பு

காலுந் தலையுங் கடந்துநடு வாகிநின்ற
மேலுந் துரிய விளக்கமே — காலாம்
வைத்தியமுன் னூறு சூஸ்த்திரம தாய்விளங்க
பத்தியரு ளும்கிணேசன் பார்.

நூல்

பூதலத்தில் தென்பொதிகை தன்னில் வாழும்
பூரணமே யென்குருவே சிவமே அய்யா
மாதவத்தால் விட்டசித்து எட்டும் பெற்ற
வரிசையினால் வயித்தியநூல் வகையாய்ச் சொல்வேன்

## முடிவு

சீலத்தில் நந்தியுட பூசை பண்ணு
செகண்டி ஞானஒலி மணியி னோசை
காலத்தின் கருவறிந்து பூசை தீர்ந்தால்
கைக்குள்ளாம் வயித்திய முன்னூறு முற்றே! — 302
அகஸ்தியர் வயித்நிய முன்னூறு முற்றும்
ஆதியே துணை.

## காலம்

இல்லை

## குறிப்பு

இது. எமது சுவடி எண் 202-a / D 322 போன்றது.
பாடவேறுபாடுகள் உள்ளன.

17-வது தொகுப்பு

வரிசை எண் : 2018

சுவடி எண் : 1025

# அகத்தியர் வைத்திய சூத்திரம்-205

பொருள் : மருத்துவம்

நூலாசிரியர் : அகத்தியர்

ஏடுகளின் எண்ணிக்கை : 37

சுவடியின் நிலைமை : பழுது

பக்கத்திற்கு : 7-8 வரிகள்

அளவு : 38½ - 3 செண்டி மீட்டர்

எழுத்து : தமிழ்

கி. எண்ணிக்கை : 1500

முழுமை

## தொடக்கம்

பூரணமா முள்மூலப் பொறியிற் சூடாம்
புகையெழும்பி மேகமதாஞ் சிரசில் சூடாம்
காரணமாம் நீர்கலந்த கண்ணில் ரோகம்
கனலெழுந்த வாயுவினாற் சூலை ரோகம்

## முடிவு

நோய்மிகுந்த சாவில்லை யொருநா ளுந்தான்
நுண்மையாய்ச் சரக்கையெல்லாம் நீத்திக் கொண்டு
வாயமுடன் னெண்ணையொடு கிரதஞ் செய்து
வைத்திடுவாய் அனுப்பானம் வயித்திய முற்றே! - 98

ஆகப் பிரிவு2 -க்குப் பாட்டு 205
அகத்தீசுர சுவாமி வைத்திய சாஸ்திரம்
முற்றும்
ஆதியே துணை

## காலம்

இல்லை

## குறிப்பு

இது எமது சுவடி எண் 311-e/D 566, எண் 323-a/D 622 போன்றது.

வரிசை எண் : 2019 சுவடி எண் : 1026

# பெண்கள் கற்ப லட்சணம்

பொருள் : மருத்துவம்

நூலாசிரியர் : அகத்தியர்

ஏடுகளின் எண்ணிக்கை: 4

சுவடியின் நிலைமை : நல்ல நிலை

பக்கத்திற்கு : 6-7 வரிகள்

அளவு : 38½ × 3 செண்டி மீட்டர்

எழுத்து : தமிழ்

கி. எண்ணிக்கை : 200

முழுமை

## தொடக்கம்

பாரப்பா பெண்மலடாங் கெற்பங் கேளு
பக்குவத்தைச் செல்லுகிறேன் பண்பாய்த் தானே
யாரப்பா ஆண்மலடே யாகு மல்லால்
அப்பனே பெண்மலட தாரு மில்லை
நேரப்பா தவசிருந்தும் பொருளை யீய்ந்து
நோராவ தில்லையருங் குலையி னாலே
வேரப்பா தேவதையால் விழலாங் கெற்பம்
விரித்து நன்றாய்ப் புகலுகிறேன் விளம்பக் கேளே ! —1

## முடிவு

அதுவாகு மிதுவாகு மென்று எண்ணி
அலைந்தலைந்து திரியாமல்ப் பொருளை நோக்கிப்
பொதுவாக நினைந்துகொண்டு யிருய்பா னாகில்
புத்திசித்தி முத்திமுதற் புனித மாமே ! —16

அகத்திய மூர்த்தி கெற்ப லட்சணம்
பாடியது முற்றும்
குரு முகம்மது நபி துணை செய்யவும்

## காலம்

இல்லை

## குறிப்பு

இதில், ஆண்கள் தான் மலடு என்றும், பெண்களில் மலடு இல்லை என்றும் பேசப்பட்டுள்ளது.

வரிசை எண் : 2020 சுவடி எண் : 1027

# கண் ரோகம் வரும் வரலாறு

பொருள் : மருத்துவம்

நூலாசிரியர் : அறியக்கூட வில்லை

ஏடுகளின் எண்ணிக்கை : 6

சுவடியின் நிலைமை : நல்ல நிலை

பக்கத்திற்கு : 6-7 வரிகள்

அளவு : 38½ × 3 செண்டி மீட்டர்

எழுத்து : தமிழ்

கி எண்ணிக்கை : 300

முழுமை

தொடக்கம்

இந்திர வாகடம்

மாதுமை பாகம் வைத்த
 மாமறை முதலா யாய்ந்து
தீதிலா மயமாய்ச் சென்று
 திருவிளந் துதித்த போது
ஆதிமா முனிவன் சொன்ன
 ஆயுரு வேதந் தன்னை
நாதனா ரருளி னாலே
 நயனநூல் வகையைச் சொல்வேன் — 1

முடிவு

கூன னெலும்புங் குரகத்தின் பல்லு
மானத்தின் மீனு மலையரசன் தன்னுகிரும்
ஏனத்தின் கொம்பு இராவறிவான் நெஞ்செலும்புங்
கானக் குறத்தி முலைப்பால்வார்த் தரைத்திடுமே
 யானிப்பூ வற்றே யறும் — 52

காலம்

இல்லை

குறிப்பு

இது, ஆயுர்வேத முறையைச் சாரும். இதில் நடப்பு, வரவு, நேத்திர ரோகம், கண் படலம் அற மருந்து, கண்ணில் பேட, கண்ணுக்குப் பத்து, சீலை கண்ணுக்கு ஆகியன உள்ளன.

வரிசை எண் : 2021 சுவடி எண் : 1028

# வைத்தியத் திரட்டு

பொருள் : மருத்துவம்

நூலாசிரியர் : பலர் ஏடுகளின் எண்ணிக்கை : 18

சுவடியின் நிலைமை : சிறிது பழுது பக்கத்திற்கு : 6–8 வரிகள்

அளவு : 38½ × 3 செண்டி மீட்டர் எழுத்து : தமிழ்

கி. எண்ணிக்கை : 700 குறை

தொடக்கம்

**பூரணாதி லேகியம்**

வணங்கியே குருமுறைமைக் கற்பங் கூட்டி
வகைசொல்வேன் வருஷமொரு மூன்று நின்ற
குணம்பெரிய கோரக்க மூலிதன்னைக்
குறிப்பறிந்து நவபிடந்தான் நிறங்குன் றாமல்

முடிவு

வகை யொன்றுக்கு துட்டு யிடை — 2
இதுவெல்லாம் இடித்து, பதினஞ்சு
உருண்டை பண்ணி உறு உருண்டை
தல(லை) சுத்தி யெறிஞ்சுப் போட்டு
பதினாலு உருண்டை ஏழுநாள்
அந்தி சந்தி சாப்பிடவும்

காலம்

இல்லை

குறிப்பு

இதில், பூர்ணாதி லேகியம், சாதிலிங்கக் குழம்பு, மூன்றாங்காண்டம், மகாபில்வாதி லேகியம், பேய்ப்புடல் லேகியம், அரையாப்பு கிரந்தி புண்ணுக்கு, பிரமேக வெள்ளைக்கு கபாலத்தில், காதுபுண்ணு சீயிக்கு முதலியன உள்ளன. வெவ்வேறு கையெழுத்துக்கள்.

வரிசை எண் : 2022

சுவடி எண் : 1029

# வைத்தியத் திரட்டு

பொருள் : மருத்துவம்

நூலாசிரியர் : பலர்

ஏடுகளின் எண்ணிக்கை : 140

சுவடியின் நிலைமை : மிகப் பழுது
சில ஏடுகள் ஒடிந்துள்ளன

பக்கத்திற்கு : 6-8 வரிகள்

அளவு : 23 × 3 செண்டி மீட்டர்

எழுத்து : தமிழ்

கி. எண்ணிக்கை: 600

குறை

**தொடக்கம்**

**கழல் வாதம், ஆனந்த வாய்வு**

கழல் வாதத்துக்கு முடக் கொத்தான் புதுச்சட்டியில்
தீச்சு மோர்விட்டுக் காச்சி வடிகொண்டு
அரைப்படி மூன்றுநாள் குடிக்கத் தீரும்
கை கண்டது.

**முடிவு**

அரையாப்புக்கு வேர் பிடுங்கி
அரையாகு நரம்பில் கட்டவும்
அரையாப்புக் கட்டி கரைந்து போம்

**நரம்பில் கட்ட மருந்து**

வெள்ளிக் கிழமைக்கு தைவேளை வேர்...
குப்பை மேனிவேர் உள்ளி வசம்பு யிட்டு
நருக்கி வலது புறத்துக்கு யிடதுபுறமும்
(இதற்குமேல் இல்லை)

**காலம்**

இல்லை

**குறிப்பு**

இதில், முதல் நான்கு ஏடுகள் முறிந்துள்ளன.

இதில் விஷத்துக்கு, ஆறாத புண்ணுக்கு, இடுப்பு நோக்காட்டுக்கு, அரனை பல்வலிக்கு, மூலம், கால் பித்த வெடிப்புக்கு, வெள்ளோக்காளத்துக்கு, இருமலுக்கு வங்க செந்தூரம், அரிதார செந்தூரம், தேமலுக்கு, மூலங்கரைய மருந்து முதலியன உள்ளன.

வரிசை எண் : 2023 சுவடி எண் : 1030

# பூகிமுனி ஆயிரம்

பொருள் : மருத்துவம்

நூலாசிரியர் : பூகி முனி

ஏடுகளின் எண்ணிக்கை : 80

சுவடியின் நிலைமை : பழுது பட்ட நிலை

பக்கத்திற்கு : 3-5 வரிகள்

அளவு : 27 × $2\frac{1}{2}$ சென்டி மீட்டர்

எழுத்து : தமிழ்

கி. எண்ணிக்கை : 1000

குறை

## தொடக்கம்

கேசரி நீர் எட்டு நாள் வைத்து நனைக்கவும்
கேசரி நீரில் வெடியுப்பு, சீனம் ......... சமனிடை
பொடி செய்து நீரில் போட்டுக் கலக்கி தாம்பு(ர)த்
தகட்டை 21 தடவை காச்சி நனைத்து யெடுக்கவும்
வெட்டையாகும்.

## முடிவு

மேலே சொன்னபடி வெட்டை செய்து கொண்டு
செம்பு நாலுக்கு கழங்கு ஒன்று குடுத்து வெட்டை
வெள்ளியால் கொடுக்க எட்டரை மாத்தாகும்

இது " பஞ்சபூத களங்கம் " என்று பெயர்
உப்புக்கும் காவிக்கும் நிலைக்கும். இந்தக்
களங்கச் செந்தூரம் செய்ய மேற்படி
பூச்சாற்றில் அரைத்து ஐந்து புடமிட ...............

## காலம்

இல்லை

## குறிப்பு

இதில் வால்மிளகுத் தயிலம், 38, துருசு செந்தூரம், தாம்பிர சுத்திசெய்ய முறை, காரியம், அயச் செம்பு காரியச் செந்தூரம், பூகமுனி பன்னிராயிரம், வெகு வயிற்று வலிக்கு, கல்லுப்பு, முக்கிய பாகமே ஞானப் பெண்ணே, கல்லுப்புக் கட்டு முதலியன உள்ளன,

எல்லாம் உரை நடையர்களே உள்ளன.
செய்யுட்கள் இல்லை.

வரிசை எண் : 2024

சுவடி எண் : 1031

# வாகடத் திருமந்திரம் வைத்தியத் திரட்டு

பொருள் : மருத்துவம்

நூலாசிரியர் : பலர்

ஏடுகளின் எண்ணிக்கை : 70

சுவடியின் நிலைமை : மிகப் பழுது

பக்கத்திற்கு : 3-8 வரிகள்

அளவு : $17\frac{1}{2} \times 3$ செண்டி மீட்டர்

எழுத்து : தமிழ்

கி எண்ணிக்கை : 700

குறை

தொடக்கம்

| | |
|---|---|
| (தானிச)பத்திரி விராகனெடை | 5 |
| முதகவற (?) ,, | 5 |
| திப்பிலி ,, | 5 |
| செனியம் ,, | 5 |
| லவங்கப்பட்டை ............... | |
| லவங்கப்பத்திரி ,, | 1 |
| சுக்கு ,, | 1 |

முடிவு

கறிப்பா செட்டிமகன் வாலொசி .........
.................. பனி செட்டிக்கி புனையாக
தன்னுட அவசர நிமித்தமாக வெங் ...
பொன்னுக்கு ஆடி மாதம் 30க்குள்ளாக
...................................................

காலம்

இல்லை

குறிப்பு

இதில், வாயுவுக்கு சூரணம், தலைவலிக்கு மருந்து, பூருவ வியாதிக்கு விரோசனக் குளிகை, பழுவரைக்கு, கோடா குளிக்குளிகை, மதனகாமியம், இடுப்பைப் பிடிக்கிற சயிற்றிய வாயுவுக்கு விரோசனம், அசிற்சி சுரத்துக்குக் கஷாயம், தோஷத்துக்கு கண்டவுஷதம்; சுரத்தின் மேல் கண்ணோவுக்கு, காச்சல் மேல் விக்கலுக்கு மருந்து, முதலியன உள்ளன, முதல் ஏட்டின் மேலும், கடைசி ஏட்டின் பின்புறமும் எழுதப் பட்டுள்ளன.

வரிசை எண் : 2025

சுவடி எண் : 1032

# அகத்தியர் கர்ம காண்டம்

பொருள் : மருத்துவம்

நூலாசிரியர் : அகத்தியர்

ஏடுகளின் எண்ணிக்கை : 28

சுவடியின் நிலைமை : பழுது

பக்கத்திற்கு : 7—9 வரிகள்

அளவு : 28 × 3 செண்டி மீட்டர்

எழுத்து : தமிழ்

கி எண்ணிக்கை : 1200

குறை :

## தொடக்கம்

பூரணமாய் மும்மூலப் பொறியிற் சூடாம்
புகையெழுப்பி மேகமதாய் சிரசில் சூடாம்
காரணமாய் நீறேற்கும் பீனிசம்போல் கொள்ளும்
கனலெழுந்தே வாயுவதாய்க் கபால மெல்லாம்

## முடிவு

போடவே கற்கவகை மருந்து சொல்வேன்
புகழான சிவதையோடு கடுக்காய் தான்றி
நாடவே கடுகுரோ கணியுஞ் சுக்கு
நலமாக வகையொன்று பலந்தா னாலு
கூடவே பெருங்காயம் பலந்தா னொன்று
கொற்றான்வெள் ளுள்ளி பலந்தான் ரெண்டு
சாட.........................................

(இதற்குமேல் இல்லை)

## காலம்

இல்லை

## குறிப்பு

இதில், குன்மம் வந்த விரலற்று முதலியனவும், கருசாலை லேகியம், திருவேரகச் செந்தூரம், வாலைரசம் விபரம், அமுர்தாதிச் சூரணம், அருளாதிச் சூரணம், நீரளிவுக்கு, மூலத்தின் கற்பம், சுந்தாதி லேகியம், பவளவங்கம் விபரம், மேகசூலைக் கற்பம் முதலியன உள்ளன.

இது, எமது சுவடி எண் 323-b / D. 623 போன்றது.

வரிசை எண் : 2026 சுவடி எண் : 1033

# அகத்தியர் பூசாவிதி - பூரண சூத்திரம்

பொருள் : மருத்துவம்

நூலாசிரியர் : அகத்தியர் ஏடுகளின் எண்ணிக்கை : 29

சுவடியின் நிலைமை : நல்ல நிலை பக்கத்திற்கு : 9-14 வரிகள்

அளவு : 28 × 3 சென்டி மீட்டர் எழுத்து : தமிழ்

கி. எண்ணிக்கை : 1600 முழுமை

## தொடக்கம்

ஆதார மாறமே லகண்ட குருபாதம்
வேதாக மத்தின் விதிமார்க்கம் — நர்தமுடன்
விந்துவேட மூலம் விளங்கும்பூ சாவிதிக்கோர்
தந்திமுகன் றானே சரண் !

## முடிவு

சுண்ணாம்பு மஞ்சளும்போல் குறிகள் நாட்டிச்
சுழினையிலே நாட்டமுறத் தொட்டுக் காட்டிக்
கண்ணாடிக் குள்குருவன் புதத்தைக் காட்டிக்
கருணைபெறப் போற்றி செய்வாய் பூசை முற்றே ! — 201

சிவமயம்
ஆறுமுகந்துணை
அகத்தீசுரமூர்த்தி பூசாவிதி பூரண சூத்திரம்
முற்றும்
தெண்டாயுதபாணி துணை
பரமேசுர குருபாதமே கெதி
வாலாபரமேசுபரி துணை
குருபாதமே துணை

## சேர்க்கை

இல்லை

## குறிப்பு

இது எமது சுவ்டி எண் 352-b / D 693 போன்றது. எனினும் பாடவேறுபாடுகள் மிகுந்து காணப்படுகின்றன. நல்ல பாடங்களும் உள்ளன.

இதில், சிதம்பர சக்கரம், காரணம், பூசைபண்ணும் மார்க்கம், ஓமகுண்டம் முத்திரை வகை அஷ்ட கர்ம பூசை முதலியன உள்ளன.

வரிசை எண் : 2027 சுவடி எண் : 1034

# அகத்தியர் வைத்தியம்—200

பொருள் : மருத்துவம்

நூலாசிரியர் : அகத்தியர் ஏடுகளின் எண்ணிக்கை : 50

சுவடியின் நிலைமை: நல்லநிலை பக்கத்திற்கு : 7-8 வரிகள்

அளவு : 28×3 செண்டி மீட்டர் எழுத்து : தமிழ்

கி. எண்ணிக்கை : 1500 முழுமை

## தொடக்கம்

பூரணமாம் மும்முலப் பொறியிற் சூடாம்
புகையெழும்பி பேகமதாஞ் சிரசில் சூடாம்
காரணமாய் நீர்கலந்து கண்ணில்ச் சூடாம்
கனலெழுந்த வாயுவினால் சூல ரோகம்

## முடிவு

கெஞ்சுவா னுலகத்தான் யிந்த நூலைக்
கேட்டாலுங் குடுக்காதே கோவி யென்றீ
மிஞ்சவே பஞ்சறித்து தெண்டஞ் செய்து
வேணதனமாய் யீய்ந்தாக்கா லிதனை யீயே! — 202

குருவேதுணை

## காலம்

இல்லை

## குறிப்பு

இது எமது சுவடி எண் 323-a/D.622 அகத்தியர் 205 போன்றது. அதில் உள்ள கடைசி 3 பாடல்கள் இதில் இல்லை. மற்றும் சுவடி எண் 311-c/D. 566, எண் 317 k/D 589, எண் 294-h போன்றது.

வரிசை எண்: 2028 சுவடி எண்: 1035

# அகத்தியர் கெற்பக்கோள் அறியும்படி

நூலாசிரியர்: அகத்தியர்
சுவடியின் நிலைமை: நல்லநிலை
அளவு: 28×3 செண்டி மீட்டர்
கி. எண்ணிக்கை: 200

பொருள்: மருத்துவம்
ஏடுகளின் எண்ணிக்கை: 4
பக்கத்திற்கு: 9 வரிகள்
எழுத்து: தமிழ்
முழுமை

## தொடக்கம்

பாரப்பா பெண்மலடோ கெற்பக் கோளின்
பக்குவத்தைச் சொல்லுகிறேன் பணிவாய்த் தானே
ஆரப்பா ஆண்மலடே ஆகு மல்லால்
அப்பனே பெண்மலடு ஆரு மில்லை

## முடிவு

பண்ணிய பதினான் கைந்தும்
பன்னிரண் டாருங் கூடி
உன்னிய நாய ரத்த
முத்தனான் பசுவின் பாலால்க்
கன்னிய ரரைத்துப் பாலு
முறியுடன் கலந்திட் டுண்ண
மன்னிய மலடு போகி
மக்களைப் பெறுவா ரன்றே! —17
சிவமயம்

## காலம்

இல்லை

## குறிப்பு

இது, எமது சுவடி எண் 1026 போன்றது. இதில், உரைநடைப் பகுதி கொஞ்சம் உளது. ஒரு பாடல் மிகுதியாகவும் உளது,

இதில், ஆண்மலடே, பெண்மலடு அல்லவென்றும், மலடு நீக்க மருந்துகளும் கூறப்பட்டுள்ளன.

வரிசை எண் : 2029 சுவடி எண் : 1036

# வைத்தியத் திரட்டு

பொருள் : மருத்துவம்

நூலாசிரியர் : பலர்

ஏடுகளின் எண்ணிக்கை : 4

சுவடியின் நிலைமை : நல்ல நிலை

பக்கத்திற்கு : 7-8 வரிகள்

அளவு : 28 × 3 செண்டி மீட்டர்

எழுத்து : தமிழ்

கி. எண்ணிக்கை : 150

குறை

## தொடக்கம்

அமுர்தாதித் தயிலம் - விபரம்

| | | |
|---|---|---|
| கொத்தமல்லி | பலம் | 1½ |
| சந்தனக் கட்டை | பலம் | 10 |
| கோஷ்டம் | பலம் | 1½ |
| அதிமதுரம் | பலம் | 1½ |
| ஏலம் | பலம் | 1½ |
| சிறுனாகப்பூ | பலம் | 1½ |
| சுக்கு | பலம் | 1½ |

## முடிவு

எரியிட்டு மெழுகு பதத்தில் இறக்கிக் கொண்டு
நாலு நாளைக்கு ஒரு முழுக்கும் நித்தியம் ரெண்டு
நேரமும் நசையம் பண்ண சிரசிலுள்ள மண்டையிடி
பீனிசங்கள் சிராய் விழுகிற பீனிசம் நீர்ப்பாச்சல்
இது முதலான வியாதியெல்லாம் தீரும்

ராமசெயம்
இது கை கண்டது.

## காலம்

இல்லை

## குறிப்பு

இதில், வனமூலிகை விபரம், அஸ்த்தி சுரத்துக்கு ஸில்லை, குழம்பு. அஸ்த்தி சுரத்துக்குக் கஷாயம், சருவ பீனிசத்துக்கு மருந்து, முழுகிறதுக்கும், நசியம் பண்ணுகிறதுக்கும், கை கண்டது முதலியன உள்ளன.

வரிசை எண் : 2030 சுவடி எண் : 1037

# தெட்சிணாமூர்த்தி ரெத்தினச் சுருக்கம் - 360

பொருள் : மருத்துவம்

நூலாசிரியர்: தெட்சிணாமூர்த்தி

ஏடுகளின் எண்ணிக்கை: 54

சுவடியின் நிலைமை நல்லநிலை

பக்கத்திற்கு: 8-9 வரிகள்

அளவு: $29 \times 3\frac{1}{2}$ செண்டி மீட்டர்

எழுத்து : தமிழ்

கி, எண்ணிக்கை: 2000

முழுமை

## தொடக்கம்

பூரணமாய் நிறைந்தகுரு பரைதாள் போற்றிப்
புகலுகிறேன் வயித்தியரத்தினச் சுருக்கந்தன்னை
வாரணமா முகத்தோனைப் பணிந்து வாழ்த்தி
வயித்தியமு மிந்தமுன் னூத்தறு பத்துக்குள்

## முடிவு

தகிழவே சிவந்தனையே பூசை பண்ணு
தவறாதே வியாதியெல்லாந் தவறுண் டேபோம்
மகிழவே வயித்தியமும் செய்தா னாகில்
வையகத்தி லொப்பாரும் ஈசன்முற்றே! —365
முன்மூணு பாட்டு குறையா யிருக்குது.
தெட்சணாமூர்த்தி சீர்பாத முன்னிற்கவும்.

## காலம்

பிங்கள வருடம் ஆனிமாதம் 26-ஆம் தேதி வியாழக்கிழமைனாள் இராமேசுவரத்தி லிருக்கும் அங்கப் பண்டிதர் மகன் சேதுகருப்பன் பண்டிதர்க்கு வசம்புதுக் குளத்திலிருக் கும் உத்தண்டியாபிள்ளை பொன்னு சாமியாபிள்ளை கையச்சரமா யெழுதி நிறைந்தது.

முற்றும்
குருவே துணை

## குறிப்பு

இதில், பிழைகள் அதிகம். சில நல்ல பாடங்களும் இருக்கின்றன. செய்யுள் எண் களின் குறிப்பு சுவடியிலேயே தரப்பட்டுளது.

இதில், சதாநந்த வயிரவன், வாதராச்சதன், சுயமக்கினி, சுயமாக்கினி கபாட மாத்திரை பூபதி மாத்திரை ரசசிந்தாமணி, கோரோசனை மாத்திரை, பூமணி உண்டை, அர்த்த நாரீசுவரன் மாத்திரை முதலியன உள்ளன.

இது எமது சுவடி எண் 296 f/ D 526, அகத்தியர் ரத்தினச்சுருக்கம் போன்றது

வரிசை எண் : 2031 சுவடி எண் : 1038

# குதிரை வாகடம்

பொருள் : மருத்துவம்

நூலாசிரியர் : அறியக்கூடவில்லை

ஏடுகளின் எண்ணிக்கை : 6

சுவடியின் நிலைமை : நல்ல நிலை

பக்கத்திற்கு : 7-10 வரிகள்

அளவு : $29 \times 3\frac{1}{2}$ செண்டி மீட்டர்

எழுத்து : தமிழ்

கி. எண்ணிக்கை : 250

குறை

## தொடக்கம்

சீர்மேவும் வாசியுட செய்யதிரு வாகடத்தை
பார்மீதி லன்பாய்ப் பக வே — சூர்மேவும்
தந்தையைவ லத்தில்வந்த தந்திமுக னைந்துகரத்
தந்தையைவ ணங்கியேநீ தாழ்.

நூல்

அசுவ சுழி யறியும்படி

கேசரி யிரண்டு பக்கமும் சுளியுண்டாகில்
வாமகெதி யாவது இடக்கால் முள்வைத் தோடல்
காவத்த யாவது முன்னங்கையடி வளாயந் தோன்றுஞ்
சுளிமஞ்சா வர்த்தமாவது செயத்தி னடியில் தோன்றுஞ் சுளி

## முடிவு

கதத்துக்கு செய்யும் குணம்

கத்தப்ப லத்தி போட்டு உதிராது வயறூதும்
அடிக்கடி கரணம், புல், நீர், குடியாது

மருந்து

சுக்கு, மிளகு, வசம்பு, ஓமம், திப்பிலி, இந்துப்பு, பெருங்காயம், கோளிக்காரம் வெண்காரம் இவைகூட்டி சாராயத்தில் கலந்து கவழ மேய்க்கவும்.

## காலம்

இல்லை

## குறிப்பு

இதில் குதிரைகளின் லட்சணம், நோய்கள், மாந்த சுரத்தின் குணம், சோமசுரத் துக்கு, கிருமி, சூலை, இவைகட்கு மருந்து முதலியன உள்ளன.

வரிசை எண் : 2032

சுவடி எண்: 1039

# இரண வாகடம்

பொருள்: மருத்துவம்

நூலாசிரியர் : இரணவீர் சிங்க முனிவர்?

ஏடுகளின் எண்ணிக்கை : 18

சுவடியின் நிலைமை: நல்ல நிலை

பக்கத்திற்கு : 10–12 வரிகள்

அளவு : 9½ × 4 செண்டி மீட்டர்

எழுத்து : தமிழ்

கி. எண்ணிக்கை : 600

முழுமை

## தொடக்கம்

சாம்ராணி துருசு துத்தம்
சாத்துங் கருங்குங் கிலியம்
வேம்பின் வித்து களஞ்சியொன்று
விளங்கும் பச்சை வெட்டுடனே
ஆம்பல் பலமுந் தானொன்று
அறிவால் கல்வந் தானிட்டே
தேம்ப வரைத்து யனல்காட்டி
திரமாய் தண்ணீர் தனில் கழுவே?

## முடிவு

வடித்த தயிலமதை வாகாய்க் கரண்டிகொள்ள
யெடுத்த வினையுங்கே யிருக்குமோ—தொடுத்தபடி(?)
மேக மொடுசூலை வெங்கிரந்தி குட்டமொடு
யேகுமது மெய்யாயின் றே! — 101

## காலம்

இல்லை

## குறிப்பு

இதில், எழுத்துக்கள் அழகாக உள்ளன. கொடிய இரணங்களுக்கும் நல்ல மருந்துகள் கூறப்பட்டுள்ளன.

வரிசை எண் : 2033 சுவடி எண் : 1040

# இரணவாகடம் — 500

பொருள் : மருத்துவம்

நூலாசிரியர் : இரணவீர சிங்க முனிவர்

ஏடுகளின் எண்ணிக்கை : 42 (19–57) + 3

சுவடியின் நிலைமை : நல்ல நிலை

பக்கத்திற்கு : 10-12 வரிகள்

அளவு : $29\frac{1}{2} \times 4$ செண்டி மீட்டர்

எழுத்து : தமிழ்

கி. எண்ணிக்கை : 1200

குறை

தொடக்கம்

**காப்பு**

ஆதியெனும் பரமசிவ னுமையவளுக்
கெஞ்ஞான்றும் அறிய வேண்டி
ஓதியதோர் வையத்தி லுற்ற
ரெணவாகட மாயுரைத்த பாட்டை
நீதிமிகும் மலைமுனிவன் நெறியோதும்
இத்தமிழை நிகழ்த்த ஞான
சோதிமதி வாரணந்தான் தும்பிமுகன்
ஐந்துகரம் துணைய தாமே !

**நூல்காப்பு**

அருமறைக் கெட்டாச் சோதி
ஆயுறு ரணநூ டன்னை
சிறுமதி கொன்றை சூடி
செகந்தனில் வாழ்வோர்க் கெல்லாம்
வருபல நோயின் சார
வகையினை யுமையாளுக்கு
பொருள்படச் சொன்ன நூற்குப்
புகர்முகன் காப்புத் தானே ! –1

**நூல்**

தானின்று தேவி கேட்த்
தயவுட னீசன் பெண்ணே
கானென்ற மனிதற் கெல்லாம்
கலந்திடும் ரணந்தான் ரெம்ப

## முடிவு

மேக வாத கரப்பான் தான்
　　விரைந்து கமல மிகவெடித்து
தாகங் கெடுத்துத் தலைகனத்து
　　தாகம் பிறந்து தடிப்பேறும்
இது 94—ஆம் பாடல் இதற்குமேல் இல்லை.

## காலம் (முற்குறிப்பு)

குருவே துணை, **இரணவீரசிங்க முனிவர்** திருவாய்மலர்ந் தருளிய **'இரண வாகடம் 500'** இஃது, மதுரை புது மண்டபம் புஷ்தக ஷாப் இ. ராம. குருசாமிக் கோனாரவர்கள் அனுமதியின் பேரில், மதுரை வடக்கு வாசல், யானைக் கலத்தெரு, வித்வான் மு. குழந்தைவேலுப் பிள்ளை யவர்களால், மதுரை வடக்கு லயன் தெரு, இரணவபித்தியம், பெரியசாமிப் பண்டிதருக்காக எழுதிக் கொடுக்கப் பெற்றது. 1914.

(அடுத்த ஏட்டில்)

குருவே துணை. **இரண சூர சிங்க முனிவர்** திருவாய் மலர்ந்தருளிய **'இரண வாகடம்-500'** இஃது, மதுரை புதுமண்டபம் புஸ்தக ஷாப் இரா.ம. குருசாமி கோனார் (என்றுளது)

## குறிப்பு

ஏட்டில், இது, இரண்டு பத்தியாக எழுதப்பட்டுள்ளது.

இதில் மேகப் பரங்கிக் குணம், சந்து ராச பரங்கிக் குணம், யெரிசிங்கிக் குணம், உபையன் குணம், உபய பரங்கிக் குணம், சண்டி பரங்கிக் குணம், சிங்கிப் பரங்கி, மது நீர் பரங்கி, கல்லுப் பரங்கி, கொடிப் பரங்கி, முளையில் பரங்கி முதலியன உள்ளன.

வரிசை எண் : 2034

சுவடி எண் : 1041

# அகத்தியர் சௌமிய சாகரம் - 1200

பொருள் : மருத்துவம்

நூலாசிரியர் : அகத்தியர்

ஏடுகளின் எண்ணிக்கை : 142

சுவடியின் நிலைமை : மிகப்பழுது

பக்கத்திற்கு : 10-12 வரிகள்

அளவு : 30 × 4 செண்டி மீட்டர்

எழுத்து : தமிழ்

கி. எண்ணிக்கை : 11000

குறை

## தொடக்கம்

சோதியெனும் மனோன்மணியேத் தியானம் செய்து
சுகமான சவுமியசா கரத்தைப் பாட
ஆதியெனுங் கணபதியும் வல்லபையுங் காப்பு
அரசான பிரமனோடு சரசுபதியுங் காப்பு

## முடிவு

யேனென்று மனோன்மணிதான் முன்னே நின்று
யின்பரச வமுர்தமது அய்வாள் மைந்தா
விண்ணென்று யோகமதை விட்டா யானால்
வேதாந்த மவுனமதுக் குறுதி யாச்சே. 1033

(இதற்குமேல் இல்லை)

## காலம்

இல்லை

## குறிப்பு

இது, எமது சுவடி எண் 348 D 691 போன்றது. இடையிடையே பாடல்கள் இல்லை. இல்லாத பாடல்களுக்கு இடம் விட்டு எழுதப்பட்டுள்ளது, கையெழுத்துக்கள் வெவ் வேறாக உள்ளன.

வரிசை எண் : 2035 சுவடி எண் : 1042

# அகத்தியர் மெய்ஞ்ஞானம் 1500

பொருள் : மருத்துவம்

நூலாசிரியர் : அகத்தியர் ஏடுகளின் எண்ணிக்கை : 240

சுவடியின் நிலைமை : மிகப் பழுது பக்கத்திற்கு : 7-9 வரிகள்

அளவு : 34½ × 3½ செண்டி மீட்டர் எழுத்து : தமிழ்

கி. எண்ணிக்கை : 14009 முழுமை

## தொடக்கம்

சீரான முடைய காளை
    சிவன்மகன் தமிழி லாணை
வாரண முலையாள் பெற்ற
    மதகிரி வல்லோ ராய்ந்து
நாரணன் மருகன் செஞ்சொல்
    நலத்தமிழ்க் குடையோன் பூசை
காரண முடைய தும்பி
    கணபதி காப்புத் தானே! — 1

## முடிவு

வாளியாம் அண்ட ரண்டம் புவனம் வாழி
    மானிலத்தில் சீவசெந்து வேரும் வாழி
காளியான வனதுர்க்கை யெல்லாம் வாழி
    கடல்வாழி மலைவாழி கருவும் வாழி
ஆளியாம் சித்தர்கள் எல்லாம் வாழி
    அமராதி தேவாதி வாழி முற்றே! —1500

(பாட்டெண் 1491-க்குப்பின் பாட்டெண் 1500 என்றுளது. இப் பாடலில் 3 வரிகளே உள்ளன)

வெங்கிடேசன் துணை
தெட்சிணாமூர்த்தி சீர்பாதந் துணை

## காலம்

பரிதாபி ஆண்டு வைகாசி மாதம் 15-ஆம் தேதி புதன்கிழமை தினம் இராமேசுவரத்தில் யிருக்கும் சேஷய்யன் புத்திரன் சீனிவாச அய்யன் மேல்படி ஊரிலிருக்கும் திரு. நாகலிங்க பிள்ளை யவர்களுக்கு எழுதிக் குடுத்து முகிந்தது முற்றும்.

இதில் எழுதிய மேல் பாடத்திலுள்ளபடியே யெழுதினது. பிழைகள் செம்மையாய்த் திருத்திக் கொள்ளவும்.

## குறிப்பு

இதில், சிதம்பர சக்கரம், ஈரெழுத்து சிதம்பர சக்கரமடைக்கவும், அஷ்ட பாலகர் சிதம்பரத்து மாலை, புற்பம் பூசை, நாற்பத்து முக்கோணம், பூசாவிதி, கும்ப கலசம், மூலிகையில் வாதபித்த சிலேத்தும மறிய, செருப்படி லேகியம், நாய்க்கடுகு லேகியம், சிறுதும்பை லேகியம் முதலியன உள்ளன.

வரிசை எண் : 2036

சுவடி எண் : 1043

# அகத்தியர் மெய்ஞ்ஞானம்–1500

பொருள் : மருத்துவம்

நூலாசிரியர் : அகத்தியர்

ஏடுகளின் எண்ணிக்கை : 10

சுவடியின் நிலைமை : பழுது பட்டநிலை

பக்கத்திற்கு 6-7 வரிகள்

அளவு : $36\frac{1}{2} \times 3$ செண்டி மீட்டர்

எழுத்து : தமிழ்

கி. எண்ணிக்கை : 400

குறை

**காலம்**

இல்லை

## குறிப்பு

இது, முன் சுவடி போன்றது. இதில், தொடக்கத்தில் ஓம் ஹ்ரீம் என்று சித்திரமாக எழுதப்பட்டுளது. கடல் ஆழம், நீளம். சிவசூட்சம், அத்திமுகன் மந்திரசக்கரம் ஈயெழுத்தில் நின்ற தேவதை, சிதம்பர சக்கரம் வரைய விபரம், அறைகளுக்கு அட்சரவிபரம், கபாடவாசல் எழுத்து, சித்துக்கு எழுத்து, கிரிகை பூசை முதலியன உள்ளன. 61 பாடல்கள் மட்டும் உள்ளன. பாடல்களின் பிற்பகுதி சரியில்லை.

வரிசை எண் : 2037 சுவடி எண் : 1044

# கொங்கணர் கடைப்பிள்ளை ஞானம் — 100

பொருள் : மருத்துவம்

நூலாசிரியர் : கொங்கணர் ஏடுகளின் எண்ணிக்கை :49

சுவடியின் நிலைமை : நல்ல நிலை பக்கத்திற்கு : 8-9 வரிகள்

அளவு : 14 × 4 செண்டி மீட்டர் எழுத்து : தமிழ்

கி. எண்ணிக்கை : 1000 முழுமை

தொடக்கம்

பூமலர்க் கண்ணான் முக்கண்
　　பொருந்திய நந்தி காப்பு
மாமலர் மவுனத் தாதி
　　வாசியுள் மூலங் காப்பு
நாமகள் கமலக் கண்ணாள்
　　நாதாந்த அந்தங் காப்பு
காமகள் கடைப் பிள்ளை
　　யார்பதங் காப்புத் தானே! — 1

முடிவு

காணாத சுண்காணு முத்தி காணு
　　கயிலாசச் சொற்கடா யித்தை யுண்டால்
தோணாது சாஸ்தி ரங்கள் முன்னூல் சூட்சுந்
　　தோணுமடா யிந்நூலிற் சொன்னேன் கண்ணே
பூணாத பூணநூ லின்னூல் நூறும்
　　பூவாகும் வாசமடா சுவாசத் தந்தம்
வீணாகப் போகாது தொந்தத் தாதி
　　வேதாந்த சூஸ்த்திரக்கலை தானு முற்றே! 100
கொங்கண சுவாமி கடைப்பிள்ளை ஞானம் நூறு
　　எழுதி முடிந்தது முற்றும்
　　　　ஓம்

காலம்

காலயுத்தி வருஷம், அர்ப்பிசைமாதம் 30-ஆம் தேதி வெங்கிடாசல நாயக்கர் குமாரன் சுப்பாநாயக்கன் கையெழுத்து.

குறிப்பு

இதில் பலவிதமான வைத்தியங்கள் கூறப்பட்டுள்ளன. இதன் தொடக்க ஏட்டில், ராமநாதபுரம் சில்லா திருப்பத்தூர் சேகரம், எதம்மாபடி பரம்பரை வமிச சேகரம் மு. அ. வெங்கிடாசல பிள்ளையினுடைய கொங்கணவர் கடைப்பிள்ளைப் பரசி மகாலிங்க சுந்தரம் நிஷ்ட்டானு பூதி என்று எழுதப்பட்டுளது.

வரிசை எண் : 2038 சுவடி எண் : 1045-a

# அகத்தியர் சாலத்திரட்டு-முதற்காண்டம்

பொருள்: மருத்துவம்

நூலாசிரியர்: அகத்தியர்

ஏடுகளின் எண்ணிக்கை: 49

சுவடியின் நிலைமை: பழுது

பக்கத்திற்கு: 7-8 வரிகள்

அளவு: 36½ × 3 செண்டி மீட்டர்

எழுத்து தமிழ்

எண்ணிக்கை: 5500

முழுமை

**காலம்**

பலப (பிலவ) வருடம் புரட்டாசி மாதம் 14-ஆம் தேதி காளத்தி செட்டியார் குமாரன் சுப்பன் எழுதின அகத்திய நாயனாரருளிச்செய்த சாலத்திரட்டு முதற்காண்டமெழுதி நிறைவேறியது.

சிவசண்முக மெஞ்ஞான தேசிகள் திருவடி வாழ்க
திருச்சிற்றம்பலம் துணையுண்டாவதாகவும்
தேவிசகாயம்
சிவாய குருவாய நமா

*குறிப்பு*

இது, எமது சுவடி எண் 288-a/D 508 போன்றது பாட வேறுபாடுகள் மிகுந்து காணப்படுகின்றன.

வரிசை எண் : 2039

சுவடி எண் : 1045-b

# அகத்தியர் சாலத்திரட்டு 2-ஆம் காண்டம்

பொருள்: மருத்துவம்

நூலாசிரியர்: அகத்தியர்

ஏடுகளின் எண்ணிக்கை: 49

சுவடியின் நிலைமை : பழுது

பக்கத்திற்கு 7-8 வரிகள்

அளவு: $36\frac{1}{2} \times 3$ செண்டி மீட்டர்

எழுத்து: தமிழ்

கி. எண்ணிக்கை: 5500

முழுமை

## காலம்

பலபவ வருஷம் பிரட்டாசி மாதம் 26 ஆம் தேதி காளத்தி செட்டியார் குமாரன் சுப்பன் எழுதின அகஸ்த்திய நாயனாரருளிச் செய்த சாலத்திரட்டில் ரெண்டாவது காண்டம் எழுதி நிறவேறியது

சிவாய குருவாய நம:
தேவி சகாயம்

திருச்சிற்றம்பலம் துணையுண்டாகவும்

## குறிப்பு

இது, எமது சுவடி எண் 288-b / D 509 போன்றது. இதிலும் பாடவேறுபாடுகள் காணப்படுகின்றன.

வரிசை எண் : 2040 சுவடி எண் : 1045-c

# அகத்தியர் சாலத்திரட்டு மூன்றாங் காண்டம்

பொருள் : மருத்துவம்

நூலாசிரியர் : அகத்தியர்

ஏடுகளின் எண்ணிக்கை : 57

சுவடியின் நிலைமை : பழுதற்றது

பக்கத்திற்கு : 7-8 வரிகள்

அளவு : 36½ × 3 செண்டி மீட்டர்

எழுத்து : தமிழ்

கி. எண்ணிக்கை : 5500

முழுமை

## தொடக்கம்

மானொருகை மழுவொருகை தரித்த நாதன்
    வாதமது வழியுரைத்தார் ஆதி யந்தம்
நானொருகை யிந்திரமாஞ் சால வித்தை
    நவிலுகிறேன் நந்திகுரு நாதர்க்கள் காணத்
தானொருகை கருக்குருவா மூலி வேர்கள்
    தப்பாமல் வழலையொடு தந்தி ரங்கள்
வானொருகை பூவொருகை வைத்த தந்தி
    மாமுகத்தோன் முன்காண வழுத்து றேனே ! — 1

## முடிவு

தரணியோர்க் காகுமடா சால வித்தை
    தப்பாது தர்மவா னானால் நிற்கும்
புரணிசொல்லி மாண்பருக்கு ஈய வேண்டாம்
    பூலோகத் தாருக்கும் புண்ணிய மேயாம்
திரணமென்று நினையாதே சிவன்மே லாணை
    சிகச்சால மாயிரத்து யிருநூ றுந்தான்
வருமைவர வொட்டாது பிணிதி யில்லை
    வைத்திடத்துக் கேமூன்றாங் காண்ட முற்றே ! — 301

## காலம்

பலபவ வருடம் அற்பிசி மாதம் 7-ஆம் தேதி காளத்தி செட்டியார் குமாரன் சுப்பன் எழுதின அகஸ்திய நாயனாரருளிச் செய்த சாலத் திரட்டு மூன்றாங்காண்ட மெழுதி நிறைவேறியது.

திருச்சிற்றம்பலம்

சிவசண்முக மெய்ஞ்ஞான தேசிகன் திருவடி வாழ்க.

## குறிப்பு

இதில், இந்திரசால அஞ்சன மை, குறி மை சுருட்டுவித்தை, பேய்கள் வணக்கம், தோஷ குணமை, சுரங்களுக்கு மாத்திரை, தூசாதி மை, செந்தூரம் வைப்பு, பஞ்சாட்சர மாறல், அஷ்ட்ட கர்மம், தன்ம வித்தை, தேள், காலி அக்னிக்கு, சோறுண்ண மகாமாயம், குறளி சொல்லும் வகை முதலியன உள்ளன.

இதில், 204-ஆம் பாடல் முதல் 216-ஆம் பாடல் முடிய எழுதப்பட வேண்டிய ஏடுகள் வெற்றேடுகளாக உள்ளன. (34-வது) ஏட்டின் பின்புறம் 35-வது ஏடு, 36-வது ஏட்டின் முன்புறம் ஆகியவை)

வரிசை எண் : 2041 சுவடி எண் : 1045 d

# அகத்தியர் சாலத்திரட்டு நாலாங் காண்டம்
# மாந்திரீக காண்டம்

பொருள் : மாந்திரீகம்

நூலாசிரியர் : அகத்தியர்

ஏடுகளின் எண்ணிக்கை : 49

சுவடியின் நிலைமை : பழுது

பக்கத்திற்கு : 7-8 வரிகள்

அளவு : 3 ½ × 3 செண்டி மீட்டர்

எழுத்து : தமிழ்

கி. எண்ணிக்கை : 5500

முழுமை

தொடக்கம்

முன்னே முப்பாளே ஆதியந்த முடிவான
பொதிகை வரை அடிவாரத்தில் தோன்றுந் தோன்றுஞ்
சுருதிமுடிந் திடமதுவுஞ் சோதி பாரு
வான்றோய வளர்ந்து நின்ற விருட்ச முண்டு
மருந்துவகை மூலிகைக ளநேக முண்டு
பொன்றாளுங் கும்பேசொரி மனோன்மணித்தாய்
யிருந்ததிந்த மாந்திரீக மியம்பி னாளே! — 1

முடிவு

வாங்கினால் பின்பொருவர் கைகு டாதே
வரைமுனிவர் ரீசனுமைக் களிப்பா ரப்பா
★ ★ ★ ★ ★
தீங்குவரும் வுளக்குழுக் காலுஞ் சொன்னேன்
சிலனுரைத்த சாலனூல்ச் சித்தி முற்றே! - 300

சிவமயம்
ஆக — 1200

சித்திபெறுந் தேவரிஷி குகைகள் தோறுந்
திருவருளா லடக்கிவைத்த ரிந்த னூலை
★ ★ ★ ★ ★
சத்தியருள் சகலசித்துங் கைக்குள் ளாச்சு
சத்தியந்தா னித்தனூல்க் காண்ட முற்றே! - 301
ஆக காண்டம் 4-க்கு பாடல் 1200

**காலம்**

பலபல வருடம் அற்பிசி மாதம் 19-ஆம் தேதி காளத்தி செட்டியார் குமாரன் சுப்பன் எழுதின அகண்ட பரிபூரண சச்சிதானந்த சின்மய தெட்சிணாமூர்த்தி யருளிச் செய்த சாலத்திரட்டு—1200-ம் எழுதி நிறை வேறியது.

திருச்சிற்றம்பலந் துணையாகவும்

சிவசண்முக மெய்ஞ்ஞான தேசிகன் திருவடி வாழ்க

தேவி சகாயம்

சிவாய குருவாய நம :

ஆக எடு—198

**குறிப்பு**

இதில், விக்கினேசுபரன் மந்திரம், விஷ்ணு தியானம், வாதிகள் சூத்திர வித்தை மயக்குவித்தை, அண்டவித்தை, சலஸ்தம்பனம், வாயுத்தம்பனம், மாராட்டமோடி, அக்கினிக் கட்டு, தேங்காயுடைய, உடலில் கருவி பட்டால் கருவித்தை, நாயுருவி வசியமூலி, பொத்தலைக்கையான் மூலி, குறளி வித்தை முதலியன உள்ளன.

வரிசை எண் : 2042 சுவடி எண் : 1046

# பதஞ்சலியார் வாத சூத்திரம்-20

பொருள் : மருத்துவம்

நூலாசிரியர் : பதஞ்சலியார்

ஏடுகளின் எண்ணிக்கை : 4

சுவடியின் நிலைமை : மிகப் பழுது

பக்கத்திற்கு : 7-8 வரிகள்

அளவு : $36\frac{1}{2} \times 3$ செண்டி மீட்டர்

எழுத்து : தமிழ்

கி. எண்ணிக்கை : 200

முழுமை

## தொடக்கம்

பூமலியுங் கண்ணாள்தன் பாதம் போற்றி
புகலுவேன் வாதத்தின் திறவு கோலை
நாமுரைப்போம் ஐநான்கு பாட்டுக் குள்ளே
நயமான வாதவித்தை ஞான மார்க்கம்
சோமனுத்த வேணியனார் உபதே சித்தார்
துறையறியும் பதஞ்சலிதன் சூத்தி ரத்துள்
ஏமவித்தைக் காதிஎன்ன வஸ்த்து உப்பு
இதையறிய மாட்டாமல் மயங்கி னாரே ! —1

## முடிவு

வாழவே நடுவெழுத்துக் காதா ரத்தை
மாட்டிவைக்கத் தலையெடுத்து பிரகா சிக்கும்
மீளவே கண்டெழுத்து ஓடா தய்யா
விட்டெழுத்துந் தொட்டெழுத்து மேல் கீழாச்சு
தாழவே வாண்டாங்காண் ஐம்பத் தொன்றுந்
தலையெழுத்துக் குள்ளாகி சார்ந்து போச்சு
கேளுமே வாகாது பரமநீ யாவாய்
கூறிய வாதத் திறவுகோல் முற்றே ! —21

திருச்சிற்றம்பலம்
சிவகிருபை யுண்டாவ தாகவும்
சிவசண்முக மெய்ஞ்ஞான தேசிகன் திருவடிகள் வாழ்க

## காலம்

பராபவ வருஷம் மார்கழி மாதம் 10-ஆம் தேதி காளத்தி செட்டியார் குமாரன் சுப்பன் எழுதின பதஞ்சலி மாமுனியா ரருளிச்செய்த வாத சூத்திரம் 20-ம் எழுதி நிறவேறியது.

தேவிசகாயம்

## குறிப்பு

இது, எமது சுவடி எண் 303-C/D. 544 'பதஞ்சலி சுவாமி அருளிய வாதத் திறவுகோல் சுருக்கம் இருபத்தொன்று' போன்றது. பாட வேறுபாடுகள் மிகுதியும் காணப்படுகின்றன. நல்ல பாடமாகவும் இருக்கிறது.

வரிசை எண் : 2043 சுவடி எண் : 1047

# கொங்கணர் ஏம கற்ப சூத்திரம் — 51

பொருள் : மருத்துவம்

நூலாசிரியர் : கொங்கணர்

ஏடுகளின் எண்ணிக்கை : 5

சுவடியின் நிலைமை : மிகப்பழுது பட்ட நிலை

பக்கத்திற்கு : 7-8 வரிகள்

அளவு : $36\frac{1}{2} \times 3$ செண்டி மீட்டர்

எழுத்து : தமிழ்

கி. எண்ணிக்கை : 200

முழுமை

## தொடக்கம்

பாதமுந் தலையி மொன்றாய்ப்
பாரிலே பள்ளி கொண்ட
நாதமே யறிந்த வர்க்கு
நன்மையுங் கையி னுள்ளே
வேதமும் விந்து நாதம்
விளங்குபொன் மூலந் தானுங்
காதிலே பலிக்கச் சொன்னார்
கருவூரு நாதந் தானே — 1

## முடிவு

தானமே செய்ய வேணுந்
தருமமே கருத வேணும்
ஏனமே யறிய வேணும்
ஈசனைக் காண வேணும்
மோனமாய் சாஸ்த்தி ரங்கள்
முடிவறப் பார்க்க வேணும்
பானமே கொள்ள வேணும்
பார்பதி பாத முற்றே! — 51
திருச்சிற்றம்பலம்
சிவசண்முக மெய்ஞ்ஞான தேசிகள் திருவடி வாழ்க

## காலம்

பராபவ வருடம் மார்கழி மாதம் 8-ஆம் தேதி காளத்தி செட்டியார் குமாரன் சுப்பன் எழுதின கொங்கண நாயனார் அருளிச்செய்த ஏம கற்ப சூத்திரம் 51-ம் எழுதி நிறவேறியது. தேவி சகாயம்

## குறிப்பு

இதில், நாக மெழுகு, ஷீவேறு சந்தம், வருத்தம், சுண்ணம், குகை ரசக்கட்டு, கரு மறைப்பு, எழு பிறப்பு, சரக்கு, கட்டுத் தயிலம் முதலியன உள்ளன.

வரிசை எண் : 2044 சுவடி எண் : 1048

# அம்பிகானந்தர் வகார சூத்திரம் - 25

பொருள் : மருத்துவம்

நூலாசிரியர் : அம்பிகானந்தர்

ஏடுகளின் எண்ணிக்கை : 4

சுவடியின் நிலைமை : மிகப் பழுது

பக்கத்திற்கு : 7-8 வரிகள்

அளவு : $36\frac{1}{2} \times 3$ செண்டி மீட்டர்

எழுத்து : தமிழ்

கி. எண்ணிக்கை :200

முழுமை

## தொடக்கம்

கார்செரியி மேனி விநாயகனே காப்பு
காலாங்கி காப்பு கருவூரான் காப்பு
மேர் வளரும் போகநதி பாதங் காப்பு
மெய்யான கும்பமுனி மிகவே காப்பு
தார்வளருஞ் சித்தருட பாதங் காப்பு
சாத்திரமுஞ் சூத்திரமுந் தானே காப்பு
பார்தனிலே விகாரதுறை இருபத் தைஞ்சும்
பாடுதற்கு மூலமெந்தன் பாட்டன் காப்பே! — 1

## முடிவு

சோதிப்பா னங்கியுப்பை வழலை யென்றுஞ்
சுண்ணமென்றும் பாலைநிலச் சூடா மென்றும்
நாதிப்பான் கேசரத்தில் பிராண நிட்டை
ஞானமென்றும் யோக மென்றும் நல்லோன் காண்பான்
பேதிப்பான் தாரணைக்கும் மிடமா மென்றும்
பெரிதான கற்பமதோ சமா(ன) னென்றும்
சாதிப்பா னிதற்கெல்லாம் மனமா மென்று
சாத்திரமா மிருபத்து அஞ்சு முற்றே! — 25

திருச்சிற்றம்பலம்

சிவசண்முக மெய்ஞ்ஞான தேசிகன் திருவடி வாழ்க.

## காலம்

பராபவ வருஷம் மார்கழி மாதம் 9-ந் தேதி காளத்தி செட்டியார் குமாரன் சுப்பன் எழுதின அம்பிகானந்தர் அருளிச் செய்த சூத்திரம் – 25 எழுதி நிறவேறியது.

தேவிசகாயம்

## குறிப்பு

இதில், சித்தர்கள் கூறிய தீட்சாவிதி முதலியன பேசப்படுகின்றன.

வரிசை எண் : 2045

சுவடி எண் : 1049

# கருவூரார் - வாக்கியம் - நெண்டி

பொருள் : மருத்துவம்

நூலாசிரியர் : கருவூரார்

ஏடுகளின் எண்ணிக்கை : 33

சுவடியின் நிலைமை : மிக மிகப் பழுது

பக்கத்திற்கு : 6-8 வரிகள்

அளவு : 37 × 3 செண்டி மீட்டர்

எழுத்து : தமிழ்

கி. எண்ணிக்கை : 1000

குறை

## தொடக்கம்

பூவு லாவிய தேவி சுந்தரி
போத சுந்தரி மாயி சிற்பரை
பூணு நற்சிவ ஞான சித்திகளே-கொண்டாடவே
தாரு லாவிய போத நாயகர்
கடவு ளகத்தியர் ரிஷிகள் தேவர்கள்
கருணை நந்தீசர் பாதந் துணையே—கொண்டாடவே
பாவு லாவிய போக நாதர்கை
பச்சை யாகிய கொங்கணர்
பண்பு நந்தமைய பாதந் துணையே—கொண்டாடவே

## முடிவு

தாரச் சுன்ன முன்னஞ்சு மருந்து
சரியா மஞ்சு மஞ்சாடியுங் கூட்டி
சேரப்பா அந்தச் செந்நீர் விட்டரைத்
தீற்கப் பச்சைத் துருசுக்குப் பூசு
பாரப்பா நெத்தாவி கண்ணாடி தீப்பட்ட
போதினில் மச்சை வெளுப்பாம்
ஆரப்பா யிதுக்கிடு சுன்னந்தான்
ஆதியாம் பொன்னின் பலநாடே —147

தங்கமப்பா களஞ்சி இதுக்குமுன்
தானே வாங்கி உருக்கிலே கொண்டு
பங்கமோ வில்லார் ......... .........

(இதற்குமேல் இல்லை)

## காலம்

இல்லை

## குறிப்பு

இது, எமது சுவடி எண் 322-f/D. 619 கருவூரார் நெண்டி நாடகம் போன்றது. இது, கருவூரார் நொண்டி 700 என்ற பெயரில் அச்சாகியுள்ளது.

இதில், கற்பஞ் சாப்பிட்ட பேரறிய, நாய்ப்பாகல், சவுக்காரக்குரு, நாசரச பற்பம், உப்புக்கட்டு முதலியன உள்ளன.

வ.ரி.எண் : 2046 சுவடி எண் : 1050

# மச்சமுனி பெருநூல் — 800

பொருள் : மருத்துவம்

நூலாசிரியர் : மச்சமுனி ஏடுகளின் எண்ணிக்கை : 94

சுவடியின் நிலைமை : பழுது பட்டநிலை பக்கத்திற்கு : 8-12 வரிகள்

அளவு : 27 × 3½ செண்டி மீட்டர் எழுத்து : தமிழ்

கி. எண்ணிக்கை : 4000 முழுமை

## தொடக்கம்

ஆதியந்த வேதவித் தாரத்தை எந்தன்
ஆதிகுரு வென்றதொரு பிடிநாக் கீசர்
சோதிபர வெளியான சொருபா னந்தர்
சூக்ஷசடாதார பீடம்துரியா தீத பீடம்
மாதுபிற ணவாசறீங் கார பீட
முமைமுனைக்கே வெகுநூல் வாத னத்தை
பாதிசன சாரூப விந்து நாதம்
பரப்பிரம்ம மூலகிணே சன்காப் பாமே ! - 1

## முடிவு

வித்தைகத்தேன் பதத்தாணெ வெளி விடாதே
வேதாந்த மனோன்மணித்தாய் பாதத் தாணே
சித்தருக்கா மிந்த யெண்ணூறு பெருநூ லப்பா
சிவஞானந் தங்குகின்ற பெரியோர்க் காகும்
மத்தொருத்த ரின்னூலைப் பதனம் பண்ணி
வைத்தாலு மாவர்க்குமுத்தி வாய்க்கும் வாய்க்கும்
பத்தருக்குப் பாடிவைத்த சதமெட் டான
பதிவாகும் பெருநூல்மெய் ஞானம் முற்றே ! - 801

## காலம்

இல்லை

## குறிப்பு

இந்நூல் அச்சாகியுளது. இதில் சகலத்துக்கும் வசியமை, மூலிகை, வசியத்துக்கு திருநில மாய்கைப் பூடு, மூலிகை, உச்சாடினம், பேதனம், முதல் வேர்மிதக்க, அன்றில் வித்தை, கரும்பருந்து வித்தை, மாரணம், பாஷாண மை, கருநாவிமை, வாடைக்கு, வயித்தியத்துக்குப் பதினெட்டு மூலிவேர், பைகாசிக்கு பச்சிலை வைத்தியம் முதலியன உள்ளன.

45-ஆம் ஏட்டின் பின்புறம் பாதி எழுதாமல் விடுபட்டுளது. மேலேட்டில் அட்டவணை உள்ளது. ஆனால் அட்டவணைப்படி நூல்கள் இச்சுவடியில் இல்லை, பின்னர் வருகின்றது.

இது எமது சுவடி எண் 325/D.646 மச்சமுனி 800-ன் வேறாயது.

வரிசை எண் : 2047 சுவடி எண் : 1051

# அப்பிரக பற்பம் - 80

பொருள் : மருத்துவம்

நூலாசிரியர் : அறியக் கூடவில்லை

ஏடுகளின் எண்ணிக்கை: 5(95-99)

சுவடியின் நிலைமை : பழுது

பக்கத்திற்கு : 11-12 வரிகள்

அளவு : 27 × 3½ செண்டி மீட்டர்

எழுத்து : தமிழ்

கி. எண்ணிக்கை : 100

முழுமை

## தொடக்கம்

கேளப்பா நீதான் கெடியான மேகங்
கேளப்பா வெண்பதுங் கெடியாகத் தீர
கேளப்பா நந்தி கிருபையாய்ச் சொன்னது
கேளப்பா மேகங் கெடியான ரோகமே ! -1

## முடிவு

கொடுத்திடும் போது கொடிய விசங்களும்
படுத்திடா தோடிடும் பாதாளம் புக்கிடுந்
தொடுத்த அமுரியில்ச் சுண்ணம் புணவிடை
அடுத்துக் கொடுக்க அகன்றிடுந் தோசமே! - 80

முடிந்தது

## காலம்

**1907 மாண்டு கார்த்திகை மாதம் 11-ந் தேதியில் பிளான் வேலை பார்த்துவரு சுப்பராய பின்ளை.**

## குறிப்பு

**இது முன் சுவடியிலுள்ள அட்டவணைப்படி உள்ளது.**
**இதில் அப்பிரக பற்பம் செய்முறையும், தீரும் நோய்களும் கூறப்பட்டுள்ளன.**

வரிசை எண் : 2048 சுவடி எண் : 1052

# அகத்தியருக்கு சுப்பிரமணியர் உபதேசித்தது - 200

பொருள் : மருத்துவம்

நூலாசிரியர் : சுப்பிரமணியர்

ஏடுகளின் எண்ணிக்கை : 23

சுவடியின் நிலைமை : பழுது பட்டநிலை

பக்கத்திற்கு : 10—12 வரிகள்

அளவு : 27 × 3½ செண்டி மீட்டர்

எழுத்து : தமிழ்

கி. எண்ணிக்கை : 1000

முழுமை

## தொடக்கம்

அண்டபரா பரமான பறையின் பாதம்
அய்யநெங்க ளாதிவஸ்த்து பாதமும் போற்றி
கொண்டார்கள் மெய்ஞ்ஞானி பாதமும் போற்றி
சொல்லுகிறேன் யுபதேசம் யிரநூர் தன்னை
மண்டலிகர் மகாயோகி மதிக்க வென்றும்
மருவில்லா ஞானமதைப் பாட வேயான்
கண்டவர்கள் கண்டகோ டாலி யாக
கணக்கான ஞான்மதைக் காட்டு வோமே ! - 1

## முடிவு

நில்லடா யிப்படியே முறையாய்ச் சொல்லி
நெடுநாளாய் வாழவென்று நிதானம் சொன்னேன்
அல்லடா யென்னுடைய இருநூறுக் குள்ளே
அடங்காத கருவையெல்லாம் அடக்கிப் போட்டேன்
சொல்லடா பராபரத்து நிலையுஞ் சொன்னேன்
சித்திரமயி லேறுகின்ற மகிமை சொன்னேன்
அல்லடா யிதையறிந்து மவுனம் கொள்ளு
அடங்காத யிருநூறு மதீதம் முற்றே ! -199

## காலம்

சிவ சுப்பிரமணியர் கிருபையானது. அடியேன் சிரசாக வைகித்தும் மகா கல்விகள் ஞானியாகிய அகத்திய மகா குருவின் பாதபங்கயம் அடியேன் சிரசாகச் சுமந்து வாழ்க வாக்கும் தந்தருள் புரிகவுமாய்ப் பிரார்த்திக்கிறேன். எழுதியது டிராப்ஸ்மேன் வேலை பார்க்கும் சுப்பராயபிள்ளை 1892-ஆம் வருடம். மார்கழி மாதம் 9-ம் தேதி.

## குறிப்பு

இதில், 80—ஆம் பாடல் விடுபட்டுளது. அந்த இடம் எழுதாமல் இருக்கிறது. கடைசி ஏட்டின் பின்புறம் பஞ்சாட்சர மந்திர சக்கரம் எழுதப்பட்டுளது, ஞான மார்க்கத் தைப்பற்றி இந்நூல் கூறுகிறது.

வரிசை எண் : 2019 சுவடி எண் : 1053

# அகத்தியர் பரிபூரணம் - 400

பொருள் : மருத்துவம்

நூலாசிரியர் : அகத்தியர்

ஏடுகளின் எண்ணிக்கை : 78
(முதலேடு இல்லை, இடையிலும் இல்லை)

சுவடியின் நிலைமை : மிக மிகப் பழுது

பக்கத்திற்கு : 6-8 வரிகள்

அளவு : 42×3 செண்டி மீட்டர்

எழுத்து : தமிழ்

கி .எண்ணிக்கை: 2500

குறை

## தொடக்கம்

......... று சிவயோகிக் கெய்து மாகில்
இதிலுள்ள கருக்களெல்லா மெய்து மெய்துங்
கண்டுமிவன் காணாமல் கலங்கி ...............
கருவியிலே யமைந்தபூ ரணமென் பாரே ! - 5

## முடிவு

முத்தான புலத்தியனே புலத்திய மகாரிஷி
முச்சுடரு மாதியந்தம் நன்றாய்ப் பார்த்து
சித்தான வயித்தியபூ ரணமி தப்பா
தேசத்திற் கிடையாது திரமாய்க் கேளு
பத்தான பதிதனிலே வைத்துப் பூசி
பதிதான வாசியது சித்தி யாகும்
வித்தான வினையறுக்கும் ஞன சித்தி
வேதாந்த பூரணத்தின் வெளிசேர் முற்றே ! - 401

அகத்திய மாகா முனிவர் திருவாய்மலர்ந்த
பரிபூரணம் — 400-ம் முற்றியது.

## காலம்

தாரண வருஷம் பங்குனி மாதம் 29-ம் தேதி சின்னப் புத்தூரிலே மிருக்கும் பெருமாளய்யங்கார் குமாரன் குப்பய்யங்கார் பரிபூரணம் 'நானூறும் எழுதினது. வரிமாராட்டம், எழுத்துக் குற்றம் இருந்தாலும் யாதாமொரு பெரியோர்களும் பொறுத் தருளும்படி கேட்டுக் கொள்கிறேன்.

இந்த ஏட்டை எடுத்தவர்கள் வாசித்துப் பார்த்து உடையானுக்கு குடுக்கவும்.

தெண்டாயுதபாணி துணை
நல்லாண்டவர் துணை செய்யவும்
குருபாதம் முன்னிற்கவும்

இதன் பின் ஒரு மருத்துவச் செய்யுள் எழுதப்பட்டுள்ளது. அது :-

யெறுக்கு முறுக்கிலை துளசி யிளந்துளிர்
பெறுக்க வேணுமோ பேதை மனத்துள்ளாய்
நறுக்கி முறுக்கியே நாசியில் பிழிந்திட
யிறுக்கு மாவிஷம் யில்லையென் றோடுமே !

## குறிப்பு

இதில், நூல்விபரம், வைராக்கியம், புருடருக்கு நாடிகள் நடக்கும் விதம், பெண்களுக்கு நாடி நடக்கும் விதம், பஞ்ச நாடிகளிருக்குமிடம் மரணநாடி, வாயுவுக்கும் மாந்தத்துக்கும் கெற்பிணிக்கும் வியாதியறிய, அஷ்டகர்மப் பாவை, பெண்களுக்கும், ஆண்களுக்கும் யிடுமருந்து முதலியன உள்ளன.

வரிசை எண் : 2050

சுவடி எண் : 1054

# அகத்தியர் வைத்தியம்

பொருள் : மருத்துவம்

நூலாசிரியர் : அகத்தியர்

ஏடுகளின் எண்ணிக்கை : 125

சுவடியின் நிலைமை : மிகமிகப் பழுது

பக்கத்திற்கு : 8-10 வரிகள்

அளவு : $30 \times 3\frac{1}{2}$ செண்டி மீட்டர்

எழுத்து : தமிழ்

கி. எண்ணிக்கை : 1000

குறை

## தொடக்கம்

பாகுடன் கிணேசன் பாதம்
    பணிந்துமுக் குணங்க ளாய
வாகடச் சுவடி யெல்லாம்
    வகைவகை தொகுத்துப் பார்த்து

## முடிவு

யிதுக்கடங்கா வாயுவில்லை யஷ்ட குன்மங்
    கெண்டை ......... வுப்பிசங்கள் செரியாமை தீரும்
மதுக்குடம்போற் பெருவயறு திரட்சிமலக் கட்டு
    வாயுவுட னீரிரத்தம் வாங்கி வைக்கு மல்லா
லொதுக்கிநின்ற பலவாய்வு திசைவாய்வு கெட்டே யோடு
    முண்மை கைப்புப் புளிமோர் பதார்த்தகங்க ளொழியே! —84

உரை..................

(இதற்குமேல் இல்லை)

## காலம்

இல்லை

## குறிப்பு

இதில், ரச சுத்தி, கெந்தக சுத்தி, மனோசிலை சுத்தி, காந்த செந்தூரம், அப்பிரக செந்தூரம், அமிர்த சஞ்சீவி மாத்திரை, பஞ்ச வத்திராச பூபதி, சங்கியாங்குசம், மகா மேகநாதன், சுர மாத்திரை, திசமூல கிசாயம், காச சுவாசத்திற்குத் திசமூல நெய் முதலியன உள்ளன.

இது, எமது சுவடி எண் 301-h/D-539 அகத்தியர் ஆயிரத்தைந்நூறு போன்றது.

இதன் பின்னர், வைத்தியம் எழுதிய 6 ஏடுகள் உதிரியாக உள்ளன.

வரிசை எண் : 2051 சுவடி எண் : 1055

# அகத்தியர் வைத்திய ரெத்தினச் சுருக்கம் 360

பொருள்: மருத்துவம்

நூலாசிரியர்: அகத்தியர்

ஏடுகளின் எண்ணிக்கை: 54
(1-57, இடையில்3 ஏடுகள் இல்லை)

சுவடியின் நிலைமை : மிகப் பழுது

பக்கத்திற்கு 9-10 வரிகள்

அளவு: $29\frac{1}{2} \times 3\frac{1}{2}$ செண்டி மீட்டர்

எழுத்து: தமிழ்

கி. எண்ணிக்கை: 2500

முழுமை

## தொடக்கம்

பூரணமாய் நிறைந்தகும்பப் பறைதாள் போற்றி
புகலுகிறேன் வைத்தியரெத்தினச் சுருக்கந் தன்னை
வாரணமா முகத்தோனைப் பணிந்து போற்றி
வைத்தியந்தா னிந்தமுன்னூத் தறுப துக்குள்
காரணமாம் செந்தூரம் பற்பம் லேகியம்
கருவான தயிலமொடு கிருதம் எண்ணை
சூரணமாக் கிராணமொடு கலிக்க மாத்திரை
சுழுகுகரு நாடிமுதல் சொன்னேன் பாரே! —1

## முடிவு

அரத்தைசதை குப்பை அமுக்கிரா கோட்ட
தரத்தை மதுரமுட நாகணங் — குரத்தை
அரவிந்த மொடுகுரும்பை அரக்கினொடு வெந்த யெண்ணை
அப்ப விடும் வெப்பே. —360

சிவசண்முக மெய்ஞ்ஞான தேசிகன் திருவடி வாழ்க.

## காலம்

இல்லை

## குறிப்பு

இது, எமது சுவடி எண் 249/D-139 போன்றது

இதில், வாத ராட்சதன், சுய மக்கினி, கபாட மாத்திரை, பூபதி மாத்திரை, ரச சிந்தாமணி, கோரோசினை குளிகை, அர்த்தனாரி சுரம், பாண்டு வகை, கண்டங்கத்திரி லேகியம், முதலீயன உள்ளன.

இதன் பின்னர் (வைத்தியம்) கண்டாத்திரி லேகியம் எழுதிய ஏடொன்றுளது

வரிசை எண் : 2052 சுவடி எண் : 1056-a

# மச்சமுனி திருமந்திரம் - 800

பொருள் : மருத்துவம்

நூலாசிரியர் : மச்சமுனி ஏடுகளின் எண்ணிக்கை : 64

சுவடியின் நிலைமை : மிகப் பழுது பக்கத்திற்கு : 8-9 வரிகள்

அளவு : $39\frac{1}{2} \times 4$ செண்டி மீட்டர் எழுத்து : தமிழ்

கி.எண்ணிக்கை : 2000 முழுமை

## தொடக்கம்

............ ரத்தய்யா மலரடி
நீதியில் ........... றாமய மானது
சோதியில் நாதந் துலங்குஞ் சுடரொளி
சாதியில் நந்தி தன்பதங் காப்பே ! - 1

## முடிவு

துலங்கும் யெண்ணூறு சுடரொளி கண்டவன்
களங்கம் கண்டு கற்பகத் தீபம்போல்
விளங்கிய போகம் விரும்பி மனமது
யிலங்கிய வாகி யேகாந்தம் முற்றுமே ! - 799

## காலம்

இல்லை

## குறிப்பு

இதில், அப்பு உப்பு, வழலை உப்பு, சீனக்காரம், ஆலாத்தி கற்பூரம், வெங்காரம் சாரம், துருசு, நூலீய்ந்தால்ச் சாபம், துடுமார்க்கம், லிங்கம், சிங்கி, பூரம், சாம்பிராணி நாகம், வங்க ரசிதம், வெள்ளி ரசிதம், பெருங்காயம், தொட்டிப் பாசாணம், முதலியன உள்ளன.

இது ''மச்சமுனி சுவாமி திருமந்திரம் எண்ணூறு" என்று சுவடியில் தலைப்பிடப் பட்டுளது.

இது எமது சுவடி எண் 325/D 646 — 'மச்சமுனி 800' போன்றது.

வரிசை எண் : 2053 சுவடி எண் : 1056-b

# சுப்பிரமணியர் சூத்திரம் - 43

பொருள்: மருத்துவம்

நூலாசிரியர்: சுப்பிரமணியர்

ஏடுகளின் எண்ணிக்கை: 9

சுவடியின் நிலைமை: மிக மிகப் பழுது

பக்கத்திற்கு: 8-9 வரிகள்

அளவு: 39½ × 4 செண்டி மீட்டர்

எழுத்து: தமிழ்

கி. எண்ணிக்கை: 400

முழுமை

தொடக்கம்

கெந்தகத்தின் சிண்ணம்

சொல்லுரே யின்னமொரு வைத்தியந்தான் கேளு
தொல்புவியில் தர்மநெறி நீதி யோர்க்கு
மல்லுரேன் கெந்தகத்தின் சிண்ணந் தன்னை
வாதுசொல்லி ரோகமெல்லாந் தீர்ப்ப தற்கு
வெல்லுரே யிந்தவித்தை மேலாம் பாரு
விருதுபெற்ற சித்தருக்காம் மன்னர்க் காகுங்
கல்லுமோ திரங்கெஞ்சம் யிதுவலுவோ மெத்தக்
கண்மணியே புலஷ்த்தியனே கருதக் கேளே! —1

முடிவு

நூலான குருநூலின் விபரங் கொஞ்சம்
னுகர்வதுண்டே பெருநூலின் மார்க்கம் போலே
பாலான தில்பிறந்த தயிர்மோர் நெய்தான்
பரிவாகச் சொன்னதெல்லாஞ் சூத்தி ரந்தான்
மேலான வித்தையடா யிந்த வித்தை
விதியாளிக் கெய்துமல்லால் கற்றோர்க் குண்டோ
மாலான மதிகனடா முருகன் சொன்ன
மகத்தான சூஷ்த்திரந்தான் முடிவு முற்றே! —43

காலம்

இல்லை

குறிப்பு

இது, சுப்பிரமணியர் அகத்தியருக்கு உபதேசித்த மருந்து முறைகள். இதில், கெந்தகச் சிண்ணம், ரசச் சிண்ணம, முதலியன உள்ளன. இதற்கு அடுத்து மருந்து முறை எழுதிய ஏடொன்றுளது.

வரிசை எண் : 2054 சுவடி எண் : 1057

# அகத்தியர் பூரணகாவியம் - 1000

பொருள் : மருத்துவம்

நூலாசிரியர் : அகத்தியர்

ஏடுகளின் எண்ணிக்கை : 158

சுவடியின் நிலைமை : மிகப் பழுதுற்ற நிலை

பக்கத்திற்கு : 8-9 வரிகள்

அளவு : 38 × 3½ செண்டி மீட்டர்

எழுத்து : தமிழ்

கி. எண்ணிக்கை : 7000

முழுமை

## தொடக்கம்

ஓமென்ற மூலகண பதியே காப்பு
(யுண்மையு)ட நடுமனையி லுகந்து நின்று
ஆமென்ற அமுர்தகலை யுள்க்கொண் டேதான்
(அடங்கியந்த ம)னோன்மணியி னருமையாலே

## முடிவு

சிவசிவா வென்று போற்றாய் முற்றே ! — 991
சிவமதுவே ஆற்மாவாகும் முளங்கி நின்ற

★ ★ ★ ★ ★

பக்தியுடன் ......... ரிவாயிப் பதிவாய் முற்றே ! — 992

மூலகணபதி துணையுண்டாக வேணும்

## காலம்

குரோதன வருஷம் தை மாதம் 16—ஆம் தேதி பரணி நட்சத்திரம் மகர லக்கினம் அஷ்டமி திதியில் 4 மணிக்கி ரங்கசாமி பிள்ளையவர்கள் (அகத்தியர் பூரண) காவியம் எழுதி நிறை வேறிற்று.

முற்றும்

எழுதினவர் ரங்கசாமிப் பிள்ளை அறியவும்,

## குறிப்பு

இதில் மும்மணிவிபரம், வாசிமார்க்கம், அஷ்டசித்துயின விபரம் சிதம்பர சக்கரத்தின் வகை, சக்கர மாறலடைப்பு, அவையடக்கம், அட்டாங்க யோக மார்க்கம், தம்பன பூசை விபரம், விபூதி முதலியன உள்ளன.

இது எமது சுவடி எண் 361/-D721 போன்றது.

வரிசை எண் : 2055 சுவடி எண் : 1058-a

# அகத்தியர் வாக்கியம் - வைத்தியம் - 5

பொருள் : மருத்துவம்

நூலாசிரியர் : அகத்தியர் ஏடுகளின் எண்ணிக்கை: 11 (23-33)

சுவடியின் நிலைமை : மிகப் பழுது பக்கத்திற்கு : 7-8 வரிகள்

அளவு : $39\frac{1}{2} \times 3\frac{1}{2}$ செண்டி மீட்டர் எழுத்து : தமிழ்

கி எண்ணிக்கை : 400 முழுமை

## தொடக்கம்

நாடியதோ ரகண்டபரி பூரணமாய் நின்ற
நாதனொடு கிணேசன்முதல் கந்தன் காப்பு
ஆடியதோர் சிவனாரு மென்னைப் பெற்ற
ஆத்தாளும் நாவுதனில்க் குடிகொண் டேதான்
பாடியதோர் வயித்தியமன் பதுந்தான் சொல்வேன்
பண்பான புலஷ்த்தியனே யின்னூ லோடே
தேடியதோர் பூரணசூஷ்த் திரத்தில் நன்றாய்த்
தீட்சையொடு கருக்குருவுந் திடமி தாமே ! —1

## முடிவு

கண்டாக்கால் வாதமெல்லாம் அடிக்கீழ் போற்றுங்
கருவான சவுக்கார மகிமை தன்னை
விண்டாக்கால் நசித்திடுவாய் நூல்கு டாதே
வேதாந்த ஞானியென்றா லீயார் பாரு
தொண்டுசெய்து பதினாறு வருஷங் காத்தால்
சோதித்துப் பின்பவர்க்கு யீய்வா யப்பா
சண்டமா ருதம்போலே வெளிய தாக
சாற்றியதோர் வயித்தியம் அன்பதுந்தான் முற்றே ! —50

## காலம்

இல்லை

## குறிப்பு

இது, எமது சுவடி எண் 121-h/D.191, எண் 3-h/D,569 போன்றது.

வரிசை எண்: 2056 சுவடி எண்: 1058-b

# அகத்தியர் வாக்கியம் - நவசித்தர் குழம்பு

பொருள்: மருத்துவம்

நூலாசிரியர்: அகத்தியர்

ஏடுகளின் எண்ணிக்கை 9 (34—42)

சுவடியின் நிலைமை: மிகப் பழுது

பக்கத்திற்கு: 7–8 வரிகள்

அளவு: 39×3½ செண்டி மீட்டர்

எழுத்து: தமிழ்

கி. எண்ணிக்கை: 350

குறை

## தொடக்கம்

காசினியில் மானிடர்க்குப் பிணிகள் நீங்கக்
கருத்துடைய அகஷ்த்தியனார் பாடல் தன்னை
வேசினிய நவசித்தர் குளம்பு தன்னை
வேதாந்தம் பாடிவிட்டேன் சித்தி யாக
ஆசினிய சித்தாந்த மடக்கிப் போட்டேன்
அறியார்கள் சுத்திசெய்து ஆட மாட்டார்
பேசினிய சாபங்கள் நிவிர்த்தி செய்து
முன்யொடுப்பர் தாம்பூல மாதி யென்றே! - 1

## முடிவு

கேளப்பா செந்தூரம் பணவிடையி லின்னங்
கெடியாக யெருக்கலையின் பழுப்பதனை வாட்டி
நாளப்பா வொருசேரை தண்ணீ ருண்ண
நலமாக ........மோருஞ்சோ றுண்ணு
கேளப்பா வொன்று மில்லை ஒண்ணைவிட் டொடுநாள்
கொண்டிட,வே விசபாகங் காமாலை சோகை
நீளப்பா சுரமோடு பயித்திய பாண்டு
நீர்க்கோர்வை அ(ளு)வையொடு சுரமும் போமே - 53

## காலம்

இல்லை

## குறிப்பு

இக் குழம்பு செய்முறை, தீரும் வியாதிகள் முதலியன இதில் கூறப்பட்டுள்ளன.

வரிசை எண் : 2057 சுவடி எண் : 1059

# ஊழிக்காத்து விபரம் முதலியன

பொருள் : மருத்துவம்

நூலாசிரியர் : அறியக்கூடவில்லை

ஏடுகளின் எண்ணிக்கை : 16 + 2

சுவடியின் நிலைமை : மிகப் பழுது

பக்கத்திற்கு : 8-10 வரிகள்

அளவு : 39 × 3½ செண்டி மீட்டர்

எழுத்து : தமிழ்

கி. எண்ணிக்கை : 700

குறை

## தொடக்கம்

அண்டரண்ட மாகிநின்ற அருளே காப்பு
ஆனந்த மாகிநின்ற அம்மை காப்பு
குண்டமெனும் ......... .......... காப்பு
குருவான பராபரத்தின் குணமே காப்பு
மண்டலங்கள் மூன்றுமொன்றாய் நிறைந்து நின்ற
மகத்தான ரவிமதியின் சுடரே காப்பு
சண்டமெனும் மாருதம்போல் ஊளி தன்னைச்
சாற்றக்கேள் சாமளையின் பாதங் காப்பே ! —1

## முடிவு

ஒட்டியது சாமந்தீ யோயம் இருபத்து நாலும்
ஓயாக கலப்பா லுரவாட்டு பற்பத்தைக்
காயான தாரங் கவச மிடு

(இதற்கு மேல் இல்லை)

## காலம்

இல்லை

## குறிப்பு

இதில், ஊழிக்காத்து விபரம், லாட சூஷ்த்திரம், ஆசிவரியம் தாது வர்த்தனை யுண்டாக, ரச சுத்தி முதலியன உள்ளன.

இதன் பின்னர் 60, 61 ஆகிய இரண்டு ஏடுகள் வேறாக உள்ளன. வைத்தியச் செய்யுட்கள் 157 முதல் 180 வரை உள்ளன.

வரிசை எண் : 2058 சுவடி எண்: 1060

# வைத்தியத் திரட்டு

பொருள்: மருத்துவம்

நூலாசிரியர் : பலர்

ஏடுகளின் எண்ணிக்கை: 38

சுவடியின் நிலைமை : மிகப் பழுது

பக்கத்திற்கு : 9-10 வரிகள்

அளவு : $22\frac{1}{2} \times 3$ செண்டி மீட்டர்

எழுத்து : தமிழ்

கி. எண்ணிக்கை : 800

குறை

## தொடக்கம்

............க்குள்ளே இந்தச் சாதிக்காயை வைத்து
இலவங்கம், சாதிப்பத்திரி நற்ச் சீரகம்
இவை மூன்றுங் கூட வைத்து ஒரு
சீலையில்க் கட்டிச் சாணாங்கத்துக் குள்ளே
வைத்து ஒருவிராட்டி கீழும் மேலும்
குக்குட பிடம் வைக்கவும்.

## முடிவு

துருசு வெள்ளைப் பாசாணம்
துய்ய கல்லுச் சுட்டபொடி
யெரிய மெத்...முடப் பூலாவிச்
சாரந் தன்னில் பணிசெய்து
சரியத் தழலி னொவ்வொன்று
நெய்யி............ ............ —18

## காலம்

இல்லை

## குறிப்பு

இதில், ஊதுகாமாலைக்கு, குன்மத்துக்கு, வயறு கழிய, முதிர் காச்சலுக்கு குடி மருந்து, பில்லி சூனியத்துக்கு, வில் தெரிக்க, உள்மூலம் பிற மூலத்துக்கு மருந்து, நீரழிவுக்கு, வலிப்புக்கும் பெரும்பாட்டுக்கும், மசநாய் கடித்தால் முதலியன உள்ளன.

ஏட்டெண்கள் தொடர்ச்சியாக இல்லை

வரிசை எண் : 2059 சுவடி எண் : 1061-a

# அகத்தியர் கற்ம சூத்திரம் - 300

பொருள் : மருத்துவம்

நூலாசிரியர் : அகத்தியர்

ஏடுகளின் எண்ணிக்கை : 37

சுவடியின் நிலைமை : மிகப் பழுது

பக்கத்திற்கு : 9-10 வரிகள்

அளவு : 45×4 செண்டி மீட்டர்

எழுத்து : தமிழ்

கி. எண்ணிக்கை : 2000

முழுமை :

## தொடக்கம்

பூரணமா மூலமுத லாறா தாரம்
புரியஷ்ட்ட திசை வாயும் நாடி மூன்று
காரணமா யிடைபின்னாயி சுளினை யாக
கலந்து நின்ற வாதபித்த சிலேற்பன மாகிக்

## முடிவு

தெரிஷணமாங் கண்களிலே வருவ தேது
தீர்க்காயு ....... ...... ............ .........
கறிசணமா யின்னூலின் கற்ம்மம் கற்ம்மம்
கட்டான மருந்துவகை கைக்குள் முற்றே ! - 302

அகத்தியர் அருளிச் செய்த கற்ம சூத்திரம்
முற்றும்
தட்சிணாமூர்த்தி பாதமே துணை

## காலம்

பவ வருஷம் தை மாதம் 7-ந் தேதி சுப்பிராய முதலியாருக்கு முக்கண்டை ஆசாரி அகத்தியர் கற்ம சூத்திரம் முன்னூறும் எழுதிக் குடுத்த யுபயம்

தெட்சணாமூர்த்தி துணை

## குறிப்பு

இது எமது சுவடி எண் 8/D-9 போன்றது. பாடவேறுபாடுகள் காணப்படுகின்றன.

வரிசை எண் : 2060 சுவடி எண் : 1061-b

# கைலாசச் சட்டை முனியார் நிகண்டு – 1200

பொருள் : மருத்துவம்

நூலாசிரியர் : சட்டை முனியார்

ஏடுகளின் எண்ணிக்கை : 38

சுவடியின் நிலைமை : மிகப் பழுது

பக்கத்திற்கு : 8-9 வரிகள்

அளவு : 45 × 4 செண்டி மீட்டர்

எழுத்து : தமிழ்

கி. எண்ணிக்கை : 1500

குறை

## தொடக்கம்

ஆதியந்த மில்லாத பூரணத்தை நோக்கி
யடுத்துநின்ற உன்மனைத்தாய் பதத்தைப் போற்றி
பாதியந்த மாகநின்ற உமையாள் சொல்ல
பாங்கான சின்மயத்தின் கருணை யாலே.

## முடிவு

மாத்திடக் கல்வத்தில் வழமாய் .........யே
கெந்தகம் .........ப்பய .........னானூறு ......கிய
தாழகம் மாட்டுப் பலம் நாலு தறுக்கு......
மனோசிலைத் தானே அரைப்பல .........ப்பிக்கே. 500

## காலம்

இல்லை

## குறிப்பு

இது எமது சுவடி எண் 318-b/D.594 போன்றது. பாடபேதங்கள் உள்ளன.

வரிசை எண் : 2061 சுவடி எண்: 1062-a

# ரோமரிஷி - 16

பொருள்: மருத்துவம்

நூலாசிரியர் : ரோமரிஷி

ஏடுகளின் எண்ணிக்கை : 4

சுவடியின் நிலைமை: மிகப் பழுது

பக்கத்திற்கு : 6 வரிகள்

அளவு : $23\frac{1}{2} \times 2\frac{1}{2}$ செண்டி மீட்டர்

எழுத்து : தமிழ்

கி. எண்ணிக்கை : 100

குறை (தொடக்கம் இல்லை)

## தொடக்கம்

..........ப் பலவகை நூல் கற்றுக் கொண்டு .........
............... ............... திரிவாரய்யா
சாட்டையில்லாப் பம்பரங்கொண் டாட்டலாமோ
தண்ணியென்று எண்ணெயுண்டால் தாகம் போமோ ......... 8

## முடிவு

வேகாதோ யேன்யென்னாத் தொந்தத் தாலே
வெண்ங்கிளிஞ்சி கெற்பநிறம் விட்டோர்க் கெல்லாம்
போகாதோ குருமுடிக்கும் பாகம் எல்லாம்
பூட்டறிந்து பார்த்தவர்க்குப் பொருள்தான் முற்றே ! - 16

ரோமரிசி பதினாறு

முற்றும்

## காலம்

இல்லை

## குறிப்பு

இது எமது சுவடி எண் 145/D 234-ன் வேறாயது போலும். ஆனால் சுவடி எண் 644/D1267 ரோமரிஷி சுருக்கம் - 16 போன்றது.

வரிசை எண் : 2062

சுவடி எண் : 1062-b

# கமலமுனி ஞானம் — 16

பொருள் : மருத்துவம்

நூலாசிரியர் : கமலமுனி

ஏடுகளின் எண்ணிக்கை : 7 (8-14)

சுவடியின் நிலைமை : மிகப் பழுது

பக்கத்திற்கு : 6 வரிகள்

அளவு : $23\frac{1}{2} \times 2\frac{1}{2}$ செண்டி மீட்டர்

எழுத்து : தமிழ்

கி. எண்ணிக்கை : 150

முழுமை

## தொடக்கம்

மூலமுத லாகிநின்ற ஆயி பாதம்
முச்சுடராய் நின்றதொரு சோதி பாதம்
தலமதில் தென்மலைவாழ் ஆசான் பாதம்
தவிராமல் போற்றியிந்த நூலைச் சொல்வேன்
கோலமணி பூரகமே சேர்ந்து வாழுங்
குறித்துநின்ற சித்தர்பாதம் போற்றி
மாலவனும் தேவர்களும் காணொண் ணாத
மவுனமென்ற பூரணமே காப்ப தாமே ! — 1

## முடிவு

நோக்கையிலே ஆவின்பால் நித்தம் கொள்ளு
நுண்ணிமைய அரைவீட்டில் யிருந்து பண்ணு
தேக்கயிலே பவரணையும் பஞ்ச மீயும்
தெளிவான சிராவணமும் தீட்சை கொள்ளு
பார்க்கையிலே பஞ்சுப்பொதி தீய்ப்பட் டாப்போல்
மற்றுமட மணாக்கா பலித மாகும்
பார்க்கையிலே கமலமுனி சுருக்கு ஞானம்
பண்பாகப் பதினஞ்சும் பாடி முற்றே ! — 15

கமலமுனி ஞானச் சுருக்கம்
முற்றும்
சிவமயம்

## காலம்

இல்லை

## குறிப்பு

இதில், தலைப்பு கமலமுனி ஞானம் – 16 என்றுளது. ஆனால் செய்யுட்கள் பதினைந்தே உள்ளன. பாடலிலும் பதினைந்து முற்றும் என்றுளது.

வரிசை எண் : 2063 சுவடி எண் : 1062-c

# குரு போத விளக்கம்

பொருள் : தத்துவம்

நூலாசிரியர் : அறியக்கூடவில்லை

ஏடுகளின் எண்ணிக்கை : 4(15-18

சுவடியின் நிலைமை : மிக மிகப் பழுது

பக்கத்திற்கு : 6 வரிகள்

அளவு : $23\frac{1}{2} \times 2\frac{1}{2}$ செண்டி மீட்டர்

எழுத்து : தமிழ்

கி. எண்ணிக்கை : 50

முழுமை

## தொடக்கம்

குருபாத மானது கொண்டனை சிரசின்மேல்
யிருபத மாக யிருப்பது காரணம்
ஒருபாத மற்றி வுருபத முற்றி
வருமூல மகிமதி யோடி ரவியே ! — 1

## முடிவு

தந்தை பெண்டு பிள்ளை தாரம் சகோதரமும்
விந்துமுதற் பொய்யாகி வீணரே — விந்து
அரன்சரத வாகி அரனடியைப் போற்றி
உறங்கி உறங்கா திரு

வான்மணியைத் தேவர் வனத்திலே அய்வேடர்
ஞானமணி யைத்திருடு நல்கினார் — ஞானம்
பெருபாலன் செல்வப் பேரொளியை நோக்கி
உறங்கி உறங்கா திரு

## காலம்

இல்லை

## குறிப்பு

இதில், ஞானம் பற்றிய குறிப்புகள் செய்யுட்களாகக் கூறப்பட்டுள்ளன. இதில் 15 பாடல்கள் இருக்கின்றன.

வரிசை எண் : 2064 சுவடி எண் : 1062–d

# சட்டை முனி ஞானம்

பொருள் : தத்துவம்

நூலாசிரியர் : சட்டைமுனியார் ஏடுகளின் எண்ணிக்கை : 1 (19)

சுவடியின் நிலைமை : மிக மிகப் பழுது பக்கத்திற்கு : 5 வரிகள்

அளவு : 23½ × 2½ செண்டி மீட்டர் எழுத்து : தமிழ்

கி. எண்ணிக்கை : 15 குறை

## தொடக்கம்

அகலாத அரியமண் டத்தைக் கேளு
அகாரமுடன் உகாரத்தை அணைத்துக் கொண்டு
பகலான உதயமதில் மவுனந் தன்னில்
பருவமுடன் கும்பகத்தைப் பணிந்தா யானால்
செகமுழுது மாடிவரும் சூரி யன்தான்

## முடிவு

பத்தலாய் விடாதபடி நின்ற னல்.........
......... மூலவன்னி யகன்று போகும்
அத்துக்கு அசதியெல்லாம் அகன்று போகும்
அறுசுவையின் விபரமெல்லாம் அகன்று போமே -2

## காலம்

இல்லை

## குறிப்பு

இதில் இரண்டு பாடல்களே உள்ளன. பிழைகள் மலிந்துள்ளன. தொடர்ச்சி இல்லை.

வரிசை எண் : 2065 சுவடி எண் : 1062-e

# தெட்சிணாமூர்த்தி ஞானம் - 3

பொருள் : தத்துவம்

நூலாசிரியர்: தெட்சிணாமூர்த்தி

ஏடுகளின் எண்ணிக்கை : 2 (20-21)

சுவடியின் நிலைமை : மிக மிகப் பழுது

பக்கத்திற்கு: 5-6 வரிகள்

அளவு: $23\frac{1}{2} \times 2\frac{1}{2}$ செண்டி மீட்டர்

எழுத்து : தமிழ்

கி, எண்ணிக்கை: 30

முழுமை

## தொடக்கம்

சித்......... (சூனியமாய்ச்) சிகார மாகித்
தேவியுட அட்சரமே ஆஊ வாகி
முத்தான ரீங்காரங் கிலியு மாகி
மூன்றெழுத்தே வாலையதாய் முடிவ தாகி

## முடிவு

அற்பனமா யதுதன்னை மனத்து ளேற்று
அப்பனே மேல்வாசல் திறந்து போகும்
நற்பதுனாள் மானத்தாற் பூசை பண்ணு
நலமான சிவசித்தர் ஞானம் முற்றே ! -3
அகத்தியீசுரர் ஞான மூணு

முற்றும்
சிவமயம்

## கோலம்

இல்லை

## குறிப்பு

இதில், சத்தியின் பீஜாட்சரங்கள், பூசை முதலியன கூறப்பட்டுள்ளன. பிழைகள் மலிந்து கிடக்கின்றன.

வரிசை எண் : 2066

சுவடி எண் : 1062-f

# கெவுன ரசமணி - 14

பொருள் : மருத்துவம்

நூலாசிரியர் : அறியக் கூடவில்லை

ஏடுகளின் எண்ணிக்கை: 6 (22-27)

சுவடியின் நிலைமை : மிக மிகப் பழுது

பக்கத்திற்கு : 6 வரிகள்

அளவு : $23\frac{1}{2} \times 2\frac{1}{2}$ செண்டி மீட்டர்

எழுத்து : தமிழ்

கி. எண்ணிக்கை : 100

முழுமை

## தொடக்கம்

ஆதியந்த மில்லாத சின்மயத்தின் பாதம்
அகண்டபரி பூரணமாம் ஆத்தாள் பாதம்
சோதிர மாகிநின்ற கிணேசன் பாதம்
சொல்தனக்கு மெட்டாத சூட்சா சூட்சம்

## முடிவு

கண்டு கைமுறையாய்ச் சொல்லி.........
ரசமணியின் மார்க்கந் தானுமே.......
மார்க்கம் சேர்க்கவே யிம்முறையை.........
பதினாலில்க் கடாட்ச முற்றே ! - 14

## காலம்

இல்லை

## குறிப்பு

இதில் ரசமணி செய்முறை, பலன் முதலியன உள்ளன.

வரிசை எண் : 2067 சுவடி எண் : 1063-a

# அகத்தியர் சித்திராரூட நொண்டிச் சிந்து

பொருள் : மருத்துவம்

நூலாசிரியர் : அகத்தியர்

ஏடுகளின் எண்ணிக்கை : 75
(57-62,65 ஆகிய ஏடுகள் இல்லை)

சுவடியின் நிலைமை : நல்ல நிலை

பக்கத்திற்கு : 7-8 வரிகள்

அளவு : 17×3 செண்டி மீட்டர்

எழுத்து : தமிழ்

கி. எண்ணிக்கை : 1000

குறை

தொடக்கம்

அத்திமா முகவன் சோதி
அடியிணைக் கமலம் போற்றி
சித்திரா ரூடந் தன்னில்
செப்பிய பொருளை யெல்லாம்

முடிவு

திருமகள் விளக்கம் பெற்றுப் பதினாறு
செல்வனையும் பெற்று முத்தி சேர்வதாமே
அரிமகன் கணபதியும் அவர்க்குப் பின்
ஆனந்தமான சரசுவதி வேலோன் - 291

முகில்வண்ணம் கிருபையினால் யெல்லோரும்
முகியாமல் வாழ்ந்திடக் கிருபை செய்வார்,

முற்றிற்று

காலம்

இல்லை

குறிப்பு

இது எமது சுவடி எண் 301-b, D 533 போன்றது.

வரிசை எண் : 2068

சுவடி எண் : 1063-b

# அகத்தியர் சத்தியாரூடம்

நூலாசிரியர்: அகத்தியர்

சுவடியின் நிலைமை: நல்ல நிலை

அளவு: 17 × 3 செண்டி மீட்டர்

கி. எண்ணிக்கை: 1000

பொருள்: மருத்துவம்

ஏடுகளின் எண்ணிக்கை: 51 + 6

பக்கத்திற்கு: 7-8 வரிகள்

எழுத்து தமிழ்

முழுமை

**தொடக்கம்**

வெத்திமா தவத்தோன் கும்பம்
மெய்முனி தவத்தைப் போற்றி
சத்தியா ரூடத்தி லுள்ள
தரும்பொருள் தன்னைத் தேர்ந்து
வெத்தியாய் விருத்தம் நூறும்
மொழிவதற் கென்றும் நல்ல
அத்திமா முகத்தோன் மிக்க
அடியினை யகத்தில் வைப்போம் ! —1

**முடிவு**

தானான யென்குருவே யெனக்குச் சொன்னார்
தாரணியில் பலவிசத்தால் சாகா மல்த்தான்
வாகாகப் பண்டிதர்க்கு உரைத்தே னின்னூல்
மைந்தனே பக்தியுட னினவாய் செய்து
கோணாமல் விடங்களெல்லாம் தீர்த்து நின்றாய்
குவலயத்தி லின்பதா யாரு மெச்ச
தேனான சித்தனென்று பேரும் பெற்று
செயங்கொண்டு யிருப்பதற்கு நிசஞ்சொன் னேனே ! —103

சத்தியாரூடம் 103 பாடல்கள் யெழுதி முடிந்தது.

**காலம்**

யெழுதினது இராசப்ப உபாத்தியாயர் குமாரன் ஜம்புலிங்கம் பிள்ளை.
முற்றிற்று.

**குறிப்பு**

இதில், செத்தபிணம் யெழும்பும் குளிகை, எலிகடிக்கு, வண்டுகடிக்கு, பாம்பு வித்தை முதலியன உள்ளன.

இதில், புள்ளியிட்ட எழுத்துக்கள் காணப்படுகின்றன. நெடிலுக்கு இரட்டைக் கொம்புகளும் காணப்படுகின்றன.

இதன் பின்னர் வைத்தியம் எழுதிய ஆறு ஏடுகள் உள்ளன.

வரிசை எண் : 2069 | சுவடி எண் : 1064

# இராமதேவர் - ஆயிரம்

பொருள் : மருத்துவம்

நூலாசிரியர் : இராமதேவர்

ஏடுகளின் எண்ணிக்கை : 191

சுவடியின் நிலைமை : மிகப் மிகப் பழுது

பக்கத்திற்கு : 8-9 வரிகள்

அளவு : $29 \times 3\frac{1}{2}$ செண்டி மீட்டர்

எழுத்து : தமிழ்

கி எண்ணிக்கை : 6000

குறை

தொடக்கம்

அண்டமெனுங் கேசரியாள் பாதங் காப்பு
அருள்பெருகும் பூரணத்தி னறிவே காப்பு
குண்டமெனுங் குண்டலியாள் குறியே காப்பு
குறியான பராபரத்தின் குணமே காப்பு
மண்டலங்கள் மூன்றுமொன்றாய் நிறைந்து நின்ற
மகத்தான ரவிமதியின் சுடரே காப்பு
பிண்டமெனும் பொருளான அண்ட ரண்டம்
பேரண்டம் நிறைந்தகண பதியே காப்பு —1

முடிவு

அதனமுள்ள மாத்ததிக மென்ன சொல்வேன்
அரகரா பரஞ்சோதி அதிக சோதி
மதனமுள்ள மவுனமடா மகத்தா மார்க்கம்
மக்களே நவலோகந் தன்னில் பூசே ! —978

பூசிநன்றாய் யெருவடுக்கிப் புடத்தைப் போடு
பூ ணமாய்ப் பளுக்குமடா ......... .........

காலம்

இல்லை

குறிப்பு

இதில், வழலை முறை, வழலைச் சுண்ணம், வெடியுப்புச் சுன்னம், கற்பூரச் சுன்னம், துருசுச் சுன்னம், சவுக்காரம், பிண்டம், ஐங்காயத் தயிலம், பூரண மெழுகு, செயநீர், அஞ்சனத் தைலம், மாரணத் தைலம், அஷ்டமாசித்து தயிலம், முதலியன உள்ளன.

இது எமது சுவடி எண் 468/D 1043 போன்றது.

வரிசை எண் : 2070

சுவடி எண் : 1065-a

# தெட்சிணாமூர்த்தி செகசாலம் ஏழு காண்டம் 1200 — முதற்காண்டம்

பொருள் : மருத்துவம்
ஏடுகளின் எண்ணிக்கை : 33
யக்கத்திற்கு : 7-9வரிகள்
எழுத்து : தமிழ்
முழுமை

நூலாசிரியர் : தெட்சிணாமூர்த்தி
சுவடியின் நிலைமை : மிகப் பழுது
அளவு : 27 × 3 செண்டி மீட்டர்
கி. எண்ணிக்கை : 1000

## தொடக்கம்

அஞ்செழுத் துஞ்சுமுக மானபிரா னம்பலத்தில்
நெஞ்சமுத்தி னூடே நிருத்தவே — அஞ்செழுத்து
மீறெழுத்து மூவெழுத்து மிசைந்த சுளியூடே
ஓரெழுத்தாங் கிணேசனரு ளோங்கும்

**முதற் காண்டம்**

பூரணத்தைப் பத்தியிரு பதியி லொன்றிப்
புகழான மூவரையு மூவகையில் கண்டு

★ ★ ★ ★ ★ ★ ★

சீரணித்துப் யோகாம லாயிரத்திருநூறு மார்க்கம்
செப்புகிறே னதிகொண்டு தெளிந்து காணே ! — 1

சீரொரு சால வித்தை
சிவன்குரு வருளிச் செய்த

★ ★ ★ ★ ★ ★ ★

யாரொரு வரையா னாலு
மதத்தினி லடக்கி வைப்பர்ம்

## முடிவு

தீற்கமுதற் காண்டந் தெரிந்தபல மொழியாய்
மூற்கமெனச் சொன்ன முறையெல்லாம் — பாற்றவே
சித்தருக்கு மீனனுரை செப்பியதா லேயிருநூற்
முத்திக்கொரு முதுரை முத்தும் — 195

முற்றும்

முன்னுதாக பாட்டு 5-ம் யிதுனுட முற்றும் — 200

முத்து பண்டிதர்

## காலம்

இல்லை

## குறிப்பு

இதில், பிண்டத் தயிலம், முதலியன உள்ளன. பின்னர் தலைப்புகள் இல்லை நடுப்பகுதி மிக அதிகமாக சிதைந்துள்ளது

வரிசை எண் : 2071 சுவடி எண் : 1065-b

# தெட்சிணாமூர்த்தி சாலத்திரட்டு
# 2-ஆம் காண்டம்

பொருள் : மருத்துவம்

நூலாசிரியர் : தெட்சிணாமூர்த்தி

ஏடுகளின் எண்ணிக்கை : 24

சுவடியின் நிலைமை : மிகப் பழுது

பக்கத்திற்கு : 7-10 வரிகள்

அளவு : 27 × 3 செண்டி மீட்டர்

எழுத்து : தமிழ்

கி. எண்ணிக்கை : 1000

முழுமை

## தொடக்கம்

முத்திரு காண்டத்தே குறியைப் பாட
முதற்கருவி லொருகருவைக் கட்டிக் கொண்டு
பத்திகொடு சூரிய கிரானணம் பார்த்துப்
பருஞ்செடியா மருதூணி காப்புக் கட்டி
கத்திகொண்டு துண்டுதுண் டாக வெட்டி
கண்டகண்ட மாயுலத்திப் பாண்டத் திட்டுக்
குத்திகொடு துவாரமிட்டு மூட்டம் போட்டுக்
குளித்தயில மிரக்கியிடு கூறக் கேளே ! — 1

## முடிவு

ஊட்டயிலே பத்தியமுங் குள்று நாக்கும்
உண்டான சகலபினி உள்ள தெல்லாம்
ஓட்டமுட னோடிவிடும் வியாதி தீரும்
உன்னுடைய உடன்படிக்கை முடிப்பு வாங்கு
பாட்டொன்று நிலையாதே குளறு வான
பண்டிதனே பணம் பிடுங்கும் பசியாதென்றும்
காட்டயிலே நீயாரு வயித்தி யற்குங்
கைகண்ட வித்தையடா காண்ட முற்றே ! — 200

காண்டம் 2-க்கு பாட்டு 400
ரண்டாங் காண்டம் முற்றும்
திரவியப் பிள்ளை கையெழுத்து

## காலம்

இல்லை

## குறிப்பு

இதில், பிரிவு, பயித்தியங் கொள்ள, வாளகி..........ண்டக............க்குவி........ வித்தை முதலியன உள்ளன.

வரிசை எண் : 2072 சுவடி எண் : 1065-c

# தெட்சிணாமூர்த்தி சாலத்திரட்டு
# 3-ஆம் காண்டம்

பொருள் : மருத்துவம்

நூலாசிரியர் : தெட்சிணாமூர்த்தி

ஏடுகளின் எண்ணிக்கை : 38

சுவடியின் நிலைமை : மிகப் பழுது

பக்கத்திற்கு : 7—9 வரிகள்

அளவு : 27 × 3 செண்டி மீட்டர்

எழுத்து : தமிழ்

கி. எண்ணிக்கை : 1000

முழுமை

## தொடக்கம்

காண்டமடா முன்சொன்ன இந்திர சாலம்
கைவல்லிய மாகவுந்தான் கருவைக் கேளு
பாண்டமடா மனமிருந்த நல்வாய்ப் பாண்டம்
பாளாக ஒடையுமுன்னே வசியஞ் செய்யத்
தூண்டுகிறே னிதற்குமுன்னே முனியள் சொன்ன
சோதகத்தை வசியமென்று சூடா தேநீ
வேண்டிடுவாய்க் காந்தமது ஊசி வைக்க
வெடுக்கெனவும் பிடித்ததிலே விராக னொன்றே! – 1

## முடிவு

செவ்வாகுங் கூடுவிட்டுக் கூடு பாய
திரிலோகத் தார்வணங்கக் கயிலை செங்கி
வவ்வலாய்ப் பார்த்திருக்க வாமாஞ் செய்ய
மைந்தர்முதல்க் கிழவர்வடி வாயி ருக்க
யிவ்வாகுஞ் சாலவித்தைக் கிணங்கு ளாகுட்ச
முரைக்கிறேன் புலத்தியனே உத்துக் கேளு
கவ்வாத மனங்கலங்கி உலகத் தோர்கள்
களியுமுன்னே யிவைசெய்யக் கருவைக் கேளே – 202

மூன்றாங் காண்ட முற்றும்
தெட்சிணாமூர்த்தி நாயனார் துணைசெய்ய வேண்டியது,
முற்றும்
யிது எழுதினது திரவியம் பிள்ளை

## காலம்

இல்லை

## குறிப்பு

இதில், இடுகரு மாற்ற, அட்டம எண்ணெய் விபரம், எண்ணெய்க்குத்தீரும் வியாதி, தேவாங்கு வாடை, சொர்ணமான் வாடை முதலியன உள்ளன.

வரிசை எண் : 2073 சுவடி எண் : 1065-d

# தெட்சிணாமூர்த்தி இந்திரசால நிகண்டு
# 4—ஆம் காண்டம்

பொருள் : ஜாலம்

நூலாசிரியர் : தெட்சிணாமூர்த்தி

ஏடுகளின் எண்ணிக்கை : 22

சுவடியின் நிலைமை : மிகப் பழுது

பக்கத்திற்கு : 7- 9வரிகள்

அளவு : 27 × 3 செண்டி மீட்டர்

எழுத்து : தமிழ்

எண்ணிக்கை : 1000

முழுமை

## தொடக்கம்

காப்பு

ஏத்த சால நிகண்டிரு நூறையுஞ்
சாத்த மூல ரகத்தியர் தாமுமே
பூத்த தாரணி பூபதி நாதமே
காத்த வேழமுகன் கணபதி காப்பதே !

திருமந்திரம்

கோப்புக்கு விந்து வட்டக் கருவளி
மூப்புக்குத் தீயை முன்னே வரைந்திடு
கோப்புக்கு வுன்னலா கூட்டை யளிப்பது
ஆப்பிது போனா லாடாது தேரே ! —1

## முடிவு

பாரினி ... மவு முறைப்படி பார்த்துத்
தேருநீ பாவஞ் செய்யவும் வேண்டா
மாறிநீ பாரு அறுபத்து னாலும்
நேரிரு நூறு நிகண்டிது முற்றே ! —200

யிந்திர சால நிகண்டு முற்றும்

## காலம்

இல்லை

## குறிப்பு

இதில், திருமந்திரம், கண் கெடுக்க, சாதம் வேகாமல், அஞ்சனம், வாடை திலதம், பஞ்சாச்சரம், ஆட்டு விலங்கு முறிய, மயக்க, நாவடக்கம், சூடு யெழும்பாமல், ஆடுமாடு யெழும்பாமல், மாரணம், பாக்குக் கொடுக்க, தகடு, ஓம வகை, பாவைக் கரு, கொடுமைத் தொழில், தயில மெழுகு, வழலை யருமை, சல்லிய மூலி, தெரி சிங்கி, முதலியன உள்ளன.

இதில், 5-வது மற்றும் 6-வது காண்டங்கள் இல்லை.

வரிசை எண் : 2074

சுவடி எண் : 1065-e

# தெட்சிணாமூர்த்தி பரிபாஷை
# 7-ஆம் காண்டம்

பொருள் : மருத்துவம்

நூலாசிரியர் : தெட்சிணாமூர்த்தி

ஏடுகளின் எண்ணிக்கை : 11

சுவடியின் நிலைமை : மிகப் பழுது

பக்கத்திற்கு : 7-9 வரிகள்

அளவு : 27 × 3 செண்டி மீட்டர்

எழுத்து : தமிழ்

கி எண்ணிக்கை : 500

முழுமை

## தொடக்கம்

பூரணி புவனந் தன்னிற்
பொதிகையில் வந்து நாளும்
சீரணி முருக னந்தி
சிவனுமை யருளும் போதுத்
தாரணி வினோத வித்தை
சாலத்தின் கருக்கள் சொன்னே
னாரணி யேழாங் காண்டம்
ஆனைமா முகத்தன் காப்பு

## முடிவு

பேரென்ன ஆதி ரைநாள்
பிறக்கரு யிதுவே நன்மைக் கெல்லாந்
தூரென்ன தலைப்பு மாகுஞ்
சொன்னமாத் திரத்துக் கெல்லாம்
பேரென்ன ................ வறு
விடத்தலை யுருவே மூலம்
பாரென்ன யேழாங் காண்டம்
படித்திடு மவுன முத்தே ! —101

முற்றும்

ஆக காண்டம் 7-க்கு 1200
தெட்சிணாமூர்த்தி துணை செய்ய வேண்டியது

## காலம்

யுவ வருஷம் வையாசி மாதம், 2-ந் தேதி எழுதி முடிந்தது. முற்றும். குருபாதந் துணையாக வேண்டியது.

## குறிப்பு

இதில், சிட்டுக்குருவி என்ற ஒரு தலைப்பு மட்டும் உள்ளது. குண்டலி நீக்கம், பூவையர்க்கும் மகவுக்கும் முதலியன காணப்படுகின்றன.

இதற்கு முன் காண்டங்கள் 5-ம், 6-ம் இல்லை.

வரிசை எண் : 2075 சுவடி எண் : 1066-a

# அகத்தியர் மாந்திரீகம் - 50

பொருள் : மாந்திரீகம்

நூலாசிரியர் : அகத்தியர் ஏடுகளின் எண்ணிக்கை : 11

சுவடியின் நிலைமை : மிக மிகப் பழுது பக்கத்திற்கு : 8-9 வரிகள்

அளவு : $27\frac{1}{2} \times 3$ செண்டி மீட்டர் எழுத்து : தமிழ்

கி. எண்ணிக்கை : 300 முழுமை

## தொடக்கம்

பத்தியுடன் பார்பதியைப் போற்றி செய்து
பருவாகக் குருமுனிதான் பாரி லோற்குச்
சத்தியமாய் முறைப்பாடு யேவல் பில்லி
சாத்தினோந் தெய்வகுத்தஞ் சரிதை துன்ப
முத்தியுடன் குணங்குறிகள் நீங்கும் நேர்மை
முறையுடனே சொல்லென்று முனிந்து கேட்க
வஷ்த்து வென்ற உமையவன்தான் மன மகிழ்ந்து
வண்மையுடன் வையகத்தில் வகைசொன் னானே ! — 1

## முடிவு

கரையான ஆதரணத்துக் கிதுவே யாதி
கண்டகண்ட மந்திரத்தைக் கருத வேண்டாம்
பரையான உமையவளைப் பணிந்து போற்றி
பார்தனிலே யித்தொழிலை யாடிப் பாடி
வரை(யானகுகை)க் குளிருப்போர் உனக்கு யீடோ
மாந்திரீக குகைக்கடுமை மகிழ்வா ரப்பா
உரையான அன்பதுடன் முறைதப் பாமல்
உலகத்தோர் துயர்நீக்கி உகந்து பாரே ! — 50

அகத்தியர் அன்பது
முற்றும்

## காலம்

இல்லை

## குறிப்பு

இதில், பிசாசு விலக, அனுமார் சக்கரம், ஏவல், பறவை மை, கெருடதோஷம் முதலியன உள்ளன. இதில் நடுப்பகுதி மிகமிகச் சிதிலமாக உள்ளது.

வரிசை எண் : 2076

சுவடி எண் : 1066-b

# அகத்தியர் மாந்திரீகம் - 10

பொருள் : மாந்திரீகம்

நூலாசிரியர் : அகத்தியர்

ஏடுகளின் எண்ணிக்கை : 2

சுவடியின் நிலைமை : மிக மிகப் பழுது

பக்கத்திற்கு : 8-9 வரிகள்

அளவு : 27½×3 செண்டி மீட்டர்

எழுத்து : தமிழ்

கி. எண்ணிக்கை : 75

முழுமை

## தொடக்கம்

ஆதியாம் பராபரனைப் போற்றி செய்து
அம்மையவ ளுலகத்தோர் பிழைக்க வேண்டி
நீதியா மாந்திரீகஞ் சக்க ரங்கள்மூலி
நிசமாக வொரையென்று அரனைக் கேழ்க்கச்
சோதியா முமையவளே நீகே ளென்று
சொல்லுகிறேன் பஞ்சாரத்தின் சுருபந் தன்னை
வாதியாய்ப் பெரியோர்க்குப் புத்தி யுள்ள
மன்னவர்க்கு மிதுவாகும் வகையைக் கேளே ! — 1

## முடிவு

நீறாகு மஞ்சனத்தி லகப்ப டாது
நிலையான கர்மவித்தை மறந்திடாதே
........... ............ ............ ............
வஞ்சினைக்குங் களவுக்கும் பேரி டாதே
தேறான கோடிவித்தை யாடிப் பாரு
செப்பினே னதுக்குளச் சிறப்பு முற்றே !

தெட்சிண்ணாமூர்த்தி துணை

## காலம்

இல்லை

## குறிப்பு

இதில், மாந்திரீகம், வைத்தியம் ஆகியவை கூறப்பட்டுள்ளன.

வரிசை எண் : 2077 சுவடி எண் : 1067

# அகத்தியர் கர்ம காண்டம்

பொருள் : மருத்துவம்

நூலாசிரியர் : அகத்தியர்

ஏடுகளின் எண்ணிக்கை : 98

சுவடியின் நிலைமை : மிக மிகப் பழுது

பக்கத்திற்கு : 6-8 வரிகள்

அளவு : 27 × 3 செண்டி மீட்டர்

எழுத்து : தமிழ்

கி. எண்ணிக்கை : 2000

முழுமை

## தொடக்கம்

பூரணமாம் மும்மூலப் பொறியிற் சூடாம்
புகையெழுப்பி மேகமதாய்ச் சிரசில் சூடாய்க்
காரணமாய் நீரெறக்கும் பீனிசம்போ லாகும்
கனலெழுந்த வாயுவதாய்க் கபால மெல்லாம்

## முடிவு

பத்தியாய்ப் பிழைப்பதற்குச் சாத்தில் சொல்லு
புகழான மண்வாசி வாயு வேகம்
முத்தியாய் யிருவினை மத்த தேசி
முதலான சொற்கபத முத்தி தானே ! — 300
அகத்தியர் கர்ம காண்டம்
முற்றும்

## காலம்

இல்லை

## குறிப்பு

இது, எமது சுவடி எண் 323 - b / D 623 போன்றது.

வரிசை எண்: 2078 சுவடி எண்: 1068

# அகத்தியர் வாகட நூல்-1500

பொருள்: மருத்துவம்

நூலாசிரியர்: அகத்தியர் ஏடுகளின் எண்ணிக்கை: 370

சுவடியின் நிலைமை: மிக மிகப் பழுது பக்கத்திற்கு: 8-11 வரிகள்

அளவு: 23 × 2½ செண்டி மீட்டர் எழுத்து: தமிழ்

கி. எண்ணிக்கை: 8000 குறை

## தொடக்கம்

பாகுடன் கிணேசன் பாதம்
பணிந்துமுக் குணங்க ளாய்ந்து
வாகடச் சுவடி யெல்லாம்
வகை வகை தொகுத்துப் பார்த்து

## முடிவு

சோமப்பா வந்தநூல் துகையே தென்றால்
சொல்லிவைத்தே னாயிரத்து ஐநூ றுக்குள்
……… சொல்லிவைத்தேன் னாதாக்கல் கடாட்சத் தாலே
……… ……… ……… முத்தே ! —1537

ஆயிரத் தஞ்ஞூறு பெருநூல் முற்றும்
தேவி சகாயம்

குமரகுருபர அமர பயங்கர அம்முக தயாநிதி
சத்திவேல் முன்னின்று கிருபை தங்கி
லட்சிக்க வேண்டியது.

## காலம்

ஏவிளம்பி வருடம், அற்பியை மாதம் 8-ஆம் தேதி மங்கலம் உபக்கிராமப் புதுப் பட்டியிலிருக்கும் புன்னவனம்……… தனதுக்கு எழுதியது. பெருநூல் வைத்தியம் -1500 கிருபா கடாட்ச முண்டாக வேண்டியது.

## குறிப்பு

இது, எமது சுவடி எண் 301-h/D-539, போன்றது. மிகமிகச் செல்லரித்த சுவடி இடையிடையே வெற்றேடுகள் உள்ளன. ஏடுகளில் ஏட்டெண்கள் உள்ளன.

வரிசை எண் : 2079 சுவடி எண் : 1069

# அகத்தியர் வாகடம்-1500

பொருள் : மருத்துவம்

நூலாசிரியர் : அகத்தியர் ஏடுகளின் எண்ணிக்கை : 340

சுவடியின் நிலைமை : மிக மிகப் பழுது பக்கத்திற்கு : 7-8 வரிகள்

அளவு : 33 × 4 செண்டி மீட்டர் எழுத்து : தமிழ்

கி. எண்ணிக்கை : 10000 முழுமை

## தொடக்கம்

அடிமுடியு மாகிநின்ற நிற்குணத்தைப் போற்றி
அதுகடந்து நிர்மலத்தை அடுத்தென் னாளும்
வடிவுடைய சிவனுமையைப் பூசை பண்ணி
மகத்தான சின்மயத்தின் கருணை யாலே !
படிமீதில் வயித்தியந்தான் லட்சம் மிரண்டு
பாடியதேசர் பரப்பை யெல்லாம் குறுக்கி யானும்
சடுதியாய்ச் சூத்திரந்தான் ஆயிரத்தந் நூறுஞ்
சாற்றினோங் கிணேசனருள் தான்காப் பாமே ! —1

பாகுடன் கிணேசன் பாதம்
பணிந்துமுக் குணங்க ளாக
வாகடச் சுவடி யெல்லாம்
வகை வகை தொகுத்துப் பார்த்து

## முடிவு

சோமப்பா யிந்தநூல் துகையே தென்றால்
சொல்லுகிறேன் ஆயிரத்தஞ்னூத்தில் செல்லும் பேதம்
நாமப்பா உள்ளபடி சொல்லி வைத்தோம்
நாதாக்கள் கடாட்சத்தால் சூத்திரந்தான் முற்றே !

தெட்சிணாமூர்த்தி கிருபாகடாட்ச முண்டாவதாகவும்
முற்றும்

## காலம்

பெருமாள் அவில்தார் அவருடைய பெருமையும் தயாளமும் விவேகத்துனாலேயும் இந்த நூல் பார்க்க வேணுமென்று ஆவலாயிருந்தபடியினாலே இந்த நூல் அவருக்குக் கிடைத்தது. ஆகையால் அகத்திய மகாமுனியானவர் அவருடைய இருதயத்திலிருந்து இதைத் தெளியப்படுத்தும் படிக்குத் தங்களை மிகவும் கோரி தோத்திரம் பண்ணினேன். வேணும் சிரஞ்சீவியாகக்கடவது, சுபமஸ்து, மங்கள வைபோகத்துடனே யெந்நாளும் வாழி. வாழி.

ஸ்ரீ ராமஜெயம்
சுபமங்களம் சுபமஸ்து

## குறிப்பு

இது, முன் சுவடி போன்றது. முதற்பாடல் மிகுதியாயுளது.

வரிசை எண் : 2080 சுவடி எண் : 1070

# திருமூலர் மந்திரம்

பொருள் : மருத்துவம்

நூலாசிரியர் : திருமூலர் ஏடுகளின் எண்ணிக்கை : 9

சுவடியின் நிலைமை : மிக மிகப் பழுது பக்கத்திற்கு 8-9 வரிகள்

அளவு : $19\frac{1}{2} \times 3$ செண்டி மீட்டர் எழுத்து : தமிழ்

கி. எண்ணிக்கை : 200 முழுமை

## தொடக்கம்

உலக மியக்க மொருபெரு கன்றினை
பலகலை சொன்மலை பாவை புதல்வனை
அலகில கலைஞான மாகிய யானையைத்
தலையில்வைத் துதிசெயஞ் சாற்றுகின் றேனே ! — 1

## முடிவு

குருவான நந்தி குணம்............புரைத்து
திருவான மங்கை சேர்ந்தபொற் பாதம்
பரிவான மூலம் பார்த்துத் தெளிந்தபின்
வரு............கண்டீ ருலக மயக்கமே !

திருச்சிற்றம்பலம் துணை
திருமந்திரம் முற்றும்

## காலம்

நமச்சிவாயம் பிள்ளை கையெழுத்து . சோளமாதேவி யிருப்பட்டம் அவர் குமாரன் அங்கணனு எழுதியது. திருமூலர் மந்திரம் முற்றும். வைகாசி மாதம் 25-ந் தேதி

## குறிப்பு

இதில். பூரணமூலி, ஆனந்தமூலி, உண்மை பேசுதல் முதலியன பேசப்பட்டுள்ளன. தலைப்பு திருமூலர் மந்திரம் என்றேயுளது.

வரிசை எண் : 2081 சுவடி எண் : 1071

# மச்சமுனி சூத்திரம் நிகண்டு

பொருள் : மருத்துவம்

நூலாசிரியர் : மச்சமுனி

ஏடுகளின் எண்ணிக்கை : 18

சுவடியின் நிலைமை : மிக மிகப் பழுது

பக்கத்திற்கு : 8-9 வரிகள்

அளவு : 19½ × 3 செண்டி மீட்டர்

எழுத்து : தமிழ்

கி. எண்ணிக்கை : 400

முழுமை

## தொடக்கம்

முப்பாழுக் கப்பால் முடிந்தமுத லென்னாளும்
தப்பாமற் பூரணத்தைச் சாறுவார் – எப்போதும்
வேகாச் சடலமுத்தி வேண்டுகொள்ளு முக்கோண
சாகாக் கிணேசனருள் தான்.

திருமந்திரம்

பூரணத் தெய்வம் புகழ்பெற்ற தெய்வங்
காரணத் தெய்வம் கருத்தஞ்சு பூதம்

## முடிவு

ஒதியுறி வாலே யுள்ளஞ் செழுத்தையு
மாதியு மந்தரு மாந்திடும் பூரணம்
சோதியில் னாதன் றுரிய மிரந்திரம்
நீதியா யின்பம் நிலைத்திடு முத்தியே ! – 105

மச்சமுனி நிகண்டு மூற்றும்
சம்பூரணம்

## காலம்

சோபகிருது வருஷம் மார்கழி மா்தம் 11-ஆம் தேதி..........சோமவாரம் அன்றைய தினம் அவிட்ட நட்சத்திரமும் பஞ்சமியும் பெற்ற சுபதினத்தில் சோளமாதேவியிலிருக்கும் நல்லதம்பி பிள்ளை குமாரன் நமச்சிவாயம் பிள்ளை எழுதியுளது.

மச்சமுனி நிகண்டு முற்றும்
சம்பூரணம்

## குறிப்பு

இதில், சவுக்காரத்துறை, முதலியன உள்ளன. சுவடி மிகவும் பழுதுபட்டிருப்பதால் படித்தறிவது கடினம்.

வரிசை எண் : 2082 சுவடி எண் : 1072

# போகர் வைத்திய வெண்பா

பொருள் : மருத்துவம்

நூலாசிரியர் : போகர்

ஏடுகளின் எண்ணிக்கை : 20 (9-28)

சுவடியின் நிலைமை : மிக மிகப் பழுது (ஒடிந்த நிலை)

பக்கத்திற்கு : 6 வரிகள்

அளவு : 32 × 2½ செண்டி மீட்டர்

எழுத்து : தமிழ்

கி. எண்ணிக்கை : 300

குறை

## தொடக்கம்

ஆரியமாம் வாகடத்தின் பொருளையா ராய்ந்து
சீரியதோர் செந்தமிழால் செப்பவே - சூரியதா
யுள்ள நிதானமுஞ் சிகிச்சை ஓதும் விநாயகனே
வள்ளலே யென் மனதுள் வா.

## முடிவு

வல்லசு ........... ........... .......போம்
சொல்ல வொருமேகஞ் சோகைபோம் — நல்லாய்கேள்
தால..................து....,............குமிள்வேர்
காலமே காச்சியுண்ணக் காண்.

## காலம்

இல்லை

## குறிப்பு

இதில், சித்தரத்தை, பீனிசத்துக்கு, நீரேத்தம், வாத சுரத்துக்கு, எரிவாதம், சூதக வாய்வுக்கு. நீரடைப்புக்கு, அண்ட வாதத்துக்கு, பித்தனிக்கலுக்கு, குன்மத்துக்கு, வீக்கம், அக்கினி மந்தத்துக்கு, அஷ்ட குன்மத்துக்கு எரி குன்மத்துக்கு, வாத பித்த சேத்துமசுரம் முதலானவை உள்ளன. பிற்பகுதி ஏடுகள் ஒடிந்துள்ளன.

வரிசை எண் : 2083 சுவடி எண் : 1073

# பல்லி சொல்லும் பலன்

பொருள் : சோதிடம்

நூலாசிரியர் : அறியக்கூடவில்லை

ஏடுகளின் எண்ணிக்கை : 16 (உதிரி ஏடுகள்)

சுவடியின் நிலைமை : மிகப் பழுது

பக்கத்திற்கு : 4-6 வரிகள்

அளவு : 14 × 3 செண்டி மீட்டர்

எழுத்து : தமிழ்

கி. எண்ணிக்கை: 100

குறை

தொடக்கம்

சனிக்கிழமை உதையாதி 3½ நாழிகை வரை பலன்

தென்கிழக்கே சொன்னால் மாமிசம் வரும்
இது பலன் சிரப்பு. மட்ட மனிதனுக் கென்பது
6 நாள் பலன்
தெற்கே சொன்னால் யாரர்வது பால், தயிர் கொடுப்பார்கள்

முடிவு

18 நாள் பலன் வடகிழக்கே சொன்னால்
மறையோறாவது கற்றுணர்ந்த
பெரியோராவது கிரந் .......

காலம்

இல்லை

குறிப்பு

இதில், பலவேறு உதிரி ஏடுகள் உள்ளன. இடையில் கயிறு போட்டுப் பார்க்கும் ஏடுகள் உள்ளன. பல்லி சொல்லுக்கு ஒரு நாளின் நாழிகைப்படி பலன் கூறப்பட்ட ஏடுகள்.

வரிசை எண் : 2084 சுவடி எண் : 1074

# அகத்தியர் வகாரம் - 100

பொருள் : மருத்துவம்

நூலாசிரியர் : அகத்தியர்

ஏடுகளின் எண்ணிக்கை: 22

சுவடியின் நிலைமை : மிகப் பழுது

பக்கத்திற்கு : 10-12 வரிகள்

அளவு : 18×4 செண்டி மீட்டர்

எழுத்து : தமிழ்

கி. எண்ணிக்கை : 500

முழுமை

## தொடக்கம்

பூரணமாஞ் சுழினைநடுக் கமல மீதே
புகழ்பெரிய மூலகண பதியே காப்பு
காரணமா யெனையாண்ட பரனைப் போற்றி
காட்டாக வாதத்தி லெட்சங் காப்பு
தாரணமாய்ப் படுபாதி குறுக்கிச் சொன்னேன்
சார்வாக வாயிரத்தி யிருநூறு சூத்திரம்
வாரணமாய்க் குருக்கிவைத்த சூத்திர நூலில்
வகைதோணக் கருக்குருவும் வகுத்தேன் பாரே ! —1

## முடிவு

மனம்வேறு பூரணமே யென்று முண்டு
வாழ்வதெல்லாம் மற்றொன்றுஞ் செய்யா தேநீ
மனம்வேறு தட்டுண்டா லெல்லாம் போச்சு
மாய்கையுற்றுத் திருந்தலைவான் மாள்வா ரையோ
மனம்வேறு சாதகமாய்ச் சாத்திரத்தைப் பார்த்து
மனம்பிலக்கக் குருவுடனே வணங்கி நின்றால்
மனம்வேறு வாராது சித்தி முத்தி
வாய்க்குமே சூத்திரந்தான் மகிழ்வார் முத்தே ! —100

வகாரம் நூறு முத்தும்
சிவமயம்

## காலம்

இல்லை

## குறிப்பு

இதில், தேவிபூசை நாகசுன்னம், உப்புக்கட்டு, சூதக்கட்டு, செந்தூரம், நாக பற்பம் முதலியன உள்ளன.

வரிசை எண் : 2085 சுவடி எண்: 1075

# அகத்தியர் சுருக்கம் - 37

பொருள் : மருத்துவம்

நூலாசிரியர்: அகத்தியர்

ஏடுகளின் எண்ணிக்கை : 12

சுவடியின் நிலைமை : மிக மிகப் பழுது

பக்கத்திற்கு 7-8 வரிகள்

அளவு : 26 × 3 செண்டி மீட்டர்

எழுத்து : தமிழ்

கி. எண்ணிக்கை : 250

குறை

## தொடக்கம்

உலகத்தோர்க் கின்னமொரு உண்மை சொல்வேன்
ஓகோகோ களஞ்சியிலைச் சாறு நாழி
சுலகத்த செம்முள்ளிச் சாறு நாழி
காயமாம் சுடுதுர்த்திச் சாறு நாழி
மலைக்காதே சங்கங்குப்பிச் சாறு நாழி
மைந்தனே நொச்சியிலைச் சாறு நாழி
செலைக்கவும் தும்பையிலைச் சாறு நாழி
செவந்தகண்டங் கத்திரிச்சாறு படிநாழி கூட்டே! — 1

## முடிவு

சாமமொன்று அரைத்திடுவாய் உப்பு நீரால்
சாதகமா யரைத்தபின்பு வில்லை செய்து
னாமென்ற புதுக்கலசத் துள்ளே வைத்து
நலமாகச் சீலைசெய்து யுலர்த்திக் கொண்டு
ஓமென்ற அன்பதெருவில் புடத்தில் போடு
யொ............ .................. ................ ................

## காலம்

இல்லை

## குறிப்பு

இதில், மருந்து செய்முறை, மிகவும் சுருக்கமாகவும், அதே சமயம் தெளிவாகவும் கூறப்பட்டுள்ளது.

வரிசை எண் : 2086

சுவடி எண் : 1076

# நாடி லட்சணம் அறியும்படி

பொருள் : மருத்துவம்

நூலாசிரியர் : அறியக்கூடவில்லை

ஏடுகளின் எண்ணிக்கை : 3

சுவடியின் நிலைமை : மிகப் பழுது

பக்கத்திற்கு : 7-8 வரிகள்

அளவு : 26 × 3 செண்டி மீட்டர்

எழுத்து : தமிழ்

கி. எண்ணிக்கை: 100

குறை

## தொடக்கம்

பாதத்தில் நாடி சாமம்
பலதாது வாய்ந டக்கும்

இதுக்கு விரிச்சாடுகிற மயில் போலே நடக்கும்
அன்னம் போலே நடக்கும்
இந்தப் படிக்கு நடந்தால்
வயித்திய நாடி யென் றறிவது —1

## முடிவு

சேட்டும ரோகிக்கு நாக்கிலே பெரிய
முள்ளுப் போலே இருந்தால் சுன்னிவாத ரோகி
தொந்த ரோகிக்கு விதவிதமா யிருக்கும் —9

சுரபேதக மறியும்படி

சுரலட்சணம் வாத பயித்தியம் நாலு ! —1
சேஷ்டும மூனு அசீரணம் 4. ஆவிகமரு

## காலம்

இல்லை

## குறிப்பு

இதில், இப்படி இப்படி நாடி நடந்தால் இன்னின்ன குணம் இருக்கும். என்றும், இன்னின்ன வியாதியுடையவன் என்றும் காண வகை செய்கிறது.

இடையில் உள்ள ஏடு வேறு கையெழுத்துள்ள ஏடாக இருக்கிறது.

வரிசை எண்: 2087

சுவடி எண்: 1077

# அகத்தியர் குண வாகடம் கர்ம காண்டம்

பொருள்: மருத்துவம்

நூலாசிரியர் : அகத்தியர்

ஏடுகளின் எண்ணிக்கை 73 (32–104)

சுவடியின் நிலைமை: மிக மிகப் பழுது

பக்கத்திற்கு: 7–9 வரிகள்

அளவு: 29 × 3 செண்டி மீட்டர்

எழுத்து: தமிழ்

கி. எண்ணிக்கை: 1500

முழுமை

## தொடக்கம்

## முடிவு

## காலம்

## குறிப்பு

இது, எமது சுவடி எண் 323-a/D-622 'அகத்தியர் 205' போன்றது.

வரிசை எண் : 2088 சுவடி எண் : 1078

# அகத்தியர் தண்டகம்

பொருள் : மருத்துவம்

நூலாசிரியர் : அகத்தியர் ஏடுகளின் எண்ணிக்கை : 14

சுவடியின் நிலைமை : மிக மிகப் பழுது பக்கத்திற்கு : 7 வரிகள்

அளவு : 22 × 3 செண்டி மீட்டர் எழுத்து : தமிழ்

கி. எண்ணிக்கை : 200 முழுமை

**தொடக்கம்**

சேசுவே ரெட்சியும்
பூவது வாச மந்தம்
பொருந்திய கண்ட கத்தை
நாவது ஓதுமத ........ ......
நடுவனை யிருத்துங் கே ................

**முடிவு**

கற்றவர் யென்னூல் தன்னைக்
கைவிடக் கருவைக் காண்பார்
செத்தயே யில்லை யின்னூல்
சேர்ப்பது முத்தி யாமே. — 339

அகத்தியர் பட்சணி முகிந்தது
முற்றும்
குருபாதமே கெதி
சுவாமி கிடாட்சம்

**காலம்**

இல்லை

**குறிப்பு**

இது, எமது சுவ்டி எண் 587 / D 1205 போன்றது. இதில் தலைப்பு 'அகத்தியர்' தண்டகம் என்றும், முடிவில் அகத்தியர் பட்சணி முகிந்தது என்றுமுளது.

வரிசை எண் : 2089

சுவடி எண் : 1079

# வைத்தியத் திரட்டு

பொருள் : மருத்துவம்

நூலாசிரியர்: பலர்

ஏடுகளின் எண்ணிக்கை : 24

சுவடியின் நிலைமை : மிக மிகப் பழுது

பக்கத்திற்கு: 7-8 வரிகள்

அளவு: 22 × 3 செண்டி மீட்டர்

எழுத்து : தமிழ்

கி. எண்ணிக்கை: 500

குறை

## தொடக்கம்

பிரமியம் நீர்ச் செறுப்புத் துன்மாங்கிஷ மிவைக்கு

............ண்டு சாம்பலாக்கிப் பயறு.........க்கப்
பத்து னாளில்ப் பிலப்படு...............முளைத்த
பல்லுப் போகலாம்.

## முடிவு

...............பக்களிலு மயில கடியி............
மும் ஒத்திடப் பல்ப்பூட்டு விடும்.........
விழும்

## காலம்

இல்லை

## குறிப்பு

இதில், உதிரி ஏடுகளாக உள்ளன. உள்மூலம், பிற மூலத்துக்கு முலை சுரக்க, கண்ணில் நீர்ப்பாச்சல், மூக்கில் புண்ணுக்கு, அரையாப்புக்கு, வாதக்குத்துக்கும், வாயுவுக்கும் ஒத்தல், மண்டை வியாதிக்கு நெய், பொல்லாப் புண்ணுக்கு, அரையரிப்புக்கு மருந்து முதலியன உள்ளன.

வரிசை எண் : 2090 சுவடி எண் : 1080–a

# சட்டை முனியார் வகார சூத்திரம் - 200

பொருள் : மருத்துவம்

நூலாசிரியர் : சட்டைமுனியார் ஏடுகளின் எண்ணிக்கை : 55

சுவடியின் நிலைமை : மிக மிகப் பழுது பக்கத்திற்கு : 6–7 வரிகள்

அளவு : 27 × 3 சென்டி மீட்டர் எழுத்து : தமிழ்

கி. எண்ணிக்கை : 1000 குறை

## தொடக்கம்

## முடிவு

## காலம்

(தொடக்கத்தில்) பிங்கள வருஷம் ஆவணி மாதம் 15-ஆம் தேதியில் சப்பாபதி சவுக்காரம் என்றுளது.

(முடிவில்) சாதாரண வருஷம் மாசி மாதம் 4-ஆம் தேதி சின்னவீரம்பட்டி விசுவப் பிரம்ம வம்மிசம் அங்கணாட்சாரியார் குமாரர் சிதம்பர ஆட்சாரியார் புஸ்தகம். இந்த நூலைக் காணாமல் யெடுத்தால் அவர்களுக்கு பதினெண்பேர் சாபம் வந்து கொடுமை செய்யும்.

## குறிப்பு

இது, எமது சுவடி எண் 365-a / D 726, எண் 618 / D 1239 போன்றது.

வரிசை எண் : 2091 சுவடி எண்: 1080-b

# சுப்பிரமணியர் அகத்தியருக்கு உபதேசித்த சருவசங்கார விஞ்சை

பொருள் : மருத்துவம்

நூலாசிரியர்: சுப்பிரமணியர்

ஏடுகளின் எண்ணிக்கை : 4

சுவடியின் நிலைமை : மிக மிகப் பழுது

பக்கத்திற்கு 6-7 வரிகள்

அளவு : 27×3 செண்டி மீட்டர்

எழுத்து : தமிழ்

கி. எண்ணிக்கை : 100

குறை

## தொடக்கம்

சீர்மேவு வாலையபி ராமிதிரி சூலி
சங்கார கெவுரி வாமி
தார்மேவு மயிட சங்கரி கெவுமாரி வாமி
துர்க்கைசா முண்டி கங்காளி

## முடிவு

தொட்டெடுத்த சரக்கெல்லாம் தார வேதை
பூணாத வுபசரத்தைத் தொட்டுப் போட்டு
கோடிவரை உருக்கிப் பாரே ! – 43

பாரப்பா யிக்கருவில் வீறஞ் .........

## காலம்

இல்லை

## குறிப்பு

இதில் ஏடுகள் படித்தறியும் படி இல்லை.

வரிசை எண் : 2092 சுவடி எண் . 1081

# அகத்த்யர் குணவாகடம்

பொருள் : மருத்துவம்

நூலாசிரியர் : அகத்தியர்

ஏடுகளின் எண்ணிக்கை : 86

சுவடியின் நிலைமை : மிக மிகப் பழுது

பக்கத்திற்கு : 6-7 வரிகள்

அளவு : 23×3 செண்டி மீட்டர்

எழுத்து : தமிழ்

கி. எண்ணிக்கை : 1400

குறை

## தொடக்கம்

............... றனக்குந் திருமால் தனக்கும்
புரமெரி ......... ................ .........
............ மான பரந்தனக்கும் முத்தாய்
............ ............ ............ ............

## முடிவு

குடலசந்து வாயுத் தாழ்வை என்பதாமே ! 383

......... தாமம் விதாமந் துலங்கய விற்பட்ட
காய ....... புசமெலாம் ........... அங்க
முழும் னாமங்கள் நாலாயஞ் சீரணமும்
நாட்டிய ......... ............ மேலா..........

## காலம்

இல்லை

## குறிப்பு

இதில் இடையிடையே ஏடுகள் இல்லை, மிக மிகப் பழுது பட்டுள்ளதால் படிப்பதரிதாயுளது. எழுத்துக்கள் கிறுக்கலாயுள்ளன.

இதில் வர்தபித்த செற்றும உற்பத்தி, நித்தியநாடி, உடல்விளக்கம் பாசநிதானம், அஷ்டபரிச்சை, நாடி பார்க்க நிச்சயப்படாது, நாடிமாசம், தேக உற்பத்தி, வாதநாடி, மூக நிதானம் முதலியன உள்ளன.

வரிசை எண் : 2093 சுவடி எண் : 1082

# வைத்தியம்-நாடி சாத்திரம்

பொருள் : மருத்துவம்

நூலாசிரியர் : அறியக்கூடவில்லை ஏடுகளின் எண்ணிக்கை : 35

சுவடியின் நிலைமை : மிக மிகப் பழுது பக்கத்திற்கு 5-6 வரிகள்

அளவு : 24 × 3 செண்டி மீட்டர் எழுத்து : தமிழ்

கி. எண்ணிக்கை : 500 குறை

## தொடக்கம்

நாடி மூன்று மமந்திடில் லெழும்பிடிற் சன்னி
 ........... மயிலென நடக்கில் வாத
மேகிய யாமை யட்டை ......... .........
 நடக்கும் பித்தம்
போகிய தவளை பாம்புபோலது
 சேற்றுமந் தானே —47

## முடிவு

கழறிய கெற்ப சூலை
 கன்னியர் துடங்கும் .........
...... ......பமே கையதிற்
 பற்றி வாயுற் றோன்றி
பழகிய புருட ... ... போதே
 மெத்த விளைவது தடைப்படடாப்போல
விழந்து ......... ......... ......

## காலம்

இல்லை

## குறிப்பு

இதில், முக நிதானம், வியாதி வடிவு, சுரோணிய வாதவகை சிரத்தம்பன வாய்வு, முதலியன உள்ளன.

வரிசை எண் : 2094

சுவடி எண் : 1083-1

# அகத்தியர் குண வாகடம்

பொருள் : மருத்துவம்

நூலாசிரியர் : அகத்தியர்

ஏடுகளின் எண்ணிக்கை : 137

சுவடியின் நிலைமை : மிக மிகப் பழுது

பக்கத்திற்கு : 8-9 வரிகள்

அளவு : 22×3 செண்டி மீட்டர்

எழுத்து : தமிழ்

கி எண்ணிக்கை : 3000

முழுமை

## தொடக்கம்

சன்னி 13-க்கும் குணம்

தருண சுரத்தால் பயித்தி யத்தால்
    தணியாத தோஷமதோ வெனமில்
வருண நடித்த சீதளத்தால்
    வகைமேல் பூசும் பரிமளத்தால்
அருண முகத்து மங்கையரை
    அணைந்த கோப மதுதோஷிங்
கருணை யான புளிப்பினிப்புக்
    கடிந்து மீடந்தால் வரும் தோஷம் ...... —1

## முடிவு

ஆடா தோடையும் கண்டன் கத்திரியும்
    குருயிஞ்சியும் நெருஞ்சியும்
கடுக்காய் திப்பிலீ மிளகு கொ ......... றை
    சீத்தில் தண்டு நாவுரி யிவ்வளவு
மருந்துங். கஷாயம் 8 படி தண்ணீர் விட்டு
    நாழியாகக் குறுக்கி மூன்று பொழுது
மூன்று நாளைக்குக் கொடுக்கவும்
    மறுபடியும் மூன்று பொழுது உண்டை கொடுக்கவும்

யத்தியமாக இருக்கவும், வேறு
மரியநாய நாயகி துணை,
நன்றாக

## காலம்

இல்லை

## குறிப்பு

இதில், தொடக்கத்தில் 'ஏசு மரிய சூசை ரெட்சியும்' என்றுளது எனவே, இச்சுவடி ஒரு கிறித்தவர் எழுதி வைத்திருந்தது போலும்.

இதில், புக்கு நேத்திரன் குணம், பிரலாப சன்னிக் குணம், சிங்குநு சன்னிக் குணம், கணடன்கு சன்னிக் குணம், சுரணிக சன்னிக் குணம், உடல் குத்து சன்னிக் குணம், பிரமியக்கடுப்பு யெரிவு முதலியன உள்ளன.

வரிசை எண் : 2095 சுவடி எண் : 1083-b

# சித்திராரூடம்

பொருள் : மருத்துவம்

நூலாசிரியர் : சுப்பிரமணிய சுவாமி

ஏடுகளின் எண்ணிக்கை : 10 (138-147)

சுவடியின் நிலைமை : மிக மிகப் பழுது

பக்கத்திற்கு : 7-8 வரிகள்

அளவு : 22 × 3 செண்டி மீட்டர்

எழுத்து : தமிழ்

கி. எண்ணிக்கை : 500

முழுமை

## தொடக்கம்

ஆறுமுகக் கடவுளின் நாயகமே போற்றி
அகத்தியமா முனியுரைத்த சித்திர ஆரூடத்திற்
கூறுகிற திசையு மவன்வந்து ஜென்ன
எழுத்தை எண்ணிப் பார்த்து

## முடிவு

இப்பாரில் விடந்தீர்த்தால் வேறோர் சென்மம்
எடுக்காது வைகுண்ட மெய்த லாகும்
தப்பாது செந்தூர்வாழ் சுப்பிர மண்ணிய
சுவாமிசொன்ன முப்பத்தஞ்சு நன்னூல் முற்றே — 35

சித்திராரூடம் முப்பத்தஞ்சு முற்றும்

குருவே துணை
நன்றாக

## காலம்

இல்லை

## குறிப்பு

இதில், பாம்பு கடியின் வகை, மருந்து முதலியன உள்ளன.

இது, எமது சுவடி எண் 614 / D 1235 போன்றது. இதன் முற்பாட்டில் 'அகத்தியமா முனியுரைத்தது' என்றும் கடைசிப் பாட்டில் 'திருச்செந்தூர் சுப்பிரமணியர் சொன்னது' என்றும் காணப்படுகின்றன.

வரிசை எண் : 2096 சுவடி எண் : 1083-c

# நட்சத்திர பலன்

பொருள் : சோதிடம்

நூலாசிரியர் : அறியக் கூடவில்லை
எடுகளின் எண்ணிக்கை: 3½

சுவடியின் நிலைமை : மிக மிகப் பழுது
பக்கத்திற்கு : 7-8 வரிகள்

அளவு : 22 × 3 செண்டி மீட்டர்
எழுத்து : தமிழ்

கி. எண்ணிக்கை :100
முழுமை

## தொடக்கம்

நட்சத்திரம் 27 க்கும் பேர்

| | | |
|---|---|---|
| அசுபதி | திருவாதிரை | மகம் |
| பரணி | புனர்பூசம் | பூரம் |
| கார்த்திகை | பூசம் | உத்திரம் |
| மிருகசீரிஷம் | ஆயில்யம் | அத்தம் |

## முடிவு

பூராடம், ரேபதி, புனர்பூசம் இந்த நாள்
வியாழக் கிழமைக்கிச் சூனியம்
பூசம், விசாகம், ரோகணி, அவிட்டம், மிருக சிதளம்
அனுசம் இந்தநாள் வெள்ளிக் கிழமைக்குச் சூனியம்
அத்தம் புனர்பூசம், ரேபதி இந்தநாள்
சனிக்கிழமைக்குச் சூனியம். வேறு
முற்றும்

## காலம்

இல்லை

## குறிப்பு

இதில் நட்சத்திரம் 27-க்கு, இராசி 12-க்கும் பேர், திக்கு எட்டுக்கும் பெயர், சித்தருக்கன் முதலியன உள்ளன.

வரிசை எண் : 2097 சுவடி எண் : 1083-d

# வைத்தியத் திரட்டு

பொருள் : மருத்துவம்

நூலாசிரியர் : பலர்

ஏடுகளின் எண்ணிக்கை : 60

சுவடியின் நிலைமை : மிக மிகப் பழுது

பக்கத்திற்கு : 7 வரிகள்

அளவு : 22 × 3 செண்டி மீட்டர்

எழுத்து : தமிழ்

கி. எண்ணிக்கை : 1200

குறை

## தொடக்கம்

வெப்பநீர் ......... மேல்த்தோல் .........
போட்டுச் சி......... துண்டப் பத்திரச்
சிறங்கை ......ல்ல மிளகு சீரகம் மஞ்சத்துண்டு
இவை நாலு மருந்தும்

## முடிவு

பல்லு பிலப்பட மருந்து

வேர்க் கொம்பு கடுக்காய் நாயுருவி வேர்
பவிறந் தோல் நேரேச் சுருக்கே

## காலம்

இல்லை

## குறிப்பு

இதில் வீரமெழுகு, சூலைமுடக்கம், கை கால் பிடிப்புக்கு, எண்ணெய், விரேசனத்துக்குப் பால் மெழுகு, கண்ணில் குந்தம், நீர்ப்பாய்ச்சல், துன்மாங்கிஷம், நீரடைப்புச் செறுப்புக்கு, முறை சுரத்துக்குக் குடிநீர், பெரும்பாட்டுக்கு முதலியன உள்ளன,

வரிசை எண் : 2098 சுவடி எண் : 1084

# அகத்தியர் நாடி நூல்

பொருள் : மருத்துவம்

நூலாசிரியர் : அகத்தியர் ஏடுகளின் எண்ணிக்கை : 250

சுவடியின் நிலைமை : மிக மிகப் பழுது பக்கத்திற்கு : 6-7 வரிகள்

அளவு : 21 × 3 செண்டி மீட்டர் எழுத்து : தமிழ்

கி. எண்ணிக்கை : 4000 முழுமை

## தொடக்கம்

வாக்குண்டாம் ★ ★ ★ ★ தமக்கு
கரிமுக னடியை வாழ்த்திக்
கை தனில் நாடி பார்க்கில்

## முடிவு

இந்த மருந்தெல்லா முரலிலே போட்டு
இடிச்சு ஒரு கலசத்திலே
வைச்சுக் கொண்டு ஒரு பாக்களவு
உள்ளே கொள்ளவும்.

குருபாதமே துணை
சாமி துணை

## காலம்

இல்லை

## குறிப்பு

இதில், அசாத்திய குணம், பித்த சேற்றும சுரம், அசீரண சுரம், சரீர முலைச்சல் பட்ட சுரத்துக்கு, ரத்த சீவுகம், சீதவேக சீவுகம், வாத கரப்பன் சூலைக்கு, பித்த வாத சூலைக்கு, இரத்த சூலை, பயித்திய மூலம், சோகை பாண்டுவுக்குக் கஷாயம் முதலியன உள்ளன.

இதில், 553-ஆம் பாடலுக்குப் பின் எண் இல்லை. உரைநடையாகவே உள்ளது. இதன் பின்னர் வைத்தியம் எழுதிய 2 ஏடுகள் உள்ளன.

இது, எமது சுவடி எண் 104 - i D 150 போன்றது.

வரிசை எண் : 2099 சுவடி எண் : 1085

# சத்திர விதி (பெயர் அறிய முடியவில்லை)

பொருள் : மருத்துவம்

நூலாசிரியர் : அறியகூடவில்லை (சுந்தரானந்தர்)

ஏடுகளின் எண்ணிக்கை : 25

சுவடியின் நிலைமை : மிக மிகப் பழுது

பக்கத்திற்கு : 7-8 வரிகள்

அளவு : 24 x 3 செண்டி மீட்டர்

எழுத்து : தமிழ்

கி. எண்ணிக்கை : 500

முழுமை

## தொடக்கம்

"......... யினைச் சீலை ஒன் ...... டு
கட்டி ரவிமுகத்தில் வைத்தி டாயே ! —7

வைத்திருக்க ...... ...... ய் பிறந்தனிலே
யு ...... ...... ப் புண்டாகும்
வாச்சுதப்பா வாதமடந் திறந்து

## முடிவு

தானென்ற மூலமிதை யறிய வேணுஞ்
சத்திசிவ மாண்டையுமே காண வேணுஞ்
தானென்ற கும்பிடுங்க லறிய வேணுந்
தருவான அண்டவித்தை செய்ய வேணுந்
தானென்ற கற்பமதை யுண்ண வேணுஞ்
சாதகமாய்த் தீட்சைவிதி கற்க வேணுந்
தானென்ற பூசைவிதி யறிய வேணுஞ்
சத்திரத்தில் விதிநூறு பத்து முற்றே —110

சுந்தரானந்தர் பாதமே கெதி
குருவே துணை

## காலம்

இல்லை

## குறிப்பு

இது, மிகவும் பழுதுபட்டிருப்பதால் செய்திகள் அறிய முடியவில்லை, ஈற்றுச் செய்யுளால் 'சத்திரவிதி' எனப்பட்டது.

வரிசை எண் : 2100 சுவடி எண் : 1086

# சொரூபானந்தர் ஆனந்தக்களிப்பு

பொருள் : மருத்துவம்

நூலாசிரியர் : சொரூபானந்தர்

ஏடுகளின் எண்ணிக்கை : 14 (31-44)

சுவடியின் நிலைமை : மிக மிகப் பழுது

பக்கத்திற்கு : 7 வரிகள்

அளவு : 24 × 3 செண்டி மீட்டர்

எழுத்து : தமிழ்

கி. எண்ணிக்கை : 300

முழுமை

## தொடக்கம்

அந்திக்கு முன்வந்தா னாண்டே
அதிகாலமே அய்யனை அன்பாகக் கண்டு
சந்தித்து வைத்தோங்கி னாதன் தாங்கிய
போதினிற் றன்றுட்ப் பொதிந்து

## முடிவு

சந்தத மோங்காரங் கூடி யெங்குந்
தானா யிருந்திடுஞ் சத்தியுந் தீட்சை
வந்தாக்கால் தேகமுஞ் சித்தியாந் தோளி
தனதந்த னாதந்த னானா ! - 50

சூத்திரமுற்றும்

## காலம்

இல்லை

## குறிப்பு

இதில் தீட்சை முதலானவைகள் சுருக்கமாகக் கூறப்பட்டுள்ளன.

இது, எமது சுவடி எண் 675-e / D 1321 போன்றது.

வரிசை எண் : 2101 சுவடி எண் : 10 7

# இரசம் சுத்தி செய்யும் முறை முதலியன

பொருள் : மருத்துவம்

நூலாசிரியர் : அறியக்கூடவில்லை ஏடுகளின் எண்ணிக்கை : 38(45-83

சுவடியின் நிலைமை : மிக மிகப் பழுது பக்கத்திற்கு : 7 வரிகள்

அளவு : 24 × 3 செண்டி மீட்டர் எழுத்து : தமிழ்

கி. எண்ணிக்கை : 700 முழுமை

## தொடக்கம்

இரசம் வேண்டியது கொண்டுவந்து குளிக்கல்லில் விட்டுப்
பூசை தீப தூப நெய்வேத்தியம் கொடுத்து
விக்கினேசுர தோத்திரஞ் செய்து மந்திரம் செபித்துக்
குளி அம்மியை அப்பிரந் தள்ளிக் கொண்டு

## முடிவு

சுக்கு, திப்பிலி, வால்மிளகு, காரமிளகு
சித்தரத்தை, கோட்டம்இள வருப்பு வருத்துப்
பொடிசெய்து சாதத்தில் போட்டு ரெண்டு
துட்டிடை தேன்விட்டு மூன்றுநாள் கொள்ளவும்

ஈளை இருமல் நிற்கும்.

## காலம்

இல்லை

## குறிப்பு

இதில், பச்சை நாவிசுத்தி, சாதிலிங்கசுத்தி, ஆனைத்திப்பிலிசுத்தி, ஊசிக்காந்தஞ் சுத்தி, மிளகுசுத்தி, அரிதாரம் வைக்கும்படிக்கு கிராணிகபர்டம், அசாத்தியம் அறியும்படி, திரிபுரமெரித்த மாத்திரை, வெள்ளிப் பற்பம், வெங்கலசுத்தி முதலியன உள்ளன.

வரிசை எண் : 2102

சுவடி எண் : 1088

# சட்டைமுனி கற்பவிதி

பொருள் : மருத்துவம்

நூலாசிரியர் : சட்டைமுனியார்

ஏடுகளின் எண்ணிக்கை : 11 (84-94)

சுவடியின் நிலைமை : மிக மிகப் பழுது

பக்கத்திற்கு : 7-9வரிகள்

அளவு : 24 × 3 செண்டி மீட்டர்

எழுத்து : தமிழ்

கி. எண்ணிக்கை : 200

முழுமை

*தொடக்கம்*

பாடுகிறேன் காயகற்ப மைங்கரனே காப்பு
பரிவான சின்மயத்தின் பாதங் காப்பு
நாடுகிரேன் சித்தருட பாதங் காப்பு
நாதாந்த மனோன்மணித்தாய் பாதங் காப்பு

*முடிவு*

ஓமென்ற வாறெல்லாம் கோத்து வாட
அமையாது ... ..................... லாடும்
நாமென்ற நவலோகத் துள்ளே யிய்ந்தால்
நாலாறு......... ...... ... ந்தான் காணே ! — 40

முற்றும்

**காலம்**

இல்லை

*குறிப்பு*

இதில் உள் தலைப்புகள் இல்லை.

இதில், எமது சுவடி எண் 352-a / D 695, எண் 745n / D 1479 போன்றது. ஆயினும், இதில் 40 செய்யுட்களே உள்ளன. அவற்றுள் 100 பாடல்கள் உள்ளன.

வரிசை எண் : 2103 சுவடி எண் : 1089-a

# கைலாசச் சட்டைமுனியார் பாடல்

பொருள் : மருத்துவம்

நூலாசிரியர் : கைலாசச் சட்டைமுனியார்
ஏடுகளின் எண்ணிக்கை : 22

சுவடியின் நிலைமை : மிக மிகப் பழுது
பக்கத்திற்கு : 7-8 வரிகள்

அளவு : 24 × 3 செண்டி மீட்டர்
எழுத்து : தமிழ்

கி. எண்ணிக்கை : 600
குறை

## தொடக்கம்

மூலமுத லாறுதலம் கீழே தள்ளி
முதிர்ந்துநின்ற வேலாறு யடுத்து நோக்குக்
கோலமுட னுன்மனையைத் தாண்டி யேறி
கொடியதொரு ஞானசத்திக் குள்ளே மைந்தா
பாலமென்ற கேசரியாம் மவுனத் தூடே
பராபரமாம் மந்தநதி ஞான முத்தி.

## முடிவு

கேளப்பா இதைவிட்டால் உலக ஞானி
கேட்டுநான் சொல்லுகிறேன் மக்காள் மக்காள்
நாளப்பா ....பெல்லா சாங்க மென்பான்
நலமான தீட்சையது வருகச் செய்வான்
தாளப்பா மவுனமென்பான் விண்ணைப் யார்ப்பான்
சாதகத்தே விட்டுவிட்டுச் சிவன்தனைச் சேர்வான்
நாளப்பா தினந்தோறும் தர்க்கம் பேசி
நலமான பெண்ணோடே முயங்கு வாரே ! —91

## சேர்க்கை

இல்லை

## குறிப்பு

இதில் மருந்துகள் பேசப்படுகின்றன மிகவும் செல்லரித்துளது, உள் தலைப்புகள் இல்லை, இறுதி ஏட்டின் பின்னர் சரக்குக்கட்டு, ரச சுண்ணம் எழுதப்பட்டுள்ளன.

வரிசை எண் : 2104

சுவடி எண்: 1089-b

# அகத்தியர் - 150

பொருள்: மருத்துவம்

நூலாசிரியர் : அகத்தியர்

ஏடுகளின் எண்ணிக்கை : 25

சுவடியின் நிலைமை: மிக மிகப் பழுது

பக்கத்திற்கு : 7-8 வரிகள்

அளவு : 24 × 3 செண்டி மீட்டர்

எழுத்து : தமிழ்

கி. எண்ணிக்கை : 600

முழுமை

## தொடக்கம்

சீரணி கொன்றை சூடும்
சிவனிரு பாதம் போற்றி
வாரண முகத்தோன் பாதம்
வணங்கிநூற் றன்பதுஞ் சொல்ல

## முடிவு

வன்னமே பாரு லோக
மாரண மதிக சூட்சம்
அன்னமே சொன்ன நூற்றி
அன்பது அறிவீர் முற்றே! — 147

தெட்சிணாமூர்த்தி துணை.
நன்றாக.

## காலம்

இல்லை

## குறிப்பு

இது. எமது சுவடி எண் 433-a/D 927 போன்றது

இதன் பின்னர் 2 ஏடுகளில் வைத்தியம் எழுதப்பட்டுள்ளது முழுதுமுள்ளது. குருவே துணை என்று முடிகிறது.

வரிசை எண் : 2105 சுவடி எண் : 1090

# அகத்தியர் - 150

பொருள் : மருத்துவம்

நூலாசிரியர் : அகத்தியர்

ஏடுகளின் எண்ணிக்கை: 46

சுவடியின் நிலைமை : மிக மிகப் பழுது

பக்கத்திற்கு : 6-7 வரிகள்

அளவு : 24 × 3 செண்டி மீட்டர்

எழுத்து : தமிழ்

கி எண்ணிக்கை : 600

முழுமை

## தொடக்கம்

சீரணி கொண்டை சூடும்
 சிவனிரு பாதம் போற்றி
வாரண முகத்தோன் பாதம்
 வணங்கிநூற் றன்பதுஞ் சொல்ல

## முடிவு

.......... பாரு லோகம்
 மாரண மதிக சூட்சம்
அன்னமே சொன்ன நூத்து
 அன்பது அறிவீர் முற்றே! - 151

குருமுன்னிற்க வேணும்
 தெட்சிணாமூர்த்தி சகாயம்
அகத்தீசர் நூற்றைம்பது எழுதி முகிந்தது
 முற்றும்

## காலம்

இல்லை

## குறிப்பு

இதுவும் முன் சுவடி போன்றது

வரிசை எண் : 2106 சுவடி எண் : 1091

# சுப்பிரமணியர் அகத்தியருக்கு உபதேசித்த ரேசக பூரக கும்பக வாக்கியம்

பொருள் : மருத்துவம்

நூலாசிரியர் : சுப்பிரமணியர்

ஏடுகளின் எண்ணிக்கை : 5 + 2

சுவடியின் நிலைமை : மிகப் பழுது

பக்கத்திற்கு : 7-8 வரிகள்

அளவு : 33 × 4 செண்டி மீட்டர்

எழுத்து : தமிழ்

கி. எண்ணிக்கை : 150

குறை

## தொடக்கம்

மோஷ்சத்தை யிச்சிற்றவ னறிய வேண்டியது
சரீரந் துன்பத்துக் கிடமென்றுங்
கெற்ப கொள்கையிலே படுந் துன்பமும்
பூமியினிடத்திலே பிறந்து வாலிபத்திலே
படுகின்ற துன்பமும்

## முடிவு

யிந்த வாய்வு ரெண்டையுங் கட்டுகிறவன் யோகி
கயிலாசத்துக்குள்ளே போர அசைபயை
யிருபத் தோராயிரத் தறுநூறு ஏற்றுகிறது
சீவன் புருவ மத்தியிலே கண்ணெத்தனை காலம்
நின்றது. சரீரத்திலே
(இதற்கு மேல் இல்லை)

## காலம்

இல்லை

## குறிப்பு

இதன் பின் 'திருமூலர் மூவாயிரத்தில்' என்ற தலைப்புள்ள ஒரு ஏடும் 'உற்பத்திப் பிரகரணம் என்ற தலைப்புள்ள ஒரு ஏடும் ஆக இரண்டு ஏடுகள் உள்ளன.

வரிசை எண் : 2107 சுவடி எண் : 1092

# வைத்தியத் திரட்டு

பொருள் : மருத்துவம்

நூலாசிரியர் : பலர்

ஏடுகளின் எண்ணிக்கை : 45

சுவடியின் நிலைமை : மிக மிகப் பழுது

பக்கத்திற்கு : 7-8வரிகள்

அளவு : 22 × 3 செண்டி மீட்டர்

எழுத்து : தமிழ்

கி. எண்ணிக்கை : 750

குறை

## தொடக்கம்

ம் புகழ்பிறவே - 25. குளித்.........டலை
தன்னில்............யில் முளைத்தருகு தன் புன்
குளிசமாடி குளித்தோ விந்தனை யகத்தி

## முடிவு

பெண்ணடி ஆதி மூலம்
    பேசுவார் பேரியோர் சாலம்
விண்ணடி விட்ட போது
    வேறொரு செயநீ ருண்டோ
கண்ணடி குடத்து நீரைக்
    கண்டறி யாத யோகி
மண்ணடி யவன்பேச் செல்லாம்
    வாயடி ஊமை தானே !

## காலம்

இல்லை

## குறிப்பு

இதில், தேறை தோஷ மருந்து. பெண் தோஷம், தோஷத்து எண்ணெய், துவளை மயக்கம், சோப தாப மத வறச்சிக்கி, செங்கண்மாரி, மாந்த குணம், தலை மாந்தம், செரியாமாந்தம், போர் மாந்தம், கத்தாளை எண்ணெய் முதலியன உள்ளன. 10-வது ஏடு முதல் உள்ள சுவடி.

வரிசை எண் : 2108 சுவடி எண் : 1093

# வைத்தியத் திரட்டு

பொருள் : மருத்துவம்

நூலாசிரியர் : பலர்

ஏடுகளின் எண்ணிக்கை : 60

சுவடியின் நிலைமை : மிக மிகப் பழுது

பக்கத்திற்கு : 8-9 வரிகள்

அளவு : 25 × 3 செண்டி மீட்டர்

எழுத்து : தமிழ்

கி. எண்ணிக்கை : 2000

குறை

## தொடக்கம்

......... சீலை செய்து முழப்புடத்தில்
பாங்கியே வைத்திடவே நீரிப் போச்சு
.........ளியது பற்ப மாச்சு
ஓங்கியே சிமிளுக்குற் பதனம் பண்ண,

## முடிவு

ஆகாத வேளையினில் கண்டால் சிப்பிக்
காகாச விந்துவல்லோ முத்தாய்ப் போச்சு
சாகாதோ யிந்நீரி லானைக் கல்லு
சத்தியுவற் சூடனது சத்தே பட்டால
வேகாதோ யினமினமுஞ் சேந்த போது
வெண்கிளிஞ்சிக் கெ....... ........
(இதற்கு மேல் இல்லை)

## காலம்

இல்லை

## குறிப்பு

இதில் கெந்தக பற்பம், பாசான பற்பம், கற்பூர பற்பம், தங்க பற்பம், வெல்லல் வேர்த் தயிலம், வெட்டிவேர்த் தயிலம், கொடிவேலித் தயிலம், பேனிச் சூரணம், மண்டைக் கரப்பானுக்கு முதலியன உள்ளன. பின்னுள்ள 4 ஏடுகள் வேறு கையெழுத்தாக உள்ளன.

கடைசிப் பகுதி "ரோமரிஷி—16" போல் உள்ளது.

வரிசை எண் : 2109 சுவடி எண் : 1094

# அகத்தியர் வைத்தியம் - 205

பொருள் : மருத்துவம்

நூலாசிரியர் : அகத்தியர்

ஏடுகளின் எண்ணிக்கை : 65+3

சுவடியின் நிலைமை : மிகப் மிகப் பழுது

பக்கத்திற்கு : 7- 8வரிகள்

அளவு : 20×3 செண்டி மீட்டர்

எழுத்து : தமிழ்

கி. எண்ணிக்கை : 1000

முழுமை

## தொடக்கம்

பூரணமா மும்மூலப் பொறியிற் சூடாம்
புகையெழும்பி மேகமதாய் சிரசில் சூடாம்
காரணமாய் நீர்கலந்து கண்ணில் ரோகம்
கனலெழுந்து வாயுவினால்ச் சூலை ரோகம்

## முடிவு

நோய்மிகுந்து சாவில்லை ஒருநா ளுந்தான்
துன்னியமாய்ச் சரக்கையெல்லாம் நீத்திக் கொண்டு
வாயமுடன் கிருதமொடு எண்ணை செய்து
வைத்திடுவா யனுபானம் வயித்திய முற்றே — 205

## காலம்

இல்லை

## குறிப்பு

இது, எமது சுவடி எண் 453 / D 1006 போன்றது.

இதன் பின்னர் வைத்தியம் எழுதிய மூன்று ஏடுகள் உள்ளன.

வரிசை எண் : 2110 சுவடி எண் : 1095

# அகத்தியர் நீலகண்ட செந்தூரம் - 50

பொருள்: மருத்துவம்

நூலாசிரியர்: அகத்தியர்

ஏடுகளின் எண்ணிக்கை: 21 + 5
(2-வது ஏடு இல்லை)

சுவடியின் நிலைமை: மிக மிகப் பழுது

பக்கத்திற்கு: 7-8 வரிகள்

அளவு: $17\frac{1}{2} \times 3$ செண்டி மீட்டர்

எழுத்து: தமிழ்

கி. எண்ணிக்கை: 350

குறை

## தொடக்கம்

நாடியதோ ரகண்டபரி ...........
...........னொடு கிணேசனொடு கந்தன் (காப்பு)
.................. சிவனாரு மென்னைப் பெற்ற
............ .......னிற் குடிகொண் டேதான்

## முடிவு

கண்டாக்கால் வாதமெல்லாம் அடிக்கீழ் போற்றும்
கருவான சவுக்கார மகிமை தன்னை
விண்டாக்கால் நசித்திடுவாய் நூல்கு டாதே
வேதாந்தி ஞானியென்றா லீயான் பாரு
தொண்டுசெய்தால் பதினாறு வருஷங் காத்துச்
சோதித்துப் பின்பவர்க்கு யீவா யப்பா
சண்டமா ருதம்போலே வெளிய தாகச்
சாத்தினதோர் வைத்திய மன் பதுதான் முற்றே ! — 50

குருபாதந் துணை

## காலம்

இல்லை

## குறிப்பு

இது, எமது சுவடி எண் 730-b / D 1425 அகத்தியர் சூத்திரம் - ஐம்பது போன்றது.

வரிசை எண் : 2111 சுவடி எண் : 1096

# அகத்தியர் — 100
# வகாரத் துருசுச் சுன்னம்

பொருள் : மருத்துவம்

நூலாசிரியர் : அகத்தியர் ஏடுகளின் எண்ணிக்கை : 21

சுவடியின் நிலைமை : மிக மிகப் பழுது பக்கத்திற்கு : 9-10 வரிகள்

அளவு : 26 × 3½ செண்டி மீட்டர் எழுத்து : தமிழ்

கி. எண்ணிக்கை : 600 முழுமை

## தொடக்கம்

பூரணமாஞ் சுனினைநடுக் கமல மீதே
புகழ்பெரிய மூலகண பதியே காப்பு
காரணமா யெனையாண்ட பரனைப் போற்றி
கட்டாக வாதத்தில் லட்சங் காப்பு

## முடிவு

மனம்வேறு சாதகமாய் சாத்திரத்தைப் பார்த்து
மனம்பிலக்கக் குருவினிடம் வணங்கி நின்றால்
மனம்வேறு வாறாது சித்தி முத்தி
வாய்க்குமே சூத்திரந்தான் நூறு முற்றே! —100

நல்ல வெள்ளி நாலும் நலங்கு செப்பு ஆறும்
கொல்லு நாக மூணுமா குலாவும் மவ்விடை
வில்லி னோசை யொன்று கூட்டி விலங்கு நோக்க
வல்லிராய் அய்யனாணை அம்மை பாதம் எட்டுமாத்து
உண்மையே

## காலம்

இல்லை

## குறிப்பு

இது, எமது சுவடி எண் 258–a/D 458 போன்றது

வரிசை எண் : 2112 சுவடி எண் : 1097

# வால்மீகர் சாத்திரம்

பொருள் : மருத்துவம்

நூலாசிரியர் : வால்மீகர்

ஏடுகளின் எண்ணிக்கை : 12

சுவடியின் நிலைமை : பழுது

பக்கத்திற்கு : 7-9 வரிகள்

அளவு : 25 × 3 செண்டி மீட்டர்

எழுத்து : தமிழ்

கி. எண்ணிக்கை : 300

முழுமை

## தொடக்கம்

நீட்டவொண்ணா பெரும்புகழைத் தும்பிக் கையான்
செஞ்சரணக் கற்பகத்தைச் சிந்தை செய்து
கூட்டை மண்ணாச் சனமந்ததனைப் பழுவைத் தந்தால்
கூடுநகர்க் கெழுந்தும்பி நினைவைப் போலே
ஆட்டியதோர் மலக்குவையின் நரம்பி னொன்றி
லறிகுவார் நல்லோர்கள் திரிநாடி யொன்றே
நாட்டியமே ஒன்று முன்னோர்கள் நவின்ற வாறே? — 1

(இதன் கடைசிப் பகுதி இல்லை)

## முடிவு

மற்குரி வால்மீகர் முன்னா
ளவன்முனி தேவர்க் கெல்லாம்
நற்குரி யான சாவும்
நலம்பிற வுரைத்த வாறு
யெக்குறி உலகி லுள்ளோர்
யிதமுடன் விரும்பிச் சொல்வார்
யிக்குறி மருந்து வெ .....மற்
றெக்குறி பார்த்த லாமே! – 75

வால்மீகர் சாத்திரம் முற்றும்
சரசுபதி துணை

## காலம்

இல்லை

## குறிப்பு

இதன், காப்பேட்டின் தொடக்கத்தில் ..................... சங்கார கணபதி துணை முதலியன எழுதப்பட்டுள்ளன. காப்பேட்டின் பின்பக்கத்தில் ''வெள்ளைக் கலையுடுத்து ..................... தாயே.'' ''வாக்குண்டாம் ........ தமக்கு" "வேலுண்டு வினையில்லை ஆகியவை உள்ளன.

இதில் உள் தலைப்புகள் இல்லை.

வரிசை எண்: 2113 சுவடி எண்: 1098

# மணிக்கிடை கையளவு சூத்திரம் (பலபிணி நாடி சாத்ரதிம்)

பொருள்: மருத்துவம்

நூலாசிரியர் : அறியக் கூடவில்லை

ஏடுகளின் எண்ணிக்கை 5 (13-17)

சுவடியின் நிலைமை: நல்ல நிலை

பக்கத்திற்கு: 9 வரிகள்

அளவு: 25 × 3 செண்டி மீட்டர்

எழுத்து: தமிழ்

கி. எண்ணிக்கை: 150

முழுமை

## தொடக்கம்

விமலனை நோக்கிய வேட மாமுனி
திமிலமற் பிணியது சேரச்சே
யிடவிலமாங் குழுமுனி முத்து முள்ளதே!

## முடிவு

சுளித்திடும் வாத நாடி
சுழிமுனை போலே ஓடில்
மரித்திடு மந்த காசம்
அவ்வாதம் பெருத்தி டிந்தலை
நோய்க்குத்தும் பேதகப்
யீனிசமும் நீரும்
தரித்திடும் வருசஞ் சொன்னோம்
அதற்குநாற் பதுநாள் தானே! — 37

பலபினி நாடி சாத்திரம்
முற்றும்

## காலம்

இல்லை

## குறிப்பு

இதில், தொடக்கத்தில், ''மணிக்கிடைக் கய்யளவு சூத்திரம்' என்றும் இறுதியில் 'பலபினி நாடி சாத்திரம்' என்றும் உள்ளது

நாடி பார்த்து பிணியறியும் சுவடியாகுமிது

வரிசை எண் : 2114

சுவடி எண் : 1099

# குருநாடி சூத்திரம்

பொருள் : மருத்துவம்

நூலாசிரியர் : அறியக்கூடவில்லை

ஏடுகளின் எண்ணிக்கை : 7(18-24)+3

சுவடியின் நிலைமை : நல்ல நிலை

பக்கத்திற்கு : 8 வரிகள்

அளவு : 25×3 செண்டி மீட்டர்

எழுத்து : தமிழ்

கி. எண்ணிக்கை : 200

முழுமை

தொடக்கம்

ஆங்காரங் கொண்டெழுந்த பிரணவத்தின் செய்கை
உத்துணர்ந்து சூத்திரமா யுரைத்த வாறு
மாங்காரங் கொண்டெழுந்த மனத்தைத் தேர்ந்து
அருவுருவு மருசொருபமென அமர்ந்த நேர்மை

முடிவு

சயமான மண்டை நீர்க் கீழே வாங்கி
சுவாசமது நெஞ்சில்வந்து சுவரி யேங்கும்
நயமறியாச் சயரோகம் நாடுங் காலை
நன்மையுடன் பண்டிதரே நாடிப் பாரே ! — 26

காலம்

(முதல் ஏட்டில்)
குருறஹோதி வருஷம் மாசி மாதம் 11-ஆம் தேதி

குறிப்பு

இதில், நாடி பார்த்து நோய் குணங்களை யறியும் விதம், நோய்கள் வருவதற் குறிய காரணங்கள் முதலியன கூறப்பட்டுள்ளன. ஒரு வகையில் 'அகத்தியர் கர்ம காண்டம்' போன்றது.

இதன் பின்னர், மோகினி மந்திரம், பீனிசம், இடைக்காட்டர் பாடல், எழுதிய மூன்று ஏடுகள் உள்ளன.

இது, எமது சுவடி எண் 386-f / D 793 போன்றது.

17-வது தொகுப்பு
வரிசைஎண்: 2115 | சுவடி எண்: 1100

# வைத்தியத் திரட்டு

பொருள் : மருத்துவம்

நூலாசிரியர் : பலர் | ஏடுகளின் எண்ணிக்கை: 4

சுவடியின் நிலைமை : நல்ல நிலை | பக்கத்திற்கு : 7-8 வரிகள்

அளவு : 25 × 3 செண்டி மீட்டர் | எழுத்து : தமிழ்

கி. எண்ணிக்கை : 100 | குறை

## தொடக்கம்

### கெர்ப்பத்தில் சூலைக்கட்டு உதரவாய்வு திரட்சிக்கு மருந்து

கொம்பரக்கு பலம்—1 கிஷாயஞ் செய்து
இறுத்துக் கொண்டு நல்லெண்ணெய் படி விசம்
களச்சிப் பருப்பு விராக னெடை — 1
கூட்டிக் குடுக்கவும்

## முடிவு

| | | | | | |
|---|---|---|---|---|---|
| நெல்லிப் பருப்பு | பலம் | விசம் | ஓமம் | பலம் | விசம் |
| குரோசணி ஓமம் | ,, | ,, | சர்க்கரை | ,, | ,, |
| கடுக்காய் | ,, | ,, | தாண்டிக்காய் | ,, | ,, |
| சமுத்திராப் பழம் | ,, | ,, | திப்பிலிமூலம் | ,, | ,, |
| தேவதாரம் | ,, | ,, | அதிவிடையம் | ,, | ,, |
| வெட்டிவேர் | ,, | 4 | பக்கு (?) | ,, | 4 |
| தேன் படி ½ | | | நெய் படி — 1 | | |

## காலம்

இல்லை

## குறிப்பு

இதில் நீர்க் கட்டுக்கு, மலஞ்சலம் அடைப்புக்கு, சன்னி, பேய் விஷத்துக்கு, அஞ்சனம், கண் மெட்டுக்கும் பேர், குண்டலியாசனக் கணை, ஆந்த சிரத்தின் கணை, முதலியன உள்ளன.

மூன்று பத்திகளாக எழுதப்பட்டுள்ளன.

வரிசை எண்: 2116 சுவடி எண்: 1101

# வைத்தியத்திரட்டு
# அகத்தியர் இரத்தினச் சுருக்கம்

நூலாசிரியர்: பலர்
சுவடியின் நிலைமை: பழுது
அளவு: $40 \times 3\frac{1}{2}$ செண்டி மீட்டர்
கி. எண்ணிக்கை: 800

பொருள்: மருத்துவம்
ஏடுகளின் எண்ணிக்கை: 22
பக்கத்திற்கு 8-9 வரிகள்
எழுத்து: தமிழ்
குறை

## தொடக்கம்

பூரணமாய் நிறைந்திருக்கும் பரைதாள் போற்றி
புகலுகிறேன் வயித்தியத்தின் சுருக்கந் தன்னை
வாரணமா முகத்தோனைப் பணிந்து போற்றி
வயித்தியந்தா னிந்தமுன்னூற் றறுப துக்குள்

## முடிவு

கடுகுரோகிணி குரோசாணி வகைக்கு விராகனெடை -1
இவையெல்லாம் எண்ணெயில் போட்டுக் காச்சி .........
எண்ணையும் ஏழரைக் காண்டி வெந்நீருமாய்க்
குடிக்கவும்

இந்தப்படி மூன்றுநாள் குடுக்கவும்

## காலம்

இல்லை

## குறிப்பு

இதில் முதற்செய்யுள் முதல் 10 செய்யுட்கள் வரை 2 ஏடுகளில் அகத்தியர் இரத்தினச் சுருக்கம்' பின்னர் 20 முதல் 120 வரை வேறு நூலாகத் தெரிகிறது, கையெழுத்தும் வேறு அதன் பின் 58 முதல் சில செய்யுட்கள் வேறு நூல்.
காப்பேட்டில்

"மறுக்காரை சுக்கு மருதந்தோல் வேலான்வேல்
யெருக்கரசு புன்னையிலை யேழும் - நருக்கு
நாலொன்றாய் காச்சி நாலுநாள் கொப்பளிக்கில்
பாலன்பல் லாங்கிழவன் பல்" என்ற வெண்பா உள்து

இதில், ஆனந்த வயிரவன், "கப்பாட மாத்திரை, பூபதி மாத்திரை கரிசாலை லேகியம் முதலியன உள்ளன.

வரிசை எண் : 2117 சுவடி எண் : 1102

# அகத்தியர் குருநூல் – 50

பொருள் : மருத்துவம்

நூலாசிரியர் : அகத்தியர் ஏடுகளின் எண்ணிக்கை : 28

சுவடியின் நிலைமை : மிக மிகப் பழுது பக்கத்திற்கு : 6-9 வரிகள்

அளவு : 14 × 3½ செண்டி மீட்டர் எழுத்து : தமிழ்

கி. எண்ணிக்கை : 400 முழுமை :

## தொடக்கம்

அகண்டவெளி பராபரத்தின் பொருளே போற்றி
அகிலமதில் குருநூலன் பதுவுஞ் சொல்ல
இகத்தில்பசு பதிபாசம் மூன்றுந் தள்ளி
ஈசனைப்போல் சர்வாந்திரியா யிருக்க வேண்டி

## முடிவு

விண்டல்லோ சத்தியுட (கிருபை யாலே)
விரைந்துரைத்தேன் யேழையப்பா ............ ............
குன்று(டைய) வுலகமெல்லாம் சித்தர் ............
குருநூலும் அன்பதுந்தான் குணந்தான் முற்றே ! — 51

வேலுமயில் பராசத்தி துணை

## காலம்

இல்லை

## குறிப்பு

இது, எமது சுவடி எண் 321-g / D 609 போன்றது. இதில் 22-ஆம் பாடலின் பின்னர் பரிபாஷை முதல் காண்டத்தில் சொன்ன பஞ்ச சுன்னத்தில் முடித்து சத்த கங்கை இரண்டாவது காண்டத்தில் கூறிய ''சிவமுல்லை முடிக்கும் பாகம்" என்று எழுதப்பட்டுள்ளது. இது முப்பு பற்றிய சுவடியாகும்.

இதன் பின்னர் மருத்துவம் எழுதிய நான்கு ஏடுகள் உள்ளன.

வரிசை எண் : 2118

சுவடி எண் : 1103

# அகத்தியர் வைத்தியம்-150

பொருள் : மருத்துவம்

நூலாசிரியர் : அகத்தியர்

ஏடுகளின் எண்ணிக்கை : 15

சுவடியின் நிலைமை : மிக மிகப் பழுது

பக்கத்திற்கு : 10-12 வரிகள்

அளவு : $30\frac{1}{2} \times 3\frac{1}{2}$ சென்டி மீட்டர்

எழுத்து : தமிழ்

கி. எண்ணிக்கை : 400

முழுமை

*தொடக்கம்*

*முடிவு*

*காலம்*

குரோதி வருஷம், ஆனி மாதம் 27-ஆம் தேதி மதுரை வடக்குலயன், பெ. அய்யன் பண்டிதருக்காக மதுரை, ந. அ. பெரியசாமியா பிள்ளை எழுதியது,

குருவேதுணை

நமச்சிவாய

*குறிப்பு*

இது எமது சுவடி எண் 324—b/D. 637 போன்றது.

வரிசை எண் : 2119

சுவடி எண் : 1104

# அகத்தியர் — 16

பொருள் : மருத்துவம்

நூலாசிரியர் : அகத்தியர்

ஏடுகளின் எண்ணிக்கை : 3

சுவடியின் நிலைமை : மிக மிகப் பழுது

பக்கத்திற்கு : 8-10 வரிகள்

அளவு : $30\frac{1}{2} \times 3\frac{1}{2}$ செண்டி மீட்டர்

எழுத்து : தமிழ்

கி. எண்ணிக்கை: 100

முழுமை

தொடக்கம்

முடிவு

காலம்

குறிப்பு

இது, எமது சுவடி எண் 185-b /D 292 'அகத்தியர் பச்சை பதினாறு' போன்றது.

வரிசை எண்: 2120

சுவடி எண்: 1105

# நாடிக்குறிப்பு-அனுபோகக் குறிப்பு

பொருள்: மருத்துவம்

நூலாசிரியர்: அறியக்கூடவில்லை

ஏடுகளின் எண்ணிக்கை: 13

சுவடியின் நிலைமை: மிக மிகப் பழுது

பக்கத்திற்கு: 11-12 வரிகள்

அளவு: $31 \times 3\frac{1}{2}$ செண்டி மீட்டர்

எழுத்து: தமிழ்

கி. எண்ணிக்கை: 700

முழுமை

## தொடக்கம்

கரிமுக னடியை வாழ்த்திக்
கைதனில் நாடி பார்க்கில்
பெருவிர லங்கு லத்தில்
பிடித்துட னாடி தொட்டால்
ஒருவிர லோடில் வாதம்
இருவிரல் நாடி பித்தம்
திருவிரல் மூன்றி லோடில்
சிலேற்பன நாடி தானே.

## முடிவு

மரிப்பான நூறாண்டு சேற பித்தம்
வாதமிவை மூன்றுபங்காய் நடக்கும் போது
தரிப்பான ஆண்டுபதி னொன்று மாதம்
தானொன்று நாள்பத்து ச......... மு .........
இருப்பான சிலேற்பனத்தி லியங்கள் வாரம்
இயல்பான பித்தத்தி லியங்க மைய
கதிப்பான வந்தத்தி லியங்கப் பித்தம்
கலந்து முறை .................. பாங்கே! — 110

## காலம்

விரோதிகிருது வருடம், புரட்டாசி மாதம் 12ந் தேதி
எழுதி முடிந்தது
முற்றும்

## குறிப்பு

இதில், நாடி பார்க்கும் விதம், பித்த வாத சிலேத்துமம். அதனால் வரும் நோய்கள் முதலியன அறியும் விதம், முதலியன உள்ளன. இரண்டு பத்தியாக எதப்பட்டுளது.

வரிசை எண் : 2121 சுவடி எண் : 1106

# அகத்தியர் வைத்தியம் அறுநூறுபடி பீடிகை

பொருள் : மருத்துவம்

நூலாசிரியர் : அகத்தியர்

ஏடுகளின் எண்ணிக்கை : 8

சுவடியின் நிலைமை : மிகப் பழுது

பக்கத்திற்கு 10-12 வரிகள்

அளவு : $31 \times 3\frac{1}{2}$ செண்டி மீட்டர்

எழுத்து : தமிழ்

கி. எண்ணிக்கை : 400

முழுமை

## தொடக்கம்

......... ல்லுப்பை ......... ன்னை யாவின் வெண்ணெயை
அயக்கரண்டியிலிட்டு நீத்தி வெள்ளாட்டுப்
பாலிலஞ்சு பலம் சாய்க்க 20 திரம் சுத்தியாகும்

## முடிவு

உப்பு வருத்து கூட்டவும். புளியிலை தள்ளி
தூதுவளை காயி யிலையும் முருங்கையிலை காயும்
முளைக்கீரைத் தண்டு மாகும்.

மகோதரம், காமாலை, வீக்கம், பித்தபாண்டு முதலான வியாதியெல்லாம் தீரும்.

## காலம்

இல்லை

## குறிப்பு

இது, இரண்டு பத்தியாக எழுதப்பட்டுளது. இதில் காரீய சித்தூரம், தாம்பூர சிந்தூரம் ரச பற்பம், காந்த சிந்தூரம், சனக சிந்தூர மணி, மாத்திரை, நாவல் நெய், கோடா சூரி, முதலியன உள்ளன.

இது, 'அகத்தியர் வைத்திய வல்லாதி அறுநூறு' அன்று

வரிசை எண் : 2122 சுவடி எண் : 1107

# அகத்தியர் கௌமதி நூல்—400

பொருள் : மருத்துவம்

நூலாசிரியர் : அகத்தியர் ஏடுகளின் எண்ணிக்கை : 85

சுவடியின் நிலைமை : மிக மிகப் பழுது பக்கத்திற்கு : 10-12 வரிகள்

அளவு : 31 × 3½ செண்டி மீட்டர் எழுத்து : தமிழ்

இ· எண்ணிக்கை : 4000 முழுமை

தொடக்கம்

குட்டத்துக்கு

சிவகிருபை பாதமது போற்றி நாளும்
தெரிந்தெடுத்துப் பதினெண்பேர் மறத்தல் யாதுந்
தவம்பெறவே கௌமதிநூல் பாடல்நா னூறில்
சாத்தினோம் வயித்தியங்கள் யோக ஞானம்

முடிவு

காச்சப்பா ....... ரிந்துவிடு பெரிதோ அல்லால்
அவ்வழியின் மேருவுநீ திவனுக் குள்ளே
மூச்சப்பா கடிகை யென்றில் முடிந்து போச்சு
முற்றுமப்பா கெவுமதியின் நூலின் முற்றே ! —427

முற்றிற்று

காலம்

விரோதி கிருது வருஷம், கார்த்திகை மாதம் 11-ந் தேதி
எழுதி முடிந்தது
முற்றும்

குறிப்பு

இது, எமது சுவடி எண் 612/D 1233 போன்றது.

வரிசை எண் : 2123 சுவடி எண் : 1108

# ரோமரிஷி - 19

பொருள் : மருத்துவம்

நூலாசிரியர் : ரோமரிஷி ஏடுகளின் எண்ணிக்கை : 5

சுவடியின் நிலைமை : மிக மிகப் பழுது பக்கத்திற்கு : 8-9 வரிகள்

அளவு : 21×3½ செண்டி மீட்டர் எழுத்து : தமிழ்

கி. எண்ணிக்கை : 100 முழுமை

## தொடக்கம்

நீதமுடன் ரோமரிஷி பூத லத்தில்
நெறிகெட்ட மானிடர்க்கு மருந்து சொல்வேன்
காதலுடன் கணபதியைத் தியானஞ் செய்து
கார்மேக நிறமுடைய தயிலப் போக்கு

## முடிவு

காரப்பா சிவகாமி பூசை செய்து
களஞ்சிவெள்ளி யுருக்கயிலே தாக்கு தர்க்கு
பாரப்பா ஏழரை மாத்துக் காணும்
பரமமே லாணையிட்டோம் பசும்பொன்னாமே! — 19

## காலம்

இல்லை

## குறிப்பு

இது எமது சுவடி எண் 308-a/D. 551 போன்றது. பாடவேறுபாடுகள் அதிகம் உள்ளன.

வரிசை எண் : 2124

சுவடி எண் : 1109

# ரோமரிஷி சூத்திரம் - 25

பொருள் : மருத்துவம்

நூலாசிரியர் : ரோமரிஷி

ஏடுகளின் எண்ணிக்கை : 6

(3 வது ஏடு இல்லை)

சுவடியின் நிலைமை : மிக மிகப் பழுது

பக்கத்திற்கு : 8 வரிகள்

அளவு : 21 × 3½ செண்டி மீட்டர்

எழுத்து : தமிழ்

கி. எண்ணிக்கை : 100

குறை

## தொடக்கம்

உப்புக்கட்டு

ஓமூல தந்திமுகன் சரணம் மிகத்தொழுது
ஆமூல தந்திமுகன் சரணமா கத்தொழுது

## முடிவு

இகழாதே யென்நூலைக் கொடுக்க வேண்டா
மின்னமொடு .........ப்பா திறக்கச் சொல்வேன்
தாளாத சப்பாணி குறைநோய் ......... — 21

## காலம்

இல்லை

## குறிப்பு

இது எமது சுவடி எண் 228-g/D 373, எண் 236-m/D 405 போன்றது. பாட வேறுபாடுகள் மிகுதியாக உள்ளன.

வரிசை எண் : 2125 சுவடி எண் : 1110

# ரோமரிஷி சூத்திரம் - 16

பொருள் : மருத்துவம்

நூலாசிரியர் : ரோமரிஷி

ஏடுகளின் எண்ணிக்கை : 4 (1:2 ஏடுகள் இல்லை)

சுவடியின் நிலைமை : மிக மிகப் பழுது

பக்கத்திற்கு : 7-8 வரிகள்

அளவு : 21 × 3½ செண்டி மீட்டர்

எழுத்து : தமிழ்

ரு. எண்ணிக்கை : 100

குறை

## தொடக்கம்

## முடிவு

## காலம்

இல்லை

## குறிப்பு

இது, எமது சுவடி எண் 644/D 1267 போன்றது

வரிசை எண் : 2126 சுவடி எண் : 1111

# பூரண ரகசியம் — 6

பொருள் : மருத்துவம்

நூலாசிரியர் : அறியக்கூட வில்லை

ஏடுகளின் எண்ணிக்கை : 2

சுவடியின் நிலைமை : மிக மிகப் பழுது

பக்கத்திற்கு : 7-8 வரிகள்

அளவு : 21 × 3½ செண்டி மீட்டர்

எழுத்து : தமிழ்

கி. எண்ணிக்கை : 30

முழுமை

## தொடக்கம்

பூரணப் பயனா லறியாததை
காரணக் குரு...... கருதிப் பரி
பூரணத்தைப் பொறுவன் சிந்தைநவ
வாரணத்தின் மலரடி வாழ்த்துவாம்

## முடிவு

இப்பொருளை யாரேனு ......... வோர்க் கியம்புவாரே
லப்பொழுது அவன்தலையி லிடிவீழ்ந்து மூடிக்கொண்டு
அலைவார் நாளும்
செப்பரிய உக்சியினில் தீப்பிடித்துத் திரிவார் போல
அப்படியே கெதிதேடும் அவர்க் குரைத்தால் வாழ்ந்து
கெதியடைவார் தாமே! —6

முற்றும்

நன்றாக

## காலம்

இல்லை

## குறிப்பு

இதில், பூரணம் என்ற சொல்லுக்குப் பொருளும், அதன் இரகசியமும் கூறப் பட்டுள்ளது

இதன் 2-ஆம் ஏட்டின் பின்புறம் ''விளையாட்டு வித்தை'' எழுதப்பட்டுளது

வரிசை எண் : 2127 சுவடி எண் : 1112

# பூரண சூத்திரம் - 16

பொருள் : மருத்துவம்

நூலாசிரியர் : அகத்தியர்
ஏடுகளின் எண்ணிக்கை : 6

சுவடியின் நிலைமை : மிக மிகப் பழுது
பக்கத்திற்கு : 6–8வரிகள்

அளவு : 21 × 3½ செண்டி மீட்டர்
எழுத்து : தமிழ்

கி. எண்ணிக்கை : 100
முழுமை

## தொடக்கம்

பூரணமாய் நின்றதொரு அய்யர் பாதம்
போற்றியே யென்னாளும் புவியின் மீது
காரணமாய் நின்றதொரு ஆயி தன்னைக்
கண்மூக்கு மத்தியிலே கருதிப் பார்த்து

## முடிவு

யோசிப்பாய் மந்திரங்க ளனந்தங் கோடி
உத்தமியாள் பாதபூசை யுகந்து தானா
லாசிப்பா ளதிள்பிறகு ஆத்தா ளாத்தா
ளானந்தப் பூரணத்தி னருள தாமே! -17

பூரண சூத்திரம் முற்றும்
குருபாதமே கெதி

## காலம்

இல்லை

## குறிப்பு

இதில், தத்துவ ரூபமாக சுழுமுனை, மனோன்மணி பூசை முதலியன கூறப் பட்டுள்ளன.

வரிசை எண் : 2128 சுவடி எண் : 1113-a

# சுந்தரானந்தர்-50

பொருள் : மருத்துவம்

நூலாசிரியர் : சுந்தரானந்தர்

ஏடுகளின் எண்ணிக்கை: 11

சுவடியின் நிலைமை : மிக மிகப் பழுது

பக்கத்திற்கு : 8 வரிகள்

அளவு : 21 × 3½ செண்டி மீட்டர்

எழுத்து : தமிழ்

கி. எண்ணிக்கை :250

குறை

## தொடக்கம்

ஆதிபரா பரத்தினுட கிருபை கூர்ந்து
அன்பான மனோன்மணியைத் தொழுது போற்றி
சோதியெனு மங்கமலர் முகிழ்த்தங் கொண்டு
சூத்திரம்போல் வாதத்தில் லட்சங் காப்பு

## முடிவு

நோய்பிடித்த சித்தர்கள் தான் அனந்த முண்டு
நோக்கியே அவர்களுடன் பேச வேண்டாம்
தாயறியாப் பிள்ளையுடன் சேர வேண்டாம்
தன்மையுடன் பூரணத்தைத் தயவாய்ப் போற்றே —35

முற்றிற்று

## காலம்

இல்லை

## குறிப்பு

இதில் தலைப்பு சுந்தரானந்தர் — 50 என்றுளது. ஆனால் பாடல் 35 ஆனதும் முற்றும் என்றுளது.

வரிசை எண் : 2129

சுவடி எண் : 1113-b

# சுந்தரானந்தர் அதிசய சாலம்

பொருள் : மருத்துவம்

நூலாசிரியர் : சுந்தரானந்தர்

ஏடுகளின் எண்ணிக்கை : 2 (11&13)

சுவடியின் நிலைமை : மிகப் பழுது

பக்கத்திற்கு : 8 வரிகள்

அளவு : 21 x 3½ செண்டி மீட்டர்

எழுத்து : தமிழ்

கி. எண்ணிக்கை : 50

குறை

## தொடக்கம்

நீயேதான் கேளெனவே அணவின் கூண்டில்
நிகர்முடிச்சி வேறுண்டு எடுத்து காணும்
வாய்தானே அரிதமவருக இங்கு வருக
மகிழ்லட்சம் உருவேத்தி எடுத்துக் கொண்டு
காயேநீ கூடதனை சாம்பற் செய்து
கனவேட்டை தடைக்கதனை சற்றே யூது
பாயேதான் நம்போக்கு வேட்டை சாயும்
பானானை உண்மையிது பகர லாமே ! —1

## முடிவு

அருளியதோர் கருங்குருவிக் கூட்டில் தானும்
ஆனதொரு வேருண்டு (வி)ளைய மாகும்
அருளியதோர் காயம்போல் வீசும் பாரு
அறிந்தெடுத்து கனதப்பு யென்று லெட்சம்
பொருளிதனை உருச்செவித்து அமுர்தந் தன்னில்
புகழவே யுரைத்து நெத்தியில் பெட்டிட் டாக்கால்
அருளியதோர் கண்ணாடி தன்னைப் பாரு
மாயமடா வுருதானும் மாயம் பாரே ! —4

## காலம்

இல்லை

## குறிப்பு

இதில், விலங்கு தெரிக்கக் கூடிய மூலிகையினைப் பெற, கருங்குருவிக் கூட்டில் செய்யவேண்டிய காரியங்களைக் கூறுகின்றது.

வரிசை எண் : 2130 சுவடி எண்: 1114

# சட்டைமுனி சூத்திரம் - 8

பொருள்: மருத்துவம்

நூலாசிரியர் : சட்டைமுனியார்

ஏடுகளின் எண்ணிக்கை : 3

சுவடியின் நிலைமை : மிக மிகப் பழுது

பக்கத்திற்கு : 8-9 வரிகள்

அளவு : 21 × $3\frac{1}{2}$ செண்டி மீட்டர்

எழுத்து : தமிழ்

கி. எண்ணிக்கை : 70

முழுமை

## தொடக்கம்

ஆதியெனுங் கயிலாச ஆயி பாதம்
அழகாக எனைப்பெற்ற அய்யர் பாதம்
சோதியெனுந் தென்பொதிகை யாசான் பாதம்
தொழுதிறஞ்சி வேதாந்தச் சூட்சஞ் சொல்வேன்
ஊதியே உம்மென்றும் அம்மென் றுாணி
ஓதிடவே சாபமெல்லா மோடிப் போமே
சாதனையால் வகாரமொடு சிகாரங் கூட்டி
வருந்திடவே பத்துலட்சம் வசிய மாமே !

## முடிவு

ஆச்சிந்த வகையாலே சித்தர் செய்தார்
ஆதியெனும் பார்பதித்தாய் அருளே பத்தி
பேச்சப்பா தாயினுட வித்தை எல்லாம்
புகழான குருவருளால் கண்டு தேறு
பேச்சத்த குருவருளை வாங்கிக் கொண்டா
லியல்வான பரகதிக்கு யிடமெ யாவாய்
பாசமத்த குருபதத்தில் நினைவு வைத்தால்
பாங்காக மனதுவைத்துப் பகரு வாரே ! — 8

சிவமயம்
தேவி சகாயம்

## காலம்

இல்லை

## குறிப்பு

இதில், வேதாந்த சூட்சம் பேசப்படுகிறது. சூதம், நவச்சாரம், கெவுரி, கெந்தி முதலியனவும் அறிய முடிகிறது.

வரிசை எண் : 2131 சுவடி எண் : 1115

# முப்பூ

பொருள் : மருத்துவம்

நூலாசிரியர் : அறியக்கூடவில்லை

ஏடுகளின் எண்ணிக்கை :

சுவடியின் நிலைமை : மிக மிகப் பழுது

பக்கத்திற்கு : 8-9 வரிகள்

அளவு : 21 × 3½ செண்டி மீட்டர்

எழுத்து : தமிழ்

கி. எண்ணிக்கை : 100

முழுமை

## தொடக்கம்

தானென்ற வயித்தியத்தில் மருந்து கேளு
தப்பாது பூனீறு சாரம் வேணும்
வானென்ற தயிலமொடு செந்தூரம் பற்பம்
வளமான கிருதமொடு லேகி யந்தான்
வேனென்ற தலைமுழுக யெண்ணை கஷாயம்
விதமான திதுகளெல்லா முப்பே யாதி
நானன்றாய்ச் சொல்லுகிறேன் முப்பூ வப்பா
நலமான உவர்நிலத்தில் கண்டு பாரே!

## முடிவு

நாளியுடன் எள்ளெண்ணை படியரைதான் விட்டு
நலமாகக் காய்ச்சிவைத்துக் கொண்டு நீயும்
ஊளியென செந்தூரங் கலந்து கொண்டு
கொடுத்திடுவாய் உள்ளுக்கும் மேலும் போடு
வாளியென சாய்ங்காலங் குளிக்கச் சொல்லு
மைந்தனே மூன்றுநா ளிப்படியே செய்ய
சூளியென்ற சொரிகரப்பான் தீர்ந்து ம்பாகும்
சுகமான மருந்திதுதான் சொன்னேன் பாரே!

## காலம்

இல்லை

## குறிப்பு

இதில், எல்லா மருந்துகட்கும் முப்பூவே முதல் என்று கூறப்பட்டுளது. 8000 காண்டத்தில் எடுத்தெழுதியது என்று தொடக்கத்தில் உள்ளது. 8000 என்பதற்கு 'அகு' என்று எழுதப்பட்டுளது. இதில் 13 செய்யுட்களே உள்ளன.

இது, அகத்தியர்-8000 போலும், அதிலிருந்து முப்பூ பற்றிய செய்தகளை எடுத்தெழுதப்பட்டுளது போலும்

வரிசை எண் : 2132 சுவடி எண் : 1116

# விஷபேதி

பொருள் : மருத்துவம்

நூலாசிரியர் : அறியக்கூடவில்லை

ஏடுகளின் எண்ணிக்கை : 9

சுவடியின் நிலைமை : மிகப் பழுது

பக்கத்திற்கு : 7-8 வரிகள்

அளவு : 21 × 3½ செண்டி மீட்டர்

எழுத்து : தமிழ்

கி. எண்ணிக்கை : 150

முழுமை

## தொடக்கம்

கேளப்பா ஊளியென்ற காத்துச் சொல்வேன்
    கெடியான சாமளா தேவி யாலே
காணப்பா மைபோலே கறுத்து நிற்கும்
    கண்ணுக்குள் தோற்றாது கடின மெத்த
வாளப்பா காத்தினுட விபர மெல்லாம்
    மைந்தனே சொல்லுகிறோங் கேளு கேளு
பாளப்பா பண்ணிவிடும் உலக மெல்லாம்
    பரிசுத்த மாயிலிருந்தால் (பறக்)கும் பாரே — 1

## முடிவு

காயம் வசம்பு, அரத்தை, வெள்ளுள்ளி திப்பிலி
கிராம்பு, சாதிக்காய், சாதிப்பத்திரி, இஞ்சி, வ......
குட்டிவிளாச் சாறு. வேலிப்பருத்திச் சாறு 4 நாலு
சாமம்

## காலம்

இல்லை

## குறிப்பு

இதில், விஷபேதிக்கு மருந்து, பஞ்சாண்டனாதி மாத்திரை சிங்குளிகை, நாகக் கட்டு, வங்க செந்தூரம், பட்சி வன்ன சுருக்கம் முதலியன உள்ளன.

இது, எமது சுவடி எண் [illegible] / D 1980 "[illegible]வைத்தியம்" போன்றது.

வரிசை எண் : 2133 சுவடி எண்: 1117

# கொங்கணர் வழலை முறை-31

பொருள் : மருத்துவம்

நூலாசிரியர்: கொங்கணர் ஏடுகளின் எண்ணிக்கை : 7

சுவடியின் நிலைமை : மிக மிகப் பழுது பக்கத்திற்கு 8-9 வரிகள்

அளவு : 21 × 3½ செண்டி மீட்டர் எழுத்து : தமிழ்

கி. எண்ணிக்கை : 150 முழுமை

## தொடக்கம்

அஞ்சென்ற மனதுக் கப்பா
அகம்புறம் ரெண்டு முண்டும்
நஞ்சுண்ட அகத்தான் காது
நயனந்தாள் பிறமு மாச்சு
அஞ்சென்ற ரெண்டு மங்கே
அடைபட்டா லப்போதுங் காணும்,
தஞ்சென்ற ஆத்தாள் சொன்னாள்
தான்தேடிப் பார்த்த வாறே! —1

## முடிவு

தாக்கியுள் ளோக்கி னாக்கால்
தானமாஞ் சுவரே தோன்றும்
சாக்கிரங் கண்ட தெல்லாம்
தயாநிதி நிர்மல மாய்த்
தூக்கியுள் ளோடும் பாரு
சொர்னங்கா சிளுக்கி றாப்போல்த்
தேக்கியுள் ளுந்தி னாக்கால்
தெளியநாட்ச் செல்லும் பாரே! —31

வழலை முற்றும்
சிற்குரு பாதமே கெதி

## காலம்

இல்லை

## குறிப்பு

இது வழலை பற்றி 31 செய்யுட்களால் ஆன நூல்

வரிசை எண் : 2134 சுவடி எண் : 1118

# ஊர்வசி ரெத்தினச் சுருக்கம்

பொருள் : மருத்துவம்

நூலாசிரியர் : ஊர்வசி

ஏடுகளின் எண்ணிக்கை : 8

சுவடியின் நிலைமை : மிக மிகப் பழுது

பக்கத்திற்கு : 6-8 வரிகள்

அளவு : $21 \times 3\frac{1}{2}$ செண்டி மீட்டர்

எழுத்து : தமிழ்

கி. எண்ணிக்கை : 150

முழுமை

## தொடக்கம்

ஏக மாகி யிருந்த பராபரம்
தேக சீவசை தன்னிய சிகாரனை
யோக மாக நினைக்கு முறுவசி
தோகையாள் சொல்லு ரெத்தினச் சுருக்கமே

## முடிவு

ஆதியின் விலாஷ மிவையான செகம்யாவும்
பேதகமதா யறிஞர் பேசுவது முண்டோ
(சா)திபல வானவுயிர் சேகரமி தொன்றே
நீதிமொழி யான பதினெட்டது முற்றே ! —28

உருவசி ரெத்தினச் சுருக்கம்

முற்றும்

## காலம்

இல்லை

## குறிப்பு

இது, எமது சுவடி எண் 148/D 237 போன்றது. இதில் சீவன் விளக்கம் பிரம்ம விளக்கம், முப்பு மார்க்கம், குண்டலினி யோகம் முதலியன கூறப்பட்டுள்ளன.

வரிசை எண் : 2135 சுவடி எண் : 1119

# முனியசாமி அண்ணா கைபாகம்

பொருள் : மருத்துவம்

நூலாசிரியர்: முனியசாமி அண்ணா

ஏடுகளின் எண்ணிக்கை : 13

சுவடியின் நிலைமை : மிக மிகப் பழுது

பக்கத்திற்கு: 7-8 வரிகள்

அளவு: $21 \times 3\frac{1}{2}$ செண்டி மீட்டர்

எழுத்து : தமிழ்

கி, எண்ணிக்கை: 250

முழுமை

## தொடக்கம்

கெந்தகத்தை இரும்புக் கரண்டியில் பசுவின்
வெண்ணையைத் தடவி உருக்க உருகும்
கருஞ்சீரகத்தை அரைத்து நெல்லிக்காய் ரசம்
எடுத்து அதில் கலக்கித் தெளியவைத்து
டி சரக்கை உருக்கிச் சாய்க்க வட்டாகும்

## முடிவு

எருக்கிலையைச் சுத்திக்கொண்டு வேப்பெண்ணையைச்
சுடவச்சு அதில் துவைச்சு ஒத்த விடவும்
டி இலையை ரெண்டாய் நறுக்கிக் கொள்ளவும்
கொண்டவாதந் தீரும்

## காலம்

இல்லை

## குறிப்பு

இதில், நவச்சாரம், எண்ணெய் எடுக்க, கற்பூரசலாசத்து பஷ்பம், ரசகற்பூரக் கட்டு, காந்த ரச வில்லை, அரிதார எண்ணெய், பல விஷத்துக்கு, கெந்தகத் தயிலம், ர புதங்கம், முதலியன உள்ளன.

வரிசை எண் : 2136

சுவடி எண் : 1120

# கருவூரார் சூத்திரம்

பொருள் : மருத்துவம்

நூலாசிரியர் : கருவூரார்

ஏடுகளின் எண்ணிக்கை : 26

சுவடியின் நிலைமை : மிக மிகப் பழுது

பக்கத்திற்கு : 6-9 வரிகள்

அளவு : 21 × 3½ செண்டி மீட்டர்

எழுத்து : தமிழ்

கி. எண்ணிக்கை : 500

குறை

## தொடக்கம்

**வண்ணார் மாடன் தியானம்**

அரிஓம் அகோர சத்துரு சங்காரா
நீல பரிபூரண பூசை கொண்ட
வண்ணார் மாடனல்லவோ நானொரு
மந்திரவாதி யல்லவோ

## முடிவு

தேங்காய் எண்ணெயில் ஒரு சல்லி இடை சூடனை
போட்டுக் காச்சி இளஞ்சூட்டே காதில் அடைத்து
பஞ்சை வைக்கவும்

## காலம்

இல்லை

## குறிப்பு

இதில், மந்திரங்கள் மருந்துகள் கூறப்பட்டுள்ளன, மேலும் இதில் நவக்கிரகபூசை, வங்கபற்பம், மேகராங்க பல்லாரி, அவின் செந்தூரம், வெட்டுவான் பற்பம், சஞ்சீவி குணம், கடுக்காய் லேகியம், கடுகு லேகியம் முதலியன உள்ளன.

வரிசை எண் : 2137 சுவடி எண் : 1121

# அகத்தியர் பாடல்

பொருள் : மருத்துவம்

நூலாசிரியர் : அகத்தியர்

ஏடுகளின் எண்ணிக்கை : 12

சுவடியின் நிலைமை : மிக மிகப் பழுது

பக்கத்திற்கு : 6-7 வரிகள்

அளவு : 26½ × 3 செண்டி மீட்டர்

எழுத்து : தமிழ்

கி. எண்ணிக்கை : 250

குறை

## தொடக்கம்

பூரணமாம் மும்மூலப் பொறியிற் சூடாம்
புகையெழும்பி ............... ...... ............
காரணமாம் நீர்கலந்து கண்ணில் ரோகம்
கனலெழு ......... ......... ............

## முடிவு

அத்ததொரு மண்டூர நீறு சொல்வேன்
அதிகமாஞ் சிறுசுணங்கு அரைத்துப் பூசி
வைத்திடவே மண்குகையில் சில்லுப் போட்டு
வளமாகச் சீலையொன்று வாயிற் செய்து
பத்தியுடன் கிசபுடத்தில் நீறிப் போகும்
பற்றிநீ அதையெடுத்து வைத்துக் கொண்டு
பதனமாய்த்தேனிலே பொசித்தி டாயே ! - 46

## காலம்

இல்லை

## குறிப்பு

இதில், இடையிடையே ஏடுகள் இல்லை. தொடர்ச்சி இல்லை. இதில், தாம்பூர பற்பம், ரசபற்பம், வெள்ளீய பற்பம், காரீயபற்பம், வெண்கல பற்பம், திராவின் பற்பம், கல்நாரணை பற்பம், ஒளுக்கரை பற்பம், நாக பற்பம், மண்டூர பற்பம் முதலியன உள்ளன.

இது, எமது சுவடி எண் 311-e, D566 அகத்தியர் 205 போன்றது

வரிசை எண்: 2138 சுவடி எண் : 1122

# வைத்தியத் திரட்டு

பொருள்: மருத்துவம்

நூலாசிரியர்: பலர்

ஏடுகளின் எண்ணிக்கை : 10

சுவடியின் நிலைமை: மிக மிகப் பழுது

பக்கத்திற்கு 6– 7வரிகள்

அளவு: 28 × 3 செண்டி மீட்டர்

எழுத்து: தமிழ்

கி. எண்ணிக்கை: 200

குறை

## தொடக்கம்

யிடைகூட்டி யிடைத்துவிடு மண்ட லந்தான்
………ண்ணும்திண்ணும் யெளிச்சல்லே ஆறுவகை
கிராணியெல்ல சடைத்தது கெ………… …………போம்
புவியுள்ளோர்க்குத் தாக்கினால் புளியொடு புகையிலை

## முடிவு

சரக்கொடு லோசஞ்சாத ………… சேந்துமை
சரக்கொடு கார லவண செந்தூரஞ்
சரக்கொடு சூத்திரமுந் தங்……………

## காலம்

இல்லை

## குறிப்பு

இதில், ஏடுகள் ஒடிந்துள்ளன. இடையிடையே ஏடுகள் இல்லை.

இதில், அண்ட நீரு, ராசிவங்க செந்தூரம், கினிஞ்சிச் சுண்ணம், சிங்கி பற்பம் முதலியன உள்ளன.

வரிசை எண் : 2139 சுவடி எண் : 1123

# திருமூலர் வாக்கியம்

பொருள் : மருத்துவம்

நூலாசிரியர் ; திருமூலர்

ஏடுகளின் எண்ணிக்கை : 15

சுவடியின் நிலைமை : மிக மிகப் பழுது

பக்கத்திற்கு : 8-9 வரிகள்

அளவு : 39 × 4 செண்டி மீட்டர்

எழுத்து : தமிழ்

கி. எண்ணிக்கை : 8)0

முழுமை :

## தொடக்கம்

காதான ............ ............. .............
வேதாக மத்தின் மெய்ஞ்ஞான மெய்ப்பொருளை
ஆதார சக்தி அருளு மனோன்மணி
மாதாவின் பாத மலரடி ............

## முடிவு

கண்டிடு நெய்தேன் கனிசீனிச் சக்கரையில்
உண்டிடும் போது ஓடிடும் மேகம்
பண்டுள வியாதி யாகிலுமே பறந்திடுந்
தெண்டிசை நமனுந் தியங்கிடு முண்மையே ! — 180

## காலம்

இல்லை

## குறிப்பு

இதில், குழந்தை கருவில் ஆண், பெண் அறிய, நாடி கொண்டு கருப்பிணியின் கூறு கூறுதல், வாயுவினால் வரும் விரணங்கள் முதலியன கூறப்பட்டுள்ளன.

வரிசை எண் : 2140

சுவடி எண் : 1124

# குருமுனி தண்டகம்

பொருள் : மருத்துவம்

நூலாசிரியர் : குருமுனி

ஏடுகளின் எண்ணிக்கை : 13

சுவடியின் நிலைமை : மிக மிகப் பழுது

பக்கத்திற்கு : 7-8 வரிகள்

அளவு : 16×3 செண்டி மீட்டர்

எழுத்து : தமிழ்

கி. எண்ணிக்கை : 200

முழுமை

## தொடக்கம்

அந்தணர் பாதம் போற்றி
அறிவு ........... வோர்க் கெல்லாம்
சந்ததம் பூமி மீதில்
சாற்றிய தண்ட கந்தான்
யெந்தனார் பின்னை யெல்லாம்
யிதுவறிந் துள்ளே கொண்டு
பைந்தமிழைப் பிறர்விள் ளாதார்
பெரியவ ராகுந் தானே ! —1

## முடிவு

கானே துடரி கண்டவர்க் கெய்தும்
கானே பிடித்து நாமுமா னோமே ! —98

ஆனோமே சிவனடி தொழுதே பிறிய
மானே பார்பதி மக்களு மானோம் —100

## காலம்

இல்லை

## குறிப்பு

இதில், 98-ஆம் செய்யுட்களுக்குப் பிறகு செய்யுள் எண் 100 தரப்பட்டுள்ளது.

இது, எமது சுவடி எண் 347-h/D 683 'அகத்தியர் தண்டகம்' போன்றது. கடைசிச் செய்யுளின் பின்பகுதி இதில் இடம் பெறவில்லை பாடவேறுபாடுகள் உள்ளன.

வரிசை எண் : 2141 சுவடி எண் : 1125

# குருமுனி பட்சணி

பொருள் : மருத்துவம்

நூலாசிரியர் : குருமுனி

ஏடுகளின் எண்ணிக்கை : 16 (14-29)

சுவடியின் நிலைமை : மிகப் பழுது

பக்கத்திற்கு : 6-7 வரிகள்

அளவு : 16 × 3 செண்டி மீட்டர்

எழுத்து : தமிழ்

கி. எண்ணிக்கை: 300

முழுமை

## தொடக்கம்

திருமகள் சோதி பாதம்
சிகதல வல்லி மாது
மருமகள் அவளே யுந்தி
மவுனத்தில் நந்தி தோணக்

## முடிவு

ஓமிந்தப் படியுரைத்துப் பராபரந் தன்னை
உச்சரித்துப் பூரணமயாய் குடிபத் துள்ளே
போமிந்தப் பூரணத்தைப் போகா மற்றான்
போதரவா யுட்கொண்ட தறிவாம் பாரே !

சிவமயம்
குருமுனி சகாயம்

## காலம்

இல்லை

## குறிப்பு

இது, எமது சுவடி எண் 228-b/D 368 போன்றது. பாடவேறுபாடுகள் உள்ளன.

வரிசை எண்: 2142 சுவடி எண்: 1126

# வைத்தியத் திரட்டு

பொருள்: மருத்துவம்

நூலாசிரியர்: பலர்

ஏடுகளின் எண்ணிக்கை: 188

சுவடியின் நிலைமை: மிக மிகப் பழுது

பக்கத்திற்கு: 5-10 வரிகள்

அளவு: 18×3 செண்டி மீட்டர்

எழுத்து: தமிழ்

கி. எண்ணிக்கை: 3500

குறை

தொடக்கம்

மாடு செருமுகிறதுக்கு மருந்து

குப்பமேனி இலையும் வெள்ளை வெங்காயம்
வசம்பும் நறுக்கிச் சிறு......... பிசைந்து
ரெண்டு நாசியிலும் விடவும் தலையிலே
பிளக்க ............வும்.

குருவே துணை

முடிவு

.........நினான் 34, வாய்த்தி — ............
சாத்திடக் கற்பூரத் தத்தச் சாத்தி ..........
தேய்த்திடு வட்டதாக ரவியினில்
............ 35
சொல்லிய வட்ட ஒட்டில் துலங்க......
......ல லதோர் சீலை செய்து நவின்டிடு...

காலம்

இல்லை

குறிப்பு

இதில் விரோசன குளிகை, பிறமூலத்துக்கு மருந்து, உள்மூலத்துக்கு மருந்து, ஆசனி பவுத்திரம், கொடிப் பவுத்திரத்துக்கு மருந்து, ராச பிளவைக்கு மருந்து, வயத்துக் கடுப்புக்கு மருந்து, சூனியத்துக்கு மருந்து, எலிக்கடிக்கு மருந்து. கழல் வாதத்துக்கு, எரிகுள்மத்துக்கு, வாய்வுக்கு மருந்து முதலியன உள்ளன. எழுத்துக்கள் தெரியாவண்ணம் ஏடுகள் புகை படிந்துள்ளன.

வரிசை எண்: 2143

சுவடி எண்: 1127

# கைக்குணை புத்தகம்

பொருள்: மருத்துவம்

நூலாசிரியர் : அறியக் கூடவில்லை

ஏடுகளின் எண்ணிக்கை 210
(இடையிடையே ஏடுகள் இல்லை)

சுவடியின் நிலைமை: மிக மிகப் பழுது

பக்கத்திற்கு: 7–8 வரிகள்

அளவு: 19×3 செண்டி மீட்டர்

எழுத்து: தமிழ்

கி. எண்ணிக்கை: 4000

குறை

## தொடக்கம்

எழுத்தாணி லக்க மறியும் படி

வெண்பா

ஏகம் பெருங்கலக்கம் ரண்டு தனபதியார்
ஆகமிசை மூன்று அதிநோயாம்-மேகம்
பொருள்சேரும் நாலுபோர் வெல்லு மஞ்சு
அருள்சேரு மாறென் றறி.

## முடிவு

......... என்று முறையருந்து யிடதுகால்ப் பெரு
......... போடவும், பின்னை.. ...... பற்றி பின்
அதையெடுத்து பாலிற் போட்டு விடவும்

## காலம்

இல்லை

## குறிப்பு

இதில் முதல் ஏட்டின் பின்புறத்தில் ''இந்தப் புஸ்தகத்தின் ஏடுகளில் 1—14 வரைக்கும் அட்டவணையாம். மறுபடியும் உள்ளதுகள் 1 துவக்கி 235 வரைக்குமுள்ளது''என்று எழுதப்பட்டுள்ளது, அப்படியே இந்நூலின் தலைப்புகளை அகர வரிசைப்படுத்திய அட்டகுவணை எழுதப்பட்டுளது. எதிரே பக்கங்களும் குறுப்பிடப்பட்டுள்ளன. இது இச்சுவடிக் ஒரு சிறப்பு.

இதில் தேன்குழவிக் கூடுபிடுங்க, கிணற்றின் சலத்தின் புழுகாண, இடுப்பு வலிக்கு, போசன சவுந்தரி வடகம், எலியோட மருந்து, புதை மருந்து, வெடி மருந்து, கெற்பந் தரிக்க, யோனிதள்ளினதுக்கு மருந்து முதலியன உள்ளன.

வரிசை எண் : 2144 சுவடி எண் : 1128

# அகத்தியர் குருநாடி கைபாகம்

பொருள் : மருத்துவம்

நூலாசிரியர் : அகத்தியர்

ஏடுகளின் எண்ணிக்கை : 56

சுவடியின் நிலைமை : நல்ல நிலை

பக்கத்திற்கு : 5-7 வரிகள்

அளவு : 28 × 3 செண்டி மீட்டர்

எழுத்து : தமிழ்

கி. எண்ணிக்கை : 1000

குறை

## தொடக்கம்

ஆதியாங் கடவுள் தன்னை
அனுதினம் போற்றி செய்து
தீதறும் வியாதி தன்னைத்
தெளிவுட னறிய வேண்டி

## முடிவு

சாஷ்த்திரப் படியே சவுபாக்கிய வடகம்
நேத்திய தாக நிச்சயம் செய்வோம்
இத்தலம் தன்னில் ஆவர்க்கு மேதான்
சத்திய மாமுனி தானுரைத் தாரே!

## காலம்

இல்லை

## குறிப்பு

இதில், 17-ஆம் ஏடுவரை 81 பாடல்கள் உள்ளன. பின்னர் வாத சுரத்தின் குணம், மலட்டுப் புழுவுக்கு, பாரிச வாய்வுக்கு, மசநரி கடிக்கு, திப்பிலாதிச் சூரணம், தாளிச பத்திரி வடகம், எலிகடிக்கு மருந்து, கிராணிக்கு மருந்து முதலியன உள்ளன.

53-ஆம் ஏட்டிற்குப் பிறகு 4 ஏடுகள் 1,2,3,4 என்ற ஏட்டெண் கொடுக்கப்பட்டுள்ளன.

வரிசை எண் : 2145 சுவடி எண் : 1129 - a

# குருநாடி சாத்திரம்

பொருள் : மருத்துவம்

நூலாசிரியர் : அறியக்கூடவில்லை

ஏடுகளின் எண்ணிக்கை : 12(23-34)

சுவடியின் நிலைமை : மிக மிகப் பழுது

பக்கத்திற்கு : 6-7 வரிகள்

அளவு : 31 × 3 செண்டி மீட்டர்

எழுத்து : தமிழ்

கி. எண்ணிக்கை : 150

குறை

## தொடக்கம்

சீர்பெறு முனிவர் வேதம்
    தெரிந்தபி னுலகத்தோர்கள்
பேர்பெறு கருவி லுதித்த
    பிணிபலன் உணர்ந்து தேர்ந்து
உளபல நாடிக் கெல்லாம்
    மூயர்பெறு நாடி மூன்றுள்
சேர்குரு நாடி நேர்மை
    இயலுடன் கூற லுற்றார்

## முடிவு

காரியம் பதனேரி ...... ...... ......
செவ்வாய் வியாழன் பிணி தீரும்
ஆரிய ......... ...... ............
    குருநாடி சூத்திரம் முற்றும்

## காலம்

இல்லை

## குறிப்பு

இதில், கடைசி ஏடுகள் இரண்டும் பாதியாக ஒடிந்துள்ளன.

இது, அகத்தியர், வால்மீகர் நாடியினும் வேறுபட்டது. நாடி பார்க்கும் முறை, வியாதியறியுந் தன்மை முதலியன இதில் அடங்கியுள்ளன.

வரிசை எண் : 2146 சுவடி எண் : 1129-b

# அகத்தியர் வைத்திய சூத்திரம்—16

பொருள் : மருத்துவம்

நூலாசிரியர் : அகத்தியர் ஏடுகளின் எண்ணிக்கை : 4 (35-38)

சுவடியின் நிலைமை : மிக மிகப் பழுது பக்கத்திற்கு : 6 வரிகள்

அளவு : 31 × 3 செண்டி மீட்டர் எழுத்து : தமிழ்

கி. எண்ணிக்கை : 200 முழுமை

தொடக்கம்

முடிவு

காலம்

குறிப்பு

இது, எமது சுவடி எண் 254-b/D 454 அகத்தீசர் பதினாறு போன்றது.

வரிசை எண் : 2147

சுவடி எண் : 1129 - c

# போகர் பூரணாதி

பொருள் : மருத்துவம்

நூலாசிரியர் : போகர்

ஏடுகளின் எண்ணிக்கை:2(39-40)

சுவடியின் நிலைமை : மிக மிகப் பழுது

பக்கத்திற்கு : 4-6 வரிகள்

அளவு : 31 × 3 செண்டி மீட்டர்

எழுத்து : தமிழ்

கி. எண்ணிக்கை : 50

முழுமை

## தொடக்கம்

## முடிவு

## காலம்

இல்லை

## குறிப்பு

இதில். எமது சுவடி எண் 314-c / D 574 போக நாதர் 700- பூரணாதியின் வேறு பட்டது. கலிவெண்பாவாலானது.

வரிசை எண் : 2148 சுவடி எண் : 1129-d

# வைத்தியத் திரட்டு

பொருள்: மருத்துவம்

நூலாசிரியர்: பலர் ஏடுகளின் எண்ணிக்கை: 78 (41—118)

சுவடியின் நிலைமை: மிக மிகப் பழுது பக்கத்திற்கு: 1-7 வரிகள்

அளவு: 31 × 3 செண்டி மீட்டர் எழுத்து: தமிழ்

கி. எண்ணிக்கை: 1300 குறை

## தொடக்கம்

பச்சைக் கல்பூரவைப்பு

| | | | |
|---|---|---|---|
| மிளகு | - 1 | சாப்பிராணி | - 1 |
| ஏலம் | - 1 | பூரம் | - 6 |
| சிறுலவங்கப் பட்டை | 1 | சிலாசித்து | - 12 |
| பூநீறு | - 1 | இது வெல்லாம் | |
| கிச்சிலி | - 1 | பொடி செய்து | |
| பச்சையிலை | - 1 | | |

## முடிவு

னாழி மோரில் கரைத்து யிருநாழியாகக் காச்சி
பொழுதகையும் சிறங்கை, சிற வகை குடுக்கவும்
வீக்கம் வத்தும், புகை வாங்கும்
உப்பு கூட்டவும்

## காலம்

இல்லை

## குறிப்பு

இதில் பிரமானந்த பைரவம் திருமூர்த்தி ஆனந்த பைரவம், பேதி ஆனந்த பைரவம், பிள்ளை பெறாமல் இருந்தால், திரிலோக சிந்தாமணி, ரசபூபதி, ராமபாணம், சேராங்குசம் ஆனந்தனாதாரம், திருவழி சிந்தூரம், முதலியன உள்ளன,

வரிசை எண் : 2149 சுவடி எண் : 1130 - a

# அகத்தியர் வண்ணம் — வாகட வண்ணம்

பொருள் : மருத்துவம்

நூலாசிரியர் : அகத்தியர்

ஏடுகளின் எண்ணிக்கை : 4

சுவடியின் நிலைமை : சிறிது பழுது

பக்கத்திற்கு : 9-10 வரிகள்

அளவு : 20 × 3½ செண்டி மீட்டர்

எழுத்து : தமிழ்

கி. எண்ணிக்கை : 100

முழுமை

## தொடக்கம்

வாகட வண்ணம்

சம்புடனே வேர் விரையை
உண்பவர்க்குக் குருணி மூலந் தெ........
தீருமென்று கும்பமுனி யாருரைத்த
சித்திரப் பிலத்தின் மூலம்

## முடிவு

மங்குசொறி தேமல்களும் பொங்கு
கண்டவாத சன்னி கிங்கிதமா யோடும் புரை
மாக்கெ..............ந்துணால் வசியம்
மூக்கதனி லெவிடவே — தாக்குடனே
கூடுவலி போக்கிவிடு மேக............
ஆரறிவார் மூலிகைப் பிரையோகமே ! — 1

வாகட வண்ணம்

முற்றும்

குருவே துணை

## காலம்

இல்லை

## குறிப்பு

இது, 96 வகைப் பிரபந்தங்களுள் ஒன்றான 'வண்ணம்' என்ற பாடலாகும். மூலிகைகளையும், மருந்து செய்முறைகளையும், விளக்கிக் கூறுவது. இன்ன மருந்தினால் இன்னின்ன நோய்கள் தீரும் என்றே கூறுகிறது. இது அடுத்த ஏட்டின் தொடக்கத்தில் முடிகிறது.

வரிசை எண் : 2150 சுவடி எண் : 1130-b

# அகத்தியர் சவுமிய சாகரம்—1200

பொருள் : மருத்துவம்

நூலாசிரியர் : அகத்தியர் ஏடுகளின் எண்ணிக்கை : 7

சுவடியின் நிலைமை : சிறிது பழுது பக்கத்திற்கு : 9-10 வரிகள்

அளவு : 20 × 3½ செண்டி மீட்டர் எழுத்து : தமிழ்

கி. எண்ணிக்கை : 150 குறை

*தொடக்கம்*

மேக லேகியம்

பாரப்பா புலத்தியனே சொல்லக் கேளு
  பதிவான மேகமென்ற வகைகட் கெல்லாம்
வீரப்பா தானோடு வகுத்திரிவ தற்கு
  விவரமுள்ள கிருதவகை யொன்று கேளு

*முடிவு*

நீதியுடன் விபூதியைநீ கிடாட்சித் தாக்கால்
  நேர்மையுடன் சகல பிணி மாண்டு போகும்
சோதியென்ற உக்கிரகண பதியின் சூட்சம்
  சுத்தமுடன் மாரணத்துக் குயிரு மாச்சே! —247

கணபதி சூட்சம் முற்றும்

*காலம்*

சவுமிய, புரட்டாசி மாதம் 17-ஆம் தேதி எழுதினது.

முற்றும்

புட்டனாயக்கன் குமாரன் நரசய்யன் கையெழுத்து.

*குறிப்பு*

இதன் தொடக்கத்தில், 'அகத்திய சுவாமியார் சவுமியா சாகாரம் 1200 பார்த்து பலவிதம் எழுதினது அறியவும் ராம செயம்' என்றுளது. எனவே இதில் 1200 பாடல்கள் இல்லை. சில பாடல்களே உள்ளன. தொகுத்து எழுதப்பட்டுளது.

இதில், வசியம், கணபதி வசியம், தம்பனம், மாரணம் முதலியன கூறப் பட்டுள்ளன.

வரிசை எண் : 2151 சுவடி எண் : 1130-c

# தோஷத்துக்கு

பொருள் : மருத்துவம்

நூலாசிரியர் : அகத்தியர்

ஏடுகளின் எண்ணிக்கை : 1

சுவடியின் நிலைமை : நல்ல நிலை

பக்கத்திற்கு : 8 வரிகள்

அளவு : 21 × 3½ செண்டி மீட்டர்

எழுத்து : தமிழ்

கி. எண்ணிக்கை : 30

முழுமை

## தொடக்கம்

சுரத்தின்மேல் வருவாத தோஷத்தோடு
சுரதோஷந் திரிதோஷம் பிரம்ம தோசம்
உரித்துவரு தோசமெல்ல மொழிவதற்கு
உரைக்கின்றேன் திரிநேத்திர மேதா னப்பா.

## முடிவு

ஆமடா நெஞ்சுவிஷ மென்ற தெல்லாம்
அகலுமே சுகசன்னி அதிக தோசம்
ஓமடா மலக்கட்டும் சகலக் கட்டும் போம்
உமைக்கரனார் உரைத்தபடி உண்மை தானே! 3
முற்றும்

## காலம்

இல்லை

## குறிப்பு

இதில் 3 பாடல்களே உள்ளன. சகல தோஷத்துக்கும் மருந்து முதலியன கூறப்பட்டுள்ளன.

வரிசைஎண்: 2152 சுவடி எண்: 1130-d

# அகத்தியர் பாடல்

பொருள் : மருத்துவம்

நூலாசிரியர் : அகத்தியர் ஏடுகளின் எண்ணிக்கை: 3

சுவடியின் நிலைமை : நல்ல நிலை பக்கத்திற்கு : 8-9 வரிகள்

அளவு : 20×3½ செண்டி மீட்டர் எழுத்து : தமிழ்

கி. எண்ணிக்கை : 80 குறை

## தொடக்கம்

சென்ம ராசி

வானத் தாவிய பொதிகை மகத்தான
 ரிஷியுடைய வாக்கில் நேர்மை
பானத் தாவிய பூசை ..................
 பரிவான சிவயோகம் பண்ணு
மீனத்தாவிய ராசி .........
 விளங்கினர் கன்னிமுதல் வியலு மேடம்

## முடிவு

உரையிரேன் ஒன்பதிலே செவ்வாய் நன்று
 உத்தமனே வாக்கிலே புதனும் நன்று
பரையிரேன் பதினொன்றில் பானும் நன்று
 பாங்கான சந்திரனும் ஏழில் நன்றே! - 11

## காலம்

இல்லை

## குறிப்பு

இது எமது சுவடி எண் 288e/D. 512 அகத்தியர் தீட்சாவிதி 200 போன்றது. இதில் 13 பாடல்களே உள்ளன,

இதில் இராசி சக்கரத்தின் கிரகங்களின் நிலை பற்றிய நன்மை தீமை கூறப்பட்டுள்ளன.

வரிசை எண் : 2153 சுவடி எண்: 1131

# அகத்தியர் கர்ம சூத்திரம்

பொருள் : மருத்துவம்

நூலாசிரியர்: அகத்தியர்

ஏடுகளின் எண்ணிக்கை : 18(15-32)

சுவடியின் நிலைமை : நல்ல நிலை

பக்கத்திற்கு 8-10 வரிகள்

அளவு : 21 × 3½ செண்டி மீட்டர்

எழுத்து : தமிழ்

கி. எண்ணிக்கை : 400

முழுமை

## தொடக்கம்

கொள்கிற பேரைக் கேளு
குருமொழி தவறா னாகில்
தெள்ளிய தாயார் தந்தை
சீரடி வணங்கிக் கொள்வன்

## முடிவு

சாடையொடு குன்றியிடை கொள்ளும் போது
தனித்திருந்த மெய்ஞ்ஞானந் தயவாய்க் கொள்ளுந் தோணும்
மேடையென்ற கொலுமேடை விமானந் தோணும்
விள்ளாதே ஒருவருக்கும் விவர முற்றே !

## காலம்

இல்லை

## குறிப்பு

இதில் பேயோட்ட, கேசரி, உற்பனம் முதலியன உள்ளன.

இது, 22-ஆம் ஏட்டில் முடிகிறது. இதன் பின்னர் பஞ்சதீபாக்கினி வியாழன், சுக்கிரன், சனி, தசப் பொருத்தம், கணமறிதல் திரி தீர்க்கம், யோனி ராசிப் பொருத்தம் இராசிக்கதிபதி, இராசிவசியமறிய, கயிறு அஸ்து, இரச்சுப் பொருத்தம் முதலியனவும், கடைசியில் சக்கரங்களும் உள்ளன.

வரிசை எண் : 2154 சுவடி எண் : 1132

# அகத்தியர் - நிகண்டு

பொருள் : மருத்துவம்

நூலாசிரியர் : அகத்தியர்

ஏடுகளின் எண்ணிக்கை : 60+4

சுவடியின் நிலைமை : மிக மிகப் பழுது

பக்கத்திற்கு : 6-7 வரிகள்

அளவு : $13\frac{1}{2} \times 3$ செண்டி மீட்டர்

எழுத்து : தமிழ்

கி. எண்ணிக்கை : 1000

குறை

தொடக்கம்

உன்னிய பொதிகை யாக வாழும்
ஒருதனி யருளைப் போற்றி
இன்னில நிகண்டு ..........

முடிவு

பெற.........ஆசான்.......... தீனவன்ாய் நெ.....
பெறச் சொல்லநி............ யரிதீ ஈதா வந்த
யெச்சி .........தீதறு........... பெறுக...........ம்
விரையறுப் பாயே !

காலம்

இல்லை

குறிப்பு

இதில், பின் வாசியம், பிரிவுக்கு, சுந்திரி, சர்ப்ப நெய் முதலியன் உள்ளன. பிற்பகுதி ஏடுகள் மந்திரங்களும், சக்கரங்களுமாக உள்ளன.

வரிசை எண் : 2155 சுவடி எண் : 1133-உ

# மந்திர சாத்திரம்

பொருள் : மாந்திரீகம்

நூலாசிரியர் : அறியக் கூடவில்லை

ஏடுகளின் எண்ணிக்கை : 12

சுவடியின் நிலைமை : மிக மிகப் பழுது

பக்கத்திற்கு 5-6 வரிகள்

அளவு : $11\frac{1}{2} \times 2\frac{1}{2}$ செண்டி மீட்டர்

எழுத்து : தமிழ்

கி. எண்ணிக்கை : 100

குறை

## தொடக்கம்

கணபதியே துணை

கணபதி என்றிடக் கலங்கும் வல்வினை

......... ......... ........... மில்லை

மாரணம்

வீரபத்திர மந்திரம்

வெள்ளி செவ்வாயில் சொறி தவளை பிடித்து

நால் காலுக்கும் எட்டாணி அறைந்து

## முடிவு

தலைவலிக்கு மருந்து

தயிவழை யிலையும் வெள்ளை வேங்கையும்

இவ்வகை இரண்டையும் அம்மியில்

வைத்து அரைத்துசீலையில் வைத்து

நாசியில் பிழியவும், தலைவலி தீரும்

குருவே துணை.

## காலம்

இல்லை

## குறிப்பு

இதில், துவாலை, இரைக்க மாரணம், அங்கத்து வித்தை தண்டுகட்ட, ரதமிரங்க, தண்டெடாது, ஈருவகை, மருந்தீட்டுக்கு, முதலியனவும், மந்திரங்களும், சக்கரங்களும் உள்ளன.

வரிசை எண் : 2156 சுவடி எண் : 1133-b

# வைத்தியம் கையேடு

பொருள் : மருத்துவம்

நூலாசிரியர் : பலர்

ஏடுகளின் எண்ணிக்கை : 6

சுவடியின் நிலைமை : மிக மிகப் பழுது

பக்கத்திற்கு : 6-7 வரிகள்

அளவு : $13\frac{1}{2} \times 3$ செண்டி மீட்டர்

எழுத்து : தமிழ்

கி. எண்ணிக்கை : 120

குறை

## தொடக்கம்

கரிமுகத்தோன் வொத்தா கணபதி தாள்கள்
பிரியமுடன் சாராயத்தைப் பேசுகிறேன்—துரிதமுடன்
புதர்வண்ணான் செய்யும் பு..........சாயானந்தன் தொழிலைப்
பதராமல் ..........................

**விஞ்சை மந்திரம்**

## முடிவு

**பால் சுரக்க மருந்து**

வேம்பின் கொழுந்து ஒரு பிடியும்
............ அரிசியும் ............... அரைத்து
ஆக்கி சாப்பிடவும் உடனே பாலூறும்
மஞ்சள் மந்திரித்து குடுக்கவும்
அந்த மஞ்சள் லஊத ...............

## காலம்

இல்லை

## குறிப்பு

இதில், மாந்திரீகம், வைத்தியம் முதலியன உள்ளன.

17-வது தொகுப்பு
வரிசை எண் : 2157

சுவடி எண் : 1134

# அகத்தியர் தண்டகம்

பொருள் : மருத்துவம்
ஏடுகளின் எணணிக்கை : 70

நூலாசிரியர் : அகத்தியர்

பக்கத்திற்கு : 4-5 வரிகள்

சுவடியின் நிலைமை : மிக மிகப் பழுது

எழுத்து : தமிழ்

அளவு : 10×2½ செண்டி மீட்டர்

கி. எண்ணிக்கை : 300

குறை

## தொடக்கம்

பூவது வாச மாகும்
  பொருந்திய தண்ட கத்தை
நாவது ஓதுந் தானே
  நடுவாணை யிருந்துங் கேளு
போவது வருவ தாகும்
  பூரணங் காப்ப தாகும்
ஆவது கோடி வித்தை
  ஆனந்தங் காப்ப தாமே!

## முடிவு

அச்சமுமில்லை பார்ப்போர்க்கு
  ஆதியான கார்ப்பன முற்றே! - 129
பச்சணி நந்திமூலர் பாடலின் மனனம் பார்த்து
  பட்சணி பாடினார்கள் பக......தண்டகத்தில்
கத்................ யென்னில் தன்னைச்
  சேர்ப்பது முத்தி யாமே - 132
முத்திலும் நூறு கூட்டி......... தோணும்
  குருபாதமே கெதி
அகத்திய மகாமுனிவர் லெட்சிக்கவும்
  சிவமயம்
ஆயக் கல்லையும்......... அம்மி படக்கென்ற
ஈயத்திலே துள்ளி கிட்டுருக்க வே.......
(இத் தண்டகத்தில் 2 பாட்டு இல்லாதிருக்கிறது)
கமுக்க மென்னடி கத்தாளை
  காதில் கிடக்குது பித்தாளை
விட்டுதடி யாசை
  விளாம்பழத்து ஒட்டோடே

## காலம்

இல்லை

## குறிப்பு

இதில் முற்று என்ற 129— ஆம் பாடலுக்குப்பின் இவ்வளவும் இருக்கிறது, பின்னர் 2 பாடல்கள் குறை என்றும் உள்ளது. இது திருமூலர் தண்டகத்திலும் வேறாயது.

எமது சுவடி எண் 466-b/D 1034 ''அகத்தியர் தண்டகத்'' தின் வேறாயது.

வரிசை எண் : 2158 சுவடி எண் : 1135

# சல்லியம்

பொருள் : மருத்துவம்

நூலாசிரியர் : சல்லிய முனிவர்

ஏடுகளின் எண்ணிக்கை : 110
(முதலிரண்டு ஏடுகள் இல்லை)

சுவடியின் நிலைமை : மிக மிகப் பழுது

பக்கத்திற்கு : 7-8 வரிகள்

அளவு : $16\frac{1}{2} \times 2\frac{1}{2}$ செண்டி மீட்டர்

எழுத்து : தமிழ்

கி. எண்ணிக்கை : 1500

குறை

## தொடக்கம்

மஞ்சளிலனு......வில்ச் சூதம் வாயு வாஞ்
  சென்னி கணங்.........
கொஞ்சமாய்க் கருவைத் தொட்டுக்
  கூறுவோ மின்னங் கேளாய்த்
துஞ்சிய மின்னார் வெந்த மாலையில்ச்
  சுற்றி னவக்க

## முடிவு

கா.........க்கிளி.........டாக்கினிக......டறியை
அனைத்து பிடாடஷ......டு...கமான மறுமம்
னாபச்சதக்கு ......... சூனியக் காரரைக்
கட்டி

## காலம்

இல்லை

## குறிப்பு

இது எமது சுவடி எண் 155-a/D 246 போன்றது

இதில் 3-வது ஏடுமுதல், 5-வது பாடல் முதல் தொடங்குகின்றது. உரையுடன் உள்ளது. சல்லியம் உரையுடனும், சில்லரை தேவதை மந்திரம், கழுவ மந்திரம், நாமர் தேவி மந்திரம், தெட்சணாமூர்த்தி மந்திரம், வீரபத்திரன், காளி மந்திரங்கள் ஆகிய மந்திரங்களுடனும் உள்ளன.

வரிசை எண்: 2159 சுவடி எண்: 1136-a

# தெட்சணாமூர்த்தி ஞானம்—100

பொருள்: மருத்துவம்

நூலாசிரியர் : தெட்சிணாமூர்த்தி ஏடுகளின் எண்ணிக்கை 32

சுவடியின் நிலைமை: சற்றே பழுது பக்கத்திற்கு: 9–10 வரிகள்

அளவு: $18\frac{1}{2} \times 4$ செண்டி மீட்டர் எழுத்து: தமிழ்

கி. எண்ணிக்கை: 700 முழுமை

## தொடக்கம்

பூரணமாய் மும்மூலம் வந்த வாறும்
பூமியென்றுந் திகிர்தியென்று படைத்த வாறும்
காரணமாய்த் தேவியெங்கும் நிறைந்த வாறும்
கர்ப்பமுண்டு ரிஷிகள் சாகா திருந்த வாறும்

## முடிவு

அளியத்த வாயுவிலே வாய்வு சேரும்
அஞ்சு மொன்றாக் கூட்டினா லாற்றுமா வாகும்
வளியேடே யிவ்வண்ணங் கண்டு கொள்வாய்
மானிடரே காயசித்தி ஞான முற்றே ! —101

குருசுவாமி முன்னிற்க

## காலம்

ஆனி மாதம் 26-ஆம் தேதி அகத்தியர் ஞானம் எழுதி முகிந்தது. இராமலிங்க சுவாமி துணை. ஆண்டிப் பண்டாரத்து மகன் மாரியப்பன் ஏடு. நான்கு நூறு தொண்டாயுதபாணி துணை.

பழனியப்பன் ஆதரி

## குறிப்பு

இதில் தலைப்புக்கள் இல்லை
இது எமது சுவடி எண் 350/D 693 போன்றது

வரிசை எண் : 2160 சுவடி எண் : 1136-b

# முத்துத்தாண்டவர் பதம்

பொருள் : இசை

நூலாசிரியர் : முத்துத்தாண்டவர் ஏடுகளின் எண்ணிக்கை : 1

சுவடியின் நிலைமை : நல்ல நிலை பக்கத்திற்கு : 5-8 வரிகள்

அளவு : $18\frac{1}{2} \times 4$ சென்டி மீட்டர் எழுத்து : தமிழ்

கி. எண்ணிக்கை : 20 முழுமை (ஒரே பாடல்)

## தொடக்கம்

இராமசெயம்

பல்லவி

எப்படியோ அறியேன் — திருவுளம்
எப்படியோ அறியேன்

அனுபல்லவி

மைப்படி யுங்கண்ணி
மங்கைபங் காளனை
எப்படியும் பணி
தோற்றிடப் பணிந்திட — எப்படியோ

## முடிவு

செய்யமே ஞா(?) வயலுறை வேனோ
தேடி யுருகித் திகைத்திடு வேனோ
மெய்யடி யாரடி மேல்விழு வேனோ
மேலாச் சிதம்பரத்தே தொழுவேனோ - 4

எப்படியோ அறியேன் — திருவுளம்
எப்படியோ அறியேன்.

## காலம்

இல்லை

## குறிப்பு

இதன் தலைப்பு "சிதம்பரேசுபரர் பேரில் முத்துத்தாண்டவன் பதம்" என்றுள்ளது. ஒரு பாடலே உளது. இராகம், தாளம் குறிப்பிடப்படவில்லை.

வரிசை எண் : 2161 சுவடி எண் : 1137

# தெட்சிணாமூர்த்தி வைத்தியம் - 80

பொருள் : மருத்துவம்

நூலாசிரியர் : தெட்சிணாமூர்த்தி

ஏடுகளின் எண்ணிக்கை : 22

சுவடியின் நிலைமை : சிறிது பழுது

பக்கத்திற்கு : 8-10 வரிகள்

அளவு : 18½ × 4 செண்டி மீட்டர்

எழுத்து : தமிழ்

கி. எண்ணிக்கை : 500

குறை

## தொடக்கம்

**கிருமிக்கு மருந்து**

முன்னூலெண் பதுசொன்னேன் முதலே காப்பு
மூலத்தில் நின்றகண பதியைப் போற்றி
பின்னூலென் பதுஞ்சொல்ல ஆயி காப்பு
பேறான யென்குருவா முருகன் காப்பு

## முடிவு

தாமப்பா யெருக்கம்வேர் சமனாய்ச் சேர்த்து
தாள்வில்லா மூன்றுதினம் புகைக்கு டிக்க
சோமப்பா சூலையொடு கிரந்தி போகும்
துடியான மருந்தொன்று சொல்லு வேனே — 65

## காலம்

இல்லை

## குறிப்பு

இது, எமது சுவடி எண் 262-b / D 468 போன்றது.

வரிசை எண்: 2162 சுவடி எண்: 1138

# வைத்தியத் திரட்டு

பொருள் : மருத்துவம்

நூலாசிரியர் : பலர்

ஏடுகளின் எண்ணிக்கை: 15

சுவடியின் நிலைமை : மிகமிகப் பழுது

பக்கத்திற்கு : 7-8 வரிகள்

அளவு : 19 × 3½ செண்டி மீட்டர்

எழுத்து : தமிழ்

கி. எண்ணிக்கை : 250

குறை

## தொடக்கம்

மேக சூட்டுக்கு ........... தயிலம்

நல்லெண்ணெய், நெய், விளக்கெண்ணெய் வகைமூனும்
சேர்த்து, அந்த எண்ணெயில் வனமூலிகை, வல்லாரை
ஓரிலைதாமரை, பொய்தலைக் கய்யான், மேகநீர் அடக்கிப்
பட்டை, செவ்வூர்க்குப் பட்டை செவ்வகத்திப் பட்டை

## முடிவு

கீழாநெல்லி, செவ்வூகுப் பட்டை, செவ் அகத்திப்பட்டை
மேகநீரடக்கிப் பட்டை வகை எல்லாம் சேர்த்து,
கடைமருந்து; ஊசிக்காந்தம் பலம் ¾ பகளபுத்து பலம் ¼
சாதிக்காய் பலம் ½ கஸ்தூரி பலம் 3/8 கல்நார்பலம் 1/8
வாங்கி பதம் பண்ணி போட்டு தலைமுழுகவும் தீரும்

## காலம்

இல்லை

## குறிப்பு

இதில், மேகநீர்க்கு, பித்த நீர்க்குத் தயிலம், சூட்டுக்கு மருந்து தயிலம், கெற்பக் கிரிமிக்கு மருந்து, ஒருதலைவலிக்குத் தயிலம், சூட்டு வலிக்கு லேகியம், கண்டமாலைக்கு எண்ணெய், விபரம், சூதக வாய்வுக்கு, எண்ணெய், பவுத்திரத்துக்குத் தயிலம் முதலியன உள்ளன.

இதன் பின்னர் இலக்கியம் எழுதிய ஒடிந்த பாதி ஏடு ஒன்று கோர்க்கப்பட்டிருக்கிறது.

வரிசை எண் : 2163 சுவடி எண் : 1139

# வைத்தியத் திரட்டு

பொருள் : மருத்துவம்

நூலாசிரியர் : பலர் ஏடுகளின் எண்ணிக்கை : 127

சுவடியின் நிலைமை : மிகப் பழுது பக்கத்திற்கு : 5–6 வரிகள்

அளவு : 16 × 2 செண்டி மீட்டர் எழுத்து : தமிழ்

கி. எண்ணிக்கை : 1300 குறை

## தொடக்கம்

பிரண்டைக் கற்பம்

பிரண்டை சமூலம் ............... ந்து
சிறுக நறுக்கி............ தயிலம் இறக்கி
வை............கற்பங் கொள்ள– .........
ஒரு பணவிடை ப.........று பணவிடை............

## முடிவு

இப்படி மூன்றுவிசை பொங்கக் காச்சி
மூன்றுவிசை துத்திக் கோலில்த் துழாவவும்
அதன்பிறகு எலுமிச்சஞ் சாறு சற்றுப் பிழிஞ்சால்த்
திள்ளும், அதைப் பருப்பு மாவாவது அகப்பையாவது
கொண்டு நசுக்கினால் நெய்த்துள வரும்
அப்பத் தண்ணினைத் தொ............

(இதற்குமேல் இல்லை)

## காலம்

இல்லை

## குறிப்பு

இதில், சாறணைக் கற்பம், வெள்ளைச் சாரணைக் கற்பம், புங்கங் கற்பம், சுண்டைக் கற்பம், கெண்டைக்கு, ரத்தப் பிரமியத்துக்கு, சடுகுடுப்பானுக்கு, மடிவாதத் துக்கு, மேகசன்னிக்கு, குளிருக்கு, வெதுவெதுப்புக்கு, காமாலை, பாண்டு, ஊது "ாமாலைக்கு வண்டுகடிக்கு முதலான பல வியாதிகட்கும் மருந்துகள் கூறப்பட்டுள்ளன.

வரிசை எண் : 2164 சுவடி எண் : 1140

# மச்சமுனி நிகண்டு

பொருள் : மருத்துவம்

நூலாசிரியர் : மச்சமுனி

ஏடுகளின் எண்ணிக்கை : 13

சுவடியின் நிலைமை : மிக மிகப் பழுது

பக்கத்திற்கு : 7-8 வரிகள்

அளவு : $26\frac{1}{2} \times 3\frac{1}{2}$ செண்டி மீட்டர்

எழுத்து : தமிழ்

கி. எண்ணிக்கை : 400

முழுமை

## தொடக்கம்

முப்பாழுக் கப்பால் முடிந்தமுத லென்னாளுந்
தப்பாமற் பூரணத்தைச் சாறுவாய்—எப்பொழுதும்
வேகாச் சடலமுத்தி வேண்டுகொள்ளு முக்கோணச்
சாகாக் கிணேசனருள் தான்

திருமந்திரம்

## முடிவு

உரைத்திடு மந்திர மூல மவுன
முறைத்திடு நந்தி வாசியில் வாலையர்
முறைத்திடக் கேளு உரைக்கின்ற அவ்வை
யுறைத்திடப் பிரானாய் பிறத்திடை யோதிடே — 104

ஓதி யறிவாலே யுள்ளஞ் செழுத்தையு
மாதியு மந்தமு மாந்தி றெர்ன்றா
சோதியில் நாதன் துரியம் பிறந்திடம்
நீதியா யின்பம் நிலைத்திடு முத்தியே ! — 105

மச்சமுனி நிகண்டு முற்றும்
சம்பூரணம்

## காலம்

இல்லை

## குறிப்பு

இதில், தீட்சை, அட்சரம் முதலியன கூறப்பட்டுள்ளன.
இது, எமது சுவடி எண் 691-a / D-1354 போன்றது.

வரிசை எண் : 2165 சுவடி எண் : 1141

# அகத்தியர் தீட்சைவிதி

பொருள் : மருத்துவம்

நூலாசிரியர் : அகத்தியர் ஏடுகளின் எண்ணிக்கை : 30

சுவடியின் நிலைமை : மிக மிகப் பழுது பக்கத்திற்கு : 9-10 வரிகள்

அளவு : 26½ × 3½ செண்டி மீட்டர் எழுத்து : தமிழ்

கி. எண்ணிக்கை : 1200 குறை

**தொடக்கம்**

ஹரிஓம் நன்றாக

வானைத் தாவிய பொதிகை
மகத்தான ரிஷியுடைய வாக்கு நேர்மை
பானைத் தாவிய பூசை பரிவான சி.........
பண்போர் கேளு
மீனத்தாவிய ராசி விளங்கி நின்ற
கன்னிமுதல் வில்லு மேடஞ்

**முடிவு**

தின்றிடவே புத்தியந்தான் சொல்லக்கேளு
செந்தூரங் கொண்டவர்க்குப் புளிதானாகா
திடமாகப் புகையிலை யுகமாகா தென்னே — 151
ஆகாது வுளுந்து மொச்சை கீரையோடு

**காலம்**

இல்லை

**குறிப்பு**

இது, எமது சுவடி எண் 322-g/ D. 620, எண் 359-a/D 718 போன்றது பாடவேறுபாடுகள் மிக்குள்ளன.

வரிசை எண் : 2166

சுவடி எண் : 1142

# அகத்தியர் சகல கலைக்கியானம்

பொருள் : மருத்துவம்

நூலாசிரியர் : அகத்தியர்

ஏடுகளின் எண்ணிக்கை : 100
(73, 74 வது ஏடுகள் இல்லை)

சுவடியின் நிலைமை : மிக மிகப் பழுது

பக்கத்திற்கு : 10-16 வரிகள்

அளவு : 28 × 3½ செண்டி மீட்டர்

எழுத்து : தமிழ்

பா. எண்ணிக்கை : 6500

குறை

தொடக்கம்

ஆதியாம் பராபரத்தின் கிருபை கூர்ந்து
அன்பான மனோன்மணியைத் தொழுது போற்றி
சோதியெனுங் கமலமல ரமுதங் கொண்டு
சுந்தரம்போல் வாதத்தி லெட்சங் காப்பு

முடிவு

ஆளப்பா அண்டபகி ரண்ட மெல்லாம்
அரகரா அகாரமுட னுகாரந் தானே ! — 1019

............... உக ......... ன ............ மனைத்
தன்று ......... னம் ......... லமே
பூசித்தாக்காற் ......... ...... முதா ............

(இதற்குமேல் இல்லை)

காலம்

இல்லை

குறிப்பு

இது, எமது சுவடி எண் 488-b/D 1081 போன்றது

வரிசை எண் : 2167 சுவடி எண் : 1143

# அகத்தியர் வாகடச் சுருக்கம்

பொருள் : மருத்துவம்

நூலாசிரியர் : அகத்தியர்

ஏடுகளின் எண்ணிக்கை : 1

சுவடியின் நிலைமை : மிக மிகப் பழுது

பக்கத்திற்கு : 8-10 வரிகள்

அளவு : $27\frac{1}{2} \times 4$ செண்டி மீட்டர்

எழுத்து : தமிழ்

கி. எண்ணிக்கை : 4000

குறை

## தொடக்கம்

பாகுடன் கிணேசன் பாதம்
　　பரிந்துமுக் குணங்க ளாய
வாகடச் சுவடி யெல்லாம்
　　வகைவகை தொகுக்கு மாற்றால்
ஆகம விதியின் சூளா
　　லடந்திடும் நோய்கட் கெல்லாம்

## முடிவு

போமே கேள் அதிசாரம் வாயுத் தானும்
　　பொருமியே கிரைத்த ரெத்த களிச்சல் கூட
போகுமே அக்கினிதான் தம்பித்த வாய்வு
　　புகளான நெஞ்செரிவு புளிச்சேப்ப மந்தம்
போகுமே செந்தூரம் பணவிடைதான் தூக்கி
　　புதுப்பளச் சார் கொதி ............ — 744

## காலம்

இல்லை

## குறிப்பு

இது, எமது சுவடி எண் 301-h/D 539, எண் 316-a/D. 576 அகத்தியர் -1500 போன்றது 'அகத்தியர் வாகடச் சுருக்கம்' எனும் தலைப்பை நோக்க, இது, அகத்தியர் செய்தது எனில், காப்புச் செய்யுளை நோக்க அகத்தியருக்கு உபதேசித்தது எனத் தெரிகிறது.

வரிசை எண் : 2168 சுவடி எண் : 1144 - a

# அகத்தியர் கர்ம காண்டம் முதற் காண்டம்-300

பொருள் : மருத்துவம்

நூலாசிரியர் : அகத்தியர்

ஏடுகளின் எண்ணிக்கை : 82

சுவடியின் நிலைமை : சிறிது பழுது

பக்கத்திற்கு : 7 வரிகள்

அளவு : $30\frac{1}{2} \times 3$ செண்டி மீட்டர்

எழுத்து : தமிழ்

கி. எண்ணிக்கை : 2000

முழுமை

தொடக்கம்

பூரணமா முள்மூலப் பொறியிற் சூடாய்
புகையெழும்பி மேகமதாய்ச் சிரசிற் சூடாங்
காரணமா நீரேற்கும் பீனிசப்பேர் கொள்ளுங்
கனலெழுந்த வாயுவதால் கபால மெல்லாங்

முடிவு

புத்தியாப் பிழைப்பதற்கு சக்கரத்தே சொல்லு
புகழான மனம்வாசி வாயு வேக
முத்தியா யிருவினையு மத்த தேகி
முதலான சொற்க பத முத்தி தானே ! —301

தொண்டாயித பாணி துணை
பிச்சராயன் துணை

ரற்றின மூர்த்தி யீஸ்பரி பெரிய நாயகி துணை.

காலம்

இல்லை

குறிப்பு

இது எமது சுவடி எண் 323-b/D. 623 போன்றது

வரிசை எண் : 2169 சுவடி எண் : 1144-b

# அகத்தியர் கர்ம சூத்திரம் — நடுக்காண்டம்

பொருள் : மருத்துவம்

நூலாசிரியர் : அகத்தியர் ஏடுகளின் எண்ணிக்கை : 86 (83-168)

சுவடியின் நிலைமை : சிறிது பழுது பக்கத்திற்கு : 7 வரிகள்

அளவு : $30\frac{1}{2} \times 3$ செண்டி மீட்டர் எழுத்து : தமிழ்

கி. எண்ணிக்கை : 2000 முழுமை

## தொடக்கம்

பூரணமா மூலமுத லாறா தாரம்
புரியட்ட திசவாயு நாடி மூன்று
காரணமா யிடைபின்னாச் சுழினை யாகி
கலந்துநின்ற வாதபித்த சிலேற்பன முமாகி

## முடிவு

தெரிசனமாங் கண்களிலே வருவ தேது
தீர்க்கமடா சிறுவருக்குத் தேவா ஸமுர்தங்
கரிசனமா மின்னூலிற் கற்ம கற்மங்
கட்டாக மருந்துவகை கருத்து முற்றே — 302

தெண்டாயுதபாணி லெட்சிக்கவும்
பிச்சராயன் துணை செய்யவும்
கரியாம்பட்டிப் பிச்சாண்டிக் கவுண்டன் மகன்
பெரிதம்பிக் கவுண்டன் யேடு
இது கண்டவர் குடுக்கவும்
பகவான் லெட்சிப்பார்

## காலம்

இல்லை

## குறிப்பு

இது, எமது சுவடி எண் 560 / D 1167 போன்றது.

வரிசை எண் : 2170 சுவடி எண் : 1145

# அகத்தியர் வைத்தியம் - 150

பொருள் : மருத்துவம்

நூலாசிரியர் : அகத்தியர்

ஏடுகளின் எண்ணிக்கை : 26(169-194)

சுவடியின் நிலைமை : நல்ல நிலை

பக்கத்திற்கு : 7 வரிகள்

அளவு : 30½ × 3 செண்டி மீட்டர்

எழுத்து : தமிழ்

க். எண்ணிக்கை : 400

முழுமை

## தொடக்கம்

சீரணி கொன்றை சூடுஞ்
சிவனிரு பாதம் போற்றி
வாரண முகத்தோன் பாதம்
வணங்கிநூத் தன் பதாஞ் சொல்
பூரண வாலை ஞான
சரசோதி போற்றி

## முடிவு

யிவ்வகையே செய்தால் நாடிநின்ற ரோகமெல்லாம்
நய்யு மென்று
கோமப்பா பொதிகை மாமலையில் வாழுங்
குருமுனியில்ச் சொற்படியுங் கொள்கை தானே

## காலம்

இல்லை

## குறிப்பு

இது, எமது சுவடி எண் 324-b / D 637 போன்றது.

17-வது தொகுப்பு



வரிசை எண் : 2171

சுவடி எண் : 1146

# அகத்தியர் அமுத கலைக்கியானம்–1200

பொருள் : மருத்துவம்

நூலாசிரியர் : அகத்தியர்

ஏடுகளின் எண்ணிக்கை : 130

சுவடியின் நிலைமை : மிக மிகப் பழுது

பக்கத்திற்கு : 9-11 வரிகள்

அளவு : 34 × 4 செண்டி மீட்டர்

எழுத்து : தமிழ்

கி· எண்ணிக்கை : 6500

குறை

## தொடக்கம்

(ஆதிப) ரா பரத்தினுட கிருபை கூர்ந்து
அன்பான மனோன்மணியைத் தொழுது போற்றி
சோதியெனுங் கமலமுகத் தமுர்தங் …………
………… வர்தத்தி லெட்சங் காப்பு
நீதிபெற்ற வயித்தி யத்தில் ரெண்டு லெட்சம்
நிலைத்த தொரு சூத்திரத்தில் கோடா கோடி

## முடிவு

மல்லப்பா சொல்லுகிறேன் மண்டல மூன்றாண்
லப்பனே வயசதுவும் ஆயிரந் தானாம்
நல்லப்பா வருசமிது கொண்டால் மைந்தா
நலமான வயசுபதி னாயிரமாகுஞ்
சொல்லப்பா மனந்தேறிச் சதாகாலங் கொள்ளச்
சிவசிவா வயசு சொல்ல முடியா தென்னே ! —1050

## காலம்

இல்லை

## குறிப்பு

இது, எமது சுவடி எண் 1142 போன்றது. பாடவேறுபாடுகள் மிக்குள்ளன.

வரிசை எண் : 2172 சுவடி எண் : 1147

# (அகத்தியர்) கர்ம காண்ட சூத்திரம்

பொருள் : மருத்துவம்

நூலாசிரியர் : அகத்தியர் ஏடுகளின் எண்ணிக்கை : 23

சுவடியின் நிலைமை : மிக மிகப் பழுது பக்கத்திற்கு : 9-11 வரிகள்

அளவு : 34×4 செண்டி மீட்டர் எழுத்து : தமிழ்

கி. எண்ணிக்கை : 1000 முழுமை

## தொடக்கம்

பூரணமாயி மூலமுத லாறாதாறம்
புரிப்பட்ட நந்தீசர் வாயிஉனாடி மூன்று
காரணமாயி னாட்பின்னா சுளினையாகில்
கலந்துநின்ற வாதபித்தச் சிற்றுமாகில்
மாரணமாயி சிடத்துள்ளெத் துவங்கள்
மனம்புத்தி யாங்காரம் சித்தாலே

## முடிவு

மூர்க்கமு ......... ண ............
ணங்களே யிதுமுண்டை வில்லினாலும்
தீர்க்கமுடன் கவநெரிந்து கல்வினாலு
மெரிந்து சிவயோகி ...............

## காலம்

இல்லை

## குறிப்பு

இது, எமது சுவடி எண் 1144-b போன்றது. பிழைகள் மலிந்துள்ளன.

வரிசை எண்: 2173 சுவடி எண் : 1148

# திருமூலர் குணவாகடத் திரட்டு

பொருள் : மருத்துவம்

நூலாசிரியர்: திருமூலர் ஏடுகளின் எண்ணிக்கை : 15(24-38)

சுவடியின் நிலைமை: மிக மிகப் பழுது பக்கத்திற்கு 9–11 வரிகள்

அளவு: 34×4 செண்டி மீட்டர் எழுத்து: தமிழ்

கி. எண்ணிக்கை: 700 முழுமை

## தொடக்கம்

அந்தி நிறத்தனை யானை முகத்தனை
இந்து இளம்பிறை போலு மெயிற்றனை
நந்தி மகன்றனை ஞான விளக்கைப்
புந்தியில் வைத்தடி போற்றுகின் றேனே ! — 1

## முடிவு

............ ............ வேருடைச் சடமுறம்
பயாதி ரைநரை பாங்காந் தவிர்ந்திடக்
கயாதி கவனங் கலந்தெங்குஞ் சுற்றி
ஆயாதியு ஞான மஞ்சாகுஞ் சித்தியே ! — 126

திருமூல நாயனார் அருளிச் செய்த
குணவாகடம் முற்றிற்று
குருவே துணை

## காலம்

இல்லை

## குறிப்பு

இதில், தச நாடியில், தசவாயுவும், திரி நாடியும், 6 சக்கரமும், 3 பண்டலமும், மூலங்கை நாடி, முழங்கைத் தாது, மூவகை வாயு, நாடி, மூலவகையும், நாடி யறிய விபரம் முதலியன உள்ளன.

வரிசை எண் : 2174 சுவடி எண் : 1149

# அகத்தியர் பலமுறை

பொருள் : மருத்துவம்

நூலாசிரியர்: அகத்தியர்

ஏடுகளின் எண்ணிக்கை : 100

சுவடியின் நிலைமை : மிக மிகப் பழுது

பக்கத்திற்கு: 5-6 வரிகள்

அளவு: 39 × 3 செண்டி மீட்டர்

எழுத்து : தமிழ்

கி எண்ணிக்கை: 2500

குறை

## தொடக்கம்

**இதுவுங் கிஷாயம்**

யெடுத்து வைத்து ......... .........
விள்ளப்பா குளிகையொன்று தேனி லீய
மேகமொடு ......... ......... .........
.......... ......... ல்லுங் காணே ! —100

## முடிவு

வொளியாது பவுத்தி ரங்க ளொளிய வென்றா
லுரைக்கிறேன் மேனியப்பா சமூலம் வாங்கி
தெளியாமல் நிழலிலே யுலத்தி யாட்டி
நேர்த்தியாய் வ ......... ......... ......... —44

## காலம்

இல்லை

## குறிப்பு

இதில், மேகாதிக் குளிகை, சயத்துக்கு மருந்து, திப்பிலி நெய், ஏலாதி நெய், உளமாந்தைக்குக் கண்டங்கத்திரி நெய், அட்டசந்தம், நீர்வள்ளி நெய், திரிபாலை நெய், சந்தனாதித் தயிலம், முதலியன உள்ளன. தொடக்கம் முடிவு இல்லாததால் இன்ன நூல் என்று அறிவதற்கில்லை.

வரிசை எண் : 2175 சுவடி எண் : 1150

# அஞ்சனமுறை முதலியன

பொருள் : மருத்துவம்

நூலாசிரியர்: கருவூரார் முதலியோர்

ஏடுகளின் எண்ணிக்கை : 198
(முதல் 4 ஏடுகள் இல்லை)

சுவடியின் நிலைமை: மிக மிகப் பழுது

பக்கத்திற்கு : 6-8 வரிகள்

அளவு: $27\frac{1}{2} \times 2\frac{1}{2}$ செண்டி மீட்டர்

எழுத்து: தமிழ்

கி. எண்ணிக்கை: 6000

குறை

## தொடக்கம்

அஞ்சன முறை

கொள்ளவே ஒருத்திபெற்ற சிறுவ னோட்டில்
குழிமீண்டான் விரைவிட்டு முளைக்கக் கேளு
அள்ளியே மணலிட்டு விரையும் போட்டு
அந்தமண்டை மதியவைத்து நீரை வாரு
மெள்ளவே நாற்பதுநா ளூர மட்டும்
மலிடிவேறு அந்திசந்தி நினவாய்ப் பாரு
மிள்ளவே மண்டலத்தில் தலைபி டிங்கி
வெண்டலையைக் கழுவிநன்றாய் விபரங் கேளே ! — 1

## முடிவு

கையாந் தகரைத் தளை சங்கிலிப் பாசம்
கருஞ்சுக்கு படித்தளை பிண்ணாக்குப் பூடு
ஆகவகை 19 ஒக்க ஒருசமனாய்ச்
சேர்க்கவும் மூனுநாள் பத்தியம்
நெய் தயிரு சாப்பிடவும்
உப்பு புளி ஆகாது.

## காலம்

இல்லை

## குறிப்பு

இதில், கருவூரார் சூத்திரம், நீர்மேல் நெருப்பு மை, சாரணை மை, பூசைக்கு நிமித்தியம், வெள்ளெலி மை, கருவேங்கை மை, பேய்களுக்குப் பூசை, ஒட்டியம், சல்லியம், வாகட சிந்தாமணி, குணவாகட காண்டம், கடைக்கயற்று சூத்திரம் முதலியன உள்ளன.